VISIT…

உ

திருச்சிற்றம்பலம்

திருமந்திரச் சிந்தனைகள்

சித்தாந்த கவிமணி செந்தமிழ் வேள்விச்சதுரர்

மு.பெ. சத்தியவேல் முருகனார்

(மலேசிய அருள்நெறி திருக்கூட்ட சொற்பொழிவுத் தொகுப்பு நூல்)

முகிழ்த்தது மூவாயிரந் தமிழ்

(1.9.1999 – முதல் நாள் சொற்பொழிவு**)**

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்கு

கருமூலம் இல்லையே காண்.

அடியார் பெருமக்களே!

மலேசிய அருள்நெறி திருக்கூட்டத்தின் தலைவர் – நாமெல்லாம் போற்றிப் புகழும் தான்ஸ்ரீ ஐயா திரு. சோம சுந்தரம் அவர்களும் அருமை மெய்யன்பர் திரு. கலியபெருமாள் அவர்களும் அடியேன் இந்த மல்லல்மா மலேசிய நாட்டில் காலை வைத்தவுடனேயே உழுவலன்பர் திரு. சண்முகம் அவர்கள் இல்லத்தில் அடியேனை வந்து சந்தித்தார்கள். அடியேனுடைய நூல்கள் சிலவற்றைப் பார்த்து ஈடுபட்டவர் இந்த அடியாரார் திருப்பெருகும் அருமைத் திருக்கூட்டத்தில் அடியேன் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அடியேன் இதனை அரும்பெறற் பேறாகவே கருதினேன். என்னுடைய மலேசியப் பயணம் ஜோகூர் மாநிலத்தடங்கிய கூலாய் பகுதியில் ஒரு சிவன் கோயிலைத் தமிழ் திருமுறைகளால் திருக்குடமுழுக்கு செய்விக்க எழுந்தது. சில காரணங்களால் எனது மலேசியப் பயணம் சுருக்ககமாகவே அமைக்க வேண்டி இருக்கிறது. எனவே வாய்ப்புற்ற ஐந்து நாட்கள் தொடர் சொற்பொழிவாக பேச வேண்டும் என்று அன்புடன் தான்ஸ்ரீ ஐயா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்,

முதலில் தலைப்பு ‘உண்மை விளக்க’ சாத்திர நூலைப் பற்றி அமைக்கலாம் என்றிருந்தது. பிறகு ‘தலைப்பு திருமந்திரச் சிந்தனைகள்’ என்று மாறியது.

அடியேன் திருமந்திரத்திற்காக தாயகத்திலே பல முகாம்களை நடத்தி இருக்கிறேன். அந்த முகாம்கள் பல அன்பர்களின் ஆதரவால் தொடர்ந்து ஆண்டு தோறும் நடந்து வருகிறது. ஒன்பது ஆண்டுகளாக இத்திருமந்திர முகாம்கள் நடந்து வருகின்றன. ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கிறிஸ்துமஸ்ஸை ஒட்டி வருகிற விடுமுறை நாட்களில் கல்லூரி பேராசிரியர்கள் புலவர்கள் எல்லாம் கலந்து கொள்வதற்கு ஏதுவாகவும், அந்த நாட்கள் மார்கழி மாதத்தை ஒட்டி வருவதால் திருமண மண்டபங்கள் எளிதில் கிடைக்கும் (மார்கழி மாதத்தில் திருமணங்கள் பொதுவாக நடைபெறுவதில்லை) என்பதாலும் வாய்ப்பான மூன்று நாட்கள் பார்த்து முகாம்களை அமைப்போம். முதல் நாள் திருமந்திர முகாமிற்காக வந்தால் மூன்று நாட்கள் கழித்துத்

தான் திருமணக் கூடத்தை விட்டுச் செல்வர். உணவு, தங்குமிடம் அனைத்திற்கும் அங்கேயே ஏற்பாடு செய்யயப்படும். இப்படிப் பல ஆண்டுகளாக திருமந்திர முகாம்களை நடத்தி வருகிறோம்.

அத்துடன் ஈரோட்டில் திருமுறை அன்பர் திரு. த. விசுவநாதன் அவர்கள் ஏற்பாட்டில் ஒன்றே முக்கால் வருடமாக திருமந்திரச் செவாற்பொழிவுப் பணியை ஆற்றி வருகிறேன். இது மட்டுமல்லாமல் திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருட் பணி மன்றத்தின் சார்பாக சென்னை சைதாப்பேட்டையில் வாரந்தோறும் திருமந்திரச் சொற் பொழிவை ஒன்றரையாண்டுகளாக ஆற்றி வருகிறேன். திருமந்திரத்தில் முதலவதாக உள்ள பாயிர பகுதிகூட இன்னும் முடியவில்லை.

இதையெல்லாம் ஏதோ என்பெருமைக்காக எடுத்துரைக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். 'தோன்றாத் தொற்றித் துறைபல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்றே' என்ற நன்னூல் வாக்கை நன்கு உணர்ந்தவன் அடியேன். எனவே அதையெல்லாம் தொகுத்துக் காட்டுவதற்கு வேறு ஒரு காரணம் இருக்கிறது.

ஒரு கூட்டத்தில் ஒரு சொற்பொழிவாளர் ஒரு பாட்டு பாடினார். கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து ஒன்ஸ்மோர் என்று கூவினார். சொற்பொழிவாளர் இசையில் அவ்வளவு பெரிய வல்லபம் பெற்றவரல்லல. எனினும் கூடட்டத்தில் ஒருவர் விரும்பிக் கேட்கிறாரே என்று தம்மைத்தாமே வியந்து மனமகிழ்ந்து மறுபடியும் பாடினார். கூட்டத்தில் இருந்து அந்த நபர் மீண்டும் ஒன்ஸ்மோர் என்றார். மறுபடியும் சொற்பொழிவாளர் பாடினார். மீண்டும் ஒன்ஸ்மோர் என்றகுரல் எழுந்தது. மீண்டும் சொற்பொழிவாளர் பாடினார். இப்படிப் பலமுறை நடந்தது. இறுதியில் சொற்பொழிவாளர் தம்மைக் கட்டுப்படுத்த இயலாதவராய், இத்தனை முறை ஒரே பாட்டைப் பாடச் சொல்கிறீர்கள்! இந்தப் பாட்டில் இவ்வளவு ஆர்வமா? என்று கேட்டார். அதற்கு, 'அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ இந்தப் பாட்டைச் சரியா பாடற வரைக்கும் விடமாட்டேன்' என்று பதில் வந்தது.

அதுபோல இவ்வளவு ஆண்டுகள் பல இடங்களில் திருமந்திரத்தைப் பற்றிப் பேசுவது சரியில்லை என்று நினைத்து ஆண்டவன் என்னைத் திரும்ப திரும்ப திருமந்திரத்தைப் பல இடங்களில் பேச வைக்கிறான் என்றே நான் நினைக்கிறேன். அது எப்படியானாலும் என்னை மீண்டும் மீண்டும் திருமந்திரத்தைப் பற்றிப் பேச வைக்கிற திருவருளுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒன்றை நான் உங்களுக்கு சொல்லியே ஆக வேண்டும். ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக அடியேன் செய்து வரும் திருமந்திரப் பணி சிறிய பணி தான் ஆனாலும், அது என்னை எவ்வளவு உயரத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும் போது என்னுடைய உள்ளத்திலே ஏற்படுகிற உணர்ச்சிகளை வடித்துச் சொல்ல வார்த்தைகள் இல்லை. உள்ளூர் தமிழர்களிடம் திருமந்திரத்தால் உரையாடி உறவாடிக் கொண்டிருந்தவனை கடல் கடந்து மலேசிய நாட்டுத் தமிழன்பர்கள் முன்னர் திருமந்திரத்தைப் பேச வைத்தது திருவருள் தானே!

அது மட்டுமல்ல, ஜோகூரில் கூலாய் பகுதியில் அமைக்கப்பட்ட சிவாலயத்திற்கு தமிழால் திருக்குடமுழுக்கு ஆட்ட வந்தவன் நான். உடன் என்னை இங்கே வருவிக்க மூலகாரணரான ஈரோடு அன்பர் த. விசுவநாதன் அவர்களும் நானும் அமைக்கப்பட்டுள்ள புதிய சிவாலயத்தில் மூலவருக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி கலந்தாலோசித்தோம். திருமூலநாதர் என்ற பெயரையே இருவருமாக தேர்ந்தெடுத்தோம். அன்பர்கள் அந்த பெயரை அங்கீகரித்தார்கள். இதன் மூலம் அடியேனின் பல நாள் திருமந்திரப் பணிக்கு வாய்ந்த அங்கீகாரம் போல் திருமூலநாதரைப் பிரதிட்டை செய்யும் பாக்கியம் பெற்றேன். அங்கே திருமூலநாதரை திருமந்திரப் பாடல்கள் பிரதிட்டை செய்துவிட்டு உடனாக இங்கே 43 ஆண்டுகட்கும் மேலாக கோலாம்பூரில் நற்றமிழ்ப் பணி ஆற்றிவரும் மலேசிய அருள் நெறித் திருக்கூட்டத்தில் திருமந்திரச் சிந்தனை! திருவருட் செயலன்றி இது வேறென்னவாக இருக்க இயலும் என்று எண்ணி எண்ணி பூரிக்கின்றேன்.

நிச்சயமாக இது தெய்வச் செயலே. ஏனென்றால் யாரும் இதைத் திட்டமிட்டுச் செய்யவில்லை. எங்கோ இருந்த என்னை இந்த நாட்டிற்கு அழைத்து வருகிறார்கள். இங்கே வந்தபின் அறிமுகமான தான் ஸ்ரீ ஐயா அவர்கள் ஏற்பாட்டில் திருமந்திரத்தைப் பற்றிப் பேசுகிறேன். அதிலும் முதலில் உண்மை விளக்கம் என்பது பற்றிப் பேசுவதாக இருந்தது மாறி திருமந்திரம் பற்றிப் பேசவைத்தது திருவருளன்றி வேறேன்ன?

இனி இந்த ஐந்து நாள் திருமந்திரச் சொற்பொழிவை எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி திட்டமிடுவோம். இது ஜனநாயகம் கோலோச்சும் காலம். எனவே மக்களைக் கேட்டு இதை அமைக்கலாமல்லவா? தான் ஸ்ரீ ஐயா அதை எப்படிஅமைத்துக் கொள்ளலாம் என்று வகுத்துக் கூறவில்லை. அடியேனாக ஒரு பாதை அமைத்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் திட்டமில்லாத எதுவும் தோற்றுப் போகும். திட்டமில்லாத வாழ்க்கை வீணாகும். அது போல் திட்டம் இல்லாத சொற்பொழிவும் பரிமளிக்காது.

திருமந்திரச் சொற்பொழிவில் முதல்நாள்தோற்றுவாய். அதனை நூல் மற்றும் நூலசிரியர் வரலாறும் காலமுகமாக எண்ணிப்பார்ப்போம். அடுத்த நாள் தமிழ் ஆகமம் என்று அமைத்துக் கொள்வோம். அதற்கு மறுநாள் திருமந்திரத்தில் கிரியைகள் என்று அமைத்துக் கொள்வோம். நான்கு நேயர் விருப்பபம். அதாவது தான்ஸ்ரீ ஐயா அவர்கள், "திருமந்திரத்தில் ஆறந்தங்கள் பற்றிப் பேசப்படுகின்றன அவற்றைச் சிறிது விளக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். எனவே நான்காம் நாள் அதைச் சிறிது சிந்திப்போம். ஐந்தாம் நாள் இவற்றிற்கெல்லாம் மணிமுடியாக திருமந்திரத்தில் கூறப்பட்ட திருக்கூத்து தரிசனத்தைப் பற்றி சிந்தனை ஒன்பதாம் தந்திரத்தோடு திருமந்திரம் நிறைவு பெறுகிறது. எனவே அந்த தந்திரத்தில் வரும் அரும்பெறல் வரமான திருக்கூத்துத் தரிசனத்தைச் சொல்லி நிறைவு செய்வோமானால் மேலே நம்மைப் பார்த்து முறுவல் செய்து கொண்டிருக்கிற திருமூலர் (அரங்கில் மாட்டப் பட்டுள்ள படத்தில் உள்ள திருமூலர்) மனம் மகிழ்வார் என்ற எண்ணத்தில் இப்படி திட்டமிட்டு அமைத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். இது உங்கக்குச் சம்மதம்தானே? (கூட்டத்தினர் ஆமோதிக்கின்றனர்)

இனி நம் திட்டப்படி திருமந்திரச் சிந்தனையைத் தோற்றுவாய் என்ற நிலையிலே முகிழ்த்தது மூவாயிரந்தமிழ் என்பதையொட்டித் தொடங்குவோம்.

பெரியோர்களே! திருமூலர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர்களை அறிமுகப்படுத்தியும் இவர்களுக்கு அடித்தெண்டனிட்டும் பாடப் பெற்ற நூல் திருத்தொண்டத் தொகை; பாடியவர் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவரான நம்பியாரூர்–அதாவது சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அவர் பாடியது அறுபது பேர்களை; இவரது தந்தையார், தாயார் மற்றும் இவர் ஆகிய மூவரையும் சேர்த்து சைவச் சான்றோர்கள் அறுபத்து மூவராக வணங்கினார்கள். சரி! சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையில் அறுபது அடியார்களைப் பாடிப் பரவினார் என்பதை நினைவில் வைப்போம். அறுபது அடியார்களைப் பாடி வணங்கிய அவர் அதில் இரண்டே இரண்டு பேரைத் தான் பிரான் என்ற சொல்லைச் சேர்த்துக் கூறி பெருமைப் படுத்துகிறார். இது மற்ற 58 அடியார்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு. யார் அந்த இரண்டு அடியார்கள்? ஒருவர் சமபந்தர்; மற்றவர் திருமூலர்.

"வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்

மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா

எம்பரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"

இது சம்பந்தரைப் பற்றிக் கூறியது.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

இது திருமூலரைப் பற்றிக் கூறியது.

சம்பந்தரைச் சொல்லும்போது எம்பிரான் என்றார். எங்கள் பிரான் என்று பொருள். எங்கள் என்று சொல்லுவதால் அது குறிப்பிட்ட சிலரைக் குறித்தது. அதாவது தேர்ந்தெடுத்த சிலரைக் அது குறிக்கிறது. ஆனால் திருமூலரைக் குறிக்கும் போது நம்பிரான் என்றார். இதில் உரிமையும் ஒட்டுறவும் அதிகமாகத் தெரிகிறது. நம் என்ற சொல்லால் நம்மை எல்லாம் உட்படுத்தலே இந்தச் சொல் குறிக்கும் வட்டம் மிகப்பெரிதாய் விரிந்ததை உணரலாம். எனவே நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் என்று பாடும் போது திருமூலரோடு நம் ஒட்டுறவை அதிகமாக உணர்கிறோம்.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். பிரான் என்ற சொல் இரண்டே இரண்டு பேருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. திருநாவுக்கரசருக்குக்கூட கொடுக்கப்படவில்லை. அப்படியானால் இந்த பிரான் என்ற சொல்லுக்கு அப்படியென்ன தனிச்சிறப்பு? உண்மையிலேயே பிரான் என்ற சொல் தனிச்சிறப்புமிக்கது தான். அது ஓர் அற்புதமான தூயதமிழ்ச்சொல். பிரியான் என்பதன் அதன் பொருள். இன்றும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் எ்பபோதும் நம்மைவிட்டுப் பிரியாதவன் என்று கூறவேண்டும்.

நாம் இப்போது ஊரிலே நாட்டிலே எத்தனையோ பேரிடம் பழகுகிறோம். ஆனால் எல்லோருடனும் எல்லாக் காலமும் இருப்போம் என்று கூறமுடியாது. நம்முடைய ஒருகாலத்து நண்பர்கள் இப்போது விரோதிகளாக இருக்கலாம். ஒரு காலத்தில் விரோதியாக இருந்தவர்கள் இப்போது நண்பர்களாக உறவாடலாம். அப்படியும் இல்லையென்றால் ஒரு காலத்தில் நமக்கு நெருங்கிய நண்பனாக இருந்தவன் இடத்தால் பிரிந்து நம்மால் தொடர்புகொள்ள முடியாத நிலையில் இருப்பான். அவ்வளவு ஏன்? நம்மோடு வாழ்கின்ற மனைவி கூட நம்மோடு ஒன்றியிருப்பாள் என்று கூறிவிட முடியாது. ஆனால் நாம் உதறித் தள்ளினாலும் உதாசீனம் செய்தாலும் உண்மைப்பரிவோடு சூக்குமமாக நம்மை விட்டுப் பிரியாதவன் கடவுள் ஒருவன் தான். இதைத்தான் வடமொழியில் அத்துவிதம் என்று கூறுவார்கள். தீந்தமிழ் இதை உள்ளடக்கி பிரான் என்று கூறும்.

காரைக்கால் அம்மையார் இந்தப் பிரான் என்ற சொல்லில் மூழ்கிப் போவார். அந்தப் பாடல் மிக அழகான பாடல்

“பிரான் என்று தன்னைப் பன்னாள்

பரவித் தொழுவார் இடர்க்கண்டு

இரான் என்ன நிற்கின்ற ஈசன் கண்டீர்“

என்பது அவர் அருளிச் செய்த திருவிரட்டை மணிமாலை திருவாக்கு.

பிரான் என்று சொல்லி யாராவது தம்மை வணங்கினால் அவருக்கு ஒரு துயர்வருமானால் அதைக் கண்டு பொறுத்துக் கொண்டு இரானாம் ஈசன்; ஓடி வந்து அருள் செய்வானாம். எனவே அவ்வளவு தனிச் சிறப்பு பெற்று முக்கியத்துவம் வாய்ந்த சொல் பிரான் என்பதாகும். பிரான் என்ற சொல் யாருக்கு உரியது? கடவுளுக்கு மட்டுமே உரியது. ஏனெனில் அவர் மட்டுமே நம்மை என்றும் பிரியாதவர். பிறகு வேறு யாரையாவது அச்சொல்லால் குறிக்கலாமா என்றால் கடவுளுக்குச் சமமானவர்களை குறிக்கலாம். கடவுளுக்குச் சமானமானவர்கள் குருமார்கள். எனவே குருவை குருபிரான் என்ற சொல்லால் குறிக்கலாம்.

“குருவே சிவனெனக் கூறினன் நந்தி“

என்பது திருமந்திரவாக்கு. எனவே குரு வேறல்ல கடவுள் வேறல்ல. இதனால் கடவுளுக்கு மட்டுமே உரியதாக வைக்கப்படும் பிரான் என்ற சொல் குருவையும் சென்று சேர்கிறது. இவ்விருவரைத் தவிர வேறு யார்க்கும் இந்த சொல் சென்று சேராது. ஆ! இந்த பிரான் என்ற சொல்தான் எவ்வளவு உயர்ந்தது?

இந்தப் பிரான் என்ற சொல்லால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சம்பந்தர், திருமூலர் என்கிற இரண்டே இரண்டு பேரை மட்டும் குறிப்பதால் இவ்விரண்டு பேருடைய உயர்வு நமக்குப் புரிகிறது. அதிலும் திருமூலரைப் பற்றிக் குறிப்பிடும் போது நம் என்ற சொல்லைச் சேர்த்ததனால் அவரது உயர்வு இன்னும் அதிகமாக புலப்படுகிறது. இந்தப் பூவுலகில் அனைவரையும் உள்ளடக்கி நம் என்று கூறியதானல் திருமூலரே உண்மையான ஜகத்குரு என்று அடையாளம் காட்டப்பட்டார். நாம் இது புரியாமல் யார் யாரையோ ஜகத்குரு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதை விடுவோம்! இனி உண்மையான ஜகத்குருவான திருமூலரின் வாழ்க்கை வரலாறு என்ன என்று பார்ப்போம்.

ஒருவருடைய வாழ்க்கை வரலாறு மிக அதிகமாகக் குழப்பப் பட்டது என்றால் அது திருமூலருடைய வாழ்க்கை வரலாறு தான். இந்தக் குழப்பச் சூறாவளியில் தெளிவான கலங்கரை விளக்கமாகக் கிடைப்பது சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளியுள்ள வரலாறு ஒன்று தான்.

திருமூலர் இந்த நாட்டிற்கு–மலேசியா இல்லை. தமிழ் நாட்டிற்கு–எப்படி வருகிறார் என்பதை சேக்கிழார் எடுத்துரைக்கிறார். திருமூலர் வருகையில் திருமூலரை மிக அற்புதமாக அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார்.

அந்திஇளம் பிறைக்கண்ணி அண்ணலார் கயிலையினில்

முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி

இந்திரன்மா லயன் முதலா இமையவர்க்கு நெறியருளும்

நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகள்ஒருவர்

திருமூலர் யார் என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார். நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள். அவர் எங்கே இருந்து வருகிறார்? கயிலையில் இருந்து வருகிறார். கயிலையில் இவருக்கு என்ன வேலை? அங்கே உள்ள நந்தியெம் பெருமானிடம் திருவருள் பெற்று அங்கே தங்கியிருந்தார். நந்தியெம் பெருமான் என்றால் யாரு? நந்தி மாதிரி குறுக்கே வரான் பாரு என்று சொல்வார்களே அந்த நந்தியா? அடடா ! தற்கால தலைமுறைக்கு உள்ள சமய அறிவின் சிறப்பே சிறப்பு! நம்முடைய நோக்கத்திற்கு தடையாய் இருப்பதை எல்லாம் நந்தி என்று குறிப்பிடும் நமது அறிவை என்ன சொல்ல?

உயர்திணை பிறப்பை மூன்று வகையாகக் கூறுவர். தேவர், மானிடர், நரகர் என்று அழைப்பர். நரகரை விட மேலானவர்கள் மானிடர். மானிடர்களை விட மேலானவர் பிரம்மா. பிரம்மாவிற்கு தந்தையாய் பிரம்மாவை விட மேலானவர் திருமால். திருமாலை விட மேலானவர் நந்தி.

இதைப் பற்றி ஒரு பழைய கணக்கு ஒன்றை அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்

ஆறுகோடி நாரணர் அங்ஙனே

ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்

ஈறிலாதவன் ஈசன் ஒருவனே

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒரு பிரம்மா; ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒரு திருமால். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன்; ஒவ்வொரு சூரியனும் ஒவ்வொரு அண்டம். இந்த அண்டங்கள் அனைத்திற்கும் சேர்த்து கணக்கெடுத்து அப்பர் சுவாமிகள் கூறுகிறார். இதுவரை நூறுகோடி பிரம்மாக்கள் இறந்து போயினார் ஆறுகோடி நாராயணர்கள் இறந்து போயிருக்கிறார்கள். இந்திரர்கள் எண்ணிக் கையோ எண்ணித் தொலையாது. கங்கைக் கரை மணலை எண்ண முடியுமா? முடியுமென்றால் அத்தனை இந்திரர்கள் இறந்து பட்டார்கள் என்று கொள் என்கிறார் அப்பர். காலகாலனாய் காலங் கடந்து இறப்பு என்பதில்லாமல் எஞ்சியுள்ளவன் ஈசன் ஒருவனே என்றார்.

இந்தத் திருமால்களுக்கெல்லாம், பிரம்மாக்களுக்கு எல்லாம், இந்திரர்களுக்கு எல்லாம் மேலானவர் நந்தியெம்பெருமான். ஈசனடி போற்றி அவன் சேவடியை என்றும் மறவாமையால் இறவாமை சந்தித்து இறைவனுடன் பேரா இயற்கைப் பேரின்பத்தில் திளைப்பவர் நந்தியெம் பெருமான். இவர் பெயரை தடைகளுக்கு வைத்து மகிழும் நம்மறிவை என்ன சொல்ல?

இந்த நந்தியெம்பெருமானைப் பணி கொள்கிறார் இறைவன். அதாவது கயிலையங்கிரியில் தாம் வீற்றிருக்கும் கோயிலுக்கு முதற்பெரு நாயகமாக நியமிக்கிறார். வேலை என்னவென்றால் இறைவனது எண்ணப்படி யாரை எப்போது இறைவனது கோயிலுக்குள் பிரமமாவாயினும் சரி, இந்திரனாயினும் சரி யாராய் இருப்பினும் தடுத்து நிறுத்தி இறைவன் எண்ணப்படி அனுமதி உண்டானால் உள்ளே விடுவது. இவருக்கு மேலே வேறு ஏதாவது அதிகாரிகள் உண்டா? இல்லை, இவர்தான் எல்லாம். எனவே முதற்பெருநாயகம் எனப்பட்டார். எந்த கோயிலுக்கு? முந்தை நிகழ் கோயிலுக்கு முதற்பெருநாயகம்.

கயிலையில் இறைவன் வீற்றிருக்கும் கோயிலுக்குத் தேதி உண்டா? மண்ணுலகில் உள்ள மற்ற எல்லா சிவன் கோயில்களுக்கும் தேதி உண்டு. இந்த கோயில் நிறைவுற்று திருக்குடமுழுக்கு ஆட்டப்பெற்றது என்று நினைவு மலர் வெளியிடுவோம். கயிலையில் இறைவன் வீற்றிருக்கும் கோயிலுக்கு இப்படி ஒரு தேதி ஏது?

அவ்வளவு ஏன்? மண்ணுலகிலேயே திருவாரூர் கோயில் எப்போது எழுந்தது என்று கூற இயலவில்லையே என்று பெருமூச்சு விட்டுப் பாடுகிறார் பதிகம் ஏழ் எழுநூறு பாடிய திருநாவுக்கரசு பெருமான்.

சிலையால் முப்புரமெரித்த முன்னோ பின்னோ

திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே

திரிபுரம் எரித்ததற்கு முன் இந்த திருவாரூர் கோயில் அமைந்திருக்குமோ என்று கேட்கிறார் அப்பர். இன்னும், திருவண்ணா மலைக்கும் முன்னே திருவாரூர் கோயில் எழுந்ததோ என்று கேட்கிறார் அப்பர்.

“ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ

ஒருகம் போல் ஏழுகமாய் நின்ற நாளோ“

அவ்வளவு ஏன்? சைவர்கள் கோயில் என்று குறித்தாலே அது தில்லையைத் தான் குறிக்கும். தில்லைக் கோயிலுக்கும் முன்னது திருவாரூர் கோயில் என்று கருதுகிறார் அப்பர். அக்கருத்தை உள்ளிட்டு,

“மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை

ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ

அணிஆரூர் கோயிலாக் கொண்ட நாளே“

என்று பாடுகிறார். இங்கே குறிப்பிட்ட சம்பங்களையெல்லாம் ஆராய்ந்து அவை நடந்த தேதி என்று ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டோமானால் திருவாரூர்க் கோயிலுக்குத் தேதி கூறிவிடலாம்.

ஆனால் கயிலாயத்தில் உள்ள இறைவன் கோயிலுக்கு என்றால் அதுவும் முடியாது; காரணம், இந்த சம்பவங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது கயிலைக்கோயில். அங்கே அரும்பெருஞ்சோதியாக வீற்றிருக்கும் இறைவன் எந்த தேதிக்கு உட்பட்டவன்? ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி அவன். அந்த சோதிக்கு கி.பி., கி.மு என்றெல்லாம் ஏதாவது வரையறை செய்து கூறமுடியுமா?

எனவே இன்னகாலம் என்று வரையறுத்துக் கூற முடியாத முந்தைநிகழ் கோயில் என்று கூறினார் சேக்கிழார். அந்தக் கோயிலுக்கு முதற்பெருநாயகமானவர் நந்தியெம் பெருமான் என்றால் அவரும் இன்ன காலம் என்று வகுத்துக் கூறமுடியாதபடி ஊழிஊழிக்காலமாய் அந்தப் பதவியில் இருக்கிறார் என்பது பொருள். இதைப் பற்றி கேள்விப்பட்டால் நம்ம ஊர் மந்திரிகள் எல்லாம் பெருமூச்சு விடுவார்கள் என்பது திண்ணம். அது ஒரு புறம் இருக்கட்டும்.

இத்தனை அரிய பெருமைகள் வாய்ந்த நந்தியெம்பெருமானிடம் தீட்சை பெற்று அருளை ஊதியமாகப் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவர் நமது திருமூலர் என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார்.

சேக்கிழாருக்கு இது எப்படித் தெரியும்? திருமூலரே திருமந்திரத்திலே தம்மைப் பற்றிக் கூறுகிறார். அதைக் கொண்டு சேக்கிழார் திருமூலரை நமக்கு மேற்கூறியபடி அறிமுகப்படுத்தினார். திருமூலர் திருமந்திரத்தில் தம்மைப் பற்றி என்ன சொல்லிக் கொள்கிறார்? இது திருமந்திரப் பாயிரத்தில் வருகிறது.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்

நந்திகள் நால்வர் சியோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்

என்றிவர் என்னோடு எண்மரு மாமே

இந்தப் பாடலில் நந்தி அருள்பெற்றவர்கள் யார் யார் என்று பெயர் சுட்டிக் கூறுகிறார். மொத்தம் எட்டுப்பேராம் இவரோடு சேர்த்து மொத்தம் எட்டுப்பேராம். நந்திகள் நால்வர், அதாவது சனகர்,சனந்தனர், சனாதனர் சனற்குமாரர் என்ற சனாகதி முனிவர்கள் நால்வர். பிறகு சிவயோக மாமுனி; இவர் யார் என்று எந்த வரலாறும் எந்த புராணமும் சுட்டிக் காட்டவில்லை. இவரைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. அடுத்து மன்று தொழுத பதஞ்சலி மற்றும் வியாக்ரமர் என்றிவர்கள் இருவர். இவர்களோடு திருமூலரையும் சேர்த்து மொத்தம் எட்டுபேர். என்றிவர் என்னோடு எண்மருமாமே என்று தெளிவாகக் கூறுகிறார். இவர்கள் எல்லாம் அருட்கலையை, சாகாக்கலையை ஒன்றாகப் படித்தார்களாம். அதாவது இவர்கள் எல்லாம் ஒரு சாலை மாணாக்ககர்கள்; குரு நந்தியாம். அது ஒரு பெரிய பல்கலைக்கழகம். கயிலாயப் பல்கலைக் கழகம். யூனிவர்சிடி ஆஃப் மலேசியா, யூனிவர்சிடி ஆஃப் மெட்ராஸ் என்றெல்லாம் சொல்கிறோமோ அது போல அது யூனிவர்சிடி ஆஃப் கைலாஷ்.

ஒருவர் தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டிய நேரமும் உண்டு என்று இலக்கணம் கூறுகிறது. தோன்றாத் தோற்றித் துறை பல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்று தான். ஆனால் ஒரு பட்டதாரி

வேலைக்குச் சேரும் போது என்னைப் பற்றி நானே கூறிக்கொள்வது தற்புகழ்ச்சி ஆகிவிடும்; ஆகவே அவற்றைச் சொல்லக் கூச்சப்படுகிறேன் என்ற சொன்னால் வேலை கிடைக்குமா? அங்கே பயோ டேட்டா கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

எனவே தான், 'மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்' என்று இன்னின்ன இடங்களில் தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே என்று இலக்கணம் தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்களை குறிக்கிறது. அதன்படி தற்சிறப்புப்பாயிரம் அமையும். எனவே பயோ டேட்டா என்பது தமிழில் தற்சிறப்பு குறிப்புகள் என்று ஆகும். அந்த இலக்கணப்படி தன்னைப் பற்றி திருமூலர் திருமந்திரத்தில் கூறியது தான் நாம் முன்னே கண்டோம்.

திருமூலர் வரலாற்றுப்படி அவருக்கு இப்போது பெயர் சுந்தரநாதர். இவர் கொஞ்ச நாள் தமிழ் நாட்டிற்குப் போய் வரலாமே என்று நினைக்கிறார். எதற்காக? பொதிய மலையில் முதிய தமிழ் உரைத்த முனிவராகிய அகத்தியரைப் பார்க்க. இதனைச் சேக்கிழார் மிக அழகாகக் கூறுகிறார்.

மற்றவர்தாம் அணிமாதி வரும்சித்தி பெற்றுடையார்

கொற்றவனார் திருக்கயிலை மலை நின்றும் குறுமுனிவர்

உற்றதொரு கேண்மையினால் உடன்சிலநாள் உறைவதற்கு

நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்.

ஆ! சேக்கிழாரின் வார்த்தைகள் எவ்வளவு ஆழமான வார்த்தைகள்! ஒவ்வொரு வார்த்தையுயம் சேக்கிழார் ஒரு கைதேர்ந்த பொற்கொல்லன் விலையுயர்ந்த ஆபரணத்தில் கல்லைப் பதிப்பது போல தெரிந்தெடுத்து வைக்கிறார். அதாவது ஆபரணத்தில் கல்லைப் பதிப்பது போல சொல்லைப் பதிக்கிறார். நம் போன்ற எளியவர்களால் இதை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அப்படி ஒரு ஆழமான சொற்கள். பாடல் கூறுவது என்ன?

"மற்றவர்தாம் அணிமாதி வரும் சித்தி"

அருளாளர்கள் எப்போதுமே அணிமாதி சித்திகளைத் தேடிப் போவதில்லை. ஆனால் அந்தச் சித்திகள் வேர்களைத் தேடிச் சென்று அடையும் என்கிறார் சேக்கிழார். இது ஒரு மிகப் பெரிய கருத்து; நாம் நினைவில் வைக்கவேண்டியது. பொதுவாக நாம் என்ன நினைக்கிறோம் என்றால் அருளாளர்கள் என்றால் திடீர் என்று அவர்கள் ஏதாவது ஓர் அற்புதத்தை நிகழ்த்த வேண்டும். அப்படி திடீர் என்று ஒரு இலிங்கத்தை வரவழைத்தால் அவர் ஒரு பெரிய சாமியார்; அவர் பின்னாலே ஆயிரம் ஆயிரமாய்க் கூட்டம். திடீரென ஒரு இலிங்கத்தை ஒரு லிங்கத்தை, வேலை வரவழைத்தால் அவரே பெரிய அருளாளர் என்று மயங்கிப் போகிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால் இப்படி ஏதாவது செய்தால் தான் அவரை அருளாளர் என்று நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் உண்மை நேர் எதிரிமாறாக உள்ளது. சித்திகள் தான் அருளாளரை நாடி நிற்கும். இந்த கருத்தைக் கூறிய சேக்கிழாருக்கு நாம் தலை வணங்க வேண்டாமா? இதைப் புரிந்து கொண்டால் எத்தனையோ போலி சாமியார்கள் உருவாகவே வாய்ப்பில்லாமல் போகுமே!

ஒரு கரும்பு ஆலையை எடுத்துக் கொள்வோம். அந்த ஆலையின் இறுதி நோக்கம் கரும்பிலிருந்து சர்க்கரையை உற்பத்தி செய்வது. இதற்கு ஆலையில் சில முறைகள் மேற்கொள்ளப்படும். எடுத்தவுடனே கரும்பிலிருந்து சர்க்கரை கிடைத்துவிடாது. அதற்கு எத்தனையோ முறைகள் உள்ளன! அந்த முறைகளின் இடையில் மொலாசஸ் என்ற கழிவுப்பாகு கிடைக்கும். இது ஃபைனல் பிராஎடக்ட்–அதாவது இறுதியான

முகிழ்பொருள் அல்ல. ஆலையில் உள்ளவர்கள் கழிவுப்பாகை எதிர்நோக்கி முறைகளில் இடையில் கழிவுப்பாகு கிடைக்கிறது. இதையும் நம்மவர்கள் விட்டு வைப்பதில்லை. இதைக் கொண்டு போய் காய்ச்சி சாராயம் எடுக்கிறான். அதுக்கப்புறம் நடப்பதையெல்லாம் அருள்நெறிக் கூட்டத்தில் சொல்வதற்கில்லை. எனவே ஒரு கரும்பாலையில் சர்க்கரைக்கு குறிவைத்து செயல்படும் போது இடையில் சாராயத்திற்கு அடிப்படையான கழிவுப்பாகு தானாகக் கிடைக்கிறது. அது போல ஆன்ம விடுதலையையும், அரன்கழல் இன்பத்தையும் குறிவைத்து யோக நெறி முறைகளை மேற்கொள்கின்றனர் யோகிகள். அதன் இடையில் வந்து சேருவது அணிமாதி சித்திகள்–கரும்பாலையில் கழிவுப் பாகைப் போல.

யோகிகள் இடுப்பிற்கு கீழாக உள்ள அடுப்பு போன்ற பகுதியில் நாகம் போல சுருண்டு கிடக்கும் குண்டலினியைத் தூண்டி விடுவார்கள். குண்டலினி சத்தியால் உந்தப்பட்டு ஆன்மாவானது 36 தத்துவங்களின் கட்டிலிருந்து விடுபட்டு சுழிமுனை நாடியில் ஒளியாக மேலேறும். குண்டலினி சக்தியால் தத்துவக் கட்டிலிருந்து மூலதாரத்தில் ஆன்மா விடுபடுவது இருக்கிறதே இது தான் ஆன்மாவிற்கு உண்மையான பிறப்பு. ஆனால் நாம் தாயின் யோனியிலிருந்து விடுபவடுவதை மட்டுமே பிறப்பு என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

இதை உள்ளடக்கித் தான் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று பாடினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருவாரூரிலே நண்டு பிறக்கிறது; தேள் பிறக்கிறது; நண்டு போன்றவர்கள் பிறக்கிறார்கள்; தேள் போன்றவர்கள் பிறக்கிறார்கள்; திருவாரூரிலும் திருடன் உண்டு. அங்கே பிறந்த ஒரே காரணத்திற்காக இவர்களுக்கு எல்லாமா சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடிமை என்று கூறிக்கொண்டார்? அப்படி நினைப்பது எவ்வளவு அறிவின்மை?

இங்கே திருவாரூர் என்பது மூலதாரத்தைக் குறிக்கும். இதெல்லாம் யோக சாதனை செய்யும் அடியார்கள் நடுவே ஒரு சங்கேத பாஷை. இந்த சங்கேத பாஷைக்குப் பொருளைத் தொகுத்துக் கூறும் பாடல் உண்டு.

திருவளர் ஆரூர் மூலம் திருஆணைக் காவே நாபி
மருவளர் பொழில் சூழ் அண்ணா மலைமணி பூரம் நீவிர்
இருவரும் கண்ட மன்றம் இதயமாம் திருக்கா ளத்தி
பொருவரும் கண்ட மாகும் புருவமத் தியமே காசி

திருவாரூர்–மூலாதாரம், திருவானைக்கா–சுவாதிட்டானம்; அண்ணாமலை–மணிபூரம்; தில்லை–அநாகதம்; திருக்காளத்தி–விசுத்தி; காசி–ஆஞ்ஞை

இந்தப் பாடலைப் பாடி நமக்கு உதவியவர் திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் பற்றிப் பாடிய பல பாடல்களில் இந்த மூலாதார யோக அனுபவமே பேசப்படுவதை கூர்ந்து கவனித்துப் பயன் கொள்ள வேண்டும்.

இனி, 36 தத்துவங்களிலிருந்து விடுபட்டு திருவாரூராகிய மூலாதாரத்தில் பிறந்த ஆன்மா சுழி முனை நாடியில் மேல்நோக்கி ஏறத்தொடங்கும் போது அப்போது இயல்பாகவே ஆன்மாவிற்கு அட்டமாசித்திகள் தானாக வந்தடையும். இப்படி மேல் ஏற ஏற அட்டமா சித்திகள் மட்டுமல்ல இன்னும் பலவிதமான சித்திகள் வந்தடையும். அடிப்படையாக எட்டு சித்திகள் கிடைக்கும்; இந்த முறையில் வந்தடையும சித்திகள் பல என்று சொல்வார்கள். ஏமசித்தி, கருமசித்தி, ஞானசித்தி என்றெல்லாம் அருளாளர்கள் கூறுவார்கள்.

இதில் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். அட்டமாசித்தி எய்திய ஆன்மா அந்த சித்தி ஆடுவதில் இறங்கி விடுமானால் அந்த ஆன்மா மேலேறி அருளாளராகாது. அந்த மேனிலையில் இருந்து அந்த ஆன்மா இறங்கி விடும். பாம்பன் சுவாமிகள் கூறுகிறார்: எம்பெருமானே! உன்னை எண்ணி தியானம் செய்கிறேன். எனக்கு என்ன வேண்டும் தெரியுமா? துறவு நான் பெற்று விட்டேன். அந்த துறவு எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? ஆடலில் துறவு வேண்டும் என்றார்.

அதாவது அட்டமாசித்திகளை வைத்து அவை வாய்க்கப் பெற்ற ஒருவர் வித்தை காட்டப் பயன்படுத்தக்கூடாது. இந்த உரகத்திற்கு நான் எதற்காக வந்திருக்கிறேன்? வித்தை காட்டவா? நான் முயன்று இறைவன் திருவடி அடைடயவே இந்த உலகத்திற்கு வந்திருக்கிறேன்.

எனவே அட்டமா சித்தியில் நாம் மூழ்கி விடுவோமானால் பின்னால் நாம் நம் ஆன்மாவை இழந்து விடுவோம்.

ஆனால் உலகில் மக்கள் பலர் தவறாகவே எண்ணம் கொண்டு இருக்கிறார்கள். சாதாரண மக்கள் என்ன நினைக்கிறார்கள்? யார் அட்டமா சித்திகளைச் செய்கிறார்களோ அவர்கள் மிகப் பெரியவர்கள், அருளாளர்கள் என்று நினைக்கிறார்கள்.

இதுபற்றி இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு நல்ல உதாரணம் சொன்னார். வட நாட்டிலே–இங்கே எப்படின்னு தெரியல–அம்பரமா மிட்டாய் குவித்து வைத்து விற்பான். அந்த மிட்டாயில் ஈ எறும்பு மொய்த்தா மிட்டாயை விற்க முடியுமா? யார் வாங்குவா? எனவே என்ன பண்ணுவாங்கன்னா அந்த மிட்டாயைச் சுற்றி சர்க்கரையை இடை விட்டு வளையமா தூவி வைப்பான். என்ன காரணம்? ஈ, எறும்பு எல்லாம் சர்க்கரையை மொய்க்கும். அதுக்கப்புறம் அவை தாண்டாது. மிட்டாய் தூய்மையாக காப்பாற்றப்படும். சுற்றித் தூவிய சர்க்கரை தான் அட்டமாசித்தி கூம்பாக அம்பாரமாக வைக்கப்பட்ட மிட்டாய் தான் சிவபெருமான் என்றார்.

அப்படியானால் சிவன் கழல் மலர்கள் தான் வேண்டுமென்றால் சர்க்கரையில்–அது தான்–அந்த அட்டமாசித்தியில் நாம் மூழ்கிவிடக்கூடாது. அட்டமாசித்தியல் மூழ்கினால் சர்க்கரையில் மூழ்கிய எறும்பு போலாகி விடுவோம். எனவே தான் பாம்பன் சுவாமிகள் ஆடலில் துறவு வேண்டும் என்று கேட்டார்.

எனவே உண்மையான அருளாளர்கள் அட்டமாசித்தியை நோக்கி இருக்கக் கூடாது. அவர்கள் மேலே மேலே போய்க் கொண்டே இருப்பார்கள். அவர்கள் பின்னால் அட்டமாசித்திகள் கைகட்டி வரும். வேண்டும் போத இறவைன் திருவருள் சம்மத்ம உண்டா என்று ஆராய்ந்து, உண்டானால் சித்திகளை அருளாளர்கள் பயன்படுத்துவார்களே ஒழிய அவற்றைப் பயன்படுத்தி மக்களிடையே வித்தை காட்டுவது அவர்களுக்கு வேலையல்ல.

இத்தனை கருத்தையும் உள்ளடக்கி,

“மற்றவர்தாம் அணிமாதி வரும் சித்தி பெற்றுடையார்“ என்று பாடினார் சேக்கிழார். அதாவது சுந்தரநாதர் தென்திசை நோக்கிப் பயணம் மேற்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்; அவர் பின்னால் அட்டமா சித்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்று மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

இங்கே சுந்தரநாதர் தூலமாகத் தெரிபவர்; அவர் பின்னால் வரும் அட்டமாசித்திகள் சூக்குமம்–கண்ணுக்கு தெரியாதவை. கண்ணுக்கு தெரியாமல் வரும் அட்டமாசித்திகளை ஏன் சேக்கிழார் கண்ணுக்குத் தெரிய வரும் சுந்தர நாதருடன் காட்டினார்? காரணம், வரலாற்றின்படி பின்னால் இறைவன் திருவருளால் மூலன் என்கிற இடையன் உடலில் மேல் கூடுவிட்டு கூடு பாயும் சித்தியை மேற்கொள்ளப் போகிறார். இது அட்டமா சித்திகளில் ஒன்று. தன் பின்கைகட்டி வரும் அட்டமா சித்திகளில் ஒன்றைப் பின்னால் பயன்படுத்தப் போகிறார் என்பதை முன்னரே உணர்த்த அணிமாதி வரும் சித்தி என்று பாடிய

சேக்கிழாரின் வரலாறு உணர்த்தும் வல்லபத்தை என்ன சொல்லி பாராட்டுவது. அதனால் தான் அவரைத் தெய்வச் சேக்கிழார் என்று ஆன்றோர் போற்றினார்.

இவ்வாறு வருஞ்சித்தி பெற்றுடையாராகிய சுந்தரநாதர் பொதியமலைக்குப் புறப்படுகிறார். "குறு முனிவர் உற்றதொரு கேண்மையினால்" அவருக்கு அகத்திரோடு நெருங்கிய நட்பு. அந்த நட்பு காரணமாக அவரை ஒரு தடவை பார்த்துவிட்டு சில நாள் அவரோடு தங்கிச் செல்ல வேண்டுமென்று எண்ணிப் புறப்படுகிறார். இங்கே சேக்கிழார் பொதிய மலையைப் பற்றிச் சொல்லும் போது ஒரு சொல்லைப் போடுகிறார். அந்தப் பொதியமலை என்ன பொதியமலையாம்? நற்றமிழின் பொதியமலை என்றார். பொதியமலை தமிழ் விளங்குகிற இடம் சேக்கிழார் தமிழ் என்று மட்டும் சொல்லாமல் நற்றமிழ் என்று ஏன் சொன்னார் அதற்கு பொருள் என்ன? நற்றமிழ் என்றால் நன்மையைத் தருகின்ற தமிழ் என்று பொருள். என்ன நன்மையைத் தருவது? சின்னச்சின்ன வார்த்தைகள் தான். ஆனால் பெரிய பொருள்களை எல்லாம் உள்ளடக்கிப் பெரியவர்கள் சொல்வார்கள்.

நற்றமிழ்–நல்ல தமிழ் என்று பொருள் கொள்ளக்கூடாது. நன்மை பயக்கும் தமிழ் என்று பொருள் கொள்க என்று சிவக்கவிமணி திரு.சுப்பிரமணியம் அவர்கள் உரை எழுதினார். அத்துடன் நன்மையாவது இறைவன் திருவடியை அடைவது; காரணம் உண்மையான நன்மை அது மட்டுமே தரும் என்று விரித்துக் கூறினார்.

வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை ஒன்று தமிழுக்கு உண்டு. தமிழ் ஒன்று தான் சிவானுபூபதியை லேசில் எய்துவிப்பது என்று வள்ளலார் கூறினார்.

ஆக சேக்கிழாருடைய எண்ணம் எது? தமிழ் தான் இறைவனை அடைவிக்கும் என்பது சேக்கிழார் எண்ணம். இதை நினைவில் கொள்ள வேண்டியது நமது கடமை என்பதற்காக நற்றமிழ் என்று தமிழுக்கு அடை கொடுத்து போக்கிற போக்கில் மிகப் பெரிய உண்மையைச் சொல்லிச் செல்கிறார் சேக்கிழார்.

பொதிய மலைக்குப் புறப்பட்டு விட்டார் சுந்தரநாதர். நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக் கொண்டார்.

கேதாரம், அதன் பின்னால் காசி இப்படி பல தலங்களை வரிசையாக பார்த்துக் கொண்டே வருகிறார்– பாடல்கள் வருகின்றன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தவர் தமிழகத்திற்கு வந்து விடுகிறார். தமிழகத்திற்கு வந்தவர் மெல்ல மெல்ல தெற்கு பக்கமாக உள்ளே நுழைகிறார். அங்கே சுந்தரநாதர் காவிரி நதியை முதலில் பார்க்கிறார். அதாவது தில்லையைப் பார்த்துவிட்டு தெற்கே போனவர் காவிரியை முதன் முதலில் பார்க்கிறார். அங்கே ஆறு மட்டுமா ஓடுகிறது? சேக்கிழாரின் தமிழார்வமும் சைவத்திறமும் கரைபுரண்டு ஓடுகின்றன. அவர் பாடுவதைப் பாருங்கள்.

சுடர்நிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்

அடல்விடையின் மேல் வருவார் அமுதுசெய அஞ்சாதே

விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே

கடல்வயிறு நிறையாத காவிரியின் கரை யணைந்தார்.

புலியூர் – திருத்தில்லை. தில்லையில் சுந்தரநாதர் சில நாட்கள் தங்கியிருக்கிறார். " சுடர் நிலை மாளிகைப் புலியூர் தன்னில் உறைந்து இறைஞ்சிப் போய்" தன்னில் உறைந்து–கொஞ்ச நாள் தங்கி என்று

பொருள். அடுத்து "அடல்விடையின் மேல்வருவார் அமுது செய்ய அஞ்சாதே கடல்வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார்" என்ற வரிகள் வைரவரிகள்; ஈடு இணையில்லாத தமிழ்.

பெருமக்களே! எல்லா நதிகளும் மேற்குத் திசையிலிருந்து ஓடி கிழக்குத் திசையில் கடலில் கலக்கும். மேற்கே இருந்து ஓடி வந்து கீழ்த்திசையில் கடலில் கலக்கின்றன அத்தனை நீர்பெருக்குகளுக்கு நதி என்று பெயர். இது பெண்பால். இதற்கு மாறாக நர்மதை. தபதி என்கிற இரு நதிகள் மட்டும் கிழக்கே தொடங்கி மேற்கே கடலில் கலக்கும்.

தண்ணீருடைய இயல்பு என்னன்னா மேட்டிலிருந்து பள்ளத்திற்கு இயல்பா பாயும்; இது இயல்பு. இதற்கு மாறாக பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீர் போகணும் என்றால் அது எதிர்நீச்சல். இயல்புப்படி செய்வது பெண் தன்மை; எதிர்த்து போராடுவது ஆண் தன்மை எதிர்த்துப் போராடுவது ஆண் தன்மை. மேற்கு பக்கம் மேல் பக்கம்; கிழக்குப் பக்கம் தாழ்வான கீழ் பக்கம். மேல் பக்கத்திலிருந்து கீழ்ப்பக்கத்திற்கு ஓடி வரும் நீர்பெருக்குகள் எல்லாம் இயல்புப்படி வருகின்றன. எனவே பெண்ணின் பெயர்க்கு உரிய இகர ஈற்று விகுதியுடன் நதி என்றார்கள். மேற்கே இயல்பிற்கு மாறாக ஆண் தன்மையுடன் சென்று கடலில் கலப்பதால் நர்மதையும், தபதியையும் நதம் என்று கூறினார்கள். நர்மதை நதி என்று கூறக்கூடாது; நர்மதை நதம் தபதி நதி என்று கூறக்கூடாது; தபதி நதம். அப்படிப் புலவர்கள் எங்கேயாவது தவறி அவற்றை நதி என்று பாடினார்களானால் அதனை பால் வழுவமைதியாகக் கொள்ள வேண்டும்.

நதிகள் கடலில் கலக்கும் விதத்தால் பெயர் பெறுவதைப் பார்த்தோம். இனி, எல்லா நதிகளும் கடலில் கலக்கிறது என்று கூறமுடியுமா? ஒரு நதி கடலில் கலப்பதில்லை. அது எந்த நதி? இங்கே உள்ள அன்பர்கள் நீண்ட நெடிய பாரம்பரியம் உடையவர்கள். உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். வைகை நதி கடலில் கலப்பதில்லை.

வைகை கடலில் போய் சேராதது ஏன் என்று ஒரு விவாதம் நடந்தது குலோத்துங்க சோழன் அவையிலே. அவையில ஒட்டக்கூத்தர் புலவர் பேரரசாக வீற்றிருக்கிறார். அருகில் வெண்பா வீறுடையராக புகழேந்தி அமர்ந்திருக்கிறார். ஒட்டக்கூத்தர்சோழ நாட்டில் பிறந்தவர். புகழேந்தி களந்தையில் பிறந்தவர். பாண்டிய நாட்டின் பால் பற்றுடையவர். இருவரும் பெரும் புலவர்கள்.

ஒட்டக்கூத்தர் சொன்னார், "எங்க சோழ நாட்டு காவிரி மாதிரி உங்க பாண்டிய நாட்டு வைகை வருமா? வைகை கடலில் கலக்காதநதி"

அந்தந்த நாட்டுக்கு உரியவர்கட்கு அந்தந்த நாட்டின் மேல் ஒரு பற்று தானாக இயல்பாக வந்து விடுகிறது. குறிப்பாக திருநெல்வேலிக்காரர்கள் எங்கே போனாலும் எங்க தாமிரபரணி தண்ணீர் மாதிரி வருமா? என்பார்கள். அதிலே ஒரு ஈடுபாடு அவர்கட்கு. அதைப்போல ஒட்டக்கூத்தருக்கு தன் நாட்டு காவிரி மேல் ஒரு ஈடுபாடு. எனவே காவிரிபோல வருமா? என்று கேட்டார்.

புகழேந்தி சொன்னார், "உங்க நதி சாதாரண நதி. எல்லாவற்றையும் போல அதுவும் கடலில் கலக்குது. எங்க வைகை நதி கடலில் கலக்கலே. ஏன் தெரியுமா? இந்த கடல் இருக்கே இது பாற்கடலுக்கு உறவு. பாற்கடல் சிவபெருமானுக்கு நஞ்சளித்தது. ஆலகாலம் அங்கே இருந்து தானே வந்தது? எம்பெருமானுக்கு நஞ்சை அளித்த பாவியாகிய இந்த கடலோடு நான் போய் சேர்வேனா? என்று சொல்லி சிவபத்திமிக்க வைகை கடலில் கலக்கல."

இதை உள்ளடக்கி அவர் பாடிய அருமையான பாடலைக் கேளுங்கள்

நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவியென்று

வாரியிடம் புகுதா வைகையே –மாறி

இடத்தும் புறத்தும் இருகரையும் பாய்நது

நடத்தும் தமிழ்ப்பாண்டி நாடு.

அற்புதமான தற்குறிப்பேற்றக் கற்பனை ! இந்தக் கற்பனை புகழேந்திக்கு எப்படித் தோன்றியது? இந்தக் கற்பனைக்கு வித்திட்டவர் சேக்கிழார். ஏனெனில் சேக்கிழார் புகழேந்திக்குக் காலத்தால் முற்பட்டவர். 'சுடர்நிலை மாளிகைப் புலியூர்' என்ற இந்தப் பாடலில் இருந்து புகழேந்தி எடுத்துக் கூறினார்.

சேக்கிழர் இது பற்றி என்ன கூறினார் என்பதைப் பார்ப்போம். காவிரியினுடைய காண்டூர் அதாவது வரை படத்தைப் பார்த்தோமானால் அது தொடங்குகிற இடம் மிகச் சின்னதாய் இருக்கும். இங்கு இருக்கிற மலேசிய அன்பர்கட்கு எப்போதாவது வாய்ப்பு நேரும்போது அதாவது இந்தியாவிற்கு வரும் போது தலப்பயணம் செய்வதாய் இருந்தால் காவிரி எங்கே ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு மைசூருக்கு சென்று பார்க்கணும். மைசூருக்கு அருகே குடகு மலையில் சின்னதா ஒரு தொட்டி போல ஒரு இடத்தில் காவிரி தொடங்குவதைப் பார்க்கலாம். தலைக்காவிரி என்று கூறுவார்கள்.

இப்படி காவிரி ஆரம்பிக்கிற இடத்தில் தலைக்காவிரி என்ற பெயரில் கொஞ்சமாக தலைகாட்டும். இது வெளியே கிளம்பி பெரிதாகி விரிந்து சோழ நாட்டுக்கு வரும்போது அகண்ட காவிரி என்று பெயர் பெறும். அங்கே நன்றாக பரந்து விரியும் காவிரி கடலில் சென்று கலக்கிற இடத்தில் பாத்தோமென்றால் மிகக்குறுகி சிறிதளவே இருக்கும். தரப்பயணம் செய்தவர்கட்கு அது நன்கு தெரியும். இந்த காவிரி, ஆரம்பிக்கும் போது சிறிதாய் ஆரம்பித்து, சோழநாட்க்கு வரும் போது அகண்ட காவிரியாகி, கடலில் கலக்கும் போது மீண்டும் குறுகி விடுவது ஏன்? சேக்கிழார் காரணம் சொல்கிறார்.

எம்பெருமானுக்கு நஞ்சளித்த பாவியாகிய கடலுக்குப் போய் என்னுடைய வளத்தை எல்லாம் ஏன் போய் கொட்டுவது என்று சோழ நாட்டுல செல்லும் போது அகண்ட காவிரியாகி தமது வளத்தை எல்லாம் வாரி வழங்கி கடலை அடையும் போது கடல்வயிறு நிறையாதபடி குறுகி அடைந்ததாம். "கடல் வயிறு நிறையாத காவிரியின் கரை அணைந்தார்" என்ன அழகான வார்ததைகள்!

காவிரி குறுகித் தொடங்கி, சோழநாட்டில் அகன்று, கடலில் செல்லும் போது மீண்டும் குறுகுவது இயற்கையாக நடக்கிறது. அதிலே ஒரு கற்பனையை ஏற்றிச் சொல்கிறார். அந்தக் கற்பனையில் சிவானுபவத்தை சிவபக்தியைக் காட்டுகிறார். இந்த அற்புத அருட்கற்பனையை அப்படியே பின்னால் தமக்கு வேண்டியவாறு வைகைக்கு ஏற்றிக் கையாண்டார் புகழேந்தி.

ஒவ்வொரு சொல்லையும் மிக ஆழமான உட்பொருளை வைத்துப்பாடும் சேக்கிழாரை எப்படி பாராட்டுவது?

சேக்கிழார் திருமூல நாயனார் வரலாற்றைப் பாடுகிறார். மொத்தம் எத்தனைப் பாடல்களில் பாடினார்? 28 பாடல்கள். அதற்கே ஒரு பொருள் உண்டு. பெரியவர்கள் இப்படித்தான் பாடல் எண்ணிக்கையில் கூட பொருளை வைத்துப் பாடுவார்கள். இதற்கு அலகுநிலைப் பொருள் என்று பெயர்.

அருணகிரி நாதர் கந்தரனுபூதி பாடினார். அது தான் இந்த நிலவுலகில் அவர் பாடிய இறுதி நூல். ஏறத்தாழ நமக்கு அவர் எழுதிவிட்டுச் சென்ற உயில் போன்ற நூல் – அந்த அயில்வேலன் நூல். "மெய்யன்பர்களே ! இந்தாங்க ! நான் உங்களுக்கு விட்டுச் செல்லும் சொத்து. நான் பெற்ற சொத்தை ஞானவாரிசுகளாகிய உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்" என்பது போல அருணகிரியார் பாடியருளிய நூல் கந்தரநுபூதி. அதனை 51 பாடல்கள் என்று அமைத்துப் பாடினார். எதற்காக 51 என்று வைத்தார்?

எழுத்துக்கள் மொத்தம் 51. "அகர முதலெனவுரை செய் ஐம்பத்தோரட்சரமும்" என்பது அவர் பாடிய திருப்புகழ் வரிகள். இந்த 51 எழுத்துக்களை வைத்து ஒரு சொல் மாலை தயாரிக்கிறார். இந்தச் சொல் மாலையை முருகப்பெருமானே! உன்னுடைய பன்னிரு தோள்களிலே சாத்துகிறேன். இந்த மலர்மாலை என்றைக்கும் வாடாது. என்ன மலர்? சொல்லால் ஆனமலர். 'சொல்லுக்கு அடிப்படை எழுத்து. எழுத்து மொத்தம் எவ்வளவு?51. எனவே 51 பாடல்களைப் பாடினார். 'மாத்ருகா புஷ்ப மாலை கோல ப்ரவாள பாதத்தில் அணிவேனே' என்று அவரே ஒரு திருப்புகழில் பாடினார். இப்படி அருளாளர்கள் பாடும் பாடல் எண்ணிக்கை ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள் உண்டு.

சேக்கிழாரையே எடுத்துக் கொள்வோம். ஒரு பெரிய வரலாற்றுக் காப்பியத்தைப் பாடத் தொடங்குகிறார்; மிகப்பெரிய வரலாற்று நூல். பெரியோர்களுடைய பெருமைகளை எல்லாம் தொகுத்து சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் பாடல்கள் மொத்தம் 4286. இத்தனைப் பாடல்களால் அவர் பாடியது 63 நாயன்மார்களை. இந்தப் பெருமகனார் முதலில் பாடிய பாடல் ஆண்டவன் வாக்கெடுத்துத் தந்து உதவியது. உலகெலாம் என்று அம்பலவன் தொடங்கி வைத்தான்.

உலகெ லாதுணர்நத தோதற் கரியவன்	=	16 எழுத்துக்கள்
நிலவு லாவிய நீர்மலி வேணிய	=	13 எழுத்துக்கள்
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்	=	16 எழுத்துக்கள்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்	=	18 எழுத்துக்கள்

இந்தப் பாடலில்ல இருக்கிற எழுத்துக்களை எண்ணிப் பார்த்தோமானால் மொத்தம் 63 வரும். 63 அடியார்களைப் பற்றிய வரலாறுகளைப் பாடியது என்று குறிப்பாகக் காட்ட 63 எழுத்துக்களை வைத்தார்.

சிலபேர் எண்ணிப் பார்க்கும் போது 63க்கு அதிகமாக வருதே என்று குழம்புவார்கள். என்ன காரணம் என்றால் சில பதிப்புகளில் பதம் பிரித்து ஒற்றெழுத்துக்கள் அதிகமாகப் பதிப்பித்திருப்பார்கள். இது அறிவார்ந்த கூட்டம். அதனால் பிரச்சினை இல்லை. சில இடங்களில் பேசும் போது ஒற்றெழுத்துன்னா புரியாது. அது தாங்க, மேலே புள்ளி வைத்திருக்குமே, க்,ங்,ச் என்பது போல என்றால், ஓ! பொட்டு வச்ச எழுத்தாம்பான். மெய்யெழுத்து – ஒற்றெழுத்து என்றால் புரியவில்லை.

அடடா! தமிழ் என்னமா வளருது! பெருமக்களே! குறில் எழுத்திற்கு ஒரு மாத்திரை; நெடில் எழுத்திற்கு 2 மாத்திரை. மெய்யெழுத்து ஏதாவது ஒற்றெழுத்திற்கு அரை மாத்திரம். நானும் என் மனைவியும் பேருந்தில் செல்கிறோம். மகனைக் கையில் வைத்திருக்கிறாள் என் மனைவி. பயணச்சீட்டு அதாவது டிக்கட் வாங்கும் போது எனக்கும் என் மனைவிக்கும் வாங்கினால் போதும். கைக்குழந்தைக்கு டிக்கட் கேட்க மாட்டார்கள். அது போல மற்ற எழுத்துக்களுக்கு ஒலியளவான மாத்திரை உண்டு. ஒற்றெழுத்து கைக் குழந்தை போல அதற்கு ஒலியளவு வைத்து எண்ணப்படாது. எனவே மெய்யெழுத்தை விட்டுவிடுவார்கள். இது பாட்டின் அசை, சீர் கணக்கில் வரும்.

ஆனால் பாட்டின் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை என்றால் இதையும் சேர்க்க வேண்டும். அப்படி இந்த பாட்டின் மொத்த எழுத்துக்களை எண்ணினோம் என்றால் 63 வரும். அதற்கு பதப்புணர்ச்சி சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உலகு எலாம் உணர்ந்து என்று பதம் பிரித்துச் சொல்வோமானால் மொத்த எழுத்துக்கள் 11 வரும். அதை உரிய பதப்புணர்வோடு உலகெ லாமுணர்நது என்று கூறினால் எழுத்துக்கள் 9 வரும். இங்ஙனம் உரிய பதப்புணர்வோடு இந்தப் பாடலை எழுதி எண்ணினோம் என்றால் 63 வரும்

(மேலே எழுதிக்காட்டி எண்ணி இருப்பதைப் பார்க்க) எனவே 63 நாயன்மார்களை பாட வந்தவர் அதைக் குறிக்க 63 எழுத்துக்கள் வைத்து முதல் பாடல் பாடினார். இது தெய்வத் திருவருளால் அமைவது. இந்தப் பாடலுக்குத் தெய்வம் தானே வாக்கெடுத்து உதவியது. எனவே அப்படி அமைவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இப்படி இன்னும் பல உதாரணங்களைக் கூறலாம். ஒன்றிரண்டு கூறுகிறேன். இப்படி சந்தர்ப்பம் அமையும் போது நாம் பார்க்கவில்லையன்றால் நாம் வேறெப்போது பார்ப்போம்?

மெய்கண்டார் சிவஞானபோத நூல் செய்கிறார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் மன்னர். மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்திற்கு சிவஞானபோதம் அத்துப்படி என்பது உலகறிந்த விஷயம். அந்த சிவஞான போதம் மொத்தம் 12 சூத்திரங்களைக் கொண்டது. நூலைத் தொடங்குமுன் மெய்கண்டார் மங்கல வாழ்த்து கூறுகிறார்.

கல்லால் நிழல்மலை – கல் ஆல் நிழல் மலைவு

வில்லா ரருளிய – இல்லார் அருளிய

பொல்லா ரிணைமலர் – பொல்லார் இணை மலர்

நல்லார் புனைவரே – நல்லார் புனைவர்ஏ

இந்த மங்கல வாழ்த்தில் எண்ணிப் பார்த்தீர்களானால் சொற்கள் மொத்தம் 12 வரும் (சொற்களை பிரித்துக் காட்டியிருப்பதை மேலே பார்க்க) 12 சூத்திரங்களால் ஆனது இந்நூல் என்பதைக் காட்ட 12 சொற்களால் மங்கல வாழ்த்து பாடினார்.

கந்தரனுபூதியில் கூட இன்னொன்றைக் கூற வேண்டும். அதில் 7வது பாட்டு,

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது

இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்

சுடுவாய் நெடுவே தனைதூள் படவே

விடுவாய் விடுவாய் வினையா வையுமே

யார் வந்து கேட்டாலும் இல்லைன்னு சொல்லாம கொடுத்துவிடு என்றார். கெடுவாய் மனனே கதிகேள்! உன் கையில் உள்ளதை ஒளித்து வைத்து இல்லைன்னு சொல்லிவிடாதே. கொடு! இவன் என்ன பார்ககவா போகிறான் என்று ஒளிக்காதே. கரவாது இடு! இதை இவன் வந்து கேட்கும் பொது கொடுக்கும் படி என்னிடம் அதை ஆண்டவன் முன்கூட்டியே கொடுத்து வைத்தானே என்று ஆண்டவனை நினைத்து நன்றி சொல்! ஆ! எவ்வளவு உறுதியான உபதேசம்! இது மிகப் பெரிய நிலையில் அமைந்த பாடல். ஆறு ஆதாரங்கள் உள்ளே நமது உடலில் சுழிமுனை நாடியில் இருப்பவை. ஏழாவது சகஸ்காரம் என்பது. இது தலைக்கு மேலே ஓரடிக்குள் இருப்பது. அங்கே சென்ற ஆன்மா அதற்கு பின் அண்டத்திலே கலந்து விடும். அந்த நிலையில் இருக்கிறார் அருணகிரிநாதர். அப்போது பாடியருளிய கந்தரனுபூதி. தான் சகஸ்தாரத்தில் ஏழாவது ஆதாரத்தில் இருந்து அண்டத்தில் கலக்கும் முன் இந்த உலக மக்களுக்கு ஓர் உறுதியான உபதேசத்தை அருள வேண்டும் என்று நினைக்கிறார். அந்த உபதேசம் தான் மேலே கூறிய

பாடல். அது எவ்வளவு உயர்வானது? தாம் எந்த இடத்தில் இருந்து பாடியது? என்பதைக் காட்ட அதாவது ஏழாவது ஆதாரத்தில் கூறிய உயர்ந்த உபதேசம் என்பதைக் காட்ட ஏழாவது பாடலாக அதை வைத்தார்.

இப்படி அலகுநிலைப் பொருளில் வைத்துக் காட்டிய குறிப்புகளை அதாவது எண்ணிக்கையில் வைத்துக் காட்டிய குறிப்புகளைப் பல எடுத்துக் காட்டலாம். திருமந்திரத்திலேயே கூட இப்படி ஒன்றைக் காட்டலாம். 9ம் தந்திரத்திலே திருக்கூத்து தரிசனம் பாடியருளினார் திருமூலர். அதை 82 பாடல்களைக் கொண்டு அமைத்தார்.

இறைவனை எட்டும் இரண்டுமான பொருள் என்று மறைவான பொருளை உள்ளடக்கிக் கூறுவர் ஞானியர் "எட்டினோடு இரண்டும் அறியேனையே பட்டி மண்டபம் ஏற்றினை" என்பார் மணிவாசகர். மறைவாகக் கூறப்பட்ட எட்டும் இரண்டும் இது தான் என்று வெளிப்படுத்தி இருக்கிறேன் என்பதைக் காட்ட திருக்கூத்து தரிசனத்தை 82 பாடல்களால் அமைத்தார் திருமூலர்.

இங்ஙனம் அலகுநிலை காட்டி பொருள் காட்டிய திருமூலரின் வரலாற்றைக் கூற வருகிறார் சேக்கிழார். அவரைப் போலவே இவரும் எண்ணிக்கையில் ஒரு பொருள் வைத்துப் பாடுகிறார். ஆகவே 28 பாடல்களை அமைத்து இவர் வரலாற்றினை எழுதினார். இதற்கு என்ன பொருள்?

28 ஆகமங்களைச் சாரமான தமிழாக வகுத்தவர் திருமூலர். அது தான் தமிழ் மூவாயிரமான திருமந்திரம். எனவே இவரது வரலாற்றை 28 பாடல்களில் அமைத்தார்.

ஆ! சின்ன சின்ன விஷயங்களிலும் பெரிய பெரிய பொருளை உள்ளடக்குவதில் சேக்கிழார் வல்லவர். அது அருட்தன்மையினால் அல்லது வராது. எனவே தான் அவர் தெய்வப்புலவர் என்று அழைக்கப்பட்டார். தெய்வப்புலவர் இருவர் மட்டுமே. ஒன்று சேக்கிழார்; மற்றவர் திருவள்ளுவர்.

இனி வரலாற்றிற்கு வருவோம். சுந்தரநாதர் காவிரிக்கரையை வந்தடைகிறார். காவிரியைத் தாண்டியவர் திருவாவடுதுறை போய் பசுபதியாரை கண்டு வணங்குகிறார். என்னவோ தெரியல, மனது அதிலேயே ஈடுபட்டு விடுகிறது. அவருக்கு அங்கேயே இருந்து விடலாம் போலத் தோன்றுகிறது.

பெரியோர்களே! தல யாத்திரை போவோம் என்றால் நல்ல துணை வேண்டும். அப்படிப்போனால் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். இங்குள்ள நமதன்பர் கலியபெருமாளைப் போன்றவர்களை அழைத்துச் சென்றால் இன்னின்ன பாடல்கள் இங்கே சொல்லப்பட்டது;; இன்னின்ன நிகழ்ச்சிகள் இங்கே நடந்தது என்று விவரிப்பார்.

வாரியார் சுவாமி இரண்டாவது முறை கயிலை யாத்திரை சென்றார். அப்போது அவரோடு கூட போக வேண்டுமென்று பலர் துடித்ததர்கள். இரண்டாவது கயிலை யாத்திரையில் அமர்நாத் செல்ல திட்டமிடப்பட்டது. இப்போது அடியேன் சொல்வது நடந்த நிகழ்ச்சி. கோயம்பத்தூரில் ஓர் அன்பர். அவர் வாரியார் மேல் அளவிறந்த பக்தியுடையவர். ஏற்பாடு செய்தவர்கள் பயணம் செய்பவர்கள் பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ கோளாறினால் இந்த கோயம்பத்தூரார் அன்பர் பெயர் விடுபட்டுப் போச்சு. அவருக்கு துக்கம் தாங்கவில்லை. யாத்திரைக்கு யார் ஏற்பாடு செய்தாரோ அவர் வீட்டிற்கு முன்னால தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டார். எந்த அளவிற்கு அவர் மனதைப் பாதித்திருந்தால் அவர் இப்படி செய்திருப்பார்?

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? மிகப்பெரியவர் செல்கின்ற பயணத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டால் பல நல்ல விஷயங்களை அறிந்து அனுபவிக்கிற பேறு கிடைக்கும். இதை நழுவவிட நல்ல மனங்கள் சம்மதியாது.

இது ஒரு புறமிருக்கட்டும். சிவபெருமானே யாத்திரைக்குச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இது எவ்வளவு அற்புதமான வாய்ப்பு மலேசிய நாட்டில் உள்ள அருள்நெறித் திருக்கூட்டத்தார் அனைவரும்

வந்துவிடமாட்டீர்களா? ஆனால் அந்த பாக்கியம் நமக்கு இல்லை. காரணம் சிவபெருமான் புறப்பட்டது இப்போதல்ல. பல நூற்றாண்டுகட்கு முன்னே. சுவாமி பல பேரைக் கூட்டவில்லை. யாத்திரைக்கு புறப்பட்டது இரண்டே இரண்டு பேர் தான். ஒருவர் சுவாமி; மற்றவர் அவரது தோழரான குபேரன். ஒரு வேளை வழிச்செலவுக்கு வசதியாகும் என்று குபேரனைக் கூட்டி வந்தாரோ என்னவோ! அதிலேயும் இப்போது தேவைப்படுவது ஃபாரின் எக்ஸ்சேஞ்சு. காரணம் கயிலையில் அருள்தான் செலவாணி. இங்கே புழக்கத்தில் உள்ள பணம் அங்கே கிடையாது. எனவே குபேரனைக் கூட்டி வந்தார் போலும்.

இருவருமாக எல்லாத் தலங்களையும் பார்த்து வருகிறார்கள். திருவெண்காட்டை அடைகிறார்கள். அங்கே சுவாமிதரிசனம் செய்கிறார் குபேரன். வெளியே கூட நிற்பவரும் உள்ளே உள்ள சுவாமியைவிட உள்ளே உள்ள வெண்காடர் பால் ஆசை அதிகமாக எழுகிறது. காரணம், கூட வந்தவருக்கு திருமஞ்சனமாட்ட முடியாது. வெண்காடருக்குத் தான் விருப்பம் போல் அபிடேகம் ஆராதனை எல்லாம் செய்யலாம். என்னவோ, குபேரனுக்கு திருவெண்காடர் மீது தனி ஈடுபாடு வந்துவிட்டது.

"என்ன யோசனை! கிளம்பு, கிளம்பு!" சுவாமி டூரிஸ்ட்காரர்களைப் போலவே துரிதப்படுத்தினார். குபேரன் தயங்கித் தயங்கி நின்றான். சார்! திட்டப்படி நாம இன்னும் நாலைந்து ஊரைப் பார்த்துவிட்டு 2 நாள்ள ஊர் திரும்பணும். உங்களுக்கு வேணுமின்னா நீங்க இங்கேயே அருந்துவிட்டு உங்க இஷ்டம் போல தனியா ஊர் திரும்புங்க என்று டூரிஸ்ட்காரர்கள் தயங்கித் தாமதிப்பவரை அங்கேயே விட்டுவிட்டுச் செல்வது போல சிவபெருமான் கூறினாராம்.ஓ! திருவெண்காட்டில் உனக்கு ஈடுபாடு வந்துவிட்டது போலும்! சரி, குபேரா! நீ இங்கேயே இருந்து விட்டு பின்னால் வா என்று கூறிவிட்டு சிவபெருமான் குபேரனை அங்கேயே விட்டு விட்டுச் சென்று விட்டாராம்.

ஒரு சின்ன ஆசை. ஆதவும் நல்ல ஆசை. ஆசை அறுமின் ஆசை அறுமின், ஈசனோடயினும் ஆசை அறுமின் என்று சிவபோக சாரம் பாடிய திருஞானசம்பந்தர் அற்புதமாக பாடினார். எந்த ஆசையாய் இருந்தால் என்ன? ஒரு ஆசை என்றால் அதற்கு ஒரு பிறப்பு உண்டு.

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ் ஞான்றும்

தவாஅப் பிறப்பீனும் வித்து

என்பார் திருவள்ளுவர். அவா எதுவாயினும் தவறாது அது பிறப்பை விளைவிக்கும் என்றார். திருவெண்காடரை அபிடேகம் சூராதனை எல்லாம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டான் குபேரன். அந்த ஆசைக்கு ஒரு பிறப்பீ. அது தான் பட்டினத்தார். ஒரு சின்ன, அதுவும் நல்ல ஆசைக்கே ஒரு பிறப்பு என்றால் நமக்கு எத்தனை எத்தனை ஆசைகள்! சே! அதுவும் வெளியில் சொல்லக் கூடிய ஆசைகளா! இவற்றிற்கெல்லாம் சேர்த்து நமக்கு எத்தனை பிறவிகள் வருமோ? கொஞ்சம் கூட கவலைப் படாம வாழ்கிற நம்மை என்ன சொல்ல!

இங்கே சுந்தரநாதருக்கு திருவாடுதுறையிலே குபேரனுக்குத் திருவெண்காட்டில் வந்ததைப் போல பசுபதியார் மேல் ஒரு ஆசை–ஒரு ஈடுபாடு வந்தது.

திருவாடுதுறை அவ்வளவு எளிய தலமா என்ன? எத்தனை பெருமை உடையது? திருவாவடுதுறை என்ப திரு+ஆ+அடுதுறை என்று விரியும். திரு–கண்டாரை வியந்து ஈடுபடச் செய்யும் தெய்வத் தன்மை, ஆ–பசு, அடுதல் – அழித்தல். பிறவிக்கடலில் தத்தளிக்கும் ஆன்மாக்களாகிய பசுக்களின் பசுத்தன்மையைப் போக்கி இறைவனடியைச் சேர்விக்கும் துறைமுகம் திருவாவடுதுறை. எவ்வளவு அற்புதமான பெயர்! இன்று தலப்பெயரெல்லாம் தலைகீழா மாறிப்போச்சு. திருச்சிக்கு பக்கத்தில் லால்குடின்னு ஓர் ஊர். அதென்ன லால்குடி? வடநாட்டு சேட்டுகள் தான்லால் என்று பெயர் வைத்துக் கொள்வாங்க. அங்கே அப்படி ஏதாவது ஒரு சேட்டு வந்து குடி அமாத்தினானா? ஆராய்ந்து பார்த்தால் அந்த

ஊரின் பழைய பெயர் திருத்தவத்துறை. அந்தத் தலத்துப் பெருமானின் பெயர் அழைத்து வாழ்வித்தவர். ஆ! எவ்வளவு அழகான பெயர். அந்த காலத்திலேயே சுவாமியிடம் யாரும் தாகார் போகவில்லை போலும்! இவன் இப்படி கெட்டு ஓழிகிறானே என்று கருணையினால் அறைவனே ஆன்மாக்களை அழைத்து வாழ்வித்தாராம். அம்பிகை பெயர் பெரிய நாயகி. பல தமிழப் பெயர்கள் உருமாறிப் போச்சு. திருவண்ணாமலையில் அம்பிகையின் பெயர் என்ன என்றால் அபிதகுஜாம்பாள் என்கிறான். பேரே வாயில் நுழைய மாட்டேன் என்கிறது. நல்ல தமிழில் உண்ணாமுலையம்மை என்றால் கேட்கிறதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறது? இப்போது திருவாவடுதுறையில் சுவாமிக்குப் பசுபதியார் என்ற பேரில்லை. வேறு எதையோ சொல்லுகிறார்கள். ஆனால் சேக்கிழார் பசுபதியார் செழுங்கோயில் என்றே கூறுகிறார். நாம் சேக்கிழார் வழியே செல்வோம்.

சுந்தரநாதருக்கு பசுபதியார் கோயிலை விட்டு வர மனம் வரவில்லையாம்.

அந்நிலைமைத் தானத்தை அகலாத தொருகருத்து

முன்னியெழும் குறிப்பினால் மூளும்ஆ தரவெய்தப்

பின்னும் அகன் றேகுவார் பேணவரும் கோக்குலங்கள்

பொன்னிநரிக் கரைப்புறவிற் புலம்புலன எதிர்கண்டார்.

ஈர்த்தென்ன ஆட்கொண்ட எந்தை பெருமான் என்ற திருவாசக வாக்கிற்கிணங்க மறுபடியும் பசுபதியார் கோயிலுக்குப் போகிறார். சிந்தை சொடுக்கி இழுக்கிறது. நாம் வந்த பயண நோக்கம் என்ன? அகத்தியரைச் சந்தித்து அவருடன் சில நாள் தங்குவது. சரி! புறப்படு! சிந்தை சீறுகிறது. மனமோ பசுபதியாரிடம் ஒட்டிக் கொள்கிறது. ஒருவாறு மனத்தை தேற்றிக் கொண்டு பின்னும் அகன்று ஏகினாராம் சுந்தரநாதர்.

அவ்வாறு ஏகியவர் பேணவரும் கோக்குலங்கள் பொன்னிநதிக் கரைப் புறவில் புலம்புவன எதிர்கண்டார். காவிரி ஓடிக்கொண்டிருக்கிறழ. அதன் கரையையொட்டி பெரிய மேய்ச்சல் நிலம். புறவு எனபார்கள். புறவு என்றால் முல்லை நிலம். அங்கே மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். அங்கே சுந்தரநாதர் ஓர் அதிசயக் காட்சியைக் காண்கிறார். மேய வேண்டிய மாடுகள் மேயச் சொல்லாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றாக சேர்ந்து கூடி அழுது கொண்டிருந்தன. கதறின அவற்றின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆக்கள் கதறுவன, சுழல்வன, மோப்பன, அடை சோர்வனவாக தயருற்றன என்று சேக்கிழார் அற்புதமாக சித்தரித்துப் பாடுகின்றார். இப்படி இவையெல்லாம் அழுதுகொண்டும் கதறிக் கொண்டும் இருக்கின்றனவே என்ன விஷயம் என்று மாடுகளை விலக்கி எட்டிப் பார்க்கிறார் சுந்தரநாதர். உள்ளே மூலன் என்கிற அடையன் அறந்து கிடக்கிறான். திடீரெனத்தான் அவன் இறந்திருக்க வேண்டும். அதுவும் அண்மையில் தான் அவன் இறந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த மாடுகள் இவவளவு துயரத்துடன் கதறாது. இவன் இந்த மாடுகளை மேய்ப்பவன் போலும். இவற்றை இவன் நல்ல அன்புடன் பேணியிருப்பான். எனவே மாடுகள் அவன் பிரிவை தாங்காமல் கதறுகின்றன. மேய்க்கிறவன் மாடுகளை அடிஅடின்னு அடிச்சா மாடுகள் அவன் கிட்ட வருமா? இவன் ஏன் திடீரென இறந்தான்?

இந்த இடத்தில் உமாபதிசிவம் ஒரு குறிப்பு கொடுக்கிறார். அவன் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனானாம். இதை எப்படி உமாபதசிவம் கூறினார்? பயிலா நோய் என்று கூறினார். சில பேர் பாயும் நோயுமாக நோயுடன் நீண்ட நாள் உறவுடன் இருப்பார்கள். அது போல இல்லையாம். இவன் பெற்ற நோய் பயிலா நோய். அதாவது திடீரெனத் தாக்கிய நோய். எனவே இது தற்காலத்தில் கூறப்படும் மாரடைப்பு நோயாக இருக்கலாம். இது அந்தக் காலத்தில் அதிகம் பயிலா நோய் என்றும் பொருள் கொள்ளலாம்.

சுந்தரநாதர் நினைக்கிறார் பண்பாக மாடுகளை நடத்திய இவன் திடீரென மாரடைப்பு நோயால் இறந்து போயிருக்கிறான். எனவே இநத் வாயில்லாப் பசுக்கள் கத்திக் கதறி சுற்றிச் சூழ்ந்து தமது துயரத்தை வெளிப்படுத்துகின்றன. ஐயோ! பாவம்! இவன் உயர் பெற்று எழுந்தாலொழிய இந்தப் பசுக்கள் இடர் நீங்கா.

உடனே சுந்தரநாதர் என்ன செய்தால் இந்த பசுக்களின் துயர் நீங்கும் என்று எண்ணிப் பார்க்கிறார். அவருக்கு ஒரு வாய்ப்பு வசதி உண்டு. அட்டமாசித்திகள் சூக்குமமாக அவர் பின்னாலே வருகின்றன என்று சொன்னோமல்லவா. அதில் பரகாயப் பிரவேசம் என்பது ஒன்று. அதாவது கூடுவிட்டு கூடு பாய்வது. இவர் இந்த விலங்கினங்களின் துயர் தீர்க்க எண்ணுகிறார். அறிவின் சிகரமாயிற்றே அவர்.

அறிவிற்கு அடையாளம் என்ன? ஒருவரிடம் எதை வேண்டுமானாலும் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். உங்களுக்கு குழந்தை இருக்க? கேட்கலாம் பதில்வரும். அனால் உங்களுக்கு அறிவு இருக்கா? கேட்கக்கூடாது. கேட்டால் பதில் கிடைக்காது பளூரென விழும் அறையில் பல் தான் கிடைக்கும்.

என்றால் ஒருவருக்கு அறிவு இருக்கா என்று எப்படித் தெரிந்து கொள்வது?

திருவள்ளுவர் கைகொடுக்கிறார். அதற்கு ஒரு அடையாளம் சொல்கிறார். எவன் ஒருவன் பிற உயிர்கள் (உயர்திணை அஃறிணை உட்படயாவும்) படுகின்ற துன்பத்தைக் கண்டு இரக்கம் கொள்கிறானோ அவனுக்கு அறிவு உண்டு என்று தெரிந்து கொள். இல்லையென்றால் அந்த அறிவினால் ஆவதென்ன? என்றார்.

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தந்நோய் போல் போற்றாக் கடை

சுந்தரநாதர் மிகப் பெரிய அருளாளர், மிகப்பெரிய ஞானி. அவர் பெற்ற ஞானம்–அளவிறந்த அறிவு அந்த பசுக்களின் துயரம் தீர்க்கச் சொல்கிறது. இரக்கம் அவரை அங்கேயே இருக்கிறது. நமக்கு ஒரு வசதி இருக்கிறது. அதாவது சுடுவிட்டு சுடுபாய்தல். நாம் ஒரு வேளை இவன் உடலில் புகுந்தோமானால் இந்த விலங்குகளான பசுக்களின் துயர் நீங்க வாய்ப்புண்டு என்று அவர் நினைக்கிறார்

இவன் உயிர்பெற் றெழிலன்றி ஆக்களிடர் நீங்கா என்று

அவன் உடலில் தம்முயிரை அடைவிக்க அருள்புரியும்

தவமுனிவர் தம் உடலுக்கு அரண்செய்து தாம்முயன்ற

பவனவழி அவன் உடலில் தம்முயிரைப் பாய்த்தினார்

சுந்தரநாதர் என்ன செய்ய இருக்கிறார்? மூலன் உடலில் தம்உயிரை காற்று வழி புகுத்திக் கொள்ளப் போகிறார். அதற்கு முன் தம் உடலை பத்திரமான ஒரு இடத்தில் பதுக்கி வைத்துவிட்டு பின் மூலன் உடலில் புகுகிறார். இதை தம் முடலுக்கு அரண் செய்து தாம் முயன்ற பவனவழி அவன் உடலில் தம் உயிரைப் பாய்த்தினார் என்றார் சேக்கிழார். பவனம் வடமொழிச் சொல். பகரத்தை அழுத்திச் சொல்லிக் கூறினோமானால் பவனம் காற்றைக் குறிக்கும் வடமொழியை மிக எச்சரிக்கையாக உச்சரிக்க வேண்டும். இங்கே பவனவழி என்றால் காற்றுவழி என்று பொருள் கொள்ள வேண்டும். பரகாயப் பிரவேசம் காற்றுவழியாகத்தானே நடக்க வேண்டும்?

இப்போது சுந்தரநாதர் மூலன் என்கிற இடையன் உடலில் புகுந்து விட்டார். தற்போது கீழே அருப்பது மூலன் என்கிற அடையன் லேலன் சுந்தரநாதர் என்கிற அருளாளர். இந்த இடத்தில் சேக்கிழார் காட்டுகிற நயத்தை என்னவென்நுறு சொல்ல. அவர் பெருமையை எப்படி எப்படியெல்லாம் சொல்லி மகிழலாமே அப்படி அப்படியெல்லாம் சொல்லி மகிழலாம்.

சுந்தரநாதர் மூலன் என்னும் இடையன் உடலில் தம்முயிரைப் பாய்த்திட, பாய்த்தியபின் எழுபவரை மரியாதையோடு திருமூலராய் எழலும் என்கிறார். இதற்கு முன் இந்த இடையனை அறிமுகப்படுத்தும் போது முந்தை முறை நிரை மேய்ப்பான் மூலன் என்னும் பெயருடையான் என்று ஒற்றை விளியாகச் சொல்கிறார். மூலர் என்னும் இடையர் என்று சொல்லவில்லை. மூலர் என்னும் அடையர் என்று சொல்லவில்லை. மூலன் என்னும் பெயருடையான் என்கிறார்.

தற்போது அருளாளர் சுந்தரநாதர் அவன் உடலில் எழுகிறார். மரியாதையோடு திருமூலராய் எழலும் என்கிறார்.

அதிலும் முற்பிறப்பு பெயரான சுந்தரநாதர் பெயரை சேக்கிழார் இந்தப் பாடலில் திருமூலராய் எழலும் என்று கூறும் சரை கூறவே இல்லை . நந்தி திருவருள்பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் என்று அறிமுகப்படுத்தியதோடு சரி. இதுவரை பெயர் கூறாமலே வரலாற்றைக் கூறிவந்தார். இங்கே தான் முதன் முதலில் திருமூலர் என்று பெயர் கூறினார். இனி, நாமும் சுந்தரநாதன் என்று கூறாமல் திருமூலர் என்றே கூறுவோம்.

இடையனை அறிமுகப்படுத்தும் போது மூலன் என்றும், அவன் உடலில் அருளாளர் புகுந்ததும் மூலர்– திருமூலர் என்றும் இடத்திற்கு ஏற்ப இப்படி ஜாலம் காட்டிப் பாடுவதில் சேக்கிகழார் வல்லவர். இதைப் பல இடங்களில் பார்க்கலாம், உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

நம் எல்லோருக்கும் மனுநீதி சோழன் கதை தெரியும். மனுநீதி சோழன் முன்னால் நிற்கிறான். கன்றை இழந்த மாடு ஒன்று ஆராய்ச்சி மணியை அடித்துவிட்டு முன்னால் நிற்கிறது. இது எதற்காக மணி அடிக்கிறது என்று மந்திரியை கேட்கிறான். மந்திரி பிரதானிகள் எல்லாம் காதரணத்தைக் கூறுகிறார்கள். அந்தக் காரணம் என்னவென்று உங்களுக்கு எல்லாம் தெரியும். உன்னுடைய பிள்ளை தேரோட்ட அந்த தேர்க்காலில் என்னுடைய கன்று சிக்கி அடிபட்டு இறந்துவிட்டது என்பதை அந்தப் பசு சொல்லாமல் சொல்லிக் கண்ணீர் உகுக்கிறது. அதை சொல்ல வந்த சேக்கிழார்.

அவ்வுரை கேட்டவேந்தன் ஆவுறு துயரம் எய்தி

வெவ்விடம் தலைக்கொண்டாற் போல் வேதனை அகத்து மிக்கிங்

கிவ்வினை விளைந்த வாறென்(று) இடருறும் இரங்கும் ஏங்கும்

செவ்விதென் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

என்று பாடுகிறார். இந்த பாட்டு ஒன்றிற்கே கோடி கொடுக்கலாம் சேக்கிழாருக்கு.

எப்படிச் சொல்கிறார் பாருங்கள்! இவ்வினை வந்தவாறு என்னென்று இடருறும், இரங்கும்,ஏங்கும்... முதலில் ஆவுறு துயரம் எய்தி என்று கூறினார். பசுவினுடைய துயரத்தை மனுநீதிச் சோழன் எய்தினானாம். பொதுவாக வழக்காற்றிலே சொல்வோம். ஒரு தலைவலிக்கு இந்தப் பாடுபடுத்துகிறயே. அதற்கு பாதிக்கப்பட்டவன் சொல்வான். என்ன பெரிய தலைவலின்னு நீ சொல்லலாம். தலைவலியும், வயிற்றுவலியும் தனக்கு வந்தால் தெரியும் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

இப்ப பசுவினுடைய துயரைத்தை முழுதாக மனுநீதிச் சோழன் அனுபவித்தா தான் அவனுக்கு அந்த துயரத்தின் அளவு தெரியும். மனுநீதிச் சோழன் அந்தப் பசுவின் துயரத்தை முழுதாக எய்தினானா? ஆமாம்!

எய்தினான் என்கிறார் சேக்கிழார். எப்படி? மனுநீதிச் சோழன் அந்தப் பசுவின் துயரத்தை எய்தி அந்தப் பசுவாகவே மாறிவட்டானாம். பசுவோ அஃறிணை, எனவே பசுவாகவே மாறிவிட்ட மனுநீதிச் சோழன் செய்கைகளை அஃறிணைச் சொற்களாகவே கூறி அவனது உண்மை நிலையைக் காட்ட இடருறும், இரங்னும், ஏங்கும் என்று கூறினார் சேக்கிழார். இடருறுவான், அரங்குவான், ஏங்குவான் என்று கூறினாரில்லை சேக்கிழார். சிறிது நேரத்தில் தெளியும் என்றவர் தெளிந்தவுடன் அவன் மறுபடியும் மனுநீதிச் சோழனாகி விட்டதால் உயர்திணைச் சொல் வைத்து அடுத்து என்ன செய்வது என்று தேறான் என்றார். இப்படி ஒரு புலவரை ஈரேழு உலகத்திலும் பார்க்க முடியாது! வேறு எந்தப் புலவனும் இந்த நுட்பத்தைக் காட்டுந் திறமை எட்டிப் பார்க்க நினைத்துக்கூட பார்க்க முடியாது.

பேரே சொல்லாமல் வரலாற்றை மட்டும் சொல்லி வந்தவர், இடையனை அறிமுகப்படுத்தும் போது மூலன் என்றும் வேன் விட்டுச் சென்ற உடலில் அருளாளர் புகுந்ததும் திருமூலர் என்று மரியாதையோடு கூறும் பாங்கு மேலே மனுநீதிச் சோழன் வரலாற்றில் காட்டிய உதாரணத்தை பெரிதும் ஒத்தது.

ஆக்களைப் பொறுத்தவரை எழுந்ததது இடையனா, திருமூலரா, என்று பகுத்துப் பார்க்கத் தெரியாது. அவை தம்மை மேய்ந்த இடையனே எழுந்தான் என்று நீத்த துயரினவாகி நிரந்துபோய் மேய்ந்தன! அவற்றிக்கு ஒரே சந்தோஷம்.

இங்கே பசுபதியார் ஆகிய இறைவன் நினைக்கிறான். ஏற்கெனவே சுந்தரநாதன் இந்த திருவாவாடுதுறையைவிட்டுப் போகாமல் தங்கிவிட வேண்டும் என்று ஓர் எண்ணம் கொண்டான். இந்நிலைமைத்தானத்து அகலாததொரு கருத்து இவனிடம் இருக்கிறது. அதுவுமின்றி இந்த விலங்கினங்களாகிய பசுக்களின் துயரை நீக்க வேண்டும் என்று நினைத்தான். ஆகவே இங்கே ஓர் அவா இவனுக்கு எழுந்துவிட்டது.

அவா என்பது தவாது பிறப்பீனும் வித்து. அப்படித்தானே குபேரன் பட்டினத்தர் ஆகப் பிறந்தான். யாராயிருந்தாலும் நீதி நீதிதான். பெரிய அருளாளர் என்றால் அவர் தவறு பண்ணா அதை ஒத்தக்க முடியுமா? வாரியார் சுவாமி ஒரு பெரிய அருளாளர். அதற்காக வேர் வருமான வரி கட்ட வேண்டாம்னு விட்டு விட முடியுமா? ஒரு பேச்சுக்காக அவரை உதாரணம் சொன்னேன். அதற்காக அவர் கட்டலைன்னு நினைச்சுடாதீங்க. வருமானவரி இலாகாவினர் பணம் கட்டாதவர்களைப் பட்டியல் இட்டுக் காட்டுவர். இதுவரை அவர் பெயர் எந்த பட்டியலிலும் வரவில்லை. எதற்கு சொன்னேன் என்றால் அருளாளர் யாராக இருந்தாலும் தவறு தவறுதான். திருமூலர் எவ்வளவு பெரிய அருளாளர்? அதற்காக ஓர் அவா என்று வந்து விடுமானால் அதற்கென்று நிச்சயமாக பிறப்பு கொடுத்தே ஆக வேண்டும். இதிலிருந்து சற்று முறை மாறினாலும் இறைவன் ஒருதலை பட்சமாக நடந்து கொள்பவர் என்று ஆகிவிடும். இறைவனைாகிய எம்பெருமான் நீதி தவறிவிடக் கூடாது. இல்லைன்னா நீதியே திருப்பெருந்துறை மேவிய எம் ஆகியே என்று மணிவாசகர் பாடியது பொய்யாகிவிடும்.

கடவுள் நீதி இல்லாமல் அவருக்கு ஒன்று இவருக்கு ஒன்று என்று நடந்து கொள்வதாய் இருந்தால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்? உடனே நாம் என்ன பண்ண ஆரம்பிச்சிடுவோம். கடவுளுக்கே லஞ்சம் கொடுத்துச் சரிபண்ண ஆரம்பித்துவிடுவோம். அரோகரா! அவ்வளவு தான்! உலகத்தையே ஒரு வழி பண்ணிடுவோம்.

எனவே கடவுள் இலக்கணம் என்று ஒன்றைக் கூறுவோமோனால் அவர் நீதியைக் காப்பாற்ற வேண்டும். சுந்தரநாதருக்கு ஓர் அவா வந்தது. ஓர் அவாவிற்கு ஒரு பிறப்பு என்பது நீதி. அதன்படி சுந்தரநாதருக்குப் பிறப்பு கொடுக்கணும். எப்படிக்கொடுக்கலாம் என்று அறைவன் திட்டமிடுகிறான். பிறப்பு என்றால் என்ன? ஓர் உடலில் புகுத்துவது. இங்கே இவனே இன்னோர் உடலில் புகுந்துவிட்டான். ஆகவே இது இவனுக்கு பறிப்பாயிற்று. இனு பழைய சுந்தரநாதன் உடல் தேவை இல்லை. எனவே அதை சுந்தரநாதன் ஒளித்து வைத்த அடத்திலருந்து அவருக்கே ஒளித்து விட்டான் இறைவன். மறைத்து வைத்த உடல் சுந்தரநாதன்

என்கிற பிறவி. இப்போது உள்ள உடலில் இவரை அப்படியே தக்க வைத்ததால் இது திருமூலர் என்கிற பிறவி ஆகிவிடும். எனவே பழைய உடலைக் காணாமற் போக வைத்தார் இறைவன்.

இங்கே ஆக்களின் இடர்பெறாது அதனைத் தீர்க்க மூலன் உடலில் புகுந்தான் இவன். ஆக்கள் என்ற சொல்லுக்கு பசுக்கள் என்று பொருள். பசுக்கள் என்ற சொல் தத்துவரீதியாக உயிர்களைக் குறிக்கும். பச் என்ற வேர்ச் சொல் வடமொழியில் கட்டு என்று பொருள்படும். கட்டுண்டது பசு. அதுபோல் ஆன்மாக்கள் உடலாகிய இநத்க கட்டப்படுவதால் இதனையும் பசு என்பர்.

இந்த இடம் உயிர்களின் பசுத்தன்மையை நீக்குகிற இடம். திரு+ஆ+அடுதுறை. இங்கே அஃறிணையாகிய பசுக்களின் துயரத்தை நீக்கிய இவனே உயர்திணையாகிய பசுக்கள்–ஆன்மாக்களின் துயரம் நீங்கும் வண்ணம் நாம் சொற்பிரிவிலாத பைசந்தி வாக்கில் கூறிய ஆகமத்தை தமிழால் தெளிவு பட எழுதி ஆன்மாக்களுக்கு உதவட்டும் என்று எண்ணகிறான் இறைவன்.

இங்கே திருமூலர் ஆக்களை ஊருக்குள் ஓட்டிச் செல்கிறார். இடையன் மனைவி வந்து இவரை வீட்டுக்கு அழைக்கிறாள். இவர் மௌனம் சாதித்து நகர மறுக்கிறார். அவள் ஓ என்று கூப்பாடு போட்டு ஊர்ப்பெரியவர்களை அழைதம்து முறையிடுகிறாள். அந்தப் பெரியவர்கள் இவரைச் சோதித்து பார்த்துவிட்டு இவர் உன் கணவன் இல்லை உன் கணவனுக்கு சிவயோகத்திற்கும் ரொமப தூரம். இவர் தெளிந்த சிவயோகத்தில் வைத்த கருத்தினராகி, இருக்கிறார். இது பித்துமற்ற மயலன்று சித்தவிகற்பம்களைந்த ஓர் அற்புதமான நிலை. இவர் வரம்பில் பெருமையை உடைய பெரியவராய்த் தெரிகிறார். இவரை விட்டு ஒதுங்குவாயாக என்று வேளை ஆற்றி அனுப்புகிறார்கள்.

திருமூலர் அன்று இரவு அந்த ஊரில் இருந்த மடத்தில் தங்கினார். மடங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் பெரியவர்கள் தங்குவதற்குத் தகுதியாய் இருந்தன. இரவு தங்கி மறுநாள் காலையில் திருமூலர் தாம் வைத்த தமது பழைய உடலைத் தேடிப் போகிறார்– அதிலே மறுபடியும் பாய்வதற்காக.

அங்கே முந்தை உடற் பொறை காணார். காப்பில் வைத்தது தான். இருந்தாலும் அந்த உடலை அவர் அங்கே காணவில்லை. உடனே சிந்தையினில் வந்த செயல் ஆராய்ந்து தெளிகின்றார். உடனே அவர் டிவியை ஆன் பண்ணிட்டார். இது ஒரு தனி சேனல். யோக சேனல். அதை முடுக்கி விட்டால் யோகக் காட்சியில் முக்காலமும் தெரியும். தமது உடல் எங்கே? என்ன ஆயிற்று? என்ன சமாச்சாரம்? என்று ஆராய்ந்து பார்க்கிறார் அப்போது தான் அவருக்குத் தெரிகிறது இது ஆண்டவன் திருக்குறிப்பு என்று. இந்த இடத்தில் சேக்கிழார் பாடும் பாடல் இருக்கிறதே! ஈடு இணையற்றது! மிக உயர்ந்த பாடல்.

தண்ணிலவார் சடையார்தாந் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப
கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறந்த உணர்வுடையார் ஈசன் அருள் எனவுணர்ந்தார்.

இந்தப் பாடலை அன்பர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். இதில் ஓர் அடிப்படையான பிரச்சினைக்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாளை தமிழாகமம் என்ற தலைப்பில் பார்ப்போம்.

அந்தப் பழைய உடல் சுரப்பிக்கப்பட்டது–அதாவது ஒளிக்கப்பட்டது. திருவருளே அந்த உடலை சுரப்பித்தது. இதை திருமூலர் புரிந்து கொண்டார். எப்படி புரிந்து கொண்டார்? சிந்தையில் ஆராய்ந்து தெளிகின்றார்.

கண்ணிய அகத்திருவருளால் அவ்வுடலைக் சுரப்பிக்க திருவருள் கண்ணியது அதாவது கருகியது என்ன என்பதை முன்னரே பார்த்தோம். நாம் அடைந்த அவாவிற்காக இவ்வுடலிலேயே தங்க வைத்துவிட்டான் இறைவன். பசுக்கள் துயர்நீத்தது போலவே ஆன்மாக்களாகிய பசுக்களின் துயரைப் போக்க ஆகமப் பொருளை தமிழால் வகுக்க பசுத்தன்மை நீக்கி இறைவனது அடியைச் சேர்விக்கும் துறையாகிய திருவாவடுதுறையில் அமர்த்தியுள்ளது இறவைன் திருவருள் என்ற திருவருள் கருத்தை உணர்ந்து அமைதியடைந்து திருவருள் எண்ணப்படி திருமூலர் அங்கேயே தங்கி விடுகிறார். திருவருள் உணர்த்தியபடி செயல்படவும் தொடங்கினார்.

மெய்யன்பர்களே! இந்த இடத்தில் ஒரு முக்கியமான கருத்தை நாம் சிந்தையில் செதுக்கி வைக்க வேண்டும். அது என்ன என்பதைக் கூறுகிறேன்.

திருமுறைகளை தொகுத்த முறை இருக்கிறதே அது ஒரு பெரிய அற்புதமான முறை. பன்னிரு திருமுறைகளை வகுத்தார்களே அதைச் சொல்லுகிறேன். அதற்கு ஓர் உள் அர்த்தம் உண்டு. அது கால அடைவினாலே அமைக்கப்படவில்லை. அதாவது திருஞான சம்பந்தருக்கு முன்னால் பின்னால் என்று எந்தக் கால அடைவிலும் அது அமைக்கப்பட்டது அல்ல. ஞானசம்பந்தையும் திருநாவுக்கரசரையும் ஒப்பிட்டால் திருநாவுக்கரசர் காலத்தால் முன்னே வந்து விடுகிறார். தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதி சூடி என்ற தொடங்கும் பதிகத்திற்கு முன்னால் கூற்றதயினவாறு பதிகம் பாடப்பட்டது. ஞானசம்பந்தருக்கு முன்னால் திருநாவுக்கரசர் அருள்பெற்று தேவாரம் பாடினார். தேவாரம் பாடி தில்லைக்கு வரும் போது தான் திருநாவுக்கரசர் சம்பந்தர் என்னும் குழந்தை அருள் பெற்று பாட ஆரம்பித்ததைக் கேள்விப்பட்டு அந்த ஞானக் குழந்தையைப் பார்க்க செல்கிறார்–வரலாற்றுபடி.

அப்படியானால் எந்த பதிகத்தை முதலில் வைத்திருக்கணும்? முதலில் பாடிய கூற்றாயினவாறு பதிகத்தை தானே முதல் திருமுறையில வைத்திருக்கணும். அப்படி வைக்கவில்லையே. என்ன காரணம்? இந்த அடைவு முறை. உமாபதி சிவம் வேறு ஓர் அடைவு முறையில்

திருமுறைகளைத் தொகுத்து அதற்கு அருள்மொழித்திரட்டு என்று பெயர் வைத்தார். இது இல்லாமல் அகத்தியர் தேவாரத் திரட்டு ஒன்று. ஒவ்வொரு தொகுப்பும் ஒவ்வோர் அடைவில் ஒவ்வொர் பொருளை உட்கொண்டு அமைக்கப்பட்டது. இதை இன்னொரு முறை வாய்க்கும் போது விரிவாக பார்க்கலாம்.

இப்போது இந்த அடிப்டையை மட்டும தெரிந்து கொண்டால் போதும். அதாவது பன்னிரு திருமுறை கால அடைவினால் வகுக்கப்பட்டது அல்ல. இன்னொன்றையும் சொல்கிறேன். பட்டினத்தாரிடம் கணக்குப் பிள்ளையாக வேலை செய்தவர் சேர்ந்தனர். பட்டினத்தர் துறவு பூண்டது முன்னால் சேந்தனார்அவர் அடியொற்றி பின்னால் அருட்பாடல்களைப் பாடினார். பட்டினத்தார் பாடிய பாடல்கள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவருக்குப் பின்வந்த சேந்தனார் பாடல்களோ ஒன்பதாந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. முன் பின்னாக ஏன் வைத்தார்கள்?

இன்னும் ஞானசம்பந்தர்க்கு முன்னால் பாடியவர் காரைக்காலம்மையார். அதனால் தான் அம்மையார் பாடியவற்றிற்கு மூத்த திருப்பதிகங்கள் என்று பெயர். ஆனா அவருக்கு பின் வந்த குழந்தை ஞானசம்பந்தர் பாடியது முதல் திருமுறையாக வைக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் பாடியதோ பதினோராந் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே பன்னிரு திருமுறைகள் வைக்கப்பட்ட அடைவு முறை கால அடைவு முறை அல்ல என்பதை நன்றாக தெள்ளத் தெளிவாக நாம் நினைவில் வைக்க வேண்டும்.

இதை ஆராய்ச்சி செய்தோமானால் அற்புதக் கருத்துக்கள் வெளிவரும். இதைப்பற்றி அடியேன் ஏற்கெனவே ஒரு கட்டுரை எழுதி அது ஓர் இதழில் வெளிவந்ததது. அதை முழுமையாக இப்போது இங்கே பார்த்தோமானால் அது மற்றொன்று விரித்தலாகி விடும்.

இன்னும் ஒன்று சமயாசிரியர்களில் அவரவர் பாடிய பாடல்களைக் கூட பாடியவற்றை பாடியபடியே வைக்கவில்லை. அதாவது முதலில் பாடினது முதலில் இரண்டாவது பாடினது இரண்டாவது என்று வைக்கவில்லை. அதற்கொரு உள் அர்த்தம் உண்டு. பல சைவச் சான்றோர்கள் அதுபற்றிக் கோடி காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

அவ்வகையில் எங்கள் தாயகத்தில் என்பால் உழுவவன்பு பூண்ட முனைவர் இரத்தின சபாபதி அவர்கள் கூட திருமுறைத்தெளிவே சைவசித்தாந்தம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். பல பெரியவர்கள் குறிப்புகளைக் காட்டியுள்ளார்கள். அடியேனும் என் பங்கிற்கு சிறிது அதை விரிவு படுத்தியுள்ளேன். கடல் போல விரியும் அந்த ஆய்வில் பொருத்தம் பற்றி ஒரு தேக்கரண்டி முகந்து பார்ப்போம்.

சிவஞான போத முதல் சூத்திரம் என்ன சொல்கிறது?

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்

தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்

அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இதில் ஆதி அந்தம் என்று சொல்லவில்லை. அந்தமும் ஆதியும் என்று வைக்கிறார். நாமெல்லாம் இது முதலில் இது கடைசியில் என்றுதானே வைப்போம். மெய்கண்டார் பாடும் போது அந்தத்தை முதலில் வைத்தார் ஆதியை பின்னால் வைத்தார். ஏன் இப்படி வைக்கிறார் என்றால் ஒரு பெரிய கருத்தை உள்ளடக்கி ஞானசம்பந்தர் அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல் ஆரழல் அங்கை அமர்நதிலங்க என்று முதல் திருமுறையில் (திருவேட்களம் பதிகம்) பாடுகிறார். இவரே மூன்றாந் திருமுறையிலும் அந்தமாய் உலகுக்கு ஆதியும் ஆயினாய் என்று பாடுகிறார்.

அந்தமே ஆதி என்ற சைவசித்தர்நதக் கருத்து இதிலிருந்து உருவாகிறது. மகா சங்கார காரணனாய் அந்தமாய் உள்ள சிவபரம் பொருளே உலகிற்கு ஆதியாக இருக்கிறது என்பது இதனால் விரித்து உரைக்கப்படுகிறது. ஞானசம்பந்தர் கூறும் இந்த சைவ சித்தர்நதக் கருத்து மெய்கண்டாரால் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்தம் ஆதி என்மனார் புலவர் என்று பாடப்பெற்றது. ஞானசம்பந்தப் புலவர் எழுத்து எண்ணி படித்த சாதாரண புலவரல்ல. மற்ற புலவரெல்லாம் ஐம்புலப் புலவர்கள். ஞானசம்பந்தர் செம்புலப் புலவர்.

மாணிக்கவாசகரைப் பற்றி திருக்கோவையாருக்கு உரை எழுதப்புகுந்த பேராசிரியர் இதைக் கூறுகிறார். திருக்கோவையாருக்கு பேராசிரியர் உரை மிக உயர்நத உரை. அதற்கு முன்னாலும் ஓர் உரை உண்டு. அதற்குப் பழைய உரை என்பது பெயர். அதற்கு மேலும் சிந்திப்பது பேராசிரியர் உரை. திரைக்கோவையார் பிற புலவர்கள் பாடுவதைப் போல பாடிய நூல் அல்ல. எங்களால் உரை எழுத முடியாது. காரணம் நாங்கள எல்லாம் வெறும் புலவர்கள் ஐம்புலவர்கள். ஆனால் மணிவாசகரோ செம்புலப் புலவர் என்றார்.

அதுபோல சம்பந்தர் செம்புலப்புலவர். இதைக் குறிப்பிட்டுத் தான் மெய்கண்டார் அநதம் ஆதி என்மனார் புலவர் என்று பாடினார். இங்கே குறிப்பிடப்படும் புலவர் செம்புலப்புலவராகிய ஞானசம்பந்தர். இந்தக் கருத்து முதல் திருமுறையில் வருகிறது. அதன் பிழிவாக அமைக்கப்பட்டது சிவஞான போத முதல் சூத்திரம்–தோவது பிரமாண இயலாக இது முதலில் வைக்கப்பட்டது. எனவே திருமுறையின் அடைவு முறையை மெய்கண்டார் நன்கு உணர்ந்தே சிவஞான போத சூத்திரங்களை அப்படையே அமைக்கிறார்,

இதிலிருந்து என்ன தெரிகிறது? இது எப்படி அமையவேண்டும் என்று இறைவனால் உணர்த்தப்பட்டே நம்பியாண்டார் நம்பி முதல் திருமறையை சம்பந்தர் திருமுறையாக அமைத்தார். இந்த கருத்தை உள்வாங்கி பின்னால் வந்த மெய்கண்டார் அந்த அடைவுப்படி சூத்திரங்களை அமைத்துப் பாடினார். எனவே பன்னிரு திருமுறையின் அடைவு சித்தாந்த அடைவுப்படி அமைந்தது.

நாம் என்ன நினைக்கிறோம்? சிவஞானபோதம் பாடிய மெய்கண்டார் பின்னால் வருகிறாரே, நம்பி ஆண்டார் நம்பி அவருக்கு முன் வந்தவரராயிற்றே, இது எப்படி சித்தாந்த அடைவுப்படி அமைக்கப்பட்டிருக்க முடியும்?

இதில் ஒன்றை கவனிக்க வேண்டும். மெய்கண்டார் வேண்டுமென்றால் நம்பி ஆண்டார் நம்பிக்கு பின்னவராய் இருக்கலாம். அதற்காக சைவ சித்தாந்தமே மெய்கண்டாருக்குப் பின்னர்தான் தொடங்கியது என்ன சொல்லலாமா?

சித்தாந்தம் தொல்காப்பியத்தே தொட்ங்கி விடுகிறது. நம்முடைய தமிழ் இலக்கணத்திலேயே சித்தாந்தம் கொடிகட்டிப் பறக்கிறது. மெய்கண்டாரிடம் இருந்து தான் சைவ சித்தாந்தம் தொடங்கியது என்று நாம் நினைத்தால் அது நம் தவறு. தமிழருடைய தொன்னெறி சைவ சித்தாந்தம். அதன் உள்ளே இப்போது நுழைய வேண்டாம்.

சித்தாந்த அடைவு இது என்று கணபதியின் திருவருளினாலே குறிப்பு பெறப்பட்ட நம்பியாண்டார் நம்பி சைவ சித்தாந்த அடைவு முறையில் சமயகுரவர்கள் மற்றும் ஏனைய திருமுறை ஆசிரியர்களின் பாடல்களை வகுத்துத் தந்தார். அதே பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற மெய்கண்டார் பின்னால் வந்து இந்தச் சித்தாந்த அடைவை உணர்ந்து அம்முறையில் சிவஞான போத சூத்திரங்களை அமைத்தார்.

சிவஞானபோத கடைசி சூத்திரத்தை அதாவது பன்னிரண்டாவது சூத்திரத்தை எடுத்துக் கொண்டோமானால் அது என்ன சொல்கிறது?

செம் மலர் நோன்தாள் சேரல் ஒட்டா

அம்மலங் கழீஇ அன்பரோடு மரீஇ

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

இது அடியார் பெருமையை எடுத்துக் கூறுவது. ஜீவன் முத்தர்களுக்கு அடியார் கூட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துக் கூறுவது இது. திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணம் இது அடியார் பெருமையைக் கூறுவது. இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பணும். பெரியபுராணமாகிய இலக்கியத்தைக் கண்டு பன்னிரண்டாம் திருமுறைக்கு இணையாக பன்னிரண்டாம் சூத்திரமாக அடியார் பெருமைக்கு இலக்கணம் கூறினார். பன்னிரண்டாம் திருமுறைக்கு இணையாக பன்னிரண்டாம் சூத்திரம்.

இப்படி ஒவ்வொரு திருமுறையும் ஒவ்வொரு சூத்திரமாக பரிணமித்தது என்று சொன்னால் அதுவே ஒரு தனி ஆராய்ச்சி உரை ஆகிவடும். முதல் சூத்திரம் முதல் திருமறையின் சாரமாக அமைகிறது. 12ம் சூத்திரம் 12ம் திருமுறையின் சாரமாக அமைகிறது.இதிலிருந்து நாம் ஒன்றை உய்த்துணர்ன்து புரிந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகைச் செய்திகளில் செய்திகளின் முன் ந போட்டு ஒரு கோடு போட்டு ர் என்று பொருள் (ந–ர்) இதற்கு என்ன பொருள்? நமது நிருபர் என்பது பொருள். செய்யுட்களுக்கு உடிை எழுதும் போது இ–ள் என்று போட்டிருக்கும். என்ன பொருள்? இதன் பொருள் என்பதன் சுருக்கம் அது என்பதைப்

புரிந்துகொள்கிறோம். முதல் எழுத்தும் கடைசி எழுத்தையும் போட்டால் மற்றதையெல்லாம் நாம புரிந்து கொள்கிறோம்.

அதுபோல முதல் திருமுறை முதல் சூத்திரமாயிற்று என்றும் 12ம் திருமுறை 12ம் சூத்திரமாயிற்று என்றும் கூறினால் மற்ற திருமுறைகள எல்லாம் அந்தந்த சூத்திரமாயிற்று என்று நாம் புரிந்துகொள்ள மாட்டோமா? அதுவும் அருள்நெறித் திருக்கூட்டத்தார் நிச்சயமாகப் புரிந்து கொள்வீர்கள்.

இந்த முறையில் எட்டாந்திருமுறை மணிவாசகருடையது. அவர் குருத்த மரத்தினடியில் குரு உபதேசம் பெற்றார் அல்லவா? எனவே எட்டாம் சூத்திரம் குரு உபதேசமாக அமைத்தார்.

இப்போது பாருங்கள்! முதல் திருமுறை முதல் சூத்திரமாகிறது 12ம் திருமுறை 12ம் சூத்தரமாகிறது 8ம் திருமுறை 8ம் சூத்திரமாகிறது அந்த முறையில் 10ம் திருமுறையான திருமந்திரமே 10ம் சூத்திரமாயிற்று என்பதை நாம் உணர வேண்டும்.

பத்தாம் சூத்திரம் என்ன சொல்கிறது? அது ஏகனாகி இறைபணி நிற்றலைப் பற்றிப் பேசுகிறது.

நாம் செய்கின்ற செயலை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அப்படிச் செய்வோமானால் எல்லாம் இறைவனுடைய செயல் ஆகிவிடும். நாம் எதைச் செய்தாலும் இறைவன் என் மூலமாக செய்விக்கின்றான் என்று உணர்ந்து செய்வோமானால் நாம் இறைவனோடு ஒன்றிவிடுவோம். அப்புறம் நமக்கென்று ஒரு செயலுமில்லை.

செய்கிற செயல் எல்லாம் இறைவனுடையது என்று எப்பொழுது ஆகிறதோ அப்போது நம்மைத் தொடரும் வல்வினையும் மாயையும் ஓடி ஒளிகிறது என்று பத்தாம் சூத்திரம் சொல்கிறது.

இப்போது திருமூலர் வரலாற்றிற்கு வருவோம். திருமூலர் திருவாவடுதுறைக்கு வரும் வரை தமக்கென ஒரு செயலை வைத்துக் கொண்டருந்தார். அதாவது நற்றமிழின் பொதியமலையை நண்ணுதற்கு வழிக்கொண்டார். அகத்தியரைப் பார்ப்பதற்கு. ஆனால் இங்கே திருவாவடு துறைக்கு வந்தவுடன் பெயர் மாறிவிடுகிறது. அது மட்டுமல்ல தம் செயலையே கவைிட்டு திருவருட்கருத்து இது என்று உணர்ந்து அது இட்ட பணியாகிய தமிழாகமம் வகுக்க அங்கே அமர்ந்து விடுகிறார். இறைவனோடு ஏகனாகி இறைபணியில் நிற்க ஆரம்பித்துவிட்டார்.

இந்த சித்தாந்த அடைவுப்படி தான் ஆண்டுக்கு ஒரு பாடலாக இவர் பாடியருளிய திருமந்திரத்தை பத்தாம் திருமுறையாக வைத்தார்கள். திருமந்திரத்தை திருமூலர் எப்படிப் பாடியருளினாராம். சேக்கிழார் கூறுகிறார்.

ஊன் உடமபிற பிறவிவிடம் தீர்நததுலகத் தோருய்ய

ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை

பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்

ஏனவெயிறு அணிந்தாரை ஒன்றவன்தான் எனஎடுத்து

பெருமக்களே! திருமந்திரப் பதிப்புகள் பல. உங்களிடத்தில் பல பதிப்புகளும் இருக்கலாம். திருப்பனந்தாள் மடம் பதிப்பு ப.இராமநாதப்பிள்ளை பதிப்பு வரதராசன் ஐயா அவர்கள் வெளியிட்ட பதிப்பு தருமபுர ஆதீனப்பதிப்பு திருவாவடுதுறை ஆதீன பஞ்சாட்சர தீப உரைப் பதிப்பு. திரு. வன்மீகநாதன் ஒன்று பதிப்பித்திருக்கிறார்கள். இப்படி பல. எல்லாவற்றிலும் பார்தேதாமானால்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை

இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்

புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

என்று விநாயகர் காப்புப் பாடல் ஒன்று பதிப்பித்திருப்பார்கள். இமு திருமூலர் பாடியதில்லை. இதை முதலில் தெரிஞ்சுக்கணும் இந்தப் பாடல் விநாயகர் காப்பாக வேறு யாரோ பாடி பின்னால் சேர்த்தது.

திருப்பனந்தாள் மடம் பதிப்புப் படி இப்போது கிடைக்கும் மிகைப்பாடல்களோடு சேர்த்தால் திருமந்திரம் மொத்தம் 3081 பாடல்கள். கிடைக்கின்ற இந்த 3082 பாடல்களில் உள்ளே நுழைந்து பார்த்தால எந்தப் பாடலிலும் திருமூலரால் விநாயகரைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இதிலிருந்து திருமூலர் காலத்தில் விநாயகர் வழிபாடு இல்லை என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

முருகனைப் பற்றி திருமந்திரத்தில் 3 பாடல்கள் உள்ளன. ஐயப்பனைப் பற்றி பாடல் உண்டு. லட்சுமியைப் பற்றி, சரஸ்வதியைப் பற்றிப் பாடல்கள் உண்டு. ஆனால் ஒரு பாடல் கூட விநாயகரைப் பற்றி இல்லை. 3081 பாடல்களில் ஒரு பாடல் கூட விநாயகரைப் பற்றி இல்லை என்பதை தெரிந்து கொள்கிறோம். திருவாசகத்திலும் விநாயகர் கூறப்படவில்லை.

இது வரலாற்று உண்மை. அவ்வளவுதான். அதனால் விநாயகரை வழிபடக்கூடாது என்பதில்லை. சம்பந்தரே விநாயகரைப் பாடியுள்ளார். எனவே விநாயகர் வழிபாடு தோன்றியநாள் எப்படியானாலும் அது வழிபட வேண்டிய மூர்த்தம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அடியேன் பிள்ளையார் போற்றி நானூறு என்று ஒரு நூலே யாத்து வெளியிட்டிருக்கிறேன்.

இனி சிவபுராணம் மணிவாசகரால் பாடப்பட்டது. அதற்கு மேலும் சிவபுராணம் என்ற தலைப்பிற்கு கீழும் சிவனது அநாதி முறையைக் குறித்தது என்று எழுதி இருக்கும். திருவெம்பாவையிலும் சத்தியை வியந்தது என்று குறிப்பிட்டிருக்கும். இந்தக் குறிப்பு யார் கொடுத்தது? தெரியாது. சில பதிப்புகளில் அபியுத்தர் என்று போட்டிருக்கும்.

மணிவாசகர் ˙சொல்லச் சொல்ல சிவபெருமான் திருவாசகத்தை எழுதினார் என்பது வரலாறு. மணிவாசகர் சிவபுராணம் என்று சொல்லி பெருமான் அதை உடனே எழுதிக் கொள்ள பிறகு அவர் நமச்சிவாய வாழ்க என்று தொடங்கும் போது இறைவன் கொஞ்சம் நிறுத்துங்க என்று கூறி சிவனது அநாதி முறைமையைக் குறித்தது என்று எழுதவில்லை. சிவபுராணம் என்று எழுதிவிட்டு நமச்சிவாய வாழ்க என்பதை தான் எழுதினார். பிறகு யாரோ ஒரு அபியுத்தர்–அபியுத்தர் என்றால் வடமொழியிலே பெயர் தெரியாத ஒருவர் என்று பொருள்–மக்கள் இதன் பொருளைப் புரிந்து கொள்ளட்டுமே என்று சிவனது அநாதி முறைமையைக் குறித்தது என்று எழுதினார்.

அது போல திருமந்திரத்தை எழுதிக்கொண்ட ஒருவர்–ஒர அபியுத்தர்–பின்னால் இந்த திருமந்த்திற்கு ஒரு காப்பு இருந்தால் நன்றாயிருக்குமே என்று சேர்த்து தான் இந்த ஐந்து கரத்தனை என்று தொடங்கும் பாடல்.

இது திருமூலர் பாடியது இல்லை என்பதற்கு தெளிவான ஆதாரம் என்ன? சேக்கிழார் திருமூலர் திருமந்திரத்தை ஒன்றவன் தானே என எடுத்துப் பாடினார் என்று பாடியிருப்பதே தெளிவான சான்று.

திருமூலர் திருமந்திரத்தை–மூவாயிரந் தமிழ் என்னும் மந்திரத்தை பாடினார் என்பது ஒரு புறம் இருக்கட்டும்.அந்த மூவாயிரம் பாடல்களையும் எப்படிப் பாடினாராம்? ஓர் ஆண்டுக்கு ஒரு பாடல் என்ற முறையில் மூவாயிரம் பாடல்களைப் பாடினாராம். திருமந்திரத்தைப் பாடி முடிப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகள் ஆயிற்றாம். சேக்கிழார் கூறுவதைக் கேளுங்கள்.

முன்னியஅப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரம்சாத்தி

மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து

சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை

தன்னில் அணைந் தொருகாலும் பிரியாமை தானடைந்தார்.

வாரியார் சுவாமிகள் ஒரு கருத்தைச் சொல்வார்கள் நீ ஒரு கருத்தைச் சொல்கிறாய் என்றால் அந்த கருத்து மிகச்சிறப்பாக அமையவேண்டுமானால் அது உன்னுடைய மனதில் ரொம்ப நாள் ஊறியிருக்கணும். ரொம்ப நாள் ஊறின ஊறுகாய் தானே நல்லாயிருக்கும். அதுபோல நீ சொல்லும் கருத்து உன் சிந்தையுள்ளே பல நாள் ஊறி இருக்குமானால் அது சிறப்பாக அமையும்.

அது போல திருமூலர் தாம் பாடிய ஒவ்வொரு பாடலையும் ஓராண்டு சிந்தையுள்ளே ஊறவைத்து உலகுக்கு உதவினார்.

3000 ஆண்டு இப்புவி மேல் மகிழ்ந்திருந்து மந்திரத்தைப் பாடு. அதன் பிறகு என்னுடன் வந்து இரு என்பது இறைவன் திருவுள்ளம்.

மன்னியமூ வாயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்தது அதன்பின் திருக்கயிலை தன்னில் அணைந்து ஒரு காலும் பிரியாமை தான் அடைந்தார் என்பது சேக்கிழார் வாக்கு. இதன் மூலம் சேக்கிழார் திருமூலரைப் பற்றி நமக்கு கொடுக்கிற அறிவிப்பு. அவர் இப்புவி மீது 3000 ஆண்டுகள் இருந்தார் என்பது. சேக்கிழாரின் அறிவிப்பை அப்படியே நாம் எடுத்துக் கொள்வோம் என்பது திருமுறை அன்பர்களாகிய நம் கொள்கையாக இருக்க வேண்டும்.

திருமுறைகளில் மிகவும் ஈடுபாடு உடையவராகத் தம்மைச் சொல்லிக் கொண்டு குறிப்பாக சேக்கிழார் பாடல்களில் மிகவும் ஈடுபாடு உடையவராகச் சொல்லிக் கொண்டு சேக்கிழாருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், மாநாடு நடத்திக் கொண்டு சிலர், சார் இதை நம்ப முடியலையே சார். எப்படி சார் மூவாயிரம் ஆண்டு இருந்திருப்பார்? என்று கேட்கிறதை நம் காதுகள் கேட்டிருக்கும்.

சேக்கிழார் சொல்வதை எல்லாம் ஏற்றுக்கொண்டு மேற்கோள் காட்டிப் பேசுவோம். ஆனால் இதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்னா அதற்கு என்ன பொருள்? அப்புறம் ஏன் சேக்கிழாருக்கு மாநாடு? திருமுறைகளில் ஈடுபாடு உடையவர்கள் முதலில் அதை நம்பணும். நம்பிக்கையில்லாமல் அல்லது பாதி நம்பிக்கையுடன் ஒன்றை ஏற்றுக் கொள்வதா? இல்லை அதில் கருத்து வேறுபாடு இருக்கிறதென்றால் துணிவுடன் வேறு எதிர் முகாமிற்கு சென்று நேர்மையுடன் எதிர்த்துப் பேச வேண்டும். இது என்ன கூட இருந்தே குழி பறிக்கிற வேலை?

பாடியது யார்? சேக்கிழார்–தெய்வச் சேக்கிழார். உலகெலாம் என்று தொடங்குவது இறைவனோட வாக்கு. நாம் அவ்வளவு தான் என நினைக்கிறோம். மறைமலை அடிகளுடைய ஆசிரியராக இருந்த சூளை சோமசுந்தர நாயக்கர் இதுபற்றி ஒரு தனிக்கட்டுரையே எழுதி இருக்கிறார். எட்டு புள்ளி அளவில் அச்சில் 40 பக்கம் அந்தக் கட்டுரை வரும். கையில் எழுதினால் இன்னும் நிறைய பக்கங்கள் வரும்.

சூளை சோமசுந்தர நாயகர், சைவ சண்ட மாருதம் என்று பெயர் பெற்றவர். அவர் சொல்கிறார் பெரிய புராணம் 4286 பாடல்களும் நடராசப் பெருமானுடைய வாக்கு. சேக்கிழார் பாடியது என்று சொல்லாதே என்பார். இதற்கு தர்க்க ரீதியாக பல காரணங்கள் காட்டுகிறார். பலபட ஆராய்ச்சி செய்து கூறுகிறார்.

உலகெலாம் என்று இறைவன் தொட்ங்கினான் என்றால் அதை எப்படி முடிக்கணும்னு இறைவனுக்குத் தானே தெரியும் என்று கேட்கிறார். நான் என் முன்னே உள்ள குடிநீர் பாட்டிலைக் காட்டி இந்த பாட்டிலை என்று சொல்ல ஆரம்பிக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கப்புறம் என்ன சொல்லப் போகிறேன் என்பது எனக்குத்தான் தெரியும். நான் தொடங்கி அப்படியே நிறுத்திவிட்டால் இந்தப் பாட்டிலை? என்ன பண்ணச் சொல்றீங்க என்று அன்பர்கள் முகம் கேட்கும் கேள்விதான் எழுமே ஒழிய நான்சொல்வந்ததை திரு. சண்முகம் சொல்ல முடியுமா? அது போல உலகெலாம் என்று ஆரம்பித்த கடவுளுக்கு தான் தெரியும் அதை எப்படி முடிக்க வேண்டும் என்று. அவர்தானே சொல்லி முடிக்கணும் கடவுள் சொல்ல வந்ததை நாம் சொல்லி முடிக்க முடியுமா?

உலகெலாம் என்பதை கடவுள் அசரீரியாக வெளியே சொன்னார். மற்றவற்றை சேக்கிழார் உள்ளிருந்து சரீரியாகச் சொன்னார் என்று இப்படி பல காரணங்களைக் காட்டுவார் சூளை சோமசுந்தர நாயக்கர் அவர்கள். எனவே பெரியபுராணம் தெய்வ சாந்நித்தியம் உடையது சிவபெருமானுடைய சாந்நித்தியம் உடையது. அந்த வாக்கில் திருமூலர் மூவாயிரந் ஆண்டு இருந்து மூவாயிரம் மந்திரம் மொழிந்தார் என வருகிறது. இதை தொட்டுப் பேசி தொடர்ந்து மாநாடுகள் நடத்தி அப்புறம் இதை நம்ப மறுத்தால் என்ன பொருள்? இது தவறு அல்லவா?

நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. இனி திருமூலர் காலம் இருக்கிறதே அதைப்பற்றி சிந்திக்க வேண்டிய காலம். இன்று திருமந்திரமாகிய மூவாயிரந் தமிழ் முகிழ்த்து விட்டது. தோற்றுவாய் செய்து விட்டோம். இனி திருமூலர் காலத்தை சிறிது சிந்தனை செய்து சொற்பொழிவை நிறைவு செய்வோம்.

திருமூலர் எந்த காலத்தைச் சேர்ந்தவர்? அவர் எப்படி 3000 ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்திருக்க முடியும் என்பதே நாம் இப்போது மேற்கொள்ளும் சிந்தனை.

கால வரலாற்றைக் தெரிந்து கொள்ளவில்லையானால் எதையுமே தீர்க்கமாக தெளிவாக எடை போட இயலாது. பல உண்மைகள் தடம்புரண்டு போய்விடும்.

திருமூலர் தம் கால வரலாற்றை திருமந்திரத்தில் தாமே கூறியிருக்கிறார். நந்தி அருள்பெற்ற நாதனை நாடிடில் என்றும் கைலாயப் பல்கலைக்கழகம் என்று முன்னே பார்த்தோமல்லவா? அதை ஆராய்ந்தால் அவருடைய காலம் தெளிவாகும்.

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம் என்பது அவர் வாக்கு. கைலாயப் பல்கலைக் கழகத்தில் நந்தி திருவருள் பெற்றவுடன் அவருக்கு கிடைத்த பட்டம் நாதன் என்பது. அதற்கு முன் அவரது இயற்பெயர் சுந்தரன் என்பது. இதனை எதனால் அறிகிறோம் என்றால் தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம், சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே என்பது குருமட வரலாறாக அவர்தம் சீடர்கள் பாடியதிலிருந்து அறிகிறோம். ஆகவே சுந்தரன் என்கிற அருளாளர் நந்தி திருவருள் பெற்று நாதன் என்ற பட்டம் பெற்று சுந்தரநாதன் ஆகி பொதிய மலை நோக்கிப் புறப்பட்ட பயணத்தில் மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்ததால் திருமூலர் ஆனார் என்று உறுதி செய்கிறோம்.

இப்போது கிடைக்கும் திருமந்திரப் பதிப்புகள் எல்லாம் ஒன்று போல இல்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக உள்ளது. பாயிரத்தில் வர வேண்டிய பாடல் ஐந்தாம் தந்திரத்திலும், ஐந்தாம் தந்திரத்தில் வரவேண்டியது முதல் தந்திரத்திலும் என்று இப்படி ஒரு தந்திரத்தில் வரவேண்டியது வைப்புமுறை மாறி இன்னொரு தந்திரத்திலும் வருகிறது. இதில் பதிப்பிற்கு பதிப்பு வேறுபாடு. பொதுவாக செய்யுளில் வரும் சொல் மாறிவருவதைப் பாடபேதம் என்பார்கள். பாடலே பேதமாவது திருமந்திரத்தில் தான்

அளவற்ற பேதங்கள். அவரவர்க்குத் தோன்றியவாறு பதிப்பித்திருக்கிறார்கள். இவ்வளவு பேதங்கள் இருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? இதைப் பல பேர் கையாண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதுல் ஒரு திருப்தி ஏற்படுகிறது. ஆனால் தோன்றியாவாளெல்லாம் பாட பேதங்களையும் பாடல் பேதங்களையும் அமைத்துப் பதிப்பித்து விட்டார்களே என்பதில் ஒரு மனக்குறை ஏற்படுகிறது.

இந்த மலேசிய அருள்நெறி திருக்கூட்டம் 43 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் அற்புதமான பழைமையான திருக்கூட்டம். இத்திருக்சுட்டம் அறிஞர்களைக் கூட்டி ஆலோசனை செய்து எது முன் வரவேண்டும் எது பின் வரவேண்டும் என்பதைத் தீர்மானித்து காரணம் காட்டி ஒரு திருமந்திர செம்பதிப்பைச் செய்ய முன் வரவேண்டும் என்பது அடியேனுடைய விண்ணப்பம்.

இனி பாடலுக்க வருவோம். நந்தி அருள்பெற்ற நாதனை நாடிடின் என்று பாடியவர் அவர்கள் யார் யார் என்று விவரிக்கின்றனார். நந்திகள் நால்வர்–அதாவது சனகர்,சனந்தனர்,சனாதனார்,சனற்குமாரர். அதன் பின்னால் சிவயோக மாமுனி அப்புறம் மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர் பிறகு சுந்தரநாதனோடு சேர்ந்து மொத்தம் எட்டு பேர்.

இதில் என்னோடு சேர்த்து இவர் எண்மர் என்று கூறியவர் மன்று தொழுத பதஞ்சலி என்று ஒரு அடைமொழியை ஏதோ ஒரு காரணம் பற்றிக்கூறி பதஞ்சலியை எடுத்துரைத்தார். இந்த பதஞ்சலி மன்று தொழுத பதஞ்சலி என்றால் வேறு பதஞ்சலிகளும் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவராக இவரை நினைத்து விடாதே! இவர் மன்று தொழுத பதஞ்சலி என்று பிரித்துக் காட்டவே அப்படிக் கூறுகிறார். இந்தப் பதஞ்சலியின் காலத்தைக் கண்டு பிடித்துவிட்டால் திருமூலரின் காலம் தெரிந்துவிடும்.

இனி மொத்தம் எத்தனை பதஞ்சலிகள் இருப்பார்கள் என்று பார்த்தோமானால் இதற்கு விடை கிடைத்து விடும். நாம் பல இடங்களில் தவறுவதற்கே இது தான் காரணம். ஒரே பெயரில் பலர் இருந்தால் எல்லோரையும் ஒன்றாகவே நாம் தப்புக் கணக்கு போட்டு விடுகிறோம்.

ஔவையார் என்று எடுத்துக் கொள்வோமானால் வெவ்வேறு காலத்தில் மொத்தம் 9 ஔவையார்கள் இருந்திருக்கிறார்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் நீல மணிமிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே என்று பாடிய சங்ககால ஔவையாரும் விநாயகர் அகவல் பாடிய ஔவையாரும் ஒன்று என்று நினைக்கிறோம். அந்தப் பாடல் காலத்தால் எவ்வளவு முந்தியது? அதனுடைய நடை என்ன? விநாயகர் அகவல் நடை என்ன? பலவிதத்தில் அதுவேறு இது வேறாக இருக்கிறது. ஆனால் ஔவையார் என்ற ஒரே பேர் சொல்லப்படுவதனால் இரண்டையும் ஒரே ஔவையார் பாடியதாக நினைக்கிறோம்.

இப்படித்தான் பதஞ்சலி என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தோர் பலர் இருக்கிறார்கள். ஒரு பெரியவர் இவரைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். டாக்டர் ஏ.பி. கீத் என்பது அவர் பெயர். வடமொழியில் மகாபஷ்யம் செய்த பதஞ்சலி வேறு என்றும் யோகசூத்திரம் எழுதிய பதஞ்சலி வேறு என்றும் கூறுகிறார்.

பாஷ்யம் செய்த பதஞ்சலியின் காலம் கி.மு.210 என்று வரையறுக்கிறார். சிலர் கி.மு. 150 என்றும் கூறுவர். (கூட்டத்திலிருந்து ஒருவர் பி.சி. 215 எனடறு கூறுகிறார்) நீங்கள் படித்த புத்தகத்தில் பி.சி. 215 என்று போட்டிருக்கிறார்களாத? சரி! விட்டுவிடுங்க! பாவம், 5 வருடம் தானே! போனா போகிறது என்று விட்டு விடுங்கள்!

ஆக கி.மு. 210ல் பாஷ்யம் செய்த பதஞ்சலி ஒருவர் மற்றவர் யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலி. இவரது காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யோக சூத்திரத்தை வைத்துக் கொண்டு நாம் யோகம் என்பதே வடமொழியில் தான் முதன் முதலில் வந்தது என்று கூறலாமா? இந்நூல் வந்தது ஏழாம் நூற்றாண்டு என்றால் அதற்கு முன் வந்த திருமுறை நூல்களிலேயே யோகத்தைப் பற்றிக் காண்கிறோமே. தொல்காப்பியத்திலேயே தாபதபக்கம் என்று விவரிக்கும் போது யோகத்தின் எட்டு உறுப்புகளும்

கூறப்படுகின்றனவே. இன்னும் சொன்னால் மிகப்பிற்பட்ட காலத்தில் வந்த யோகசூத்திரத்திரல் கடவுளுக்கே இடமில்லை. அதாவது பதஞ்சலி முனிவர் எழுதிய யோக சூத்திரத்தில் கடவுளுக்கே இடமில்லை. அங்கே 25 தத்துவங்களோட முடிஞ்சுப் போகும்.ஆனால் சைவர்களாகிய நாம் 36 தத்துவங்களைத் தாண்டி இறைவனை அடைய வேண்டும் என்பார்கள்.

பதஞ்சலி முனிவர் பாடிய யோக சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு யோகமதம் என்றே ஒரு மதம் இருக்கிறது. அது சாங்கிய மதத்துடன் இணைத்தே பேசப்படுகிறது, சாங்கிய யோகம் என்றே பேசுவார்கள். இதை எல்லாம் இந்த அருள்நெறி திருக்கூட்டத்தில் தான்ஸ்ரீ ஐயா அவர்கள் சித்தாந்த வகுப்பு எடுக்கும் போது குறிப்பிட்டிருப்பார்கள். அவர் சொல்ல நீங்களும் கேட்டிருப்பீர்கள்.

இப்படி வேதத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் சில அதீத மதங்கள் உதித்தன. இந்த மதங்களை வைதீக மதங்கள் என்பர். இவற்றை புறச்சமயம், அகப்புறச்சமயம் என்றொல்லாம் கூறும் 4 வகைகளில் புறச்சமயத்தில் சேர்ப்பது சித்தாந்த மரபு.

புறச்சமயத்திலே வருவது சாங்கியயோகம், நியாயவைசேடிகம் என்பன போன்றவை. இரண்டும் சேர்ந்து சேர்ந்தே வரும். ஆனால் ஒன்றிற்கொன்று சிறுபான்மை வேறுபாடு. ஆனாலும் சாங்கியயோகம் நியாய வைசேஷிகம் என்று சேர்த்துக் கூறுவதற்குக் காரணம் இவை ஒவ்வொன்றிற்கும் நெருக்கம் அதிகம். இவைகளில் ஆராய்ந்து பார்த்தோமானால் இறைவனுக்கு இடமே இல்லை. இங்கே பேசப்படும் யோகம் இருக்கிறதே அது கடவுளை இல்லை என்று கூறுவதில்லை. கடவுள் இல்லை என்பது நாத்திகம். கடவுளை ஏற்றுக் கொள்வது ஆத்திகம். இதற்கு இடையில் கடவுள் இருந்தா இருந்துட்டுப் போகட்டும் எனக்கொன்றும் ஆட்சேபம் இல்லை என்ற அளவில் கடவுளை ஏற்பது. இந்த நிலையை எடுத்தவர்கள் யோக மதத்தினர். அதாவது யோகசூத்திரத்தில் எழுதிய பதஞ்சலி முனிவரும் அவரைப் பின்பற்றுபவர்களும். இந்த யோகத்தை,சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்று சைவசித்தாந்தம கூறும் நான்கு நெறிகளில் ஒன்றான யோகத்துடன் சேர்க்கலாமா? நாம் முதலில் இதில் தெளிவடைய வேண்டும். சைவம் கூறும் யோகம் மிகப் பெரிய பரம்பொருள் நிலையிலே அமைவது. இது ஒரு புறம் இருக்கட்டும்.

இருவேறு பதஞ்சலிகளைப் பார்த்தோம். இவர்களை வைத்துக் குழம்பிவிடக்கூடாது என்பதற்காக தாம் கூறும் பதஞ்சலி யார் என்று விளக்கிக் கூறுகிறார் திருமூலர். அதாவது நான் சொல்வது மன்று தொழுத பதஞ்சலி என்கிறார்.

இந்தப் பதஞ்சலி திருக்கூத்து தரிசனம் செய்தவர். பதம்சலியாமல் எ்பபோதும் தரிசனம் இன்றும் செய்துகொண்டிருப்பவர் என்று புராணங்கள் கூறுகின்றன. இவரைப்பற்றிறய விவரத்தை ஆராய்ந்தோமானால் இவரோடு கூட வந்த வியாக்ரமர் வசிட்டவரின் தங்கையை மணந்தவர் என்றும் இவருடைய திருக்குமாரர் தான் உபமன்னியு என்றும் புராணங்கள் கூறுகின்றன. வசிட்டருடன் வடநாட்டில் இருந்த பதஞ்சலிக்கும் தில்லைக் கூத்தை தரிசிக்க வேண்டும் என்று ஆவல் எழுகிறது. தில்லைக்கு வியாக்ரமர் தம் குழந்தையான உபமன்னியுவுடனும் மனனைவியுடனும் வருகிறது அப்போது நடராசர் திருவுருவம் இருந்ததாக தெளிவான வரலாறு கிடையாது. அங்கே திருமூலநாதர் என்ற இலிங்கமே இருந்தது. வியாக்ரமருக்கும் பதஞ்சலியார்க்கும் பின்னால் திருக்கூத்து தரிசனம் கிடைக்கிறது. இவர்களுக்கு பின்னே தான் நடராசர் திருவுருவம் பிரபலமாக அங்கே வழிபடப் பெறுகிறது என்பர். இது எந்த அளவிற்கு உண்மை என்பது நாம் அறிவதற்கில்லை. உமாபதிசிவம் கோயிற் புராணத்தில் கூறுவது இதுவே.

வியாக்ரமரின் குழந்தையான உபமன்னியு குழந்தை வட நாட்டில் வசிட்டருடன் இருந்த போது காமதேனுவின் பால் குடித்து வளர்ந்தது. இங்கே தில்லையில் காமதேனுவிற்கு எங்கே போக? நான் இப்போது இங்கே மலேசியாவிற்கு வந்திருக்கிறேன். சென்னையில் நான் சாப்பிட்டது ஆவின் பால். இங்கே நான் சாப்பிடுவது மாவின் பால் ஒத்து வருமா? அதுபோல உபமன்னியு குழந்தை காமதேனு பாலே வேண்டும் என்று அழுகிறது.

வியாக்ரமர் கூத்தரசரை வேண்டுகிறார். நடராசப் பெருமான் காமதெனுவின் பால் எதற்கு? பாற்கடலையே இங்கு கொண்டு வந்து விடுகிறேன் என்று பாற்கடலை தில்லைக்கு வரவழைத்தாரம். இதை உமாபதிசிவம் புராணத்தில் கூறுகிறார். அது ஒரு புறமிருக்க இதற்கு திருமுறைச் சான்றும் இருக்கிறது. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற் கடல் ஈந்த பிரான் என்பது சேந்தனார் பல்லாண்டு வரிகள். இதிலிருந்து இந்தப் பதஞ்சலி–வியாக்ரமர் யார் என்பதை உறுதி செய்து கொள்கிறோம்.

அதாவது இந்த பதஞ்சலி மன்றதொழுத பதஞ்சலி வசிட்டருடைய காலத்தினர். வசிட்டவர் எந்த காலத்தைச் சேர்ந்தவர்? தசரதனுடைய காலத்தைச் சேர்ந்தவர். அவனுடைய அவையில் இராஜரிஷியாக இருந்தவர். தசரதன் காலம் தெரிந்தால் பதஞ்சலி காலம் தெரிந்துவிடும். பதஞ்சலி காலம் தெரிந்தால் திருமூலர் காலம் தெரிந்துவிடும்.

தசரதன் இராமனுடைய தந்தை. எனவே இராமாயணத்தை எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்று ஆராய்ந்து அறிந்தால் இதற்கு விடை கிடைத்துவிடும்.

இராமாயண காலத்தை விஞ்ஞான ரீதியாக இரஷியர்கள் ஆராய்ந்து அறுதியிட்டிருக்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறதா? உங்களுக்கும் என்க்கும் இராமாயணத்தில் இருக்கும் ஈடுபாட்டைவிட ரஷியர்களுக்கு ஈடுபாடு அதிகம். ரஷியாவில் இதுவரை 10,000 முறை இராமாயணத்தை மேடை நாடகமாக நடித்துக் காட்டப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இப்படி நம் ஊரில், செய்திருப்போமா என்பது கூட சந்தேகம்தான். 10,000 முறையாக இராமாயணம் நடிக்கப்பட்டபோது அதை ஒரு பெரும் விழாவாகக் கூட கொண்டாடினார்கள். இத்தனைக்கும் ரஷியா நாத்திக நாடு. எங்கள் ஊரில் நாத்திகர்கள் இராமாயணத்தைக் கொளுத்தினார்கள்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நேரம். செம்பியன் என்று தன்பெயரை தூய தமிழ்ப் பெயராக மாற்றி வைத்தக் கொண்ட ஒரு ரஷியர் வருகை தந்தார். அப்போது தமிழ்த்துறை தலைவராக இருந்த திரு.லெப.கரு. இதைமநாதம் செட்டியாரிடம் சந்தித்துப் பேசினார். நானும் அந்த ரஷியரைச் சந்தித்துப் பேசினேன். அவர் சில ஆவணங்களை எங்களிடம் காட்டினார்.

கிஷ்கிந்தா போன்ற இடங்களுக்கு அநரில் சென்று பார்த்து அங்குள்ள பாறைகளை எல்லாம் விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து பார்த்த ஆவணங்கள். டிகம்போசிஷன் தியரி, கார்பன் தியரி என்பன போன்றவற்றின் அடிப்டையிலர் ஆராய்ந்து பார்த்த அவர்கள் அதன் முடிவில் இராமாயண காலம் கி.மு. 5000 என்று கூறுகிறார்கள். பல வரலாற்றுப் பேராசிரியர்கள் இதில் பலபடக் கூறினாலும் அவர்கள் சொல்வதெல்லாம் ஊகங்களின் அடிப்படையிலே எழுந்தவைதான். ஆனால் ரஷியர்கள் சொல்வது விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இது மறுக்க இயலாத ஒன்று.

இத ஒருபுறம் இருக்கட்டும். அருட்செல்வர் ந.மகாலிங்கம் அவர்கள் டேட் ஆஃப் ஸ்ரீராமா என்று ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். நரசிங்கராவ் என்கிற பொறியாளர் சோதிட ரீதியாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார். இராமனுடைய ஜாதகம் வான்மீகி இராமாயணத்தில் கொடுக்கப்பட்டிக்கிறது. அந்த ஜாதகப்படி கிரகங்கள் அமைய வேண்டுமானால் எத்தனை வருடத்திற்கு முன்னால் அப்படி அமைந்திருக்க முடியும்? ஆராய்ச்சி செய்கிறார் ஆசரியர். கிடைத்த இராமனுடைய ஜாதகத்தை வைத்து பின்னோக்கி போனால் இராமனுயைட பிறந்த தேதி கிடைக்கும் அல்லவா?

எனக்கு இப்போது வயது 50. தான்ஸ்ரீ ஐயாவிற்கு 70. ஒவ்வொருவருக்கும் பிறந்த தேதி உண்டு. இராமருடைய பறிந்த தெதியை ஆராய்ந்த இந்நூலாசிரியர் அது 11–2–கி.மு. 4433 என்று முடிவிற்கு வந்துள்ளாதிததர். இது எந்த அளவிற்கு உண்மை என்பதை அப்புறம் பார்ப்போம்.

இப்போது இரண்டு காலங்கள் கிடைக்கின்றன. ரஷியர்களின் கணக்குப்படி இராமாயண காலம் கி.மு. 5000 மேலே சொன்ன நூல்படி கி.மு.4433. அந்த காலத்தில் வாழ்ந்தவர் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவே இதைமனுக்குத் தந்தை–அவருக்கும் மூத்தவரான வசிட்டர் என்று கணக்கிட்டுப் போவதானால் கி.மு. 5000 என்ற ரஷியர்கள் கணக்கே சரிவரும் என்று தோன்றுகிறது. எனவே இதன்படி பார்த்தால் திருமூலர் காலம் கி.மு. 5000 என்று ஆகும். இதை வேறு ஏதாவது ஒரு ஆதாரத்துடன் ஒத்திட்டு உறுதி செய்ய வேண்டும். அதுவே சரியான வழி.

திருமூலரைப் பற்றி நமக்குத் தெரிந்த இன்னொரு செய்தி அவர் அகத்தியரைச் சந்திக்க வந்தவர் என்பது. இந்த அகத்தியரின் காலம் தெரியுமானால் ஒத்திட்டுப் பார்த்துக் கொள்ளலாம். அனால் அது எவ்வளவு எளிதான காரியமாகத் தெரியவில்லை. காரணம் அகத்தியர் என்ற பெயரிலே பல்வேறு காலங்களில் பலபேர் இருந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு அகத்தியர். இதைப் பட்டியலிட்டோமானால் அது இப்படி அமையும்.

1. திரிபுராதிகள் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியர் அல்லது குற்றால முனி அல்லது குறுமுனி.

2. பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியர்.

3. சூரபன்மன் காலத்தில் இருந்த வாதாபி அகத்தியர்.

4. பரசுராமர் காலத்தில் இருந்த குடகுமலை அகத்தியர் அல்லது குடமுனி.

5. இராமாயண காலத்தில் தசரத இராமருக்கு உதவியாய் இருந்த பஞ்சவடி அகத்தியர்.

6. பாரத காலத்தில் இருந்த உலோபா முத்திரையை மணந்த துவாராபதி அகத்தியர்.

7. பவுத்த மதத்தைச் சேர்ந்த அகத்தியர்.

8. சித்தர் குழுவைச் சேர்ந்த சித்த அகத்தியர்.

9. வைத்திய முறையில் கைதேர்ந்த அகத்தியவேள்.

10. காம்போதி நாட்டு யசோதியை மணந்த அகத்தியர்.

பரசுராமர் காலத்தில் அவருக்கு உதவி செய்த அகத்தியர் தமிழர். அவர் பொதியமலையில் இல்லை. குடகுமலையில் இருந்தார். சுருக்கமாக அவரை குடமுனி என்று அழைப்பார்கள். குடகு–குட–என்று சுருங்கிற்று. உடனே இவர் குடத்திலிருந்து பிறந்தவர் என்று கதை கட்டி விட்டார்கள். இன்னொரு முனிவர் குறுமுனி. குறு ஆலம் குற்றலமாயிற்று. குற்றாலத்தில் வாழ்ந்ததால் இவரைச் சுருக்கமாக குறுமுனி என்று அழைத்தார்கள். குற்றால முனி குறுமுனியாகி பின்னால் கட்டைவிரல் அளவு குறியவர் என்று கதை கட்டிவிட்டாக்ள. பாவம்! அவர் இவர்களிடம் மாட்டிக் கொண்டு அகத்தியர் கட்டைவிரல் குள்ளனாக்கப்பட்டார்.

உலோபா முத்திரையை மணந்த அகத்தியர் மகாபாரத காலத்தில் வந்தவர். ஆனால் எல்லா அகத்தியருக்கும் ஒன்றுபோல உலோபா முத்தரையை மனைவியாக சித்தரிக்கிற கொடுமையை என்ன சொல்ல!

இதைப்பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ச்சி செய்து ஒரு நூலைச் செய்தார் அமரர் துடிசைகிழார். அகத்தியர் என்பது அந்நூலின் பெயர். அதில் பொதியமலை அகத்தியர் காலம் கி.மு. 6000 என்று குறிப்பிடப்படுகிறது–காரணங்கள் காட்டி இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எனவே நமக்குக் கிடைக்கிற திருமூலர் காலம் பொதியமலை அகத்தியர் காலக் கணக்குப்படி கி.மு. 5000. இரண்டு கணக்கும் துல்லியமானவை என்று கூறிவிட முடியாது. சற்று முன் பின்னாக இருக்கலாம். எனவே இரண்டு காலக் கணக்கற்கும் இடையில் திருமூலருடைய காலத்தை கி.மு. 5500 என்று வைத்துக் கொள்ளலாம்.

இன்னும் கூட பல முகமாக இதை ஆராய்ந்து உறுதிப்படுத்தலாம். நான் எல்லாவற்றையும் எடுத்துரைக்க காலம் தடையாய் இருக்கிறது. சென்னை சைதாப்பேட்டையில் திருமந்திரத்தை சனி தோறும் சிந்தித்து வருகிறோம். திருமூலருடைய காலத்தைப் பற்றி மட்டும் ஆராய 4 நாட்கள் ஆயின. எனவே காலத்திற்கேற்ப இங்கே இரண்டே இரண்டு அதிலும் அவை திருமூலர் வாக்கின்படி–கிடைத்தவை கொண்டு ஆராய்ந்து அமைந்திருக்கிறோம்.

எனவே திருமூலர் காலம் கி.மு. 5500 என்று வைத்துக் கொண்டோமானால் சிலர் அவ்வளவு பின்னோக்கி இருக்குமா என்று சந்தேகப்படுகிறார்கள். சிலருக்கு, ஏன், பலருக்கு இந்த உலகம் ஏசுகிறிஸ்து பிறந்த பின தான் உருவாகியது என்று எண்ணிக் கொள்கிறார்கள். அண்மையில் செய்தித்தாளில் ஒரு செய்தி வந்தது டைனோசர் என்ற அழிந்து போன ஒரு விலங்கினத்தின் எலும்பு ஒன்று அகப்பட்டதாம். அதை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து பார்த்து அந்த எலும்பு 8 கோடி ஆண்டுகட்கு முன்னது என்று அறுதியிட்டிருக்கிறார்கள்.

எட்டு கோடி ஆண்டுகட்கு முன்னமேயே உலகம் இருந்திருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால் பலருக்கு கிறிஸ்து பிறப்பதற்கு முன் சில ஆயிரம் ஆண்டுகளைக் கணக்கிட்டுச் சொல்லும் போதே மலைப்பு ஏற்படுகிறது. இதை என்ன சொல்ல?

எனவே திருமூலர் கி.மு. 5500 என்று எடுத்துக்கொள்வோமானால் வேர் பொதியமலைக்குப் புறப்பட்டு வந்த காலத்தை ஒரு ஐம்பது ஆண்டுகளைத் தள்ளி வைத்தோமானால் கி.மு. 5500 என்று ஆகும். அதன் பின் திருவாவடுதுறையில் அவர் தங்கிய காலம் 3000 ஆண்டுகள்.

ஒருவரைப் பார்த்து உங்கள் வயசு என்ன என்று கேட்டால் 50 அல்லது 70 என்று கூறலாம். ஒருவர் என்னுடைய வயசு 3050 என்று சொன்னால் கேட்கிறவன் கதி என்ன ஆகும்? பயந்து போக மாட்டானா?

இதை எப்படி சார் நம்பறது என்பான். அவ்வாறு இருந்தவரை தோவது 3050 வயசு வரை இருந்தவரை நேரடியாக பார்க்கவில்லை. அதனால் நம்ப முடியவில்லை. ஆழ சிந்தித்துப் பார்த்தோமானால் இதற்கு விடை கிடைக்கும். நம்முடைய சிற்றறிவு கொண்டு அருளாளர்களை அறிய முடியுமா?

அடியேன் வாரியார் சுவாமிகள் தலைமையேற்று தொடக்கிவைத்த வேலூர் வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தின் செயலாளர். இந்த அமைப்பு அண்மையில் தான் 50 ஆண்டு நிறைவெய்தி பொன்விழா கொண்டாடியது. இந்த அமைப்பு ஆண்டுதோறும் வள்ளி அவதாரம் செய்த இடமான வள்ளிமலையில் தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு முன்னாள் படிவிழா கொண்டாடுகிறது.

வாரியார் சுவாமிகள் அடிக்கடி சொல்வார். ஒரு முஸ்லீம் எப்படி தம் வாழ்நாளில் எப்படியாவது மெக்காவிற்கு ஒரு முறையாவது தரிசிக்கச் சென்ள்று வருகிறறானோ அது போல சைவன் ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது வள்ளிமலை சென்று தரிசிக்க வேண்டும். அப்போது தான் பிறந்த பிறவியின் லட்சியம் ஈடேறும் என்பார்.

இங்கே உள்ள மலேசிய அன்பர்கள் விரும்பினால் நான் மனமகிழ்ச்சியோடு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தயாராய் உள்ளேன்.

ஒரு பெரியவர் தவம் செய்ய இமய மலைக்குப் போனார். அவரை அங்கே ஒருவர் கூப்பிட்டார். தமிழ்நாடா? என்றார். ஆமாம் என்றார்.

தமிழ்நாட்டில் எந்த இடம்?

தொண்டைநாடு

எதற்கு இங்கே வந்துள்ளாய்?

தவம் செய்ய

அட பாவி! தமிழ் நாட்டில் இதைவிட உயர்ந்த மலை வள்ளிமலை இருக்குது. அதை விட்டுவிட்டு இங்க ஏன் வந்த அங்கே ஏற்கெனவே பல தவசிகள் தவம் செய்து கொண்டிருக்காங்க. அங்கே போய் தவம் செய் போ!

இது உண்மையில் நடந்த நிகழ்ச்சி. இதில் வள்ளிமலைக்குப் போ என்று நெறிப்படுத்தப்பட்ட சுவாமிகள் தான் மறைந்த விடோபா மடம் இராமலிங்க சுவாமிகள்.

இன்றைக்கும் கூட அங்கே பல தவசிகள் சூட்சுமமாக தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். பல விதமான மாநாடுகள் நிகழ்ச்சிகள் அங்கே நடக்கும். நிகழ்ச்சிகள் முடிந்ததென்றால் அவரவர் அவரவர் ஊரக்குத் திரும்பிவிட வள்ளிமலை மறுபடியும் ஏகாந்தமாக இருக்கும். யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி பல நேரம் அடியேன் வள்ளிமலையில் ஓரிருவருடன் தங்கி இருந்ததுண்டு. இரவு 2 மணிக்கு எழுந்து பார்த்தால் மலை மேலிருந்து வீணை வாசிப்பத கேட்கும். யாரோ பாடுவது கேட்கும். அந்த நேரத்தில் ஒலி பெருக்கியும் கிடையாது. மலைமேல் அந்த நேரத்தில் யாரும் போவதற்கும் வாய்ப்பில்லை. ஆனால் பாடுவதும் வீணை வாசிப்பதும் கேட்கும். எனக்கு மட்டுமல்ல, என்னுடன் கூட இருப்பவர்களும் கேட்டுஅதிசயித்திருக்கிறார்கள். இதற்கு என்ன பொருள். யாரோ சில தவசிகள் சூக்குமமாக அங்கே மலைமேல் குழுமி வழிபாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தானே அதற்குப் பொருள்

எனக்கு இப்போது வயது 50. என்னுடைய தந்தையார் 60 வருடமாக இந்த வள்ளிமலையில் பல திருப்பணிகளைச் செய்தார். எனக்கு முன் எனது தந்தையார் மறையும் வரை அவரே வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தின் செயலாளாராய் இருந்தார், வாரியார் தலைவர்.

அங்கே மலைமேல் முருகன் கோயிலுக்குச் செல்ல சுமார் 750 படி இருக்கும். படித்திருப்பணி எனது தந்தையார் தான் செய்தார். படித்திருப்பணி பாதியில் இருக்கும் போது ஒரு நாள் என் அப்பா வேலூரில் தனது நித்திய பூசையை செய்து கொண்டிருந்தார். வள்ளிமலையிலிருந்து ஒருவன்(வள்ளிமலைக்கும் வேலூருக்கும் சுமார் 18 கி.மீ.) வேலூருக்கு மூச்சிறைக்க வந்து எனது தந்தையாரைப் பார்த்து ஐயா! என்றான். என்னப்பா என்று கேட்டால் அவனால் முழுமையாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏதோ விபரீதம் நடந்தது என்று தனது தந்தையார் சில முக்கியஸ்தர்களைச் கூட்டிக்கொண்டு அவனுடன் காரில் வள்ளி மலைக்குச் சென்றார். அங்கே சென்று பார்த்தால் படித்திருப்பணியில் வேலையாட்களைக் காணோம். சுமார் 250 படிக்குப் பின்னால் மேலே படிபோடத் தோண்டியிருக்கிறார்கள். உள்ளே பெரிய பாறைபோல இருக்கிறது. அந்த இடத்தைக் கடப்பாரையால் தோண்டும் போது குபுகுபு என்று இரத்தம் வந்திருக்கிறது. தோண்டியவன் மூர்ச்சையாகி விட்டான். அதன் பிறகு அந்த இடத்திலிருந்து புகை வந்திருக்கிறது.

பின்னால் உரிய ரெவின்யூ அதிகாரிகளை அழைத்துக் கொண்டு போய் அந்த இடத்தைப் பார்த்தால் ஒரே புகை மயம். சற்று உள்ளே எட்டிப் பார்த்தால் பள்ளத்தின் உள்ளே ஒருவர் தாடிசடையுடன் உட்கார்ந்திருக்கிறார். அப்படியே மூடுன்னு அவர் சைகை செய்தார்.

எல்லோருக்கும் வியப்பு! அவர் யார்? எப்போது அங்கே தவத்தில் உட்கார்ந்தார்? இன்னும் உள்ளே இவரைப் போல எத்தனை பேர் இருக்கிறார்கள்? தெரியவில்லை. இவர் எந்த நாளிலே வந்து உட்கார்ந்தார்? காலம் சொல்ல முடியுமா? உள்ளே இன்னும் பல பேர் இருக்கக்கூடும் என்று சொன்னோமே அவர்களின் காலம் தெரியுமா? எத்தனை ஆயிரம் ஆண்டுகள் முன்னர் தவத்தில் அமர்ந்தவர்களோ?

இப்படி இன்றைய நாளிலேயே நம் கண்முன்னே காலம் தெரிந்து கொள்ள முடியாமல் பாறைக்குக் கீழே அருளாளர்கள் இருக்கிறார்களே, இவர்களுக்கே காலம் சொல்ல முடியவில்லையே!

மறுநாள் வைத்திய பூபதி திரு. அப்பாதுரை என்ற பெரியவரின் கனவில் ஒரு சாமியார் வந்து மேலே அப்படியே பாறையை மூடிவிட்டு படித்திருப்பணியை சஞ்சலப்படாமல் தொடருங்கள் என்று கட்டளை இட்டாராம். அதன்படி அந்த இடத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டு மேலே படிகள் போடப்பட்டன. ஆண்டுதோறும் படிவிழாவிற்கு வாரியார் சுவாமிகள் அங்கே வந்து அந்த மண்டபத்தில் அமர்ந்து கந்தரனுபூதி பாராயணம் செய்துவிட்டு மேலே திருப்புகழ் பாராயணம் செய்து படி விழாவை நிறைவேற்றுவார்.

அந்த மண்டபத்தின் கீழே அமர்ந்திருந்த தவசி எந்த காலத்தில் அமர்ந்தவர்? யாருக்குத் தெரியும். இந்த யுகமா அல்லது கிருத யுகமா? எந்த யுகம்னு யார் சொல்றது?

கண் முன்னால் கண்ட இதுவே சான்று பகரும் போது திருமூலர் ஏன் 3000 ஆண்டுகள் தவமிருந்திருக்க முடியாது? 3000 ஆண்டுகள் வாழ்வது பொது மக்களாகிய நாம பாரதது தான். அதனால் நமக்குச் சந்தேகம் எழுவதும் இயல்பே. ஆனால் அது பாராததுதானே தவிர இயலாததல்ல என்பதை இப்போது பார்த்த இந்த வள்ளிமலைச் சம்பவமே சான்று கூறும்.

இன்னும் ஒரு வரலாற்றைக் கூறுகிறேன். ஒரு முனிவர் ஒரு மலைமேலிருந்து கீழே இறங்கி வந்தார். நல்ல தவசி. என்ன காரணமோ தெரியவில்லை கீழே இறங்கி வந்தா. பசி யாருக்கும் உண்டு. அருந்தபசிக்கு அருந்த பசி. சுற்றிலும் காடு. வீடு எங்கும் இல்லை. எங்கோ ஒரு தொலை தூரத்தில் ஒரே ஒரு குடிசை தென்பட்டது. அங்கே போனார். அங்கே குடிசையில் ஒரு குடியானவனும் அவன் மனைவியும் இருந்தனர். கைதட்டி பசிக்கிறது என்றார். பார்த்த பார்வையிலேயே குடியானவனும் அவனது மனைவியும் இவர் ஒரு பெரி ய மகான் என்று புரிந்து கொர்ணடார்கள். அன்பினாலேயே அவரைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். வலம் வந்து காலில் விழுகிறார்கள். முனிவர் இதையெல்லாம் நிறுத்துப்பா என்பது போல கைகாட்டி மறுபடியும் கையேந்துகிறார். அவருக்கு ரொம்ப பசி என்பதை இருவரும் உயர்கின்றனர். ஏழைகள்! என்ன பண்ணுவார்கள் பாவம்! அவர்கள் வீட்டில் களிதான் இருந்தது.

களி தெரியுமா களி! மலேசியாவில் களி எங்கே தெரியப் போகிறது! மலேசியா வளப்பத்தினாலே களி (மகிழ்ச்சி) உடையது தின்னக் களி உடையதா என்று தெரியவில்லை. இருந்தாலும் சொல்கிறேன் எங்க நாட்டில் ஏழைகளும் சர்க்கரை வியாதி வந்த செல்வச்சீமான்களும் சாப்பிடுவது களி. களியோடு கோங்குராவ் என்றொரு கீரையை உரிய முறையில் சமைத்து தொட்டுக் கொண்டு சாப்பிட்டா அவ்வளவு நல்லாயிருக்கும்!

குடியானவன் மனைவி குடிசைக்குள் சென்று பார்த்தாள். எப்போதோ செய்து வைத்த களி மிச்சம இருந்தது. அதன் மேல் பக்கம் எல்லாம் உலர்ந்து கெட்டி தட்டிப்போயிருந்தது. பாவம் ஏழை வீட்டில் ஃபிரிட்ஜா இருக்கும்? அவள் கொஞ்ச நேரத்தில் கீரையைத் தயார் செய்து களியையும் கீரையையும் கொண்டு வந்தாள். காய்ந்த பாகத்தை நீக்கிவட்டு களியையும் கீரையையும் முனிவர் கையில் இட்டாள்.

முனிவர் கீரையை அதிகமாகவும் களியை கொஞ்சமாகவும் சாப்பிட்டார். காரணம் கீரை சுவையாக இருந்தது. எஞ்சியிருந்த களிக்குத் தொட்டுக் கொள்ள முனிவர் மறுபடியும் கீரை என்றார். அந்தப் பெண் எங்கே போவாள்? மறுபடியும் முனிவர் காலில் விழுந்து கொஞ்சம் பொறுமையாக இருந்தால் சிறிது நேரத்தில் கீரையைப் பக்குவப்படுத்தித் தருவதாக கீரையைப் பறிற்ககச் சென்றாள்.

முனிவர் பாதி களியைக் கையில் வைத்துக் கொண்டு தியானத்திற்குப் போய்விட்டார். சிறிது நேரத்தில் அந்தப் பெண் கீரையைச் சமைத்துக் கொண்டு வருவதற்குள் முனிவர் தியானத்தின் மேல் நிலைக்குப் போய்விட்டார். சமாதி நிலைக்குப் போய் விட்டார்.

குடியானவனும் அவன் மனைவியும் முனிவரைத் தூண்டித் தூண்டி எழுப்புகிறார்கள். முனிவர் நிட்டை கலைந்த பாடில்லை.

தூங்குகிறவனை எழுப்பினால் மெத்தையைச் சுருட்டி அதன் மேல் கொஞ்ச நேரம் தூங்குவான். அதுபோல தியானத்திலே இருந்தவர் சிறிது விழித்து மீண்டும் தியானத்திற்கே சென்று விட்டார். அவரை யார் எழுப்புவது?

காலச் சக்கரம் சுழன்றது. நாள் மாதமாயிற்று. மாதம் வருடம் ஆயிற்று. வருடம் யுகமாயிற்று. எத்தனை யுகங்கள் சென்றிருக்குமோ தெரியவில்லை. மணல் மேடாகி விட்டது.

பல யுகங்கள் சுழிந்தன. ஒரு மன்னரும் மந்திரியும் படைகளுடன் அந்தப் பக்கமாக மணல் பரப்பில் சென்று கொண்டிருந்தனர். மன்ன் தேரில் செல்கிறான். சூரியன் அஸ்தமிக்கும் நேரம். இரவு வருமுன் அண்டையிலுள்ள ஏதாவது ஓர் ஊரை அடைந்து விட வேண்டும் என்று மன்னரும் மற்றவரும் விரைகிறார்கள். தேர்ப் பாகன் தேரை வேகமாக ஓட்ட முயற்சிக்கிறான். ஆனால் குதிரை ஓரிடத்திற்கு மேல் போகாமல் காலை தூக்கிக் கனைக்கிறது. மன்னது தேர்க்குதிரை மட்டுமல்லாது உடன வந்த எல்லாக் குதிரைகளும் இப்படியே கனைக்கின்றன.

மன்னன் அறிவுடையன் விலங்கினங்களும் நம்மைவிட கூர்மையான புலன்கள் உண்டு என்று எண்ணிப் பார்க்கிறான். புயல் வருவது நமக்குத் தெரியாது ஆனால் விலங்கினங்கள் இதனை முன்னமே உணர்ந்து இடம் பெயர்ந்துவிடும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்த மன்னன், இந்த இடத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும் இந்த இடத்தைத் தோண்டிப் பாருங்கள் என்று கட்டளை இட்டான்.

தோண்டிப் பார்த்தால் ஓரிடத்தில் ஒரு சாமியார் உட்கார்ந்திருக்கிறார். எல்லோருக்கும் மெய் சிலிர்த்தது. மன்னன் அடியற்ற மரம்போல கீழே விழுந்து சாமியாரை வணங்கினான்.

சாமியார் கண் விழித்துப் பார்த்தார். கீரை எங்கே?

மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. மறுபடியும்

சாமியார் கேட்டார் கீரை எங்கே?

சாமி! என்ன கேட்கிறீங்கன்னு புரியலையே மன்னன் அலங்க மலங்க மெல்லிய குரலில் இழுந்தான்.

அப்பா, நீ தானப்பா களி கொடுத்தாய். உன் மனைவி கீரை கொடுத்தாள். நான் கொஞ்சம் களியைச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் கீரை கேட்டேன். உன் மனைவி கொடுப்பதாக சொன்னாளே!

மன்னன், வேறு யாராவது இவருக்குக் களி கொடுத்தார்களோ என்று சுற்று முற்றும் பார்த்து யாரும் இல்லாததால் அலங்க மலங்க விழித்தான். உடனே முனிவர் மன்னவனைத் தொட்டு தமது அருளாற்றலைப் பாய்ச்சினார். அவனுக்கு இப்போது பழைய காட்சியெல்லாம் தெரிந்தது.

அப்பா! நீதான் அந்தக் குடியானவன். எனக்குக்களி கொடுத்த காரணத்தால் இப்பிறவியில் மன்னனாகி விட்டாய். இடையில் யுகங்கள் உருண்டோடி விட்டன என்றார்.

இங்கே பார்த்தோமானால் பல யுகங்கள் சில நொடிகளாகின்றன. நமக்கு பல ஊழிகள் அருளாளர்க்கு அவை சில நொடிகள்.

அதுபோல திருமூலருக்கு 3000 நொடி நமக்கோ அவை 3000 ஆண்டுகள்.

இன்னும் புரியும்படி சொல்கிறேன். நான் சென்னையிலிருந்து இங்கே மலேசியாவிற்கு வருகிறேன். அங்கே உள்ள நேரத்திற்கும் இங்கே உள்ள நேரத்திற்கும் ஏறத்தாழ 2.1 மணி நேரம் வித்தியாசம். அங்கே

கட்டியிருந்த அதே கடிகாரம் தான். அது ஒழுங்காக ஓடும் கடியாரம் தான். இங்கே வந்து இறங்கியவுடன் விமானத்தில் நேரத்தை 2 மணி நேரம் கூட்டி வைத்துக் கொள்ளுங்கள் என்கிறான். இடம் வித்தியாசப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை சென்னையிலிருந்து மலேசியாவிற்கு வரும் பயண நேரம் ஒன்று தான். ஆனால் மலேசியாவில் பயண நேரத்துடன் 2 மணி நேரம் கூட்டிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இரவு 1.00 மணிக்குப் புறப்பட்டேன். பயண நேரம் 3,00 மணி நேரம். எனது கடிகாரப்படி விடியற்காலை 4.00 மணி ஆகிறது. ஆனால் மலேயாவில் நேரம் 6,30 என்று காட்டுகிறது. எனவே காலம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. அருளாளரிடத்தில் அது ஒன்றாகவும் நம்மிடத்தில் அது ஒன்றாகவும் இருக்கிறது.

இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கின்ற விஞ்ஞான அதிசய உண்மைகளைக் கண்டுபிடித்தவன் விஞ்ஞானி ஐன்ஸ்டின். அவனுக்கு முன்னால் உலகைப் பிரமிக்க வைத்த விஞ்ஞானியான நியூட்டனின் முன் மேருமலையாக விஸ்வரூபம் எடுத்த விஞ்ஞானி ஐன்ஸ்டின், உலகை அரண்டே இரண்டில் அடக்கி விடலாம் என்றான். ஒன்று இடம் மற்றது காலம். இதை நுணுக்கமாக ஆராய்ந்தவன் ஐன்ஸடின் ஆராய்ந்து அவன் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகள் உலகையே திடுக்கிடச் செய்தன. அதன் அடிப்படையிலே தான் இப்போது வானவெளியில் ராக்கெட்டுக்களைப் பறக்க விடுகிறோம்.

அவன் கண்டு பிடித்த கண்டுபிடிப்புகளில் ஒன்றைப் பார்ப்போம். ஒளியை அவன் எடுத்துக் கொண்டான். ஒளியின் வேகம் இருக்கிறதே அது தான் இந்தப் பிரபஞ்சத்தின் அதிக பட்ச வேகம். ஒரு விநாடிக்கு 1,86,000 மைல். நான் ஒரு பொறியாளன். எனவே எங்கள் முறைப்படி கூறுகிறேன்–அதாவது விநாடிக்கு 3+10 பவர் 10 சென்டிமீட்டர். இந்த வேகத்திலேயே நம்மால் பயணம் செய்யமுடியுமா? முடியாது.

இங்கே எல்.ஆர்.டி. என்று கூறுகிறார்கள். இது வேகமாகச் செல்லும் என்கிறார்கள். எங்க நாட்டிலே இது பெரிய வேகமில்லை. அதைவிட வேகமாகவே தாயகத்தில் தொடர்வண்டிகள் செல்கின்றன. இந்த வேகத்தையே பெரிதாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் பயணம் செய்வதை நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஆனால் ஒளியின் வேகம் அது தான்.

இந்த ஒளியின் வேகத்திற்கு மேல் போக முடியுமா? முடியாது என்று நிரூபித்தான் ஐன்ஸ்டின். மேலே போக முயற்சித்தால் என்ன ஆகும்? ஒளியின் வேகத்தில் அது வந்து அடங்கி விடுமாம். இதுதான் ஒளியின் தனித்தன்மை. இவ்வாறு தனக்கு மேல் செல்ல முடியாததால் தானோ என்னவோ கடவுளை ஒளியாகவே நம்முன்னோர்கள் காட்டினார்கள்.

சரி! ஒளியின் வேகத்தில் ஒரு ராக்கெட்டை மேலே அனுப்பினால் என்ன ஆகும் என்று ஐன்ஸ்டின் ஒரு கணக்கு போட்டுக் காட்டினான். இந்த ராக்கெட்டில் ஒருவனை உள்ளே வைத்து அனுப்புகிறோம் என்று வையுங்கள். அவனுக்கு 30 வயது என்று வைத்தோமானால் இவன் திரும்பி வருவதற்குள் இவனுடைய பேரனுக்கு 90 வயது ஆகி இருக்குமாம். வேடிக்கைக்கோ விளையாட்டுக்கோ சொல்ல வில்லை. விஞ்ஞான ரீதியாகச் சொல்கிறான்.

ராக்கெட்டில் சென்று வர பயண நேரம் 3 மாதம் ஆகியிருக்கும் என்று வைத்துக்கொண்டால் உள்ளே பயணம் செய்தவனுக்கு 30 வயது 3 மாதம் ஆகியிருக்கும். ஆனால் அவன் பூமியில் இறங்கும்போது பல ஆண்டுகள் கழிந்திருக்கும். அவன் பேரனுக்கே 90 வயது ஆகியிருக்கும் என்றால் மூன்றாவது தலைமுறைக்கே 90 வயது ஆகிவிடுகிறது. ஒரு தலைமுறைக்கு 30 ஆண்டுகள் என்றால் ராக்கெட்டில் பயணம் செய்தவனின் பிள்ளைக்கு 30 ஆண்டுகளில் அவன் பேரன் பிறந்தான் என்று வைத்தோமானால் அவனுக்கு 90 வயதையும் கூட்ட மொத்தம் 120 ஆண்டுகள் பூமியில் கழிந்துவிடும். ராக்கெட்டில் உள்ளவனுக்கு பயண நேரம் 3 மாதமாக இருக்க பூமியில் அதே நேரத்தில் 120 ஆண்டுகள் ஓடிவிட்டிருக்கும்.

எதுபோல என்றால் விமானத்தில் பயணம் செய்த எனக்கு பயண நேரம் 3 மணி ஆனாலும் மலேசியாவைப் பொறுத்தவரை சென்னையில் புறப்பட்ட நேரத்தையும் மலேசியாவில் இறங்கிய நேரத்தையும் கழிக்க பயண நேரம் 5 மணி ஆவதைப் போல.

இந்தப் பின்னணியில் ததிருமூலர் யோகத்தில் இருந்த ஆண்டுகளைப பார்ப்போம். யோகத்தில் திருமூலர் எதனோடு ஒன்றுகிறார்? ஆண்டவனாகிய அருட்பெருஞ்சோதியில் ஒன்றுகிறார். அது ஒளி அல்லவா? ஒளியின் வேகம் நமக்குத் தெரியும். ஒளியினோடு யோகத்தால் ஒன்றிய திருமூலர் ஒளியின் வேகத்தில் அதில் பயணித்துக் கொண்டிருப்பார் அல்லது திளைத்துக் கொண்டிருப்பார். அவருக்கு அந்த ஒளியிடத்தில் ஒன்றி இருக்கும் நேரம் 3000 நொடியாக இருக்கலாம். ஆனால் அதற்குள் பூமியில் 3000 ஆண்டுகள்கழிந்து போயிருக்கும். இதற்கு ஐன்ஸ்டின் காட்டிய விஞ்ஞான கணக்கே சான்று.

இதைத்தான் தேவ ஆண்டு வேறு மனித ஆண்டு வேறு என்று புராணங்களில் ஆன்றோர்கள் சொல்லிவைத்தார்கள். தேவர்களுக்கு ஒரு பகலும் இரவும் கூடியது நமக்கு ஒரு ஆண்டு என்பார்கள். மார்கழி மாத வழிபாடு இநத் அடிப்படையிலே தானே அமைத்தார்கள். தேவ ஆண்டின் படி மார்கழி மாதம் அவர்கட்கு வைகறை என்றார்கள்.

எனவே 3000 ஆண்டகள் திருமூலர் ஏன் இப்புவிமேல் இருந்திருக்க முடியாது? இது உண்டு என்று விஞ்ஞானம் கை கொடுக்கிறது. கணக்கு காட்டுகிறது. வள்ளிமலையில் பாறைக்குக் கீழே இன்றும் தவம் செய்யும் தவ முனிவர்கள் கண்கூடாக சான்று பகர்கிறார்கள். இன்னும் இதிலென்ன சந்தேகம் இருக்க முடியும்?

எல்லாவற்றிற்கும் மேலாக திருமூலரே திருமந்திரத்தில் இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி என்று அகச்சான்று பகர்கிறார். அதுவும் இற்றுவீழும் வெற்று வாழ்க்கையில் கழித்தல்ல. எண்ணிலி கோடி காலம் தாம் இருந்த இடம் யோகத்தால் இராப்பகல் அற்ற இடத்தே என்று கூறுவதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இன்னும் பல பாடல்களில் தாம் பல யுகங்கள் இருந்ததாகக் கூறுகிறார். அவற்றை விரிக்க விரிக்க வரிந்து கொண்டே போகும்.

எனவே மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவி மேல் திருமூலர் மகிழ்ந்திருந்து திருமந்திரத்தை ஆண்டிற்கொரு பாடலாகப் பாடினார் என்பது விஞ்ஞானத்திற்கு ஒத்ததே. இதை மறுப்பவர்கள் விஞ்ஞான உண்மைகளை மறுப்பவர்கள். திருமூலர் தாமே கூறிய வாக்கை மறுப்பவர்கள் ஆகி விடுகிறார்கள்.

திருமூலர் மூவாயிரம் ஆண்டு மகிழ்ந்திருந்து பாடியதுபோல் நான் மூவாயிரம் நிமிடம் (50 மணி நேரம்) பேசினாலும் மகிழ்ந்திருந்து கேட்போம் என்று பொறுமையாக உட்கார்ந்துள்ள இந்த திருக்கூட்டத்தார் பொன்னார் திருவடிக்கு வணக்கம் சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி முதல் நாள் சொற்பொழிவை நிறைவு செய்கிறேன்.

உ

முருகா

திருமந்திரம் – தமிழாகமம்

இரண்டாம் நாள் சொற்பொழிவு

(2–9–1999)

எல்லாம் வல்ல வள்ளி மணவாளன் கருணை நலத்தாலே திருமந்திரச் சிந்தனைத் தொடர் சொற்பொழிவில் இரண்டாம் நாளான இன்று தமிழாகமம் ன்பது பற்றி சிந்திப்போம்.

ஒரு சொற்பொழிவாளர் கூட்டத்திற்குத் தாமதமாக வந்தார். எதிர்பார்த்து காத்திருந்தவர்கள் எல்லாரும் ஏன் தாமதம் என்று கேட்டதற்கு அவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிடிக்கும் ஒருவருக்கு இந்து மதம் பிடிக்கும் ஒருவர்க்கு கிறிஸ்தவ மதம் பிடிக்கும் ஒருவர்க்கு இஸ்லாம் மதம் பிடிக்கும். ஆனால் எனக்கு தாமதம் பிடிக்கும் என்றார். நான் அப்படி சமாதானம் சொல்ல விரும்பவில்லை. நான் தாமதமாக வந்ததற்கு உங்கள் திருவடிகளைப் பற்றி மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். தாமதம் நேர்ந்தது தெய்வசித்தம். ஒன்றை நினைக்க அது ஒழிந்திட்டு ஒன்றாகும் எல்லாம் எனையாளும் ஈசன் செயல் என்பது ஔவையார் வாக்கு. அன்பர் கலியபெருமாள் தொடங்குமாக திருமுறைத்துதி பாடும் போது பிழையெல்லாம் ்தவிரப் பணிப்பானை என்ற சுந்தரர் ்வாக்கை செவிக்கினதாகப் பாடினார் பொருத்தமாக இருந்தது. என் பிழையை நீங்களும் பொறுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாருங்கள்! திருமந்திரக் கோயிலுக்குள் நுழைவோம் என்று அழைக்கின்றேன்.

தமிழ் ஆகமம் என்பது தலைப்பு. சொல்லில் ஒரு சில ஒன்று மற்றொன்று சேர்ந்தே வரும். அதுபோல ஆகமம் என்ற சொல் வேதம் என்ற சொல்லோடு சேர்ந்தே வரும். வேதாகமம் என்றே கூறுவார்கள். திருமந்திரத்தில் வேதம் உண்டு. அதே போல் ஆகமமும் உண்டு. வேதத்தைப் பற்றி வேதச்சிறப்பு என்ற தலைப்பிலே திருமந்திரத்தில் சில பாடல்கள் உண்டு. அதே போல் ஆகமச் சிறப்பு என்ற தலைப்பிலே திருமந்திரத்தில் சில பாடல்கள் உண்டு.

முதலில் எது ஆகமம், எது வேதம் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். சைவ சமய அன்பர்களிடையே குறிப்பாக தமிழர்களிடையே வேதம், ஆகமம் என்பது பற்றி தெளிவில்லாத குளறுபடியான கருத்துக்களே நிலவுகின்றன என்பதே நடைமுறை உண்மை.

வேதம் என்றாலே அது வடமொழியில் தான் இருக்கிறது என்று எண்ணுகிறோம். இது வழக்கமாக எல்லோரும் நினைப்பது. வடமொழி வேதம் ரிக் என்ற மூல வேரிலிருந்து விரிகிறது. வேதம் என்றால் அறிவுநூல் என்பது பொருள். வில்லை எப்படிக் கையாளுவது என்பது பற்றிய அ!றவைப் போதிப்பது தனுர்வேதம் மருந்தை எப்படித் தயாரிப்பது, எப்படிக் கொடுப்பது, எது எந்த நோய்க்கு மருந்து என்பதைக் கூறவது ஆயுர்வேதம். இந்த சொற்களெல்லாம் புழக்கத்தில் உள்ளவை தாம். இதனால் வேதம் என்பது ஒரு பொதுச் சொல் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

ஒவ்வொரு மதத்திற்கு ஒரு வேதம் உண்டு. கிறிஸ்தவர்கள் எங்களுடைய வேதம் பைபிள் என்பார்கள். இசுலாமியர்கள் எங்களுடைய வேதம் குர்ஆன் என்பார்கள் பௌத்தர்கள் எங்களுடைய வேதம் பிடகம் என்பார்கள். நான் பிடக நூலை ஆராய்ந்து படித்தவன். சைவசித்தாந்தத்தில் பரபக்கம் என்பது மிக

முக்கியமானது. பரபக்கத்தில் என்ன சொல்லப்பட்டது என்பது தெரிந்தால் தான் சுபக்கம் தெரியும் நன்கு விளங்கும்.

அவரவர்களுக்கு ஒரு வேதம் இருக்கும் போது நமக்கு மட்டும் வேதம் வடமொழியில் இருப்பதாக நாம் ஏன் நினைக்கிறோம்? இதைவிட வேடிக்கை ஒன்று உண்டா? இந்த வேடிக்மகையே வாடிக்கையானது தான் வேதனை. காரணம், நாம் எதையும் ஆராய்ந்து பார்க்காமலே சோம்பேறித்தனமாக ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டோம். ஆனால் சைவசித்தாந்தம் என்ன சொல்கிறது? அதில் எதை எடுத்துக் கொண்டாலும் ஐந்து விதமாக ஆராய்ந்து தெளிவு செய்யப்பட்டிருக்கும். அவையாவன 1) மேற்கோள் 2) ஏது 3) மறுதலை 4) சித்தாந்தம் வாய்ந்த இந்த முறையில் சைவ சித்தாந்தம் எதையும் நிறுவும். அப்படி எழுதப்பட்ட நூல்தான் சைவித்தாந்தத் தலைமணி நூலான திராவிட மாபாடியம் என்னும் சிவஞானபாடியம். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பதிப்பில் அது 623 பக்கம் விரிகிறது.

எனவே நாம் எதையும் காரண காரியத்தோடு ஆராய வேண்டும். தாயுமானவர் உயிர்களை ஆராயும் அறிவு நீ என்று பாடினார். அப்படியானால் எது தமிழர்க்கு வேதம் என்பதை ஆராயமாலே எவரோ சொல்லும் ஏதோ ஒரு வேதத்தை–வேற்றுமொழியில் இருப்பதை–எப்படி நம்முடைய வேதம் என்று ஏற்றுக் கொள்வது? எனவே எது வேதம் என்பதை ஆராய வேண்டும்.

வேதம் என்பது இரண்டு விதமாக சொல்லப்படுகிறது 1)இறைவனால் பாடப்பட்டது 2) சுயம்பு–தானாகத் தோன்றியது. வடமொழி வேதத்தைக் காழ்ப்புணர்ச்சியோடு பார்க்கவில்லை. பூணுல் போட்டவர்கள் எல்லோரும் விரோதிகள் என்பதற்கு நான் வீரமணி இல்லை. ஆராய்ச்சி என்றால் காய்தல் உவைத்தல் என்பது இருக்கக் கூடாது உண்மைதான் அதில் முக்கியம். அந்தப் பார்வையில் நாம் ஆராய்கிறோம். வடமொழி வேதத்தை–அதாவது நம்மில் பலர் நமது வேதம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோமே, அதை வடமொழி வித்தகர்களே தானாகத் தோன்றியது என்கிறார்கள். வைதிகர்கள் அவ்வேதத்தை அப்படித்தான் கொண்டாடுகிறார்கள். அப்படியானால் அந்த வேதத்திற்கும் தமிழர்களுக்கும் நிச்சயமாக தொடர்பு கிடையாது. தமிழர்களாகிய நமது வேதம் இறைவனால் பாடப்பட்டது. இறைவனால் பாடப்பட்ட வேதம் எதுவோ அதற்கும் நமக்கும்தான் தொடர்பு உண்டு.

அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மை

சொற்றமிழ் பாடுகென்றான் தூமறை பாடும் வாயான்

என்பது பெரியபுரான வாக்கு. அதாவது தூயமறைகளை எல்லாம் இறைவன் தன் வாயினாரேலயே பாடியருளினான் என்கிறார் சேக்கிழார். உடனே நமக்கு சேக்கிழாருக்கு முன்னால் அப்படியாரும் சொன்னார்களா என்று கேட்கத் தோன்றலாம்.

சங்க காலத்தில் கூட வேதம் இறைவனால் பாடப்பட்டது என்றே கூறப்பட்டது. புறநானூற்றில் 166ஆவது பாட்டில் இது அழகாகக் கூறப்பட்டிருக்கிறது.

நன்றாய்ந்த நீணிமிர் சடை

முதுமுதல்வன் வாய்போகா

தொன்று புரிந்த ஈரிரண்டின்

ஆறுணர்ந்த ஒருமுது நூல்

என்று அப்பாடல் தொடங்குகிறது. சிவபெருமானை முதுமுதல்வன் என்று அப்பாடல் கூறுகிறது. அந்த முதுமுதல்வனாகிய சிவபெருமானின் திருவாயிலிருந்து மறைகள் நீங்காமல் வந்து கொண்டிருக்கிறோம். ஒரு வேதம் சிவபெருமானால் அருளப்பட்டது என்று சங்க காலம் முதல் சேக்கிழார் வரை கூறப்பட்டது. இன்னொன்று சிவபெருமானால் அருளப்படாமல் தானாகத் தோன்றியது என்று வடமொழியாளர்களால் போற்றிக் கூறப்பட்டு வடமொழியில் உள்ளது. இதிலிருந்து இது வேறு அதுவேறு என்பது நன்றாகத் தெரிய வருகிறது. ஆனால் நாமோ இதுவரை சிவபெருமான் அருளாத, சுயம்புவாகத் தோன்றிய வடமொழி வேதத்தையே உண்மை வேதம் என்றும் நம்முடைய வேதம் என்றும் கொண்டிருக்கிறோம். தமிழ்ச் சான்றோர்கள், அருளாளர்கள், பெரியவர்கள் தலைபாடாக அடித்துக் கொண்டாலும் நம்முடைய மனம் தாவிக்குதித்து அந்த வடமொழி வேதத்திற்குத் தான் போய் நிற்கிறது. பெருமான் பாடியது தான் தமிழ்வேதம் அதுவே நமக்கு வேதம்.

இங்கே ஒன்றை நாம் நினைப்பபது பொருத்தமாயிருக்கும். ஒரு அப்பா தன் குழந்தையே வெளியே அழைத்துக் கொண்டு சென்றால் அந்தக் குழந்தை அது என்ன இது என்ன என்று பார்ப்பதை எல்லாம் சுட்டிக் காட்டிக் கேட்கும். அக்கேள்விகளுக்கெல்லாம் அப்பா பொறுமையாக பாசத்தைக் குழைத்துப் பதில் சொல்லிக் கொண்டு வருவார். அப்படி குழந்தைகள் வினாக்களைக் கேட்கும் பெரியவர்கள் பதில் சொல்வார்கள். இது தான் நடைமுறை. எனக்கு என் அப்பா வெளியே அழைத்துச் செல்லும் போதெல்லாம்–இன்னும் நேரம் கிடைக்கும் போதெல்லாம்–திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற பெரியபுராணக் கதைகளை எல்லாம் சொல்லிக் கொண்டு வருவார். நானும் கடனே என்று கேட்டுக் கொண்டு வராமல் அவ்வப்போது வினாக்களைக் கேட்பேன்.

பெரியோர்களே! வினாக்கள் இருவகைப்படும். அவை 1) அறிவினா 2) அறியாவினா.

அறிவினா என்பது விடை தெரிந்டது வைத்துக் கொண்டே கேட்பது. ஆசிரியர் இரண்டும் இரண்டும் என்ன என்று கேட்பது போல. இரண்டும் இரண்டும் நாலு என்பது ஆசிரியர்க்குத் தெரியும். இருந்தாலும் மாணவரிடையே இந்த கேள்வியைக் கேட்பார். இது கூட தெரியல, அவரெல்லாம் ஆசிரியரா வந்துட்டார் என்று மாணவன் நினைக்கக் கூடாது. இவ்வாறு தமக்குத் தெரிந்ததை கேட்பது அறிவினா எனப்படும்.

அறியாவினம் என்பது தெரியாமல் கேட்பது. எது என்ன என்று தெரியாமல் குழந்தை கேட்பது அறியாவினா.

திருஞானசம்பந்தக் குழந்தை ஒரு வினா எழுப்புகிறது. கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த பெருமானே! ஏதோ வேதம் சொன்னாயாமே அது என்ன? என்று சேய்ஞநலூரில் கேட்கிறது.

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு

மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறதை

ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே

சேலடைந்த தண்கழனிச் சேய்ஞசலூர் மேயவனே!

இது சம்பந்தர் திருச்சேய்ஞலூரில் பாடியருளியது. சேய்ஞலூர் முருகப் பெருமான் குழந்தையாக இருந்து வணங்கிய தலம். அத்துடன் சண்டீசர் குழந்தை வணங்கிய தலம். இங்கே பார்த்தீர்களானால் அருமறை சொன்ன தென்னே என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இஙஙகே கேள்வி மட்டும் தான் உண்டு. பதில் இப்பாடலில் இல்லை. காரணம் வினாக்கள்–அறியா வினாக்களைக் குழந்தைகள் கேட்கலாம். பதில் பெரியவர்கள் தான் கூறவேண்டும். எனவே குழந்தை வணங்கிய, குழந்தைப் பெயரைத் தாங்கிய இந்தத்

தலத்துப் பாடலில் கேள்வியை எழுப்புவதோடு நிறுத்தினர். பதிலை வயதான பெரியவர் என்று அழைக்கப்படுகிற சிவபெருமான் தலமான திருமுதுகுன்றப் பதிகத்தில் கூறுகிறார். அடடா! என்ன பொருத்தம்! இப்படி எல்லாம் நுட்பங்களை உள்ளமைத்துப் பாடும் சம்பந்தர் தமிழை என்னவென்று பாராட்ட! அந்தப் பாடல் வருமாறு

சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல்அரா நல்லிதழி

சழிந்த சென்னிச் சைவவேடம் தானினைந்த தைம்புலனும்

அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம் வீடு

மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முதுகுன்றே

அதாவது மாலடைந்த நால்வர் கேட்க என்று சேய்நலூர் பாடலில் குறிப்பிட்ட சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நால்வரைக் குறிப்பிட்டவர், இந்தப் பாடலில் அழிந்த சிந்தை அந்தணாளர் என்று அவர்களைக் குறிப்பிடுகிறார். அங்கே அவர்களுக்கு சொன்ன அருமறை என்னே என்று வினாவி அவாய் நிலையாக விட்டவர்! இங்கே அது என்ன என்று விளம்புகிறார். அவை அறம்,பொருள்,அன்பம், வீடு என்றார். இந்த நான்கும் தமிழர்க்கே உரித்தானது என்பதை எல்லா அறிஞர்களும் கூறுகின்றனர். சிவஞான முனிவரும் தொல்காப்பிய முதல் சூத்திர விருத்தியுரையில் இவை தமிழுக்கே உரிய பகுப்பு என்று கூறுகிறார்.

எனவே தமிழில் உள்ள அறம், பொருள், இன்பம், வீடு என்பது தான் நம்முடைய வேதம். இதுதான் நம்முடையது சுயம்புவான வடமொழி வேதத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லை.

இவை ஒவ்வொன்றிற்கும் நூல்கள் தமிழில் பலவுண்டு.

அறம் –18 நூல்கள் உண்டு. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் அறநூல்கள். அதில் ஒன்று தான் திருக்குறள்.

பொருள் – பொருள் நூல். காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே புறப்பட்டுச் சென்ற அந்தணன் சாண்டில்லியன். அவன் மௌரிய சாம்ராஜ்யத்தையே ஆட்டிப் படைத்தவன். அவன் எழுதிய பொருள் நூல்தான் அர்த்த சாஸ்திரம் என்பது. காஞ்சிபுரத்தில் அவன் ஆராய்ந்த தமிழ் நூல்களின் பிழிவே அர்த்த சாஸ்திரம் என்பது சரித்திர ஆசிரியர்கள் கருத்து. திருக்குறளில் பொருட்பால் என்ற ஒரு பிரிவே உண்டு.

இன்பம் – அகத்துறை. இது தமிழர்களுக்கே உரியதான பொருள் இலக்கணத்திலேயே விவரிக்கப்படுகிறது. இதன் பால் தமிழ்ச் சங்க நூற்கள் ஏராளம். அவ்வளவு ஏன்? சிவபெருமானே இறையனார் களவியல் என்ற அகத்துறை நூல் செய்திருக்கிறார் என்பது சங்க நூல் வரலாறு.

வீடு – துறவு பற்றியும், மெய்யுணர்வு பற்றியும் திருக்குறளில் இயலாகவும், அதிகாரமாகவும் கூறப்பட்டுள்ளது. தமிழிலக்கணமான தொல்காப்பியத்தில் தாபத பக்கம் பேசப்படுகிறது. இதற்கென காஞ்சித்திணை என்று ஒரு திணையே வகுக்கப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சி என்பது பத்துப் பாட்டில் ஒன்றாய் இந்தத் திணையின் பாற்பட்டது.

இந்த நாலும்தான் வேதம். இந்த நான்கையும் தனித்தனியாக ஆராயும் நூல்கள் தமிழில் இருக்க இந்த நான்கையும் ஒன்றாக கூறுவது திருக்குறள். அப்படியானால் இது தானே தமிழ் வேதம்! அதனால் தானே இதனை பொதுமறை என்று பெரியோர்கள் கூறினார்கள். எனவே திருக்குறள் உள்ளிட்ட அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய நூல்கள் தானே நம்முடைய வேதம்! தமிழர்கள் தம்முடைய வேதத்தை ஏன் தவற

விடுகிறார்கள்? இறைவனுக்கே வெளிச்சம்! காய்ச்ச ்பலாவின் கனியுண்ண மாட்டமல் ஈச்சம் பழத்திற்கு இவர்கள் ஏன் இடருறுகிறார்கள்? ஆண்டவா! தமிழர்களைக் காப்பாற்று!

வேதமோடு ஆகமம் செய்யாம் இறைவன் நூல் என்பது திருமந்திர வாக்கு. வேதம் இறைவனால் சொல்லப்பட்டது என்றார் திருமூலர் நாடில் நாதன் உரையவை என்று மேலும் தெளிவுபடுத்தினார் திருமூலர் அந்தப்பாடலில். எனவே வேதச் சிறப்பு என்ற தலைப்பில் வரும் திருமந்திரப் பாடல்கள் எல்லாம் இறைவனால் சொல்லப்பட்ட தமிழ் வேதத்தின் சிறப்பையே எடுத்தோதுவன என்பது தெளிவு.

வேதம் அறத்தை வலியுறுத்துவது.

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்

ஓதத் தகும் அறம் எல்லாம் உள

என்பதும் திருமந்திர வாக்கு. எனவே அறத்தை வலியுறுத்துவதே வேதம். காரணம் அறம் இல்லையெனில் கடவுளை அடைய முடியாது.

அருணகிரிநாதர், கெடுவாய் மனனே! கதி கேள்! என்று மனத்தைக் கூப்பிட்டு உபதேசம் செய்கிறார். ஒரு பறவை பறக்க வேண்டுமானால் அதற்கு இரண்டு சிறகுகள் தேவை. ஒரு சிறகு கரவாது இடுதல். மற்றொரு சிறகு வடிவேல் இறைதாள் வணங்குதல். இவ்விரு சிறகுகளும் இருந்தால் தான் தம்மைப் போல கிளியாக உயரப் பறந்து இறைவன் தோள்மீது அமரலாம் என்று நமக்கு அருணகிரிநாதர் டிப்ஸ் கொடுக்கிறார்.

வாரியார் சுவாமிகள் அதிகமாக பிரபலமடையாத காலம் சொற்பொழிவிற்காக சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து வண்ணாரப் பேட்டைக்கு நடந்தே சென்ற வருவார். அப்போதெல்லாம் சொற்பொழிவு சன்மானம் அவருக்கு ரூபாய் மூன்று. சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்பவர் ஒரு பெரிய செல்வந்தர். எல்லோருக்கும் தன்னால் அயன்றதை நன்கொடையாக கொடுக்கும் தருமசிந்தை உடையவர். அவரைத் தேடி சாதுக்கள் பலரும் வருவார்கள். இச்செல்வந்தரிடம் வாரியார் சுவாமிகள் ஒரு சந்தேகம் கேட்டார்.

ஐயா! பொதவாக கொடுப்பவன் கை உயர்ந்தும், கொள்பவன் கை தாழ்ந்தும் இருக்கும். அனால் தங்களிடம் ஒரு வித்தியாசம் தெரிகிறது. கொடுக்கின்ற உங்கள் கை தாழ்ந்திருப்பதை பார்க்கிறேன். பெறுபவர்கள் கை உயர்ந்திருக்கிறது. இதன் பொருள் என்ன? என்று அந்தப் பெரியவரிடம் வாரியார் சுவாமிகள் கேட்டாராம். காரணம், அந்தப் பெரியவர் கொடுக்கின்ற பணத்தை அல்லது பொருளை தம்கையில் ஏந்தி நீட்டுவாராம். வாங்குபவர் அவர் கையில் இருந்து வேண்டியதை எடுத்துக் கொள்வது வாடிக்கையாய் இருந்தது.

பெரியோர்களே! தமிழில் ஈ,தா,கொடு என்று ஒரே பொருளை உடைய மூன்று சொற்கள் உண்டு. ஒவ்வொன்றையும் இன்னின்ன சந்தர்ப்பங்களில் தான் பயன்படுத்த வேண்டும் என்று இலக்கண மரபியல் கூறுகிறது.

ஈ, தா, கொடு எனும் மூன்றும் முறையே

இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை –நன்னூல் (407)

கொடுப்பவன உயர்ந்தவன் வாங்குபவன் தாழ்ந்தவன்–உயர்ந்தவன் தாழ்ந்தவனுக்கு, ஈந்தான் என்று கூற வேண்டும்.

கொடுப்பவன்தாழ்ந்தவன் வாங்குபவன் உயர்ந்தவன்–உயர்ந்தவன தாழ்ந்தவனைக் கொடு என்று கேட்டான் என்று கூறவேண்டும்.

கொடுப்பவனும் வாங்குபவனும் சமமானவர்கள் – ஒருவரை ஒருவர் தா எனக் கேட்டார் என்று கூற வேண்டும்.

அதாவது ஈதல் – உயர்ந்தவனிடமிருந்து தாழ்ந்தவனுக்கு பரிமாற்றம் ஆதல் கொடுத்தல் – தாழ்ந்தவனிடமிருந்து உயர்ந்தவருக்கு பரிமாற்றம் ஆதல் தருதல் – சமமானவர்களுக்கிடையே பரிமாற்றம் ஆதல்.

இதை ஒன்றிற்கொன்றாக மாற்றிக் கூறிவிடக் கூடாது என்று தமிழ் இலக்கண மரபியல் எச்சரிக்கிறது. மரபியல் நன்னூலில் மட்டுமல்ல தொல்காப்பியத்திலேயே இருக்கிறது. தமிழில் எந்த நேரத்தில் எதைப் பயன்படுத்த வேண்டுமென்று இலக்கண மரபியல் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

உதாரணத்திற்கு இரயிலில் குழந்தைகளுடன் இருக்கையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஒருவரைப் பார்த்து மற்றவர் இது எல்லாம் உங்க குட்டிங்களா என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளவோம் பொருளே வேறு. பன்றிக் குட்டி, நாய்க்குட்டி, ஆட்டுக்குட்டி, குரங்குக்குட்டி என்றால் சரி. குழந்தைகள் குட்டியில்லை. இதைத் தான் மரபியல் எடுத்துச் சொல்கிறது.

காளமேகம் இதை வைத்து ஒரு பாட்டு பாடுகிறார். குடந்தையில் ஓரிடத்தில் அவர் சாப்பிடும் போது அவருக்கு எதிராக ஒரு முன் குடுமி சோழியன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அந்த முன்குடுமி சோழியர் வேகம் வேகமாகச் சாப்பிடும் போது முன்குடுமி அவிழ்ந்து தலைமுடி சோற்றில் விழுந்து விடுகிறது. அந்த பகாசுரன் இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளி வாய்க்குள் விட்டுக் கொண்டிருக்கிறான். எனவே சோற்றில் விழுந்த தலைமுடியை அப்படியே ஓர் ஆட்டு ஆட்டி பின்னுக்கிழுத்துக் கொள்கிறான். அதனால் எதிரே சாப்பிட்டுக் கொண்டிருந்த காள மேகத்தின் இலையில் எச்சில் தெறிக்கிறது. எச்சிற்பட்டதைச் சாப்பிட முடியுமா? கோபம் பொங்கி வருகிறது காளமேகத்திற்கு.

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்

பொருக்குலைந்த வாயா புலையா – திருக்குடந்தைக்

கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி

போட்டாளே வேலையற்றுப் போய்

தமிழச் சொல்லை எவ்வளவு அழகாக அளந்து போட்டிருக்கிறார் பாருங்கள்! ஒரு பிரசவத்தில் ஒன்றுக்கு மேல் பிறக்குமானால் அதைக் குட்டி என்பது மரபு. அப்படிக் குட்டி போடும் விலங்கினங்களைக் குறித்து நாயே குரங்கே என்றவர் அதற்கேற்றாற் போல அவன் தாய் ஈன்றாள் என்று கூறவில்லை. போட்டாள் என்றார். குட்டிகள் போடப்படுவது தானே!

எனவே மரபியல்படி ஈகிறவன் கை உயர்ந்தகை அது உயர்ந்திருக்க வேண்டும். இங்கே இநத் வண்ணாரப்பேட்டை செல்வந்தரிடம் இது மாறி நிகழ்நதது. எனவே வாரியார் சுவாமிகள் இதன் பொருள் என்ன என்று கேட்டார்.

நாமாயிருந்தால் ஏதோ கொடுக்கிறார் வாங்கிட்டுப் போவோம் என்று கிடைத்ததை வாரிக் கொண்டு வருவோம். வாரியார் வாரிக் கொண்டு வரபவரல்ல. அவர் தமிழலக்கண மரபியலை ஒத்திட்டு கேள்வி கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார், தம்பி! உன் கணக்கு தப்பு. நான் கொடுக்கும் பொருள் எவ்வளவு நாள் தாங்கும்? சில நல்ல சாதுக்களும் உண்டுதானே! நான் அவர்களுக்குக் கொடுப்பது பொருள் அழியும் பொருள். அவர்கள் எனக்குக் கொடுப்பது அருள் அது அழியாதது. அழியும் பொருள் பெரிதா? அழியாத அருள் பெரிதா? பல தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து பல தீர்த்தங்களை ஆடி புண்ணியம் செய்தவர்கள். அவர்கள் அருளை எனக்குத் தருவதால் அவர்கள் கை மேலாகவும், பொருளைக் கொடுக்கும் என் கை கீழேயும் இருக்கிறது. இதில் என்ன தவறு?

வாரியார் சுவாமிகள் புரியாதது புரிந்தது என்று இதைக்கூறி இருக்கிறார். இங்கே அந்தப் பெரியவர் என்ன செய்கிறார்? கொடுக்கிறார் பணிவோடு கொடுக்கிறார் இறைவனை நினைத்து கொடுக்கிறார்.

பிறக்கும் போது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்

இறக்கும் போது கொடு போவதில்லை இடைநடுவில்

குறிக்குமிச் செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(கு)

இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே!

கொடுப்பதை சிவனதந்தது என்றுணர்ந்து கொடு என்கிறாரார் பட்டினத்தர். அப்பர் சுவாமிகள் நீண்ட நாட்கள் அதை உணராமலே இருந்தார். பல அறச்சாலைகளை நடத்தி வந்தவர் இறைவன் இல்லை என்று நீண்ட காலம் சொல்லி வந்தவர். அறம் செய்ய வேண்டும் அதை அறைவனை நினைத்து செய்ய வேண்டும். வெறுமனே அறம் செய்த போது இறைவன் அப்பருக்கு காட்சி கொடுக்கவில்லை அருள்புரியவில்லை. இறைவனை உணர்ந்து வழிபட்ட பிறகே அவர்க்கு அருள் கிடைகிறது. மாறாக சிவகோசரியார் என்பார் வரலாற்றில் பார்த்தோமானால் வேர் காளத்திக் கோயில் குடுமி நாதனை அந்தக் கடவலுளை நினைத்து வழிபடுகிறார். அறம் புரிந்தாரில்லை. எனவே கண்ணையும் தானம் செய்யும் கண்ணப்பருக்கே காட்சி கிடைக்கிறது. சிவகோசாரியார்க்குக் கனவில தான் காட்சி கிடைக்கிறது.

எனவே அறம் செய்தல் வேண்டும் செய்யும் போது இறைவனை நினைத்து செய்தால் அறம் இறைவனை அடைவிக்கும். எனவே அறம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. இதைத்தான் அருண கிரியார் கரவாது இடுக என்றும், வடிவேல் இறைதாள் நினைக என்றும் இரண்டையும இணைத்து மனத்திற்கு உபதேசமாகக் கூறினார்.

பெரியோர்களே! சிவபெருமான் ஏறுகின்ற விடைகள் மூன்று 1) அறவிடை 2) மால் விடை 3) ஆன்ம விடை.

அறவிடை – அற்தத்தின் மேல் அமர்ந்திருக்கிறான் என்பது பொருள். ஊழிக் காலத்திரே சிவபெருமான் மேற்கொள்வது அறவிடை. பக்குவமுள்ள ஆன்மாக்கள் மேல சிவபெருமான் ஊர்ந்து செல்வான் அது ஆன்ம விடை. தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளகிய திரிபுரம் எரித்த போது இடபமதாய்த் தாங்கியவன் திருமால் என்று திருச்சாழல் கூறுகிறது. அது மால்விடை.

ஆண்டவன் அறத்தின் மேல் அமர்ந்திருக்கிறான் என்றால் என்ன பொருள்? அறத்தின் மேல் ஆண்டவனை அடையலாம் என்று பொருள் திருமந்திரத்தல் வேதத்தை ஓதியே வீடு பெற்றறார்களே என்று வரும். வேதம்–அறம். அறத்தினைக் கடைப்பிடித்தே வீடு பெற்றார்கள் என்பது பொருள்.

முதலில் பிற உயிர்களிடம் அன்பாக இருக்க வேண்டும். அவ்விதம் இருப்பின் அருள் தானாக வரும். அருள்வரின் தவம் உண்டாகும் தவம் உண்டானால் இறைவனை எளிதில் அடையலாம்.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்

அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை

வருவழித் தவமெனும் மாட்சிஎய்து மேல்

தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்

சிவனைச் சேர்வதற்கான வழி இந்தப்பாடலில் கூறப்படுகிறது. இது கந்தபுராணப் பாடல். இதே கருத்து சூதசங்கிரை என்னும் நூலிலும் எடுத்துச் சொல்லபடுகிறது. அதாவது அறத்தைப் போற்றணும் அதன் வழி அன்பு துலங்கும் அன்பு முதிர அருள் என்னும் குழந்தை உதிக்கும் அருள் தவம் என்னும் மாட்சியில் கொண்டுவிடும். தவம் சிவனிடம் ஆன்மாவைச் சேர்க்கும் எனவே ஆண்டவனை அடைய அறமே அடிப்படையாவது காண்க.

அதனால் தான் இறைவன் தன்னிடம் வந்த நால்வார்க்கு தன்னை வந்தடைய அறத்தை முதலாக வைத்து அறம், பொருள்,இன்பம்,வீடு என்ற நான்கைக் கூறினான். அதுவே வேதம். இந்த வேதத்தைத் தான் திருமந்திரம் சிற்பித்துப் பேசியது.

வேதத்தின் முதல்படி அறம் அடுத்து பொருள் – அதாவது உலகியல் அறிவு. பலபேர் பணம் சம்பாதிப்பது மட்டுமே பொருள் என்று நினைக்கினறனர். இல்லை, நல்ல பெயரைச் சம்பாதிப்பதும் பொருள்தான். அதற்கு உலகியல் அறிவு வேண்டும். கம்பெனிகளின் சொத்துக்களில் முதலாவது அதன் குட்வில் என்பார்கள். இதையெல்லாம் உள்ளடக்கியதே பொருள் என்பதாகும்.

ஔவையார் சொன்னார்,

ஈதல் அறம் தீவினையின்றி ஈட்டல்பொருள்

காதல் இருவர் கருத்தொருமித்து–ஆதரவு

பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்

விட்டதே பேரின்ப வீடு

நன்றாக கவனிக்கனும், ஒன்று – ஈதல் அறம் இரண்டு – தீவினையின்றி ஈட்டல் பொருள். எங்கள் ஊரில் யாருமே தீவினையின்றி ஈட்டுவது தான் பொருள் என்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மூன்றாவது – காதல் இருவர் கருத்தொருமித்து வாழ்தலே இன்பம்.

நான்காவது–எம்பெருமானை நினைந்து–பரனை நினைந்து மேற்கூறிய அறம்,பொருள்,இன்பம் என்ற மூன்றையும் விட்டதே பேரின்பவீடு. இங்கே பரனை நினைத்து என்பது கடைநிலை தீபகம் என்ற இலக்கண அமைதி உடையது.

நான்கு அல்லது ஐந்து அகல் வரிசையாக வைத்திருக்கிறார்கள் என்று வைப்போம். எல்லா அகலையும் தீபமேற்றுவதற்கு ஒவ்வொரு தீக்குச்சியாகவா செலவழிப்போம்? ஒரு அகலை ஒரு தீக்குச்சியால் ஏற்றிவிட்டோம் என்று வைப்போம். அந்த ஒரு அகலைக் கொண்டு ஏனைய அகல்களை ஏற்றுவது போலே இங்கே பரனை நினைத்து என்பது தீபகம். அதாவது தீபத்திற்கு மூலம். அது கடைசியில் வைக்கப்பட்டிருக்கிறது பாட்டில். எனவே பாட்டில் அது கடைநிலைதீபகம் எனப்பட்டது. இந்த ஒன்றை ஏனைய மூன்றி னோடும் ஏற்றிச் சொல்ல வேண்டும். அதாவது பரனை நினைந்து ஈதல் அறம் பரனை

நினைத்து தீவினை விட்டு ஈட்டல் பொருள் பரனை நினைந்து காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்று கூட்டிக் கொள்ள வேண்டும்.

எனவே அறம் முதல் வீடு வரை பரனை நினைந்து செயல்படுவதே வேதம். அதைத்தவிர வேதம் என்று ஒன்று தனியாக வேறில்லை.

பெரியோர்களே! பொருள் ஈட்ட சாதனம் தேவை. தானியம் தேவை. கம்ப்யூட்டர் வைத்துப் பொருள் ஈட்டலாம். நகைக் கடை வைக்கலாம் எலக்ட்ரானிக் கடை வைத்துப் பொருள் ஈட்டலாம். இவற்றிற்கெல்லாம் அந்தந்த துறையில் அறிவு வேண்டும். ஒரு கம்ப்யூட்டரை எப்படி இயக்குவது என்பது ஓர் அறிவு. ஒரு காரை எப்படிச் செலுத்துவது என்பது ஓர் அறிவு. இப்படி உள்ளன எல்லாம் உலகியல் அறிவு. இந்த உலகியல் அறிவுதான் வேதம். வித் என்ற வேர்ச் சொல்லில் இருந்து வேதம் என்பது வருகிறது. வித் என்பதற்கு வடமொழியில் அறிவு என்று பொருள். அறிவை எது எது தருகிறதோ அவையெல்லாம் வேதம் கெமிஸ்ட்ரி படிக்கிறோம். அது ஒரு வகை அறிவைத் தருகிறது. அது ஒரு வேதம் ஃபிசிக்ஸ் படிக்கிறோம். அது ஒரு வகை அறிவைத் தருகிறது அது ஒரு வேதம். இப்படித்தான் விற்பயிற்சியை தனுர்வேதம், மருந்து நூலை ஆயுர்வேதம் என்று கூறினார்.

இந்த வேதங்களை ஒட்டி வேண்டிய பொருளை ஈட்டுகிறோம். அதாவது இந்த உலகியல் அறிவுகளைக் காசாக மாற்றுகிறோம் அதைக் கொண்டு வாழ்க்கை நடக்கிறது. எனவே வேதம் என்பது உலகியல் அறிவு என்பது தெளிவாகிறது.

இதைத்தான் சேக்கிழார்,

உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்

நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்

கலதிவாய் அமர்காண் கிலார்க ளாயினும்

பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால்

என்று பாடினார். எனவே உலகியல் அறிவே வேதம். அந்த உலகியல் அறிவையும் இறைவனை இணைத்தே போதிப்பது வேதம்.

பெரியயோர்களே! இந்தச் சிந்தனை வடமொழி வேதத்தில் இல்லை. வடமொழி வேதத்தில் சிவபெருமானைப் பற்றிய சிந்தனையே இல்லை. இதுவே வடமொழி வேதம் நம்முடையதல்ல என்பதற்கு வலுவான சான்று பகர்கிறது. வடமொழி வேதம் நம்முடையதல்ல என்பதற்கு வலுவான சான்ற பகர்கிறது. வடமொழி வேதம் நம்முடையதல்ல என்பதற்க ஏற்கனவே ஒரு காரணம் காட்டி அது சுயம்பு நம்முடையது இறைவனால் அருளப்பட்டது என்று கூறி நிறுவியுள்ளோம்.

வடமொழி வேதம் நம்முடையதல்ல என்பதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இன்னொரு சான்று கொடுக்கிறார்.

தொல்காப்பியம் அரங்கேறுகிறது நிலத்தரு திருவிற் பாண்டியன் அவை. கற்றுணர்ந்த பெரியோர்கள் முன்னிலையில் அரகேற்றம் நடைபெறுகிறது. அக்காலத்தில் ஒரு நூலை அரங்கேற்றம் செய்வது என்றால் அவ்வளவு எளிதானல்ல. நாங்கள் எல்லாம் இப்போது சர்வ சாதாரணமாக பல நூல்களைத் தமிழ்நாட்டில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால் யாரும் எதிர்த்துப் பேசமாட்டான் என்கிற தைரியம்.

சீர்காழிக் கோவை என்ற நூலை மீனாட்சி சுந்தரம்பிள்ளை எழுதினார். அதை எழுதச் சொன்னவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை என்ற கிறித்துவத் தமிழறிஞர் மாவட்ட முன்சீஃபாக இருந்தவர். சீர்காழிக்

கோவையை எழுதிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை தமிழ் தாத்தா என்று பெயர் பெற்ற உ.வே. சாமிநாதையர் அவர்களின் ஆசிரியர். பத்துக் கம்பர் என்று பெயர் பெற்றவர். அவரிடம் தமிழ் படித்துக் கொண்ட புலவர்கள் பலர். அவர்களோடு வேதநாயகம் பிள்ளையும் முன்னிலை வகிக்க அரங்கேற்றம் நடைபெறுகிறது. இருந்தும் அரங்கேற்றத்தில் கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு சரியான பதில் கூறப்பட்ட பின்தான் அரங்கேற்றம் தொடர்ந்தது.

அவ்வளவு ஏன்? கச்சியப்ப சுவாமிகள் எழுதிய கந்தபுராண அரங்கேற்றம் ஆரம்பத்திலேயே தடைப்பட்டது. முதல் பாடல் திகடசக்கரம் என்று தொடங்கும். பாடலைத் தொடங்கின உடனே திகடசக்கரம் என்று வருவதற்கு இலக்கணப் புணர்ச்சிவிதி காட்டு என்று தடைசெய்தார் ஒருவர். அப்புறம் முருகனே முன்னின்று சிக்கலைத் தீர்த்து அரங்கேற்றம் தொடர்ந்து என்ற வையுங்கள். எனவே அரங்கேற்றம் என்பது அவ்வளவு சுலபமல்ல.

இங்கே தொல்காப்பிய அரங்கேற்றம் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் நடைபெறுகிறது. அவையில் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் என்பவர் முன்னிலை வகித்து தொல் காப்பியத்தைக் கூறக்கேட்டு ஆராய்ந்து அங்கீகரித்தாரம். இது பற்றி தொல்காப்பிய சிறப்புப்பாயிரம் இப்படிக் கூறுகிறது.

நிலத்தரு திருவிற் பாண்டியன் அவையத்து

அறங்கரை நாமுன் நான்மறை முற்றிய

அதங்கோட் டாசற் கரில்தபத் தெரிந்து

இந்தப் பாடலில் அதங்கோட்டாசான் யார் எனக் கூறவந்த போது அவர் நான்மறை முற்றியவர் எனப்படுகிறது. அங்கே நான்மறை என்பது எது? விரிவுரை செய்கிறார் நச்சினார்கினியர்–புலவர்கள் உச்சிமேற் கொண்டு பாராட்டும் நச்சினார்க்கினியர். இவர் ஓர் அந்தணர். அதிலும் ஆரிய அந்தணர். பரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவரே இங்கே குறிப்பிடப்பட்ட நான்மறை ரிக்,யசுர்,சாமம், அதர்வணம் இல்லை என்று விரிவுரை செய்தார். இது பற்றி அவர் கூறுவதை அவர் உரையிலேயே பார்ப்போம்.

நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான்மறை என்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும்,தலவகாரமும்,சாமவோமும் ஆம். இனி, இருக்கவும்,யசுவும்,சாமமும்,அதர்வனமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் (தொல்காப்பியர்) இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாள் பல்பிணிச் சிற்றிவினோர் உணர்வதற்க நான்கு கூறாக இவற்றைச் செய்தாராகலின் வேத வியாசருக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

எனவே தொல்காப்பியர் காலத்திய தமிழ் நான்மறை முந்தியது என்றும் வேதவியாசரால் வகுக்கப்பட்ட வடமொழி நான்மறை பிந்தியது என்றும் தெளிவுபட புலனாகிறது.

தொல்காப்பியர் காலம் எந்தக் காலமோ? இதுபற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. அதில் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது அவர் கிறிஸ்துவிற்கு முற்பட்டவர். எவ்வளவு நூற்றாண்டு? அதில் தான் கருத்து வேறுபாடுகள். ஆனால் வேத வியாசர் காலத்தைத் தெளிவாக அறுதியிட்டிருக்கிறார்கள் அறிஞர்கள். அதாவது வேதவியாசர் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு. பாதராயணர் என்பது வியாசருக்கு உள்ள மறுபெயர். இவர் கௌட பாதருக்கு அறவுரை சொன்னவர். கௌடபாதர் ஆகி சங்கரருக்கு ஆசிரியர்–அதாவது கலுவாக இருந்தவர். இந்த வேத வியாசர் வகுத்த நூலே வடமொழி வேதம் என்றும் தமிழ் நான்மறை வேறு என்றும் தெளிவுபடச் சொல்லி விட்டார் நச்சினார்க் கினியர். இதுவே ஒரு வலுவான சான்று.

நாம் வடமொழி வேதம் நம்முடைய வேதமல்ல என்பதற்கு இதுவரை இரண்டு காரணங்களைப் பார்த்தோம். ஒன்று–வடமொழி வேதம் இறைவனால் அருளப்படாது தானாகத் தோன்றியது. அதாவது சுயம்பு என்பது. இரண்டு–நச்சினார்க்கினியர் தன் உரையில் தமிழர்களின் நான்மறை என்பது ரிக்,யஜீர்,சாமம்,அதர்வம் எனப்படும் வடமொழி நான்மறையல்ல என்று தெளிவுபடக் கூறி விட்டார். இனி மூன்றாவது காரணம் ஒன்றையும் பார்ப்போம். அதாவது வடமொழி வேதத்தில் சிவபெருமான் அங்கீகாரம் செய்யப் படவில்லை என்பது.

வடமொழி வேதத்தில் சிவபெருமான் வந்திக்கப்படவில்லை என்பது ஒரு புறம் இருக்க நிந்திக்கப்பட்டிருக்கிறார் என்பது தான் உண்மை. நான்கு வேதங்களும் சிவபெருமானுக்கு எதிராகவே இருக்கிறது. முழுமுதற்கடவுளான சிவபெருமானுக்கு ஆதரவாக அங்கே எதுவுமில்லை. ஆனால் சிறு தெய்வங்கள் வணங்கப்படுவது காணப்படகிறது. இந்திரன், வருணன்,அசுவினி தேவர்கள்,உஷை என்னும் விடியல் தேவதை, சோமன் என்ற சிறு தெய்வங்களே போற்றி புகழப்படுகின்றன. நான் ரிக் வேதத்தை முழுமையாக ஆராய்ந்து படித்தவன். இதில் சோமன்–கள்ளுக்கு மட்டும் மூன்று அத்தியாயங்கள் உள்ளன. கள்ளே போற்றி, சாரயமே போற்றி என்றால் அதை சான்றோர்கள் ஒரு நூலாக வைத்து எண்ணுவார்களா? ஆனால் ரிக் வேதத்தில் இதெல்லாம் உள்ளது. அதில் இன்னும் எப்படி எப்படியெல்லாம் சொல்லி இருக்கிறார்கள் என்று சில உதாரணங்கள் காட்டுகிறேன்.

இதையெல்லாம் தமிழ்வேள்வி என்ற அடியேனது நூலில் குறிப்பிட்டிருக்கிறேன். ரிக் வேதத்தில் சிவ நிந்தை என்ற தலைப்பில் இவற்றை விவரித்திருக்கின்றேன். ரிக் வேதத்தில் ஆறாவது மண்டலத்தில் 15ஆம் பகுதியில் அக்கினியைப் பாராட்டி பரத்துவாசர் பாடியது.

பரத்துவாசர் பிரகஸ்பதியின் மகன். இவர் பாடியது என்று தலைப்பிட்டு ரிக் வேதத்தில் கூறுவதைப் பார்க்கிறோம். இதுவே ஒரு குழப்படி. வேதம் தானாகவே சுயம்பு எனக்கூறிவிட்டு பரத்துவாசர் பாடியது என்று கூறினால் ஒன்றிற்கொன்று முரணாக இல்லை? சுயம்பு என்றால் தானாக வந்திருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு தலைப்பிலும் இவர் பாடியது, அவர் பாடியது என்று குறிப்பிட்டால் என்ன பொருள். வேத புத்தகம் எல்லார் கையிலும் கிடைக்காது என்ற துணிச்சல் தானே! அதை எழுதாக்கிளவி என்று வேறு சொல்லி பன்னூறு ஆண்டுகள் மறைத்தே வந்ததனால் இந்த சௌகரியம் ஏற்பட்டது போலும். ஆனால் ஆங்கிலேயனும், பிரஞ்சுக்காரனும் மெல்ல மெல்ல அவற்றைப் புத்தகமாக சற்றேறக்குறைய ஒரு நூறு ஆண்டுகள் முன்னம் வெளியிட்டு விட்டார்கள. வெளியிட்டாலும் இதை யார் வாங்கி வைக்கப் போகிறார்கள் என்ற துணிச்சலால் எதை வேண்டுமென்றாலும் சொல்லலாம் என்று ஆகிவிட்டது. இந்தப் பகுதியை இந்த இந்த ஆசிரியர் எழுதினார் அல்லது பாடினார் என்றால் அது சுயம்பு ஆவது எப்படி?

அரசனாக இருந்து ரிஷியாக மாறிய விசுவாமித்திரர் இந்த ஆரிய வேத வழி முறைகளுக்கு எதிராக இருந்தவர். ஆரிய வசிட்டரின் எதிரி. ஆனால் விசுவாமித்திரன் மகனோ விசுவாமித்திரர்க்கு எதிராக இருந்தார். இவர் பெயர் மனுச்சந்தைசுவாமித்திரர். இவர் பாடிய 500,600 சுலோகங்கள் ரிக் வேதத்தில் உள்ளன.

சரி! பிரகஸ்பதி மகன் பரத்துவாசர் ஆறாவது மண்டலத்தில் என்ன பாடுகிறார் என்று பார்ப்போம். அங்கே, 15ஆம் பகுதியில் மூன்றாவது சுலோகத்தின் மொழிபெயர்ப்பு இது.

தடைபடாத நீ (அக்கினி) தட்சனை–விரதத்தில் வலியனாய் இருப்பவனை–வலுப்படுத்துகின்றாய். நீ அவனை அருகில் உள்ள தூரத்தில் உள்ள பகைவனிடமிருந்து பாலிப்பவனாய் இருக்கின்றாய். பலத்தின் மகனே! எப்பொழுது புகழுடன் இருக்கும் நீ அவியை அளிக்கும் வீதஹவயனுக்குச் செல்வத்தையும் மனையையும் அளிக்கவும்.

இங்கே தட்சன் பாராட்டப்படுகின்றான். நம் எல்லோருக்கும் தட்சன்சிவ நிந்தை வேள்வி செய்பவன் என்பது நன்கு தெரியும். அவன் இங்கே பாராட்டப் படுகிறான் என்றால் என்ன பொருள்? இது மட்டுமல்ல. ஆறாவது மண்டலத்தில் 5வது பகுதியில் இரண்டாவது சுலோகத்தில் தட்சனின் புதல்வர்களும் பாராட்டப்படுகின்றனர்.

தட்சன் மகளை நாம் தாட்சாயணி என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். சிவனைள மணந்த இந்த தாட்சாயணி என்பவளுக்கு வேறாக தட்சனுக்கு இளை என்று ஒரு புதல்வி இருந்திருக்கிறாள். இவளும் தந்தை வழி வேள்வி செய்திருக்கிறாள். இவளும் ரிக் வேதத்தில் போற்றப்படுகிறாள். ரிக் வேதத்தில் மூன்றாம் மண்டலம் 27ஆம் பகுதியில் ஒன்பதாவது மற்றும் பத்தாவது சுலோகத்தில் இளையின் புகழ் காதின விசுவாமத்திரன் என்பவனால் பாராட்டிப் பாடப்படுகிறது.

எனவே ரிக் வேதத்தில் சிவபெருமானுக்கு வேலையில்லை. சிவபெருமானுக்கு எதிரானவர்களே போற்றப்படுகிறார்கள். இவர்கள் செய்யும் வேள்வி வேறு தமிழர் வேள்வி வேறு. ரிக் வேதத்தில் வரும் வேள்விகளில் யாககுண்டம் உண்டு. வேதிகையில் வைக்கப்படும் குடத்தில் நீருக்குப் பதிலாக மதுவை நிரப்பினார்கள்.

ரிக் வேதத்தில் ஐந்தாம் மண்டலத்தில் 29ஆம் பிரிவில் சுலோகம் 7ன் மொழிபெயர்ப்பு இது.

இந்திரன் மதுவால் களிக்கப்பட்ட மூன்று கலசங்களில் உள்ள சோமத்தை விருத்திரனைக் கொல்லப்பருகினான்

இவையெல்லாம் பரம்பொருளான சிவபெருமானுக்கு முன்னால் பாடத்தகுதி உள்ளவை தானா என்று சற்று யோசித்துப் பாருங்கள்!

தமிழில் இருக்கு என்றால் மந்திரம் என்று பொருள். வடமொழியில் ரிக் என்றால் தோத்திரம் என்பது பொருள். ரிக் என்பதை ஆங்கிலத்தில் லிட்டனீஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தோத்திரம் என்பது பொருள்.

இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால் என்று மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சியில் பாடினார். இங்கே இருக்கு என்பது வடமொழி ரிக் வேதத்தைக் குறிப்பிட்டதாகப் பொருள் கொள்கின்றனர் சிலர். அப்படிக் கொண்டால், தோத்திரத்தோடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால் என்று பொருள் வரும். இது பொருந்துமா?

எது தமிழ்ச் சொல் எது வடமொழிச் சொல் என்று தெரியாமலேயே நாம் பல சொற்களைக் கையாளுகிறோம். வடமொழி மேலே உள்ள மோகத்தால் அதை அப்படியே தமிழில் உபயோகிக்கிறோம். இது ஒரு பெரிய துரதிர்ஷ்டம். இது தொல்காப்பியர் காலத்திலேயே வந்து விட்டது. அவர் காலத்திலேயே வடமொழி சொல்லை எப்படிக் கையாண்டு ஏற்றுக் கொள்ளலாம் என்று இலக்கணமே உள்ளது. அதை இரண்டு வகையாகப் பிரிந்தனர். ஒன்று தற்சமயம் மற்றொன்று தற்பவம். ரோஜாவாவில் ஜா என்பது வடமொழி எழுத்து. அதை அப்படியே வைத்துக் கொள்வது தற்சமம். ஜாவுக்குப் பதிலாக சா என வைத்துக் கொள்வது தற்பவம். அதாவது ரோசா என்று எழுதிக்கொள் என்றான். இதைப்போல தற்சமமாக உள்ள சொல் பல தற்பவமாக வந்த சொல் பல. மந்திரம் என்ற சொல் இரு மொழியிலும் உண்டு. ஆகமம் என்பது இருமொழியிலும் உண்டு. ஆனால் இவ்விரண்டிற்கும் வடமொழியில் அர்த்தம்பேறு தமிழ் மொழியல் அர்த்தம் வேறு. தமிழ் மொழியில் அர்த்தம் வேறு.

எனவே இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால் என்ற இடத்தில் என்ன பொருள் கொள்ள வேண்டும்? இருக்கு என்பது இங்கே தமிழ்ச் சொல். பொருள் மந்திரம். எனவே மந்திரத்தொடு தோத்திரம்

இயம்பினர் ஒரு பால் எனக் கொள்வதே பொருந்தும். அதிலும் வடமொழி ரிக் கை சிவபெருமான் முன் ஓதவே தகுதியற்றது என்பதை முன்னாலே பார்த்தோம்.

எனவே மூன்று காரணங்களினால் வடமொழி வேதம் நம்முடையதல்ல என்று தொகுத்துக் காணலாம் 1) அவை இறைவனால் அருளப் படாமல் சுயம்பு என்பது 2) ஆரிய அந்தணரான நச்சினார்க்கினியரின் உரைச் சான்று 3) அவை முழுக்க முழுக்க சிவபெருமானை நிந்தை செய்வதாகவும் தமிழ்நெறி முறைகளுக்கு மாறாகவும் இருப்பது. ஆகவே மேற்வறிய காரணங்கள் வலுவானவை மறுக்க முடியாதவை.

இனி, வடமொழி வேதம் மந்திர வயப்பட்டது என்று சொல்கிறார்கள். சுலோகங்கள் மந்திர சாஸ்திரப்படி அமைந்தவை என்று சிலர் கூறுகிறார்கள். அதாவது சுலோகங்களில் ஒரு சில 28 எழுத்துகளோடு அடிகள் அமைய எழுதப்பட்டவை. இப்படிக் கட்டளை அமைய எழுதவது மந்திரம என்கிறார்கள். இது யாப்பு முறை அவ்வளவு தான்.

தமிழிலும் இப்படியாப்பு முறை உண்டு. கட்டளைக் கலித்துறை என்று வரும். நேர்–16, நிரை–17 என்பது கட்டளை என்பார்கள். அதாவது நேரசையில் பாடல் தொடங்குமானால் அடிதோறும் ஒற்று நீங்கலாக 16 எழுத்து மட்டுமே வரும். நிரையசையில் பாடல் தொடங்கினால் அடிதோறும் 17 எழுத்து மட்டுமே வரும். இது மட்டுமல்ல சீருக்கும் தளைக்கும் கட்டளைகள் உண்டு. இவையெல்லாம் வடமொழி சுலோகங்களில் காணப்படாதவை.

மந்த்ரம் என்பது வடமொழிச் சொல். மந் என்றால் நினைப்பவன். திரம் என்றால் காப்பாற்றுவது. அதாவது மந்த்ரம் என்ற வடமொழிச் சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பாற்றுவது என்று பொருள்.

அண்மையில் தினமணி செய்தித்தாளில் சென்னையில் ஒரு வேள்விக் குண்டத்தில் ஒரு சாமியார் இறங்கி 3 மணி நேரம் அக்கினி குண்டத்தில் இருந்தார் எனச் செய்தி வந்திருந்தது. மக்கள் எப்படியெல்லாம் ஏமாறுகிறார்கள்? இவரை ஒரு பெரிய மகான் என்றும் அருளாளர் என்றும் பாராட்டுகிறார்கள். நம் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? ஒருவர் இலிங்கத்தை வரவழைக்கிறார் என்றால் அவர் சிவபெருமானுடன் நேரடியாக ஃபேக்ஸ் தொடாபு உடையவத் என்று நினைக்கிறார்கள். அது அல்ல விடயம். தீயிலே பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அக்கினிஸ்தம்பம் என்று பெயர். அதற்கு ஒரு மந்த்ரம் உண்டு. நீரிலே நடப்பதற்கு ஜலஸ்தம்பம் என்று பெயர். அதற்கு ஒரு மந்த்ரம் உண்டு. அந்த அக்கினிஸ்தம்ப முறையில் தான் அவர் 3 மணி நேரம் தீயில் இருந்தார். அவர் கற்ற மந்திரம் அவரை 3மணி நேரம் தான் தீயில் பாதிப்பில்லாமல் இருக்க வைத்தது. இப்படிச் சில மணி நேரத்திற்கு பின் அவரவர் சாதனைக்கு ஏற்றபடி ஒரு நிமிடம் கூட தீயில் பாதிப்பில்லாமல் இருக்க வைத்தது. இப்படிச் சில மணி நேரத்திற்குப் பின் அவரவர் சாதனைக்கு ஏற்றபடி ஒரு நிமிடம் கூட தீயில் பாதிப்பில்லாமல் இருக்க முடியாது. இந்த வித்தையால் இறைவனோடு அவர் நெருங்கி விட்டார் என்பதும் கிடையாது. இது ஒன்றினாலே ஒருவர் மகனாகி விடவும் முடியாது.

அவ்வளவு ஏன்? வாரியார் சுவாமிகள் கண்ணமங்கலம் என்ற ஊரில் சிறுவயதில் யோகாசனப் பயிற்சி மூலம் பத்மாசனமிட்டு கிணற்றிலே நீரின் மேலே பலமணி நேரம் இருக்கிறார். இதெல்லாம் ஒரு பயிற்சி தானே ஒழிய இறையருட் பரிபூரண நிலை அல்ல.

ஜலஸ்தம்பம்,அக்கினஸ்தம்பம் ஆகிய இவற்றிற்கென மந்திரங்கள் உண்டு. அவற்றைச் சொல்வதன் மூலம் அவற்றின் பயிற்சி மூலம் எளிமையாகச் செய்யலாம். வாரியார் சுவாமிகள் இரண்டாவது முறை வடநாட்டுப் பயணத்தில் கங்கையில் நீரின் மேல் பத்மாசனமிட்டு பலமணி நேரம் இருந்திருக்கிறார். இடைவிடாத பயிற்சியே இதற்குக் காரணம்.

தினந்தோறும் தண்டால் எடுத்தால் கையில் வலு ஏறுகிறது. இது உடற்பயிற்சி. அது போல் இது மனப்பயிற்சி. பலமுறை உரிய மந்திரத்தைச் சொல்லி பயிற்சி பெறுவார்களேயானால் அக்கினி தாக்காது.

நீரின் மேல் நடக்கலாம். ஸ்தம்பம் என்றால் நிறுத்துதல் என்று பொருள். அக்கினிஸ்தம்பம்,ஜலஸ்தம்பம் ஆகியவற்றிற்கு மந்திரம் உண்டு. ஆனால் மரணஸ்தம்பம் கிடையாது. அதற்கு மந்திரம் இல்லை. அது தெரிந்தால் மரணம் இல்லாமல் பிழைத்து விடலாம்.

வினோத்திற்கு சொல்லிக் கொடுத்தால் (எதிரே வினோத் என்ற சிறுவன் கூட்டத்தில் இருந்தான். அவனைச் சுட்டிச் சொன்னது இது) அவன் அடுத்த தடவை நான் வரும் போது வினோதமாக பலவற்றைச் செய்ய ஆரம்பித்து விடுவான். யார் வேண்டுமானாலும் செய்ய்லாம். இதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொண்டு பேப்பரில் விளம்பரம் செய்கிறான். அதையல்லாம் பெரிதாக நினைப்பது மக்களின் அறியாமை.

மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பாற்றுகிறது. அக்கின என்னைத் தாக்கக் கூடாது என்று மந்திரத்தை உருவேற்றிப் பலமுறை சொல்லிச் சொல்லி வருவதால் மந்திரம் வேலை செய்கிறது. அவன் சொல்லும் மந்திரம் அவேனைக் காப்பாற்றுகிறது இதில் ஒன்றைக் கவனிக்க வேணடும். மந்திரத்தைச் சரியானபடி உச்சதரிதம்ததால் தான் காப்பாற்றும் சரியாக உச்சரிக்காவிட்டால் காப்பாற்றாது.

எனவே மந்த்ரம் இங்கே எஜமான் நிலையில் இருக்கிறது. மந்திரத்தை உச்சரிக்கும் அவன் அடிமையாக இருக்கிறான். இது வடமொழி மந்திரத்தின் தகவு.

தமிழில் வரும் மந்திரம் என்ற சொல் அப்படியல்ல. தொல்காப்பியத்தில்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப

என்று கூறப்படுகிறது. மாந்தர் கூறியது மந்திரம். தமிழில் மந்திரம் என்று கூறவேண்டும். வடமொழியில் கூறுவது போல் மந்த்ரம் அல்ல.

மாந்தர் கூறியது மந்திரம் என்றோம். எந்த மாந்தர்?

மாந்தர் என்றால் மாந்தி நிற்பவர்கள். இறைவனுடைய திருவடியின் பத்தில் மாந்தி நிற்பவர்கள். அவர்களே மாந்தர்கள். அதாவது அருள்நெறியில் திளைத்து நிற்பவர்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றவர்கள் எல்லாம் மாந்தர்கள். ஒரு உபசரிப்பிற்காக ஏற்றுரையாக நம்மை மாந்தர் என்று சொல்கிறாமே தவிர நாமெல்லாம் மாந்தரல்ல மனிதர்கள்.

ஒரு ஆட்டோக்காரன் ரிக்ஷாக்காரனைப் பார்த்து தலைவரே! நகர்ந்து போ என்கிறான். உடனே ரிக்ஷாக்காரன் தன்னைத் தலைவனாக எடுத்துக் கொள்ள முடியுமா? இங்கே ரிக்ஷாக்காரன் தலைவனும் அல்ல ஆட்டோக்காரன் அவனுக்குத் தொண்டனும் இல்லை. அது ஓர் உபசார வார்த்தை அவ்வளவுதான். அதுபோல் நம்மையெல்லாம் மாந்தர் என்று கூறினாலும் நாமெல்லாம் மாந்தர் இல்லை. அருளாளர்களே மாந்தர்கள். நாமெல்லாம் இறைவனுடைய திருவடியின் பத்தில் திளைப்பவர்களா? இல்லையே! அப்படித் திளைக்கும் மாந்தர்கள் கூறினால் அது மந்திரம் அது நடக்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு மாந்தர். அவர் ஆணையிடுகிறார்–முதலையே நீ உண்ட பாலனைக் கொண்டு வந்து போடு–முதலை கொண்டு வந்து போடுகிறது. அது தான் மந்திரம். தமிழ் மறையிலே மந்திரத்தைச் சொல்லும் சுந்தரமூர்த்தி நாயனார் எஜமான் அவரிடம் மந்திரம் வேலையாளாக வேலை செய்கிறது. இங்கே தமிழ் மறையில் சொல்லுகிற சுந்தரமூர்த்தியார் எஜமான் மந்திரம் அடிமை. வட மொழியில் அகனிஸ்தம்பம் மந்த்ரத்திலே மந்த்ரம் எஜமான் மந்திரத்தைச் சொல்லும் இவன் அடிமை.

ஒன்றிற்கொன்று தலை கீழாக இருக்கிறது பாருங்கள்! மந்த்ரம் என்பதும் மந்திரம் என்பதும் ஒரே சொல்போலத் தோற்றம் காட்டுகிறது. ஆனால் இரண்டும் வேறு வேறு எதிரான பொருளை உடையவை என்பது நன்றாகத் தெரிகிறது.

இதுவரை திருமந்திரத்தில் கூறப்பட்ட வேதம்,மந்திரம், இருக்கு என்பவையாவை என்பது பற்றி விளக்கமாகப் பார்த்தோம். இனி ஆகமத்திற்கு வருவோம். மந்திரம் என்ற சொல்லில் கூறியதைப் போல ஆகமம் என்ற சொல்லும் இருமொழியிலும் உண்டு. அதாவது வடமொழியிலும் ஆகமம் என்ற சொல் உண்டு. தமிழிலும் ஆகமம் என்ற சொல் உண்டு. இது தற்சமம். இரண்டிலும் பொருள் ஒன்றல்ல. வடமொழியில் ஆகமம் என்றால் என்ன பொருள் என்று பார்த்தால் வந்தது என்று பொருள். எதிலிருந்து வந்தது? இறைவனுடைய திருவாயிலிருந்து வந்தது. நல்லவேளை! வடமொழியில் இருந்தாலும் ஆகமத்தை ஆரியர்கள் தம்முடையவை என்று ஏற்றுக்கொள்வதில்லை. தமிழ் அந்தணர்களான சிவாச்சாரியார்களே ஆகமத்தை வடமொழியில் எழுதிவைத்துக் கொண்டார்கள். எனவே சுயம்பு என்று கூறி தானே வந்தது என்று பொருள் கூறாமல் தமிழ் மரபுப்படி ஆகமம் என்றால் இறைவனிடமிருந்து வந்தது என்று பொருள் கூறினார்கள்.

ஆகம வரலாறு சிவாகமத்தில் காணப்படுகிறது. அதையொட்டி எழுதப்பெற்ற சிவஞானபாடியத்தில் நமக்குக் கிடைக்கின்ற வரலாறுபடி பார்த்தால் இறைவனுடைய வாயிலிருந்து ஆகமம் மட்டும் வரவில்லை வேதமும் வந்தது என்று சொல்லப்படுகிறது. தமிழ்வேதம் என்று இங்கே கொள்ளாமல் பின் வந்தவர்கள் வடமொழி ஆரிய வேத நான்கையே இங்கே பொருளாக கொண்டார்கள். ஆரியர்கள் அதைஏற்காத போதும் இவ்வாறு ஏன் வலிந்து கூறினார்கள் என்பது இறைவனுக்கே வெளிச்சம்!

இது வலிந்து கூறியது என்பதற்கு இவர்கள் சொற்களே சான்று கூறுகின்றன. இவர்கள் கூறும் வரலாற்றின்படி பார்த்தால் சிவபெருமான் வாயிலிருந்து வந்தது வடமொழி ஆரிய வேதமும் வடமொழியில் காட்டப்படுகிற ஆகமும். ஆகமம் என்றால் வந்தது என்றால் வேதமும் அதே வாயிலிருந்து தானே வந்தது. அப்புறம் ஏன் தனித்தனியாக பேர்? வேதமும் ஆகமம் தானே! இவர்கள் பொருள்படி. அப்படியானால் வேதம் என்றே தனியாகக் குறிப்பிடக் கூடாது. எல்லாம் ஆகமம் தான். 28 ஆகமங்கள் கூறுவதோடு இந்த நான்கும்–வடமொழி ஆரிய வேத நான்கும்–சேர்த்து மொத்தம் முப்பத்திரண்டு ஆகமம் என்று சொல்வது தானே! ஏன் சொல்லவில்லை?

அப்படியானால் யாரோ யாரையோ எந்தக் காரணத்தினாலோ வலிந்து தழுவிக் கொள்கிறார்கள் என்பது தெரிகிறது. தழுவப்படுபவன் உன்னகும் எனக்கும் சம்பந்தமில்லை என்று உதறித் தள்ளுகிறான் இவன் போய் வேண்டுமென்றே வலிந்து தழுவிக் கொள்கிறேன் என்பது தான் வேடிக்கையும் அதன் வழி விபரீதமும் ஆனது.

ஆகமம் என்றால் வந்தது என்று சொன்னோம். அந்த வந்தது என்பதற்கு இறைவன் திருவாயில் இருந்து வந்தது என்பதல்ல பொருள் ன்பது இதனால் புலனாகிறது. வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் இதற்கு விடை கிடைக்கிறது.

வடமொழிக்கு குறிப்பிட்ட காலம் வரை லிபி–எழுத்து வடிவம் கிடையாது. அதனால் தான் வடமொழி வேதத்திற்கு எழுதாக் கிளவி என்று பெயர். இதையொட்டிய சேக்கிழார் சம்பந்தர் வாக்கை எழுதுமறை என ஒத்திட்டுக் காட்டி உயர்வு கூறினார். எனவே அந்த மொழிக்கு எழுத்துவடிவம் இல்லாததால் கிரந்தம் என்ற எழுத்துவடிவ முறையைக் கடன் வாங்கி எழுதினார்கள். கிரந்தலிபியும் தமிழே என்று சில அறிஞர்களும் சிவாச்சாரியார்களும் இப்போது கூறுகிறார்கள். இந்த கிரந்த காலம் ஏறத்தாழ 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக சில அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த கால கட்டத்தில் தான் வடமொழி ஆரிய வேதத்திற்கு எதிராக வடமொழியில் ஆகமம் எழுதி வைக்கப்பட்டது. எனவே ஆகமம் என்ற வடமொழிச் சொல்லிற்குப் புதிய எழுத்துவடிவில் வந்தது என்று பொருள்.

13ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட இந்த ஆகமம் வேறு. இதே ஆகமம் தமிழில் சிவபெருமானால் நீண்ட நெடுங்காலத்திற்கு முன் சொல்லப்பட்டது. இதற்கு மணிவாசர் திருவாசகத்தில் குறிப்பு கொடுக்கிறார்.

மன்னு மாமலை மகேந்திர மதனில்

சொன்ன ஆகமம் தோற்றுவிந் தருளியும்

இந்த மகநேந்திர மலை எங்கே இருந்தது என்றால் மேற்குத் தொடர்சிச மலையினுடைய தொடர்ச்சியில் இப்போதுள்ள நிலப்பகுதிக்கும் தெற்கே நீண்ட தொலைவில் இருந்தது. அதாவது கடல்கோளால் மூழ்கிய குமரிக்கணடத்தில் இருந்தது. குமரிக்கண்டம் குமரி ஆற்றிற்கும் பஃறுளி ஆற்றிற்கும் 700 காவதம் விஸ்தீரணம் இருந்ததாக மேனாட்டு மற்றும் நம்நாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் எடுத்துச் சொல்லி நிறுவியிருக்கிறார்கள். 700 காவதம் என்றால் ஏறத்தாழ ஏழாயிரம் மைல். இந்த மகேந்திர மலை இந்தக் குமரிக்கண்டத்தில் இருந்தது. இந்த மலை உள்பட குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டு சென்று விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது வலிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. காவேரி குடகு மலையிலிருந்தும், பாலாறு நந்தி மலையிலிருந்தும் உற்பத்தி யாகும் அருவிகள். அருவிகள் ஓடி ஆறுகள் ஆயின. அதுபோல் மகேந்திர மலையில் உற்பத்தியாகி வந்தது தான் குமரியாறு. இதைப்பற்றி சங்க நூல்கள் ˙பலவற்றில் கூறப்பட்டுள்ளன.

எனவே கடல் சீற்றத்தினால் அழிந்துபட்டது போக இப்போது எஞ்சியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கடியில் உள்ள சிறு பகுதியே மகேந்திரமலை.

இந்த கடல் சீற்றம் அல்லது கடல் கோள் எ்பபோது நிகழ்ந்தது? ஆராய்சிசயாளர் கருத்துப்படி ஏறத்தாழ கி.மு.6000 அல்லது 7000 ஆண்டுகட்கு முன்னாக நிகழ்ந்தது என்று கண்டறியப்படுகிறது.

நம்மிடையே சில ஆராய்ச்சியாளர்கள் என்ன நினைக்கிறார்கள்? உலகமே கிறிஸ்து பிறந்ததற்குப் பிறகு தான் உண்டானது எனத் தவறாக நினைக்கிறார்கள். இது தான் கொடுமை. கி.மு. என்று பின்னோக்கிச் சென்று பார்க்கப் பயப்படுகிறார்கள். நேற்று கூட நான் திருமூலர் காலம் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது கூறினேன். சில நாட்களுக்கு முன்னால் ஒரு செய்தி படித்தேன். டயனோசூர் என்ற மிருகத்தின் எலும்பை ஓரிடத்தில் தோண்டிக் கண்டுபிடித்ததர்களாம். அந்த எலும்பினுடைய முறைமை, தகைமை, தன்மையை ஆராய்ந்து பார்த்து அது எட்டு கோடி ஆண்டுகட்கு முன்னாள் உள்ள காலத்தைச் சேர்ந்தது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். விஞ்ஞழனுழிதுஃஹழகு இதை உறுதிப்படுத்திருக்கிறார்கள். எனவே உலகம் உருவானது 8 கோடி ஆண்டுகட்கு முன்னால் என்பது நிச்சயமாகிறது. இதன்படி பார்த்தால 8 கோடி ஆண்டுகட்கு முன்னால் இந்த உலகத்தில் உயிர்கள் இருந்திருக்கினறன என்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். அப்படியிருக்க கிறிஸ்து பிறந்த பிறகு தான் சரித்திரம் உண்டடானது என எண்ணிப் பின்னோக்கிப் பார்க்கப் பயப்படுபவர்களை என்ன சொல்ல?

ஆக மகேந்திரமலையில் ஏறத்தாழ கி.மு. 5000 ஆண்டில் சிவபெருமானால் எடுத்துரைக்கப்பட்டது தான் ஆகமம். இது தூய தமிழ்ச் சொல். தூய தமிழ்ச் சொல்லான ஆகமம் என்றால் என்ன?ஆ–உயிர். அதாவது ஆ என்பது ஒரெழுத்தொரு மொழி. பசு என்று பொருள் தந்து உவம ஆகுபெயராக உயிர்களைக் குறிக்கும். கமம் என்பது நிறைவைக் குறிக்கும். நிகண்டு படித்தால் இது புரியும். நிகண்டு என்பது – செய்யுள் வடிவில் வ்நத அகராதி சூடாமணி நிகண்டு, பிங்கலந்தை நிகண்டு என்று தமிழ் நிகண்டுகள் பலவுண்டு.

கமமுறு சிவநெறிக் கேற்றியென் றனையே

காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே

என்று வள்ளலார் பாடுகிறார். அந்த சொல் பயன்படுத்தப்படுகிற இடத்தைக் காட்டினால் தானே புரியும். அதனால் இந்தப் பாட்டை எடுத்துக் கூறினேன். இங்கே கமம் என்பது நிறைவு என்ற பொருளில் வந்து நிறைவினைப் பெற்றுத்தரும் சிவநெறி என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்க. எனவே ஆ+கமம் என்பது உயிர்கள் நிறைவை அடைவதற்கான நெறி என்பது பொருள்.

வடமொழியில் ஆகமம் என்பது நம்மை அடைய வந்தது என்று பொருள். தமிழ்மொழியில் ஆகமம் என்ற சொல் நம்மை நிறைவான சிவநெறியில் அடைவிப்பது என்று பொருள். வந்தவன் போனவன் சொல்லுவதெல்லாம் ஆகமம் ஆகாது. இறைவன் திருவடியை அடைவிப்பது எதுவோ அது தான் ஆகமம். இந்தப் பொருள் தமிழ்ச் சொல்லான ஆகமத்தில் தெளிவாக இருப்பது காண்க.

அடுத்து இந்த ஆகமம் மொத்தம் எத்தனை என்பது கேள்வி. சிவாகம வரலாற்றை எடுத்துப் பார்த்தோமானாலும் சரி, திருமந்திரத்தை எடுத்துப் பார்த்தோமானாலும் சரி ஆகமம் மொத்தம் 28 என்று தெரிகிறது. இதை எல்லோரும் ஒருமித்துச் சொல்கிறார்கள். திருமந்திரத்தில் ஆகமச் சிறப்புப் பகுதியில்,

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்

அஞ்சோ டிருபத்த மூன்றுள ஆகமம்

எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்

அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

அஞ்சோடு இருபத்து மூன்றுள என்றால் அஞ்சையும் இருபத்து மூன்றையும கூட்டிக் கொள்ள வேண்டும். மொத்தம் 28. அதாவது ஆகமம் மொத்தம் 28. அடுத்து அஞ்சா முகத்தில் என்றால் அஞ்சாத முகம் என்று பொருள் பண்ணக் கூடாது. அஞ்சு முகங்கள் கொண்ட சதாசிவ மூர்த்தியாக அருளியது தான் ஆகமம்.

திருமந்திரத்தைப் போல அதிக பாட பேதத்திற்கு உட்பட்டது எதுவுமே இல்லை. ஒரு பாடலில் ஒரு சொல் இருக்கும். அந்த சொல்லுக்குப் பதிலாக தளைகெடாமல் இன்னொரு சொல் போட்டுக் கொள்ளலாம். இப்படி சொல்மாறி வருவதைப் பாடபேதம் என்பார்கள். என்ன கொடுமை என்றால் அவரவர் வசதிக்கேற்ப மாற்றிப் போட்டக் கொள்கிறார்கள். இதனாலர் மூல பாடம் எது என்று கண்டுபிடிப்பதே பெரிய வேலையாகி விடுகிறது. திருமநற்திரம் போலவே கம்பராமாயணம், கந்தபுராணம் போன்றவற்றிலும் இல்லாத பாட பேதமே இல்லை. ஆனால் மிகக்குறைந்த பாடபேதம் உடையது தொல்காப்பியமும் திருக்குறளும் தான். காரணம் தமிழர்கள் அவற்றை புனிதமாகப் போற்றினார்கள். அதில் கைவைக்கப் பயப்பட்டார்கள்.

இந்த பாடபேதங்கள் அதிகமாக உள்ளது திருமந்திரம் என்று சொன்னோம். அதனால் தான் திருமந்திரத்திற்கு ஒரு செம்பதிப்பு செய்ய வேண்டும் என்று நேற்று கூட சொன்னேன். அதை யார் எப்போது செய்வார்களோ, தெய்வசித்தம்! இனி நம் பாடலைப் பார்ப்போம்.

அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்

அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்

அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்

அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்தே.

முதலில் கூறிய இதே பாடலில் 3ஆவத அடி இங்கே மாறி இருக்கிறது.

முதலில் கூறிய பாடலில் சதாசிவத்திடம் 28 பேர் ஆகமத்தைக் கேட்டார்கள் என்று வருகிறது. இங்கே இரண்டாவதாகக் கூறிய பாடலில் சதாசிவத்திடம் 66 பேர் ஆகமத்தைக் கேட்டார்கள் என்று வருகிறது. 28 பேர், 66 பேர் என்று இரண்டு கணக்கு வருகிறததே இதில் எது சரி?

28 பேர் என்பது என்ன கணக்கு என்று கேட்டால் சிவர் பத்துபேர், அநாதிருத்திரர் பதினெட்டு பேர்– மொத்தம் 28 பேர் என்கிறார்கள். ,மு ஒரு கணக்கு. இந்தக் கணக்கைக் கூறுபவர்கள் சிவர்களை பிரணவர் முதலான சிவர்கள் என்று கூறுகிறார்கள். இவர்கள் யார் என்று குறிப்பிடவில்லை இவர்களுக்காகன பட்டியலும் இல்லை. சைவசித்தாந்தம கூறும் 36 தத்துவங்களில் இவர்கள் எந்த தத்துவத்தைச் சேர்ந்தவர்கள்? தெரியவில்லை. அட்டவித்தியேசுவரர்கள் என்று எடுத்துக் கொள்வோமானால் அவர்கள் ஈசுரத்து வத்தைச் சேர்ந்தவாக்ள என்பார்கள். அதாவது அனந்தர்,சூக்குமர்,சிவோத்தமர்,ஏகேந்திரர்,ஏகருத்திரர்,திருமூர்த்தி,சிகஷ்டன்,சிகண்டி என்ற இந்த எட்டு பேரும் அட்ட வித்தியேசுவர்கள். ஈசுவர தத்துவத்தில் வாழ்பவர்கள். அங்கே இறையனுபவத்தில் திளைப்பவர்கள். ஆனால் இந்த சிவர்கள் யார்? ஒரு பதிலும் இல்லை. இவர்கள் எந்த தத்துவத்தில் உள்ளவர்கள்? எந்தப் பதிலும் இல்லை.

அடுத்து 18 ருத்திரர்களை எடுத்துக் கொள்வோம். இவர்களை அனாதிருத்திரர் முதலானோர் என்கின்றனர். இந்த அனாதிருத்திரர்கள் யார்? எந்த நூலிலும் பட்டியலிட்டுக் காட்டப்படவில்லை. ஆனால் இவர்கள் ஈசுவர தத்துவத்தில் வாழ்பவர்கள் என்று ஒரு குறிப்பு கிடைக்கிறது.

ஆனால் ஏற்கனவே ஈசுவர தத்துவத்தில் வாழ்பவர்களாக அட்ட வித்தியேசுவரர்கள் சொல்லப்பட்டனர். அப்படியானால் இந்த பதினெட்டு ருத்திரர்கள் யார்? இதற்கு விடை இல்லை. அதாவது சிவாகமத்தை வடமொழியாளர்கள் தமது வசதிக்கேற்ப எப்படியெல்லாம் திருத்தியும்,மாற்றியும்,புனைந்தும் கூறுகிறார்கள் என்பதைச் சொல்ல வருகிறேன்.

ஆகமத்தின் துணை நூல் ஒன்றுண்டு. அதன் பெயர் இரத்தினத்திரயம். காசுமீரத்தைச் சேர்ந்த சத்யஜோதி சிவாச்சாரியார் இதற்கு உரை எழுதி இருக்கிறார் என்று கூறுவர். கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் எழுதிய இந்த நூலிலும் பத்து சிவர்கள் யார் என்று பட்டியலிடப்படவில்லை பதினெட்டுருத்ரரின் பட்டியலும் இல்லை. பத்து சிவர்கள் ஈசுர தத்துவத்தைச் சேர்ந்தவர்களா என்பதும் எங்குமில்லை. அப்படியானால் 28 ஆகமம் என்ற எண்ணிக்கைக்குச் சரியாக வரவேண்டுமென்று 28 பேர்களை போட்டுக் கொண்டார்களா? தெரியவில்லை.

இதில் ஒரு கேள்வி தொக்கி நிற்கிறது. ஒரே மாதிரி தத்துவத்தில் உள்ளவர்களுக்கு வேறு வேறு விதமாகக் கற்பிக்ககப்படுவது ஏன்?

அட்டவித்யேசுவரர் என்றும், பத்து சிவர் என்றும், பதிஎனட்டு ருத்திரர் என்றும் ஒவ்வொரு வகையினரும் ஒவ்வொரு வகையாகக் கற்பிக்கப்பட்டது ஏன்?

அதாவது பத்து சிவர்களும் பதினெட்டு ருத்திரர்களுக்கும் பிரதி சங்கிதை முறையில் 28 சிவாகமங்களும் போதிக்கப்பட்டன. அதாவது ஒரே பொருளை வேறு வேறு விதமாக விரித்துக் கூறுவது. அட்டவித்யேச்வரரில் முதலானவரான அனந்தருக்கு மகௌக முறையில் 28 ஆகமங்களும் போதிக்கப்பட்டன. அதாவது விரிந்து செல்வதைத் தொகுத்துக் கூறுவது. பிரதி சங்கிதை முறையோ தொக்கி இருப்பதை விரிப்பது.

சிவஞுதன முனிவர் சிவஞான பாடியத்தில் இதை அப்படியே கைக் கொள்கிறார். 28 பேருக்கு ஒரு தரம், அடுத்து அட்ட வித்யேச்வரர்களான அந்த 8 பேருக்கு ஒரு தரம் கற்பிக்கப்படுகிறது. ஒரே தத்துவத்தில் உள்ள இவர்களுக்கு வெவ்வேறு தரம்–வெவ்வேறு பக்கவத்தில் கற்பிக்கப்படுவது ஏன்? எந்த எந்த பக்குவத்தில் இருக்கிறார்களோ அதற்குரிய தத்துவத்தில் அவ்வவர்கள் வாழ்வர் என்பது தான்

சித்தாந்தக் கருத்து. அப்படியானால் வெவ்வேறு பக்குவத்தில் உள்ளவர்கள் ஒரே ஈசுர தத்துவத்தில் எப்படி வர (அ) வாழ முடியும்.

வள்ளலார் சொல்கிறார் அறுபத்து மூன்று நாயன்மார்களும் அறுபத்து மூன்று தத்துவங்கள். அவரவர்க்குரிய பக்குவத்திற்கேற்ப அந்தந்த உரிய தத்துவத்தில் போய் அவர்கள் சேர்கிறார்கள் என்கிறார்.

உதாரணத்திற்கு வாசுதேவனை வணங்குபவர்கள் அந்த பக்குவ முதிர்ச்சியில் 24 தத்துவத்தைத் தாண்டி குண தத்துவத்திலே சென்றடைவார்கள். எந்த தத்துவத்தை அல்லது அதன் அதிபதியை வணங்குகிறானோ அந்த தத்துவத்தில் போய் அவன் சேருவான் என்பது நியதி.

இது அறிவார்ந்த சபை என்பதால் ஒன்றை இங்கே சொல்கிறேன். நெடுங்களம் பதிகத்தில் திருஞானசம்பந்தர் பத்தாவது பாடலில் ஒரு கருத்தைன் கூறுகிறார். அந்தப் பாடல் வரி,

தஞ்சமிலாச் சாக்கியர்கள் தத்துவம் ஒன்றறியார்

என்பது. பௌத்தர்கள் 36 தத்துவங்களையும் சூன்யம் என்று கூறுவர். அவ்வாறு கூறுவமவதால் அவர்கள் எந்த தத்துவத்திலும் அதற்குரிய புவனத்திலும் தங்க இடமில்லாது போகிறார்கள். ஏதாவது ஓரிடம் என்று இருந்தால் தானே அங்கு தங்க முடியும்? எல்லாமே சூன்யம் என்றால்? எங்கு தங்குவது?

பெரியோர்களே! நல்லவர்கள் எந்தச் சமயத்திலும் இருப்பார்கள். கிறித்துவர்களில் நல்லவர்கள் இருப்பார்கள், இசுலாமியர்களில் நல்லவர்கள் இருப்பார்கள் பௌத்தர்களில் நல்லவர்கள் இருப்பார்கள். அந்தந்த நல்லவர்கள் இன்பம் அடைய அல்லது அனுபவிக்க ஓர் இடம் வேண்டுமில்லையா? எல்லாம் சூன்யம் என்றால் அவர்களுக்கே எங்கே இடம்? எனவே தஞ்சமிலாச் சாக்கியர் என்று பாடினார் சம்பந்தர். சாக்கியர்னா பௌத்தர்கள்.

இந்தப் பின்னணியில் பார்த்தால் வெவ்வேறு பக்குவம் உள்ளவர்கள் எப்படி ஒரே தத்துவமான ஈசுர தத்துவத்தில் வந்து சேர்ந்தார்கள்? கற்பிப்பது வெவ்வேறு முறை என்றால் பக்குவம் வெவ்வேறு என்பது தானே பொருள். இங்கே இது இடிக்கிறதே. அப்படியானால் எஞ்சலில் விஞ்ஞகர் இருபத்தெண்மரும் என்று முதலில் கூறிய திருமந்திரப் பாடலில் வந்தது புனைவு என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இனி அடுத்த கணக்கை அதாவது இரண்டாவது கூறிய திருமந்திரப் பாடலில் மூன்றாவது வரியில் வருகிற 66 பேர் என்கிற கணக்கைப் பார்ப்போம். இங்கே முதலில் 28 பேருக்கே சரியான பட்டியல் கிடைக்கவில்லை என்று அலுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அதிசயம் பாருங்கள்! இந்த 66 பேருக்கு ஒரு பட்டியல் கிடைக்கிறது. வேடிக்கை என்னவென்றால் இவர்கள் எந்த தத்துவத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கூறப்படவே இல்லை.

இந்த 66 பேர்களை இரண்டு விதமாகப் பரித்ததார்கள். சிவர்கள் மொத்தம் 30 பேர் ருத்திரர்கள் மொத்தம் 36 பேர் மொத்தம் 66 பேர் என்றார்கள். இங்கே முதலில் கூறப்பட்ட பத்து சிவர்களை விட 20 சிவர்கள் கூடுதலாக உற்பத்தியாகி விட்டார்கள். அதே போல ருத்திரர்கள் 18 என்பது போய் கூடுதலாக பதினெட்டு ருத்திரர்கள் உற்பத்தியாகி விட்டார்கள். சிவர்கள் முப்பது என்றும், ருத்திரர்கள் முப்பத்தாறு என்றும் அவர்கள் கொடுக்கிற பட்டியலைப் பாருங்கள்.

சிவர்கள் (30)

1. பிரணவர்	11) சர்வருத்திரன்	21) ப்ரபஞ்சனர்
2) திரிகலர்	12) பிரஜாபதி	22) காலன்
3) ஹரர்	13) சுசிவன்	23) பீமன்

4) சாதாக்கியர் 14) சிவன் 24) தருமன்

5) பஸ்மர் 15) அச்யுதன் 25) அம்பு

6) விபு 16) ஈசன் 26) உக்கிரர்

7) அதிப்தர் 17) திரிமூர்த்தி 27) ரவி

8) கோபதி 18) உதாசனன் 28) தேஜேசர்

9) அம்பிகா 19) சூக்குமர் 29) விக்னேசர்

10) காரணர் 20) வைச்ரணவர் 30) சசி

இதில் சூக்குமர், குருமூர்த்தி என்பவரெல்லாம் அட்ட வித்யேசுவரர்களில் வருபவர்கள். பீமன்,தருமன் எல்லாம் மகாபாரதத்தில் வருபவர்கள். அங்வித்யேவரரில் வருபவர்கள் இங்கே எங்கு வந்தார்கள் என்று தெரியவில்லை. ஈசுர தத்ததுவத்தில் சாதாக்கியர் என்ற சதாசிவ தத்துவத்தைச் சேர்ந்தவர் எப்படி வந்தார் என்று தெரியவில்லை. நடுவில் அம்பிகா வேறு. சில அரசியல் கட்சிகளின் போலி உறுப்பிபனர் பட்டியல் போல வாசம் வீசுகிறது. இனி ருத்ரர்கள் கதையைப் பார்ப்போம்.

ருத்திரர்கள் (36)

1) அநாதிருத்திரர் 13) பிரமேசர் 25) விந்து

2) பரமேஸ்வரர் 14) நந்திகேசர் 26) கண்டேசர்

3) தசார்ணர் 15) சர்வாத்மா 27) சிவநிஷ்டம்

4) பார்வதி 16) வீரபத்ரர் 28) சுசும்பாதர்

5) நிதனேசர் 17) அனந்தர் 29) சோமதேவர்

6) பத்மபூ 18) பிரகஸ்பதி 30) நிருசிம்மர்

7) வியோமர் 19) பிரசாந்த 31) ஸ்ரீதேவி

8) உதாசனர் 20) ததீசி 32) உசனர்

9) தேசர் 21) சூலி 33) தேவவிபு

10) பிரஜாபதி 22) கவசர் 34) சம்வர்த்தர்

11) சிவர் 23) ஆலையேசர் 35) சிவர்

12) மகாதேவர் 24) லளிதர் 36) மகாகாளர்

இந்தப் பட்டியலே போலிப் பட்டியலாக இருக்கிறது. ருத்ரர் பட்டியலில் சிவர் வருகிறார். அதிலும் இரண்டு முறை வருகிறார். யார் பட்டியலைத் தயார் செய்தது என்று தெரியவில்லை. இந்தப் பட்டியலில் அனந்தர் வருகிறார். இவரே அட்டவித்தியேசுவரர் பட்டியலிலும் வருகிறார். ஒரே குழப்பம். அதே போல் பிரஜாபதி இப்பட்டியிலில் இரண்டு இடத்தில் வரகிறார். பார்வதி,ஸ்ரீதேவி என்பது அம்பிகையினுடைய பெயர்கள். சத்தி தத்துவத்தில் சேர வேண்டியவர்கள். எப்படி ஈசுர தத்துவத்தில் உள்ளவர்கள் என்று கூறப்பட்ட ருத்ரர் பட்டியிலில் கொடுக்கப்பட்டனர்?

இப்படிப் பல இடங்களில் குளறுபடிகள். எனவே 66 பேர்கள் என்று காட்டிய பட்டியலும் சரி அல்ல 28 பேர் என்று கூறியதும் சரியல்ல. எதையும் காரண காரியத்தோடு பொருந்துமாறு பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இனி,28 பேர் என்ற கணக்கை ஒப்புக் கொள்ளலாமா என்றால் அது 28 ஆகமத்தின் எண்ணிக்கைச் சரிவர அமைத்துக் கொண்ட கற்பிதம் என்று முன்னர் பார்த்த காரணங்களால் தள்ளி விடலாம். அடுத்து 66 பேர் என்ற கண்ககை ஒப்புக் கொள்ளலாமா என்றால் இந்தக் கணக்கை ஒப்பக் கொண்டாலும் அதற்காக காட்டப்படுகிற பட்டியலை ஒப்பக் கொள்ள முடியாது.

இதற்கு என்னதான் தீர்வு என்றால் திருமூலர் 66 அடியார்களை—பெயர் தெரியாத சிவனடியார்களைச் சொன்னார் என்றால் பிரச்சினை முடிந்து விடுகிறது. அவர்களைச் சிவர் என்றும் ருத்திரர் என்றும் பிரிக்கும் போது தான் பிரச்சினையே எழுகிறது. எனவே பெயர் தெரியாத 66 சிவனடியார்களுக்கு சிவபெருமான் 28 ஆகமத்தைச் சொன்னார் அஞ்சலி கூப்பி அந்த அறுபத்ததாறு பேரும் அஞ்சாமுகத்தில் அரும்பொருளாகிய ஆகமம் கேட்டனர் என்று பொருள் கொள்வதே அறிவுக்கும் பொருந்துவது பாடலுக்கும் பொருந்துவது.

அப்பாடா! ஒரு வழியாக சிக்கல் தீர்ந்ததா என்றால் அதுவும்இல்லை. சிவபெருமான் கூறியது ஆகமங்கள் மொத்தம் 28 தானா? இல்லை என்கிறார் திருமூலர். திருமூலர் சொன்னால் நாம் மறுக்க முடியுமா? மொத்த ஆகமங்கள் ஒன்பது தான் என்கிறார். பாடல் வருமாறு

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்

உவமா மகேசர் உருத்திர தேவர்

ாவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற

நவ ஆகமம் எங்கள நந்திபெற் றானே!

சிவபெருமான் கொடுத்த ஆகமமே மொத்தம் ஒன்பது என்றால் 28 ஆகமம் என்றது எப்படி வந்தது? தற்காலத்தில் 28 ஆகமங்கள் கிடைக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. அவ்வாறு கிடைத்தாலாவது அதை ஆதாரமாக் கொண்டு ஆகமம் மொத்தம் 28 என்பதை ஏற்கலாம். ஆனால் பல ஆகமங்கள் பெயரளவில் தான் சொல்லப்படுகினறனவே ஓழிய மூல ஆகமங்களே எங்கும் இல்லை.

இந்த நிலையில் நமக்குத் திருமூலர் வாக்குதானே பெரிது. 9 ஆகமங்களை தான் தமது இடப்பாகம் பெற்ற சத்திக்கே சொன்னார் என்று திருமூலர் சொல்கிறாாட. சத்தி சதாசிவத்ததிற்குச் சொல்ல சதாசிவம் மகேசனுக்குச் சொல்ல மகேசன் உருத்திரனுக்குச் சொல்ல உருத்திரன் திருமாலுக்குச் சொல்ல திருமால் பிரமனுக்குச் சொல்ல இங்ஙனம் வழி வழியாக வந்த ஒன்பது ஆகமங்களை ஒருவருக்கொருவர் தம்மில் தாம் பெற்று அவற்றை நந்தி பெற்றார் என்று திருமூலர் மேலே சொன்ன பாடலில் கூறுகிறார்.

எனவே அடிப்படையாக பார்த்தால் ஆகமங்கள் மொத்தம் ஒன்பது தான் என்பது தெளிவாகிறது. இந்த ஒன்பது ஆகமங்களும் கூட இப்பொழுது இருக்கிறதா என்றால் இல்லை. இரண்டு ஆகமம் தான் வெகுவாக புழக்கத்தில் உள்ளன. அவை 1) காமிகாகமம் 2) காரணாகமம். இதில் காரணமாகத்தின் பதிப்பே முழுமையாகக் கிடைப்பதில்லை. பெரும்பாலான ஆகமங்களின் ஞானபாதமே கிடைக்கவில்லை. நான் தேடித் தேடிச் சென்று ஆகமத்தைப் படித்துப் பார்த்து விட்டேன். எங்கும் மேற்கூறிய இரண்டைத் தவிர—அவையும் கிரியா பாதந்தான்— இவற்றைத் தவிர வேறு எதுவும் கிடைக்க வில்லை. இது பற்றி மறைந்த அறிஞர் அமரர் மு. அருணாசலம் எழுதியிருப்பதைப் படிக்கிறேன் கேளுங்கள்.

எல்லா ஆகமங்களும் இன்று கிடைக்கவில்லை. ஆகமங்களை அச்சிட்டவர் மூவர். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் சிலவற்றைக் கிரந்தலிபியில் அச்சிட்டார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார் சிலவற்றை நாகரலிபியிலும் சிலவற்றைக் கிரந்தலிபியிலும் அச்சிட்டனர். இந்த நூற்றாண்டின் பின்பகுதியில் புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு தேசத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சிக் கழகத்தார் மூன்று ஆகமங்களைச் சேகரித்துள்ளார். இன்னும் ஐந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பௌஷ்காரம் மட்டும் சிதம்பரம் அம்பலவாண நாவலரால் 1925ல் அச்சிடப்பட்டது.

இதுவே நிலைமையை தெளிவுபடுத்த போதுமான சான்று. இன்று அச்சில் உள்ள ஆகமங்கள் ஆறு அல்லது ஏழு தான். ஆனால் 28 ஆகமம் இருக்கிறது என்றால் அவை எங்கே? அதற்கும் ஒரு பொய்ப்பட்டியல் தயார் செய்திருக்கிறார்கள். சிவபெருமான் சொன்னது ஒன்பது தான். கும்பகோணத்தைச் சேர்ந்த சில வடமொழி வல்லுநர்கள் புனைந்தோ இருபத்தெட்டு. 28 ஆகமம் பெயர் பட்டியலில் ஒன்று வாதுள ஆகமம் சென்னையைச் சேர்ந்த ஒருவர் கிடைத்த இந்நூலை ஆராய்ந்து அறிந்து டாக்டர் பட்டமே பெற்றுவிட்டார். அந்த நண்பர் அதை ஆராய்ந்து டாக்டர் பட்டம் வாங்கிய பிறகு சொல்கிறார்–இல்லை, இதை யாரோ ஒரு கும்பகோணத்தார் புனைந்து எழுதி இருக்கிறார்–எப்படி இருக்கிறது? எனவே இவை கணக்கிற்காகப் புனையப்பட்டது.

இது அவர்களது வாடிக்கை. தமிழில் நான்மறை என்று வழக்கில் இருந்த காரணத்தால் தமது வடமொழி வேதத்தையும் மூன்றிலிருந்து நான்காக்கிக் கொண்டார்கள் அதர்வண வேதம் ரிக் வேதத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு நான்காவதாக செய்யப்பட்டது என்பதை அவர்கள் கூறுகிற வரலாறே சான்று பகர்கிறது. வேதம் த்ரயே என்பது வடமொழி நிகண்டு கூறுவது. எனவே மூன்றாயிருந்தது நான்கானதற்க நல்ல சான்றுகள் கிடைக்கின்றன.

ஆனால் தமிழர் நான்மறையோ நச்சினார்க்கினியர் தெளிவாக்கியது போல தொல்காப்பியர் காலத்திலேயே நான்காயிருந்தது. சடமொழி நான்மறை புதிது தமிழ் நான்மறை மிகப்பழையது. எனவே தான் மணிவாசகர் மிக அழகாக பண்டாய நான்மறை என்று ஒரு பதிகமே பாடினார். இந்த நான்மறை பண்டாய நான்மறை மட்டுமல்ல. நமக்கு ஆய நான்மறை என்றுடங சொல்லலாம். நம்முடைய சொத்து இதுவே.

நான்மறைகள் என்று எப்படி பின்வந்தவர்ங்களால் வடமொழியிலவ் புனையப்பட்டதோ அது போல வடமொழியில் கிடைக்கும் ஆகமம் 6 தான் 28 என்பது புனைவு.

அப்படியானால் அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன், அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம் என்று திருமூலரே ஒரு பாடலில் சொல்லி இன்னொரு பாடலில் கிடைத்ததே மொத்தம் 9 ஆகமம் தான் என்ற பொருள்பட நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே என்று பாடியிருப்பது ஒன்றிற்கொன்று இடிக்கிறதே. இது ஒரு நல்ல கேள்வி. இதற்கான விடையைத் திருமூலரே தருகிறார். பாடல் வருமாறு

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு

மோமில் நாலேழு முப்பேத முற்றுடன்

வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்(று)

ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே.

அதாவது ஆகமே ஒன்பது தான் அதிலொன்றும் சந்தேகமே இல்லை என்று தெளிவுபடுத்தி ஆகமம் ஒன்பான் என்று பாடி உறுதி செய்தார். அப்புறம் 28 என்று எப்படி வந்தது? இந்த ஒன்பது ஆகமங்களே ஒவ்வொன்றும் மும்மூன்றாக வேறுபட்டு 27 ஆயிற்று. அதோடு வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மை ஒன்று அதாவது 27 விதமாக பிரதிசங்கிதையாக விரிந்ததை மககௌ முறையால் தொகுத்த இதுவே முடிந்த முடிவு என்று சித்தர்நதமெய்ம்மையாகக் கொடுத்தது ஒன்று. அதை முன் சொன்ன இருபத்தெழுடன் கூட்ட மொத்தம் 28. எனவே ஆகமம் ஒன்பான் அதிவான நாலேழு என்றார். நாலேழு இருபத்தெட்டு. ஆகமம் 28 ஆக விரிந்ததன் வரலாறு இது தான் என்று திருமூலர் மிகத்தெளிவாக உரைத்திருக்கிறார்.

இங்கே முப்பதம் என்றால் அதாவது மூவேறு வகை என்றால் என்ன என்று பார்க்க வேண்டும். அவை 1) கிரியைப் பகுதி 2) வழிபாட்டு முறை என்னும் உபாசனா பகுதி 3) ஞான பாதம். இப்படி சிவபெருமான் சொன்ன 9 அடிப்படை ஆகமங்களையும் மும்மூன்றாக விரித்தோதினார்கள்.

இவற்றில் ஒவ்வொன்றிலும் ஞானபேதமேம முக்கியமானது. ஏனைய ஞானபாதத்திற்குச் சாதனம் ஞான பாதத்திற்கு அடிப்டையை அமைத்துக் கொடுப்பவை.

ஞதன பாதத்திலும் 9 வகையான ஞானபாதம் இருப்பது பொருத்தமில்லை. அடிப்படைக் கிரியைகள் அவரவர் பக்குவத்திற்கேற்ப வேறாக இருக்கலாம். ஆனால் அவற்றால் கிடைக்கும் அறிவுண்மை ஒன்றாகத் தானே இருக்க வேண்டும். எனவே சித்தாந்த மெய்ம்மை யொன்று என்று ஆக்கப்பட்டது.

நம்முடைய சிவஞான பாடியத்தில் கூட சர்வஞானோத்தரம் என்று ஓர் ஆகமம் பேசப்படுகிறது. ஆனால் இது 28 ஆகமங்கள் என்ற வடமொழி ஆகமப் பட்டியலில் கிடையாது. சிவஞான முனிவர் இநத் ஆகமத்தில் உள்ளதையே தீர்வாகக் கடைப்பிடிக்க வேண்டுமெ என்கிறார். பிற ஆகமங்களில் கூறப்பட்டவற்றை இநத் சர்வ ஞானோத்தர ஆகமத்தில் உரசிப் பார்த்து உண்மை இதுவென தேறச் சொல்லி இருக்கிறார். அதற்குக் காரணமாக அவர் கூறுவது என்ன என்றால் இந்த ஆகமம் கணபதி, கந்தன் முதலானவர்க்கு சிவபெருமானால் கூறப்பட்டது என்கிறார். அப்படியானால் வடமொழி ஆகமப் பட்டியலில் இதையும் சேர்த்தொமானால் ஆகமம் மொத்தம 29 ஆகிவிடுகிறது.

தேவிகாலோத்தரம் என்ற ஓர் ஆகமம் உண்டு. இது சத்திக்கு சிவபெருமான் கூறியது என்கிறார்கள். ஆனால் வடமொழி ஆகமிகள் இதனை உப ஆகமம் என்று சொல்கின்றனர். இந்த உபஆகமங்கள் மொத்தம் 108 என்கிறார்கள். ஆரிய அந்தணர்கள் உபநிடதத்தை மொத்தம் 108 என்று கூறுவதற்கொப்ப சிவாச்சாரியர்கள் உபஆகமம் மொத்தம் 208 என்று கற்பித்திருக்கின்றனர் எனச் சொல்லலாம். காரணம், முதன்மை ஆகமங்கே பல கிடைக்காத நிலையில் உப ஆகமங்கள் என்று வெறும் பெயர்ப்பட்டியல் மட்டும் கொடுப்பதில் என்ன பயன்? அவற்றில் பெரும்பாலான வழக்கிலேயே இல்லை. உபஆகமத்தில் வைத்துப் பேசப்படும் ஆகமங்களில் தேவிகா லோத்தரம் ஒன்றே புகழ்பெற்றது இது தமிழில் இராமண மகிரிஷியால் 100 பாட்டுக்களாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. வேறும் ஒரு சைவசித்தாந்தப் புலவர் 100 பாட்டக்களாக இதை மொழி பெயர்த்திருக்கிறார். அது தேவகோட்டை சித்தாந்த பரிபாலான சபையாரால் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

இங்கே ஒன்றைக் கவனியுங்கள். நந்தி பெற்ற ஆகமங்கள் மொத்தம் ஒனஙபது தான் என்பதையும், அவைதான் அடிப்படை என்பதையும் ,அவற்றிலிருந்து பிரித்தே 28 ஆகமங்கள் ஆயின என்பதையும் சொன்ன திருமூலர் நந்தி பெற்ற ஆகமங்கள் இன்னின்ன என்று எடுத்துக் கூறியுள்ளார். பாடல் வருமாறு

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்

உற்றநல்வீரம் உயர்சிந்தம் வாதுளம்

மற்றவ் வியாமளம் ஆகுங்கா லோத்திரம்

துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே

அதாவது காரணாகமம், காமிகாகமம், வீராகமம், சிந்தியாகமம், வாதுளாகமம், வியாமளகமம், தேவிகாலோத்திர ஆகமம், சுப்பிரபோதகமம், மகுடாகமம் என்பன.

திருமூலர் வடமொழியாளர் உபஆகமம் என்று கூறுகின்ற தேவிகாலோத்தரத்தை முதன்மையாகங்கள் ஒன்பதில் ஒன்றாகக் கூறுகிறார். வியாமள ஆகமம் என்று திருமூலர் கூறுவது வடமொழி ஆகமிகள் கூறுகின்றன 28 ஆகமப் பட்டியலிலேயே இல்லை. இப்படி பலவேறுபாடுகள் இருக்கின்றன. எனவே சிவாகமங்கள் என்று வடமொழியில் கிடைப்பனவும், கூறப்படுவனவும் நம்பகத்தன்மை இழந்து நிற்கின்றன. பலவாறு இவை புனைந்து எழுதப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றன.

எனவே ஆகமங்கள் மொத்தம் ஒன்பதே. அந்த ஒன்பதும் ஒன்பது தந்திரங்களாக திருமந்திரத்தில உள்ளன பாடல்கள் மொத்தம் மூவாயிரம். காமிகாமத்தைப் பிழிந்து ஒரு தந்திரம், காரணா கமத்தைப் பிழிந்து ஒரு தந்திரம், வீராகமத்தைப் பிழிந்து ஒரு தந்திரம் இப்படி ஒன்பது ஆகமங்களும் திருமந்திரமாகத் தமிழிலே உள்ளன. தில்லையில் மட்டும் பின்பற்றக் கூடிய ஓர் ஆகமம்–மகுடாகமம் . இந்த மகுடாகமத்தின் பிழிவே திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரம்.

எனவே சிவபெருமானிடமிருந்து பெற்ற ஒன்பது (ஒரிஜினல்) மூல ஆகமங்களும் தமிழில் இருக்கிறது திருமந்திரமாக நமக்குத் திருமூலர் கூறியுள்ளார். எனவே இது தான் தமிழாகமம். ஆனால் ஆகமங்கள் எல்லாம் வடமொழியில் தான் இருக்கின்றன என்கிறோமே? எவ்வளவு பெரிய தவறு? ஆகமம் என்றால் நாம் ஏன் வடமொழி ஆகமங்களைக கொள்ள வேண்டும்? அதற்காக ஏன் அலைய வேண்டும்? திருமந்திரமாகிய வெண்ணெய் இருக்க சிவாகமமாகிய நெய்க்கு ஏன் வடமொழி புத்தகங்களைத் தேடி எய்த்துத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்?

இந்தத் தமிழாகமமான திருமந்திரம் எதையும் பார்த்துக் காப்பி அடித்ததல்ல மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதல்ல. இறைவன் திருமூலர்க்கு உரை உயர்விற்கு அப்பால் மோன நிலையில், மொழி கடந்த நிலையில் உணர்த்தியதை நல்ல தமிழில் படைத்ததே திருமந்திரம். இதைத் தான்

அந்தி மதிபுனை அரனடி நாடொறும்

சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே

என்று பாடி இது தன் சொந்தத் தயரிப்பு என்றும் எந்த வடமொழி நூலையும் காப்பியடித்து அல்ல என்றும் உறுதிப்படுத்தினர். அது மட்டுமல்ல அரனடி நாடொறும் சிந்தை செய்து இவ்வாறறு தமிழில் ஆகமத்தை முதன்முறையாக முதனூலாகக கொடுத்தது இறைவனுடைய சித்தம் என்றும் பாடினார்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாக தமிழ்செய்யு மாறே

இந்த வரிகளைச் சொல்லாதவர்கள் இல்லை. ஆனால் பலர் இதனனைத் தவறாகவே பொருள் பண்ணினார்கள். தமிழ்செய்யுமாறே என்றால் வடமொழியில் இருந்ததைத் தமிழ் செய்யுமாறே என்று

வடமொழி வாலறிஞர்கள் பொருள் கூறினார்கள். தமிழறிஞர்களில் பலரும் எசகு பிசகாக ஆராயமல் இதை ஏற்றுக் கொண்டது நமது துரதிரஷ்டம்.

அதன் உண்மைப் பொருள் என்ன? மோன நிலையில்–மொழி கடந்த நிலையில் உணர்த்தபட்டதை தமிழ் செய்யுமாறே என்னை நன்றாக இறைவன் படைத்தான் என்பது தான் உண்மைப் பொருள். இது எதனால் பெறப்படுகிறது அல்லது உறுதி ஆகிறது? அவர் ஆகமத்தை தாமே சிந்தை செய்து கூறினேன் என்று முன்கூறிய பாடலில் கூறிஈரப்பதே இதற்கு வலுவான சான்று. பாடல் வருமாறு.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு

புந்தியின் உள்ளே புகழ்பெய்து போற்றிசெய்து

அந்தி மதிபுனை அரனடி நாடொறும்

சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றறேனே

இந்தப் பாடலில் ஒரு மிகப்பெரிய அருள் நிகழ்ச்சி உண்மையை வைக்கிறார். ஆகமத்தை நானாகச் சொல்லவில்லை. யாரோ சொன்னதைக் காப்பி அடித்தும் கூறவில்லை. நந்தி இணையடி நான் தலைமேற் கொண்டேன் ஆகமம் என் வாயில் வந்தது என்கிறார்.

அதாவது நந்தியாகிய குருவினது இணையடிகளைத் தலைமேல் கொண்டு சிந்தை செய்தேன் அதன் வழியில் புத்திதத்துவத்தின் உள்ளே திருவடிகளைப் புகச் செய்தேன். அங்கே வைத்து அவரைப் போற்றி செய்தேன். அநத்க குருவடியின் துணை அந்தி மதிபுதனை அரனடியில் கொண்டு விட்டது. இப்படி தினந்தோறும் செய்த தீவிர தர சிந்தையால் ஆகமத்தை நான் செப்பலுற்றேன் செப்பினேன் என்று கூறவில்லை. செப்பபல் உற்றாராம். அதாவது இறைவனாக ஆகமத்தை நல்ல தமிழில் அவர் வாய் வழி வழியச் செய்தாராம். அதாவது அந்தச் செயல் அனிச்சையாக நடந்தது என்றார்.

பெரியோர்களே! இது ஓர் அருள் அனுபவநிலை, கண்ணுடைய வள்ளலார் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒழிவில் ஒடுக்கம் என்ற நூலை எழுதினார் அற்புதமான நூல். அதில் கிரியை கழற்றி, யோகக் கழற்றி என எல்லாவற்றையும் கழற்றவிட்டு ஞானபாதத்தை மட்டுமே வலியுறுத்தி பேசுகிறார், மிக உயர்ந்த நூல். இன்று கண்ணுடைய வள்ளலார் பெயரை உலகம் மறந்து விட்டது. ரஜினிகாந்த் என்றால் எல்லோருக்கும் தெரிகிறது. என்ன செய்ய! காலம் செய்த கோலம்!

இந்த நூலை இராமலிங்கசுவாமிகள் தன்னுடைய சொந்த பொறுப்பில் பதிப்தித்தார். அதாவது கண்ணுடைய வள்ளலார் நூலைக் கண்ணுற்ற வள்ளலார் பதிப்பித்தார். வள்ளலார் கையில் காசு ஏது? நித திரட்டி ஒழிவிலொடுக்கம் நூலைப் பதிப்பித்ததார். வள்ளலார் சென்னையில் 35 ஆண்டுகள் இருந்தவர். தினந்தோறும் 3 முறை திருவொற்றியூர் எழுத்தறியும் பெருமானைத் தரிசிப்பது வழக்கம். ஒரு நாள் நெல்லிக்ககாய் பண்டாரத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார். அங்கே திண்ணையில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவர் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார். வள்ளலார் என்ன புத்தகம்? என்று கேட்கிறார். அதற்கு அவர், நீங்கள் பதிப்பித்த ஒழிவில் ஒடுக்கம் புத்தகம் தான் என்கிறார். வள்ளலார் அதை வாங்கிக் கொண்டார். அவருக்கு சந்தேகம் வருகிறது. நாம் படித்தது உண்மையிலேயே அந்தப் புத்தகம் தானா? இல்லை, அதற்குள் வேறு ஏதாவது வார இதழை வைத்து மேலே பெருமைக்காக ஏதாவது ஒரு புத்தகம் வைத்திருக்கிறோமா என்று வள்ளலார் சந்தேகிக்கிறாரே என் நினைக்கிறார். இந்தாங்க என்று அவர் புத்தகத்தை நீட்டினார். வள்ளலார் அவரிடம் உள்ளே சென்று தீப்பெட்டியும் மண்ணெண்ணையும் கொண்டு வரச்சொன்னார். கொண்டு வந்ததும் வள்ளலார் அந்த ஒழிவில் ஒடுக்கம் புத்தகத்தைக் கொளுத்தி விடுகிறார். ஐயா! சாமி! என்ன காரியம் செய்தீர்கள்? அவர் பதைக்கிறார்.

பிற்காலத்தில் இராமாயணம், பெரியபுராணம் போன்ற நூல்களை எல்லாம் எரிக்க ஒரு தனி கூட்டமே வருமே! நீங்கள் முன்னாடியே இப்படி ஆரம்பிச்சு வைக்கிறீங்களே! ஞாயமா? இப்படி கேட்க நினைக்கிறார் கேட்கலை. வள்ளலாரிடம் அவ்வளவு பயபக்தி!

அப்போது வள்ளலார் சொன்னாராம் புத்தகத்தைக் கொளுத்தியதற்காக கவலைப்படாதே. இதைப் படிக்கும் பக்குவம் இன்னும் உனக்கு உண்டாகலை. இப்போதுள்ள பக்குவத்தில் நீ இதைப் படித்தாயானால் நீ நாத்திகனாகி விடுவாய்.

அப்படியானால் அந்த நூலைப் படிக்கணும்னா அதற்கே ஒரு பக்குவம் தேவைப்படுகிறது. அவ்வளவு உயர்ந்த நூல்.

இந்த நூலுக்கு வள்ளலார் தாமே உரை எழுத வேண்டும் என்று நினைக்கிறார். அதற்கு முன்னாலேயே திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அதற்கு உரை எழுதி இருக்கிறார் அதைப் பார்க்கிறார். இதைவிட நாம் நன்றாக எழுத முடியாது என்று அந்த உரையை அப்படியே பதிப்பித்து விடுகிறார். வள்ளலாரால் மதிக்கப்பட்டவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்.

இப்படி தமிழிலக்கியத்தில் பல நூல்கள் உண்டு. நன்னூலுக்கு நெல்லை சங்கர நமச்சிவாயர் உரை எழுதுகிறார். அந்த உரையைப் பார்த்த சிவஞான முனிவர் அதையே கொண்டு அந்த உரையோடு ஆங்காங்கே தம் குறிப்புரையையும் வேண்டுகின்ற இடத்தில் கொடுத்து நன்னூல் விருத்தியுரை ஆக்கினார். அந்த உரையைப் பதிப்பித்தவர்கள் நெல்லை சங்கர நமச்சிவாயர் உரை எழுதி சிவஞான முனிவரால் பார்வை செய்து திருத்தப்பட்டது என்று குறிப்புடன் அதைப் பதிப்பித்திருப்பதை இன்றும் பார்க்கலாம்.

அதுபோல ஒழிவிலொடுக்கம் உரையில் வள்ளலார் தாம் எதையாவது சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் எல்லாமே மிக அழகாக தெளிவாக இருந்ததால் தாம் தனியே உரை எழுதும் எண்ணத்தை கைவிட்டு விடுகிறார். ஆனால் அவ்வுரையின் சிறப்புப் பரியரத்திற்கு சிதம்பர சுவாமிகளால் உரை செய்யப்படாமல் விடுபட்டுப் போய் விட்டது. அந்த வெண்பா வருமாறு

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்

வள்ளல் தாடலைமேல் வைத்துரைத்தான்–உள்ளத்து)

அழிவில்அடுக் குந்தேனை அன்பரெலாம் உண்ண

ஒழிவில் ஒடுக்கநூல் ஓர்ந்து

சிதம்பர சுவாமிகளால் உரை செய்யப்படாத இந்த சிறப்புப்பாயிர வெண்பாவிற்கு வள்ளலார் 17 பக்கம் உரை எழுதுகிறார். இந்த 17 பக்க உரை இருக்கிறதே அது ஈடுஇணை இல்லாதது. 17 ஆயிரம் நூல் படித்து ஞானம் பெற்றவர்களால் தான் அந்த 17 பக்க உரையை எழுத முடியும்.

இந்த உரையைப் படித்தால் நமக்கு ஓர் உண்மை விளங்கும். கண்ணுடைய வள்ளலார் ஒழிவில் ஒடுக்க நூலை எப்படிப் பாடியருளினாராம்? அவருக்குக் குரு ஞானசம்பந்தர். அந்த ஞானசம்பந்தரின் திருவடிகளை தலைமேல் கொண்டாராம். அந்த அருள் அனுபவத்தை ஒரு கிரிக்கெட் ஆட்ட நேரடி வர்ணனை போல அப்படியே வாய்வழி வழிந்தது தான் ஒழிவிலொடுக்க நூலாம். வள்ளல் தாள் தலைமேல் வைத்துரைத்தது தான் அந்த நூல். இங்கே வள்ளல் – ஞானசம்பந்தர். தலைமேல் ஞானசம்பந்தர் திருவடி இருக்கப் பெற்ற அனுபவம் மொழி வழிந்து வருகிறது.

கண்ணுடைய வள்ளலார் தலைமேல் ஞானசம்பந்தர் திருவடி வைக்க ஒழிவில் ஒடுக்க நூல் வந்தது போல திருமூலர் தலைமேல் நந்தி இணையடி வைகக அது அரனடியாகி அதையே சிந்தை செய்ய வாய்வழி வழிந்தது தான் திருமந்திரம் என்னும் தமிழாகமம்.

எனவே பெரியோர்களே! ஆகமம் என்பது தமிழில் தான் தோன்றியது. அது தான் திருமந்திரம். வடமொழியிலும் ஆகமம் உண்டு. அது தமிழில் உள்ள திருமந்திரமான சதாசிவ ஆகமத்தை மொழி பெயர்த்து வைத்துக் கொண்டது. மொழிபெயர்ப்பாளர்கள் திருமூலர் பாடல்களைச் சரிவர புரிந்து கொள்ளாமல் அங்கங்கே தத்தமக்குத் தோன்றியவாறு பாடல்வரிகளைச் சேர்த்தும், மாற்றியும் அதில் கூறப்படும் எண்ணிக்கைகு ஏற்ப புதிது புதிதாக புனைந்து 28 ஆகமம் என்று புனைவு செய்தனர் என்றும், மொத்த அடிப்படை ஆகமம் ஒனபதே என்றும், ஆகமம் என்பது மகசேந்திர மலையில் சிவபெரமான் முதலில் சொன்னது என்று மணிவாசகர் கூறுகின்றார் என்றும், அது ஏறத்தாழ கி.மு. 5000 ஆண்டாக இருக்கலாம் என்றும், ஆகமம் என்ற தமிழ்ச் சொல்லிற்கு உயிர்களின் நிறைவைக் குறிப்பது என்றும், இதனை மோன மொழியிலிருந்து தமிழ் மொழியில் முதலில் வழங்கியவர் திருமூலர் என்றும் அவர் வாய்வழி வழிந்ததே திருமந்திரம் என்றும், திருமந்திரமே தமிழாகமம் என்றும் இதுவரை சான்றுகளுடன் நிறுவியுள்ளோம். திருமந்திரம்–தமிழாகமம் என்பது தானே தலைப்பபு! அதனை விரிவுபட ஆராய்ந்து தேற்றம் செய்துள்ளோம்.

திருமந்திரத்தில் கூறப்படும் வேதச் சிறப்பு தமிழ் வேதச் சிறப்பு என்பதையும், சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்ற திருமூலர் வாக்கு இதற்கு சான்று பகர்கிறது என்றும், இந்த வேதம் என்பது ஆகமம் என்பதோடு ஒட்டியொட்டியே கூறப்படுவதால் அது எது என்பதையும் நம்முடைய–அதாவது தமிழர்களுடைய வேதம் எது என்பதையும் உடனாகச் சிந்தித்தோம்.

ஆக திருமந்திரத்தில் கூறப்பட்ட வேதமும், ஆகமும் எவை என்பதை நிர்ணயித்தோம். வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே என்று திரும்நதிரத்திலேயே கூறியுள்ளது போல் தமிழாகமமாகிய இந்த திருமந்திரத்தை ஓதியே வீடு பெறலாம். நாம் வேண்டுவது என்ன? வீடு போய்ச் சேர வேண்டும். வீடு சேர்ப்பது தான் இந்த நூல் என்று சொல்லி நேரம் ஆவதால் இனியும் நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்து அவரவர் வீடு சேர ஏதுவாக உரையை நிறைவு செய்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

(கூட்டத்திலிருந்து ஒருவர் அப்படியானால் வேதாகமம் என்று கூறுவதில் வருகிற வேதம் வடமொழி வேதம் இல்லை என்று கொள்ள வேண்டும். அப்படித்தானே என்று உறுதி செய்து கொள்ள கேட்கிறார். பதில் ஆமாம்! ஆகமம் சிவபெருமானை ஏற்றிப் போற்றுவது. வடமொழி வேதம் சிவபெருமானைத் திட்டுவது, ஒன்றிற்கொன்று நேர்மாறானது. எனவே இந்த வேதத்தைச் சேர்த்து வேதாகமம் என்று சொல்வது சூடான ஐஸ்க்ரீம் என்பது போல ஆகும். அப்படி சூடா ஐஸ்க்ரீமை எங்காவது பார்த்தா வடமொழி வேதத்தை இணைத்து வேதாகமம் என்று சொல்லுங்கள். அன்பர்கள் சிரிக்கிறார்கள்.)

ஒம் சிவம் ஒம்.

உ

முருகா

திருமந்திரம் – கிரியைகள்

மூன்றாம் நாள் சொற்பொழிவு

(03–09–1999)

பெரியோர்களே! எல்லாம் வல்ல வள்ளி மணவாளனது வற்றாத கருணை நலத்தாலே இந்த அற்புதமான திருமந்திர சிந்தனைகள் என்று சொல்லப்படுகின்ற எழில் ஞான வேள்வியில் இன்றைய தினம் மூன்றாவது நாள். இன்று நாம் திருமந்திரத்தில் கிரியைகள் என்பதைப் பார்க்க இருக்கிறோம்.

முதல் நாள் திருமந்திரத்தில் ஒரு தோற்றுவாய் செய்து கொண்டோம். மறுநாள் திருமந்திரமே தமிழாகமம்–அதுவே ஆகமங்களின் மூலம் என்பதை உறுதிப்படுத்தினோம். ஆகமம் என்றால் அதில் கிரியைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும். அந்த கிரியை முறைதான் இன்று நாம் பார்க்க இருக்கிறோம்.

ஒன்றின் ஒன்று தொடர்ச்சியாக வருவது இருக்கிறதே இதைத்தான் இயைபு என்று சொல்வர். சிவஞான பாடியத்தைப் படித்த பெரியவர்களுக்கு தெரியும் இயைபு, சம்பந்தம், யாப்பு என்ற மூன்றும் ஒன்று என்பது. சம்பந்தம்–வடமொழி இயைபு, யாப்பு என்பன தமிழ்ச் சொற்கள். இது இல்லாமல் பேசினால் சம்பந்தமில்லாமல் பேசறான் என்பார்கள். இதைத் தான் இயைபு என்பார்கள். இயைபிலே பல வகை உண்டு. இயல் இயைபு, அதிகார இயைபு, நூற்பா இயைபு இப்படி பல வகை. அதில் நேற்றைக்குப் பார்த்த தலைப்பான ஆகமத்திற்கும் இன்றைக்குப் பார்க்கும் தலைப்பான கிரியைக்கும் உள்ள இயைபு தலைப்புப் பொருளினால் வந்த இயைபு. அதன் வழி இன்றைய தினம் திருமந்திர கிரியை முறைகளைப் பற்றி கொஞ்சம் சிந்திப்போம்.

திருமந்திரத்தில் சுமார் 800 முதல் 1200 பாடல்கள் கிரியை பற்றி எடுத்துச் சொல்லுவனவாக அமைந்திருக்கின்றன. மொத்தம் மூவாயிரம் பாடல்களில் சற்றேறக்குறைய 1000 பாட்டுக்கள் என்றால் மூன்றில் ஒரு பாகம் ஆகிறது. இத்தனை பாடல்களையும் இன்று நாம் முழுமையாகப் பார்த்துவிட முடியாது. ஒரு நாளில்–ஓரிரண்டு மணி நேரத்தில் எல்லாப் பாடல்களையும் பார்க்க முடியுமா? எது முக்கியமோ, எது தேவையோ அந்தச்சில பாடல்களைப் பார்த்தோமானால் அதுவே நமக்கு பெரிய ஆன்ம திருப்தியை அளிக்கும்.

முதலில் கிரியை முறைகளைத் தமிழினாலே செய்ய முடியுமா என்பதே ஒரு கேள்வி. இது வரை கிரியை முறைகளை தமிழில் பயன்படுத்தி இருக்கிறார்களா? இமு உறுதி செய்யப்பட்டால் தான் திருமந்திரத்தை அதற்கும் பயன்படுத்த முடியுமாத? என்பதைப் பார்க்க வேண்டும். இது பற்றி திருமந்திர நூலின் ஆசிரியரான திருமூலர் என்ன சொல்கிறார் என்று பார்க்கணும். மூல ஆசிரியர் கருத்திற்கு மாறாகச் சொல்லக்கூடாது. ஆசிரியர் கருத்துக்கு ஒன்றித்தான் உரை கொள்ள வேண்டும். இது ரொம்ப முக்கியம்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பெருமகனார் மொத்தம் பத்துப்பேர். இந்த உரைகளில் பரிமேலழகர் உரைதான் உயர்ந்தது என்று போற்றப்படுகிறது. ஏன்? மூல ஆசிரியர் கருத்தினை வாங்கி அதிலிருந்து

பிறழாமல் உரை எழுத வேண்டும். அப்படிப்பட்ட உரை தான் சிறந்ததான உரையாகக் கருதப்படும். இதைப் பரிமேலழகர் உரையில் பலபட பரக்கக் காணலாம். உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்கத் தக.

இந்த திருக்குறள் எல்லோருக்கும் தெரியும். என்ன பொருள்? கற்க வேண்டியதை கற்றுக்கொள். கற்ற பின்னால் என்ன கற்றாயோ அதன்படி நடந்து கொள். சரி, இங்கே ஒன்றைக் கவனிக்கணும். திருவள்ளுவர் ஒரு சொல்லை ம இந்தக் குறளில் போடுகிறார். அந்த சொல் கற்றபின் என்பது. கற்றபின்– அதாவது கல்வி எப்பொழுது முடிகிறது? பட்டப்படிப்பிலா? முதுகலைப் படிப்பிலா? முனைவர் பட்டம் வாங்கிட்டா முடிஞ்சுடுமோ?

திருவள்ளுவர் இன்னொரு குறளில் சொன்னார்,

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்

சாய்த்துணையும் கல்லாத வாறு.

இதன் மூலம் திருவள்ளுவர் சொல்வது இது தான். நல்ல முறையில் கல்வி கற்றுக் கொள். நல்ல முறையில் என்றால் யூனிவர்சிடியில் ஒழுங்காகப் போய் கற்றுக் கொள்வது அல்ல. தினந்தோறும் தினந்தோறும் யாராவது ஒருவராலே ஏதாவது ஒரு வகையில் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தான் பாடம் அதன் மூலம் பெறுவதே உண்மைக்கல்வி. உலகத்தின் காலம் என்ன என்று வரையறுக்கப்படவில்லை. உன் காலமும் அப்படியே. இரண்டும் இறைவனால் வரையறுக்கப் பட்டதாலும் நமக்குத் தெரியாதவை. எனவே நீ செய்ய வேண்டியத என்ன தெரியுமா? சாகும் வரை துறைதோறும் நுணக்கங்களைக் கற்று வருவாயானால் உனக்கு நீ பிறந்த நாடு மட்டுமல்ல எல்லா நாடும் உன்னதாகும். எல்லா ஊரும் உன்னதாகும். கற்றோருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. அவ்வளவு சிறப்புடைய கல்வியை சாகும்வரை கல் என்கிறார்.

இப்ப பாருங்க! சாகும் வரை கல் என் றவள்ளுவர்தான் கற்றபின் நிற்க என்கிறார். சாகும் வரை கத்துக்கிட்டு அதுக்குப் பின்னால நிக்கறதுன்னா எப்படி? செத்த பின்னா நிற்க முடியும்? செத்த பின் படுக்க வைத்துடுவான். எங்க நிக்கறது?

இதை யோசிக்கிறார் பரிமேலழகர். உரை ஆசிரியர் கருத்து மூல ஆசிரியர் கருத்துக்கு வேறுபடக் கூடாது. இங்கு ஒரு பொருள் அங்கு அதற்கு மாறாக ஒரு பொருள் என்று இடிக்கக்கூடாது. அதனால் கற்றபின் என்பதில் வரும் பின் என்பதை காலப்பொருளில் பின்னாக எடுத்துச் செல்லாமல் கற்றால் என்று ஆல் உருபு கொடுத்து உரை செய்தார். மணக்குடவர், காளிங்கர் போன்ற பிற உரையாசிரியர்களிடத்திலிருந்து பரிமேலழகர் இந்த இடத்தில் தான் வேறுபட்டு உயர்கிறார்.

அதாவது கற்றபின் என்பதற்கு கற்றால் என்று உரை சொல்லி நன்கு கற்று அந்த ஒரு உயர்விப்படி நில் என்றாரே பரிமேலழகர் அதுதான் உரை. கல்வி அதிகாரத்தில் முதல் குறளுக்கு உரை எழுதும்போதே அந்த அதிகாரத்தின் ஏழாவது குறள் பொருள் இடிக்காமல் ஒத்திட்டுப் பார்த்து இரண்டிற்கும் பொருந்த அமைதிப்படுத்தி உரை செய்தாரே அதுதான் உரை. எனவே உரை செய்யும் போது ஆசிரியர் ஒரு பொருளைப் பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்ற நூல் முழுமையும் பார்த்து, அந்த நூலை மேலிருந்து ஒரு பறவை பார்ப்பது போல முழு வீச்சாகப் பார்த்து உரை எழுதுவதே நுட்ப உரை.

சொல்லுக்குச் சொல்உரை அதாவது இந்தக் குறளில் பின் என்றால் பின்னால் என்று உரை எழுதுவது உரையன்று.

அதைப் போல திருமந்திர நூலை ஒரு முழு வீச்சாகப் பார்த்துக் கொண்டு அந்தப் பார்வையில் ஆசிரியரின் உள்ளக் கருத்தைப் பதிய வைத்துக் கொண்டு திருமூலர் கிரியை முறைகளைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்க்க வேண்டும்.

திருமூலர் கிரியை முறைகளைச் செய்வதற்கு எந்த மொழியைத் தேர்நதெடுத்ததர் என்பதை உணர்ந்து கொண்டோமேயானால் அந்த மொழியில் அந்த முறைகளைப் பின்பற்றி ஒழுகினால் திருமந்திரத்தை பயன்படுத்துவதற்கு நமக்கு முழு ஏற்பு–அங்கீகாரம் கிடைக்கும்.

எனவே, கிரியை முறைகளைத் தமிழ்மொழியில் செய்யலாமா என்ற கேள்விக்கு விடைகாணமுன் தமிழைப் பற்றி திருமூலர் என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்று பார்க்கணும். ஒரு பாடலில் அவர் இதுபற்றிய தமது கருத்தைத் தெளிவாக்கியிருக்கிறார். அந்தப பாடலைப் பாருங்கள்!

தமிழ்மண் டலம்ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழும் மனமும்என் அதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவம் ஆமே

இந்தப் பாடலுக்குப் பொருள்காணம்போது தவறாக உரைகண்ட பேராசிரியர்கள் பலர். பாடலில்,

அவிழும் மனமும்என் ஆதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவம் ஆமே

என்ற வரிகள் உயிரான வரிகள். மற்ற இரண்டு அடிகளும் தலைப்புக்கு ஏற்ப செய்தியைத் தருவன. நாம் சிந்திக்க வேண்டியது இந்த இரண்டு அடிகள் தான்.

பெரியோர்களே! நம்முடைய உடம்பு முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. அது இந்த அருள்நெறி திருக்கூட்டத்தாருக்கு நன்கு தெரியும். முதல் ந்து தத்துவங்கள் ந்து பூதங்கள் ஆகும். அதாவது மண், நீர், தீ, காற்று, வெளி என்ற ஐந்து பூதங்கள். இவை கலந்த மயக்கமே இந்த உலகம் என்று புறநானூறும் தொல்காப்பியமும் கூறுகின்றன. அடுத்து இந்த ஐந்து பூதங்களுடைய காரணமான தன் மாத்திரைகள் ஐந்து. அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. இவற்றின் வகைதெரிவான் கட்டே உலகு என்பது திருக்குறள். அடுத்து கால்கள்,கைகள், நாக்கு, எருவாய், கருவாய் என்ற கன்மேந்திரியங்கள் ஐந்து. மொத்தம் 20. இந்த மாலை நேரத்துல கணக்கு காட்டி பயமுறுத்துகிறேன்னு நினைக்க வேண்டாம். கணக்குத் தொல்லை எல்லாம் ஒழிந்துபோன இந்த வயசுல நிமமதியா இருக்கலாம்னு இங்க வந்தா இங்கயும் கணக்கா? என்று அலுத்துக்க வேண்டாம்.

மொத்தம் எத்தனை சொன்னேன்? இருபது. அதற்கப்புறம் மனம். இந்த மன தத்தவம் சிவஞானமுனிவர் வாக்குப்படியும், சிவாகமப்படியும் மனம், புத்தி,. சித்தம், அகங்காரம் என்ற நானகாக விரியும். இந்த மனதத்தவம் நான்கும் சேர்க்க வருவது 24 தத்துவங்கள்.

இந்த 24 தத்துவங்களையும் ஒரே வார்த்தையில சொல்லலாம். அதாவது ஆன்ம தத்துவம். அதற்கு மேல குணதத்துவம் இதைப் பிரகிருதிமாயை அல்லது மூலம் என்றும் சொல்வார்கள். அதற்குமேல புருட தத்துவம். அதற்கு மேல கலை, காலம், நியரி, வித்தை,அராகம் என்கிற ஐந்து தத்துவங்கள். இவற்றை பஞ்ச கஞ்சுகங்கள் என்றும் கூறுவர். கஞ்சுகம் என்றால் போர்வை என்று பொருள். இவை ஐந்தும் ஐந்து போர்வைகள். இந்த ஐந்துடன் குண தத்துவத்தையும், புருடதத்துவத்தையும் சேர்த்து ஒரே வார்த்தையில் சொல்லாம். அதாவது வித்தியா தத்துவம்.

இங்கே நான் வந்தவுடனே தான் ஸ்ரீஜயா அவர்கள் அருள்நெறி மன்றப் பதிப்பான சித்தாந்தக் கையேடு ஒன்றைக் கொடுத்தார்கள். இது ஒரு அற்புதமான சித்தாந்தக் கையேடு. ரெடி ரெக்கனர் என்ற முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. மிக நல்ல பணி, பாராட்ட வேண்டிய நல்லபணி. இந்தச் சித்தாந்தக் கையேட்டிலும் முன்னால் சொன்ன ஆன்ம தத்துவம் பற்றியும், வித்யா தத்துவம் பற்றியும் வருவதைப் பாருங்கள்.

இனி 7 வித்தியா தத்துவங்களுக்கு மேல் உள்ளவை ஐந்து சிவதத்துவங்கள். அவை சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் அல்லது சதாசிவ தத்துவம், சத்தி தத்துவம், சிவ தத்துவம் என்பன.

இந்த மூன்று வகைத்தத்துவங்களையும் சேர்த்தால் மொத்தம் 36. அதாவது ஆன்மத்துவம் 24+ வித்தியா தத்துவம் 7+ சிவதத்துவம் 5.

எனவே முப்பத்தாறு தத்துவங்களை மூன்று கேட்டகரியாக வகையாகப் பிரிக்கலாம். முதலில் வைத்துக் கூறப்படும் 24 தத்துவங்களும் ஆன்ம தத்துவம். அதன் பிறகு 7 தத்துவங்களும் வித்தியா தத்துவம். அதன் பிறகு ஐந்து தத்துவம் சிவதத்துவம்.

இது சிவதீட்சை பெற்றவர்க்கு நன்கு புரியும். இங்கே பலபேர் நெற்றியில் விபூதி குழைத்து வைத்திருக்கப் பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. வெகு சில இடங்களில் தான் இந்தக் காட்சியைப் பார்க்க முடியும். ஈரோடு, திருநெல்வேலி போன்ற இடங்களில் இதைப் பார்க்கலாம். சென்னையில் விபூதி வைச்சுகிட்டு போவதற்கே வெட்கப்படுகிறார்கள்!

சரி! சைவ அனுட்டானத்தை–சந்தியை அனுட்டிப்பவர்கள் ஒன்றைச் சொல்வார்கள்

ஓம் ஆத்ம தத்தவாய ஸ்வதா!

ஓம் வித்யா தத்வாய ஸ்வதா!

ஓம் சிவ தத்தவாய ஸ்வதா!

இவ்வாறு மூன்று முறை ஓதி உளுந்தளவு உள்ளங்கை நீரை மூன்று முறை பருக வேண்டும். இதற்கு என்ன பொருள்? இவை அனைத்தையும் ஆண்டவனுடைய பாதகமலங்களில் ஒப்படைக்கின்றோம் என்று தாரை வார்த்து தருவது.

இந்த வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்ப நாம் பார்த்துக் கொண்டிருப்பது கிரியை முறைகளைத் தானே! கிரியைகளில் முதலில் உடல், பொருள், ஆவியை இறைவனுக்கு ஒப்படைத்த பின் தான் வழிபாடு ஆரம்பம் என்று ஆன்றோர்கள் இதனை இவ்வாறு வகுத்தார்கள். அப்போது தான் ஆண்டவன் வழிபாடு சிறக்கும் பரிணமிக்கும்.

எனவே தான் திருமுறைத் திருமணங்களில் கூட முதலில் எடுத்த உடனே மணமகன், மணமகள் கைகளில் தண்ணீரைக் கரண்டியால் ஊற்றி, பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி என்று ஓதி கையைச் சுத்தம்

செய்யச் சொல்லி அப்புறம் முன்னால் கூறிய மூன்று மந்திரங்களையும் ஓதி மூன்று முறை நீரைப் பருகச் செய்கிறோம். அதாவது,

ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் ஆன்ம தத்துவங்களை ஒப்படைக்கின்றேன்.

ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் வித்யாதத்துவங்களை ஒப்படைக்கின்றேன்.

ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் சிவ தத்துவங்களை ஒப்படைக்கின்றேன்

என்று தூயதமிழால் மந்திரங்கள் ஓதி நீரை மூன்று முறை பருகச் செய்கிறோம்.

அப்படியானாலு முதலில் மனத்தை நிலைப்படுத்தி இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படித் தொடங்கும் எந்தச் செயலும் பரிணமிக்கும். அதனால் தான் ஔவையார்,

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்

தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

என்று பாடினார். அதாவது மனம் எங்கெங்கயோ லயித்து நிற்கிறது. அங்கிருந்து முதலில் அதைப் பிரித்து நம் வழிக்குக் கொண்டு வர வேண்டும். பிறகு இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். மனமது செம்மையானால் தான் இறைவனை அடைய முடியும்.

இந்தப் பொருளை உள்ளடக்கி திருமந்திரத்தில் அவிழும் மனமும் என்ற ஆன்ம தத்துவங்களைக் குறித்தார். ஆன்ம தத்துவங்கள் 24ல் அது தான் தலைமைப் பொறுப்பேற்று அவற்றை இயக்கி வைப்பதால் மனம் என்று கூறினால் அது ஆன்ம தத்துவத்தைக் குறிக்கும்.

பிறகு எம் ஆதி அறிவும் என்று வித்திய தத்துவங்கள் ஏழையும் குறித்தார். காரணம் உயிருக்கு அறிவு இந்த தத்துவங்களின் மூலம் தான் ஊட்டப் பெறுகிறது.

இதன் பிறகு சிவதத்துவம் ஐந்தையும் சொல்ல வேண்டும். ஆனால் திருமூலர் சிவதத்துவம் என்று சொல்லாமல் அந்த ஐந்து தத்துவத்தையும் தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே என்று கூறினார். எனவே தமிழ் மண்டலம் வேறு சிவதத்துவம் வேறல்ல. இவ்வாறு திரூமூலர் தமிழ்மண்டலம் ஐந்து என்று சிவதத்துவம் ஐந்தையும் கூற இந்த உண்மைப் பொருளைத் தவறவிட்ட மதிப்பிற்குரிய வெள்ளை வாரணனார் தமிழ் மண்டலம் ஐந்தாவன சேர, சோழ, பாண்டிய மண்டலங்கள் மூன்று. அப்புறம் தொண்டை மண்டலம் மற்றும் கொங்குமண்டலம் என்பன இரண்டு. ஆக தமிழ் மணடலம் ஐந்து என்றால் அ தற்கு மன் அடியில் அவிழும் மனமும் எம் ஆதி அறிவும் என்பதற்கு சற்றும் பொருந்தி வரவில்லை என்பதை கருத்தில் கொள்ளாமலும் தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே என்ற வரியில் கூறப்படுவது தத்துவம் என்பதைக் கருத்தில் கொள்ளாமலும், மண்டலம் என்ற சொல்லைக் கொண்டு சேர மண்டலம், சோழ மண்டலம் என்று பொருந்திவராத பொருளை வலிந்து கூறியது வெட்ட வெளிச்சமா தெரியுது. இதைவிட வேடிக்கை என்னன்னனா, இந்தத் தவறான பொருளை அடிப்படையாகக் கொண்டு கொங்கு மண்டலம் என்ற மண்டலம் பிரிந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு, எனவே திரூமூலர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று சொன்னது தான்.

அது ஒரு புறமிருக்கட்டும். சிவதத்துவம் ஐந்தையும் தமிழ் மண்டலம் என்று திருமூலர் கூறியதை இன்னும் கொஞ்சம் ஆராய்வோம்.

சிவதத்துவம் ஐந்திலே ஒன்று சதாசிவ தத்துவம். இந்த சதாசிவ தத்துவத்திலே இருக்கிற சதாசிவர்கள் இரண்டு வகை 1) அணுபட்சத்து சதாசிவர்கள் 2) சம்புபட்சத்து சதாசிவர்கள். இப்படி சொன்னாள் புரியாது. வேறு விதமாகச் சொல்கிறேன்.

எங்கள் ஊரில் இரண்டு வகை ஐ.ஏ.எஸ். ஆபிசர்கள் உண்டு. இங்கு எப்படி என்று தெரியவில்லை. ஒரு வகை நேரடியாக பரீட்சை எழுதி ஐ.ஏ.எஸ். ஆபிசர் ஆவது. இன்னொன்று வகை டி.ஆர்.ஓ. துணை கலெக்டர், ஐ.ஏ.எஸ். ஆபிசர் என்று கீழ் பதவிகளிலிருந்து பதவி உயர்வு பெற்று அப்பதவி உயர்வின் மூலம் ஐ.ஏ.எஸ். ஆபிசர் ஆவது. இப்படி இருவகை உண்டு. அதுபோல தேர்வு எழுதி நேரடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனவர்கள போல சம்பு பட்சத்து சதாசிவர்கள. கீழ் பதவியில் இருந்து பதவி உயர்வு மூலம் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனவர்கள் போல அணுபட்சத்து சதாசிவர்கள். இந்த இருவகை சதாசிவர்களும் ஆன்மாக்கள் தான். இவர்கள் எத்தனை காலமாக இந்த சதாசிவப் பதவியில் இருப்பார்கள்? முதன் முதலில் உருவான சதாசிவர் யார்?

பெரியோர்களே! இந்த இடத்தில் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இருவகை சதாசிவர்களும் ஆன்மாக்கள் தான். ஆன்மாக்கள் என்று இந்த உலகில் உண்டோ அன்றிலிருந்தே சதாசிவர்கள் உண்டு. ஆன்மாக்கள் இந்த உலகில் என்று தோன்றின?

என்று நீ அன்ற நான் என்று தாயுமானவர் பாடினார். கடவுள் எனக்கு சீனியர் இல்லை. கடவுள் எண்ணைக்கு இருந்தாரோ அண்ணைக்கே நானும் உண்டு அதாவது ஆன்மாக்கள் உண்டு. ஆனால் என்ன ஒரு வேறுபாடு என்றால் என்றுமே கடவுள் ஆண்டான் நாம் அவனது அடிமை. என்று நீ அன்று நான் என்று பாடிய தாயுமானவர் உடனே உன்னடிமை அல்லவோ என்றும் பாடினார்.

திருமூலர் கூட, பதி, பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அனாதி என்று பொருள் மூன்றுமே இன்ன காலத்திலே தோன்றியது என்று கூறவொண்ணாத அனாதிப் பொருள்கள் என்று பாடினார். ஒண்ணுக்கு ஒண்ணு புதிதா வந்ததில்லை. இந்த மூணுமே ஒன்றாக இருக்கிறது. இந்த மூணும் இருக்கும் போது இறைவனுக்கு எண்ணத் தொலையா உயிர்கள் எண்ணத் தொலையா துன்பத்தில் உழலுவது கண்டு கருணை பூக்கிறது. நம் நன்மைக்காக இந்த உலகை பாசப் பொருளான மாயையிலிருந்து படைக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிடுகிறது.

நாம் எப்படி இருக்கிறோம்? தாயுமானவர் மிக அற்புதமான இறைவன் நமக்கு உடலையிம், உலகையும் படைத்துத் தருவதைப் பாடுகிறார்.

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற

கண்ணிலாக் குழவியைப் போல்

கட்டுண்டிருந்த எமை வெளியில் விட்டு...

இருட்டில் இருந்தாலே துன்பம் கட்டிப் போட்டால் துன்பம் அதை விட அதிகம். பெரியவர்களாயிருந்தால் தட்டுத் தடுமாறி சமாளித்து ஒரு வழியாக அந்த இருட்டிலிருந்து கட்டவிழ்த்துக் கொண்டு வெளியே வரலாம். குழந்தையாய் இருந்தால் துன்பம் இன்னும் அதிகம். அதுவும் கண் இல்லாத குருடாய் இருந்தால் போச்சுடா, அம்மா! துன்பமோ துன்பம்!! கண்ணிலாக் குழவி என்றால் எப்படி வெளியேறுவது?

இப்படிப்பட்ட இருளில்–அதாவது அறியாமையாகிய இருளில்–மூழ்கியிருக்கும் ஆன்மாக்களை வெளியே கொண்டு வரும் பொருட்டு கடவுள் இந்த உலகை மாயையிலிருந்து படைக்கிறார் என்று சைவசித்தாந்தம் எடுத்துச் சொல்கிறது. கடவுள், சும்மா தானே இருக்கிறோம். ஒரு பொழுது போக்கிற்காக இந்த உலகைப் படைப்போம் என்று இந்த உலகைப் படைக்கவில்லை. அதற்கு ஒரு நோக்கம் உண்டு ஒரு பயன்பாடு உண்டு என்று சைவ சித்தாந்தம சரியாக அளவை இலக்கணப்படி அளந்து சொல்லுகிறது.

உலகைப் படைக்கும் போது ஆண்டவனுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த ஆன்மாக்களுக்கு உடலைப் படைக்கும் போது தான் பிரச்சினை. எல்லா ஆன்மாக்களுக்கு ஒரே மாதிரியான தரத்தில் இல்லை. ஆன்மாக்கள் வெவ்வேறு தரத்தில் வெவ்வேறு பக்குவத்தில் உள்ளன. ஓர் ஆன்மா உயர்ந்த தரத்தில் உள்ளது இன்னொரு ஆன்மா தாழ்ந்த தரத்தில் உள்ளது. இடைப்பட்ட தரங்கள் எத்தனையோ! எல்லா ஆன்மாக்களும் ஒரே பக்குவத்தில் இருந்தால் என்ன ஆகும்? ஏகான்மாவாக ஒன்றாகிவிடும். அது சங்கரர்கூறும் ஏகான்மவாதத்தில் கொண்டுபோய் விட்டு விடும். நல்ல வேளையாக அது அப்படியில்லை. ஆன்மாக்கள் வெவ்வேறு தரத்தில் வெவ்வேறு பக்குவத்தில் உள்ளதற்கு மாறாக ஒரே பக்குவத்திலர் ஒரே தரத்தில் இரக்க முடியாது என்று சைவ சித்தாந்தம் நெடுக சிந்தித்து நிலை நாட்டுகிறது.

பல தரங்கள், பல பக்குவங்கள் இருப்பினும் பொதுவாக அவற்றை மூன்று வகைக்குள் அடக்கிவிடலாம் என்று திருமந்திரத்திலேயே வருகிறது. மூவகை சீசவர்க்கம் என்ற தலைப்பிட்ட இயல் இரண்டாம் தந்திரத்தில் திருமந்திரத்தில் வரும். அவை 1) விஞ்ஞானா கலர் 2) பிரளயாகலர் 3) சகலர்.

விஞ்ஞானாகலர் ஒரு மலம்–அதாவது ஆணவ மலம் மட்டும்–உடையவர்கள். பிரளயாகலர் இருமலங்கள்–அதாவது ஆணவம், கன்மம் என்ற இரண்டு மட்டும்–உடையவர்கள். சகலர் மூன்று மலங்களும்–அதாவது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் உடையவர்கள்.

நாமெல்லாம் சகலர். கலர் என்றால் சோடா, கலர் என்கிறார்களே அந்தக் கலர் இல்லை. கலர் என்றால் பந்தம் உடையவர் என்று பொருள் கட்டுண்டவர் என்று பொருள். அகலர் என்றால் பந்தம் அற்றவர் கட்டு நீங்கியவர். பிரளய + அகலர் என்பது வடமொழி தீர்க்க ச்நதிப்படி பிரளயாகலர் என்றாயிற்று. அதாவது பிரளய காலதர்தில்–உலகம் ஒடுங்கும் ஊழிக்காலத்தில் கலைகள விட்டு நீங்குபவர் என்று பொருள். விஞ்ஞான + அகலர் என்பது விஞ்ஞானா கலர் என்றாயிற்று. விசேட ஞானத்தாலே ஒரு மலமாகிய ஆணவத்தின் கட்டக்களினின்றும் நீங்குபவர் என்று பொருள். சதாசிவர்கள் என்று கூறப்பட்டவர்கள் விஞ்ஞானாகலர் என்ற பக்குவத்தில் உள்ள ஆன்மாக்கள். இவர்கள் மேல் தரத்தில் உள்ளவர்கள்.

முதன்முதலில் இறைவன் உலகைப் படைக்க ஆரம்பிக்கும் போதே ஒரே ஒரு மலம் மட்டும் உடைய சதாசிவர் பக்குவத்தில் சில ஆன்மாக்கள் இருக்கும். அவர்கள் சம்புபட்சத்து சதாசிவர் எனப்படுபவர். அதாவது நேரடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரியாவதைப் போல இயற்கையாகவே அந்தப் பக்குவத்தில் உள்ளவர்கள். இதற்கடுத்து பல பிறவிகளில் புகுந்து பறிவ நெறியில் தேறி மேலே பக்குவத்தில் ஏறி அதன்பின் ஒருமரம் மட்டும் உடையவர்களாக ஆனவர்கள் அணுபட்சத்து சதாசிவர்கள். ஆகையால் சதாசிவர்களில் அணுபட்சத்து சதாசிவர்களை விட சம்புபட்சத்து சதாசிவர்கள் சீனியர்கள்–அதாவது மூத்தவர்கள்.

இந்த சம்புபட்சத்து சதாசிவர்கள் தங்களுக்குள் ஓரவருக்கொருவர் பேசுவதற்காக இறைவன் ஒரு மொழியை கற்பித்தானாம். அந்த மொழி எது தெரியுமா? அது தான் தமிழ்! ஆ! தமிழ் எவ்வளவு உயர்ந்த மொழி! பலபேர் சொல்கிறார்கள்–வடமொழி தேவபாஷை என்கிறார்கள். ஒப்புக் கொள்கிறோம். திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் கீழ்நிலையில்–அதாவது குண தத்துவத்தில் அல்லது அதற்குக் கீழ் உள்ள உரிய தத்துவங்கிளல் இருப்பவர்கள். இவர்களுடைய பாஷை தேவபாஷை–அதாவது வடமொழி. நம்முடைய தமிழ்மொழியோ, இதற்கு மேல் பல படிகள் மேலாக உள்ள சதாசிவர்களின் பாஷை.

எனவே தமிழ் சதாசிவர் மொழி என்று நானாக சொல்லவில்லை. ஆகமம் சொல்கிறது–தமிழகாமம் சொல்கிறது. தமிழ் என்ற தலைப்பிட்ட கட்டுரையில் இதனை வள்ளலாரும் கூறுகிறார்.

பெரியோர்களே! சதாசிவ தத்துவம் என்பது சிவதத்துவம் ஐந்தில் இடைநடுவில் இருப்பது. உலகை ஆண்டவன் படைக்கும் முன் ஒடுக்க நிலையில் இருப்பது லய நிலை. அப்போது ஆண்டவனுக்கு உலகிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவன் உலகைப் படைக்கும் போது, உடலைப் படைக்கும் போது முதன் முதலில் ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்வது சதாசிவ தத்துவம் தான்.

அதாவது ஆண்டவன் லயநிலையில் இருக்கிறார் அவன் உலகத்தை உருவாக்க வேண்டும். மாயையை ஒரு பார்வை பார்க்கிறான். இது இப்படியாகட்டும் என்று எண்ணத்தைக் குவித்துப் பார்க்கிறான். இது உன்முகப் பார்வை. ஞானம் மிகப்பார்க்கும் போது அந்த மாயையில் ஒரு பகுதி சிவதத்துவம் ஆகிறது. இதற்கு நாதத்துவம் என்றும் பெயர். ஞானத்திலிருந்து கொஞ்சம் கிரியா சக்தியைக் கூட்டிப் பார்க்கிறான். அந்த மாயையில் ஒரு பகுதி சத்தி தத்துவம் ஆகிறது. இதற்கு விந்து தத்துவம் என்றும் பெயர். அடுத்த பார்வை சதாசிவர் பக்குவத்தில் உள்ள ஆன்மாக்கள் வாழும் மாயை உலகைப் பார்கிகறான். அதுதான் சதாசிவ தத்துவம். இதை சாதாக்கியம் என்றும் சொல்வார்கள். இறைவன் தொடர்பு கொள்வதால் இது போகநிலை எனப்பட்டது.

எனவே முதன் முதலில் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் வரும் தொடர்பு எங்கே வருகிறது என்றால் சதாசிவதத்தவத்தில் ஆன்மாக்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் மொழி தேவைப்படுகிறது. எனவே ஆண்டவன் தமிழைக் கற்பித்தான்.

இனி வரும் படைப்பை இறைவன் நேரடியாகத் தொடர்பு கொண்டு ஆற்றுவதில்லை. மொழிதான் உருவாக்கப்பட்டு விட்டதே. எனவே அது கொண்டு சதாசிவத்திற்கு ஆணையிட, சதாசிவம் தமக்கு கீழ் உள்ள அதாவது அடுத்த நிலையில் உள்ள பக்குவ ஆன்மாக்களைக் கொண்டு ஏனைய தத்துவங்களைப் படைக்க உலகம் உருவாகிறது உடல் உருவாகிறது. இங்கே சதாசிவம் மகேஸ்வரனையும்,மகேசுவரன் இதைப்படை அதைப் படை என்று ஏவ ருத்ரன், மால், அயன் போன்றோர் அவரவர்க்கு உரிய தத்துவங்களை விரிப்பதால் இதற்கு அதிகார நிலை என்று பெயர்.

எனவே இறைவனுக்கே மூன்று நிலைகள் உண்டு. அவை 1) லயம் 2) போசும் 3) அதிகாரம்.

இதில் இறைவனுடைய தொடர்பு மாயையில் சிவதத்துவத்திலிருந்து தொடங்கி ஆன்மாக்களில் சதாசிவர் வரை இருக்கிறதே அது தான் போக நிலை. அதன் பின்னர் எல்லாம் அதிகார நிலை.

ஆக வரும் இச்சை அறிவியற்றலால் இலய

போக அதிகாரப் பொருளாகி

என்பது கந்தர் கலிவெண்பா வாக்கு.

சிவதத்துவம் ஐந்தில் சிவதத்துவம், சத்திதத்துவம், சதாசிவதத்துவம் மூன்றும் போக நிலை. ஏனைய ஈசுர தத்துவம் மற்றும் சுத்த வித்யா தத்துவம் இரண்டும் அதிகார நிலை. இந்த ஐந்து தத்துவங்களில் சதாசிவரே முதல் வகை ஆன்மாக்கள். அவர்கள் தமிழில் ககட்டளை இட ஏனைய மகேசுரர்கள், சுத்தவித்தை தத்துவத்தில் வாழும் ஆன்மாக்கள் இந்த உலகை விரிக்கினறன. எனவே சிவ தத்துவம் ஐந்திலும் பரவி உள்ள மொழி தமிழ்மொழி. இதன் காரணமாகத் தான் அநத் ஐந்து தத்துவத்தையும் தமிழ் மண்டலம் என்று கூறினாரர் திருமூலர்.

சதாசிவர்கள் மொழி தமிழ் என்பது தெளிவாயிற்று. அவர்களுக்கு உள்ள வேதம் முததமிழ் வேதமாகத் தான் இருந்ததாம். இதையே சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்றும் திருமூலர் பாடினார்.

என்னிடம் உள்ள பழைய திருப்பனந்தாள் காசிமடப் பதிப்பில் திருமூலர் வரலாறு என்ற தலைப்பில் பாயிரத்தில் 76அவது பாடலாக சதாசிவம் தத்துவம் முத்தமிழ்மூ வேதம் என்ற தொடங்குகின்ற பாடல் வருகிறது. பளைய பதிப்பிற்கும் புதிய பதிப்பிற்கும் பாடல் எண்ணிக்கை மாறிவிடும்.

அது ஒரு புறம் இருக்கட்டும்! நம்பிரான் திருமூலர் தெளிவாக சொல்லிவிட்டார். வேதம் இருந்தது முதன் முதல் வேதம் தமிழ் வேதமாக இருந்தது அதிலும் முததமிழ் வேதமாக இருந்தது. இதுதான் திருமூலர் கருத்து.

எனவே திருமூலர் சிறப்புமிக்க வேதத்தைப் பற்றிக் கூறும் போதெல்லாம் தமிழ்வேதத்தையே எடுத்துக் கூறினார் எனபதற்கே இதுவே சான்று. திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எழுதும்போது எப்படி ஆசிரியர் கருத்திற்கு மாறாமல் முரண்படாமல் உரை எழுதினா ரோ அதைப் போல திருமூலர் கருத்திற்கு மாறாக நாம் உரை கொள்ளாமல் அவர் எங்கெங்கே வேதச் சிறப்பு என்று பாடுகிறாரோ அங்கெல்லாம் அதை தமிழ்வேதச் சிறப்பாகவே கொள்ள வேண்டும். மாறாக வடமொழி வேதத்தை எடுத்துக் கூறி உரை எழுதினால் நாம் திருமூலர் கருத்திற்கு மாறாக போய்விட்டோம் என்று பொருள்.

யாராவது சிலர்க்கு வேதம் என்றால் வடமொழி வேதத்தையே குறிக்கும் என்று மாற்றுக் கரத்து இருக்குமானால் அது தவறில்லை. அவர்கள் திே தனியே இன்னொரு மேடை போட்டு பேசிக் கொள்ளலாம். ஆனால் திருமந்திரத்தைப் போற்றிக் கெர்ணடே திருமூலர் கருத்திற்கு மாறாகப் பேசுவரை மட்டும் செய்ய வேண்டாம் என்ற அவர்கள் திருவடியைப் பற்றிக் கேட்டுக் கொள்கிறேன். அது திருமூலருக்கு செய்யும் பச்சைத் துரோகமாக முடியும்.

எனவே தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம் என்று தொடங்கும் பாடலாலும் சதாசிம் முத்தமிழ் வேதம் என்ற தொடங்கும் பாடலாலும் கிரியைகளைத் தமிழில் செய்வதற்கு திருமந்திரம் நமக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது.

ஆகமப்படி கிரியை செய்ய வேண்டும் என்றால் தமிழினால் செய்யலாம் என்பது ஒன்று தமிழே சிறந்தது என்பது தான் உண்மை. தமிழ் சதாசிவ தத்தமாக ஆண்டவனை நெருங்கியுள்ளது. எனவே அதை வைத்து கிரியைகளைச் செய்தால் ஆண்டவனோடு நமக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட பொருந்திய அருளை பெறலாம் என்பது திண்ணம்.

கிரியைகளை எப்படி செய்ய வேண்டும்? என்பது அடுத்த கேள்வி. ஆகமம் ஒன்பதும் முப்பேதமுற்று 28 ஆகமமாயிற்று என்று நேறடறு பார்த்தோம். ஒன்பது ஆகமத்திற்கு ஒன்பது தந்திரம். ஒவ்வொன்றும் கருமகாண்டம், உபாசானா காண்டம், ஞானகாண்டம் என்று முப்பேதமாக பிரிந்தது என்றோம். எனவே ஒவ்வொரு ஆகமத்திலும்–அதைச் சார்ந்த ஒவ்வொரு தந்திரத்திலும் கிரியை முறைகள் கூறப்பட்டுள்ன. அவற்றைப் பகுத்து பிரித்து அறிந்து பயன் கொள்வது நம்முடைய கடமை. இதுவரை அப்படிப் பிரித்த பகுதிகளைக் கொண்டு பதிப்பித்த செம்பதிப்பு வரவில்லை.

என்றாலும் திருமந்திரத்தில் கூறப்படுகின்றன ஒரு சில கிரியை முறைகளை இனி பார்ப்போம்.

திருமந்திரத்தில் எல்லாக் கிரியைகளுக்கும் பாடல்கள் உண்டு. ஒன்றல்ல இரண்டல்ல. அநேகமாக இங்கு இருப்பவர்கள் எல்லோரும் குறிப்பு எடுப்பதால் ஒவ்வொரு முறையும் பாடல்களை அவற்றின் எண்ணிக்கையோடு கூறுகிறேன். எல்லார்க்கும் இது பயனாகும்.

முதலில் கணபதி வழிபாட்டை எடுத்துக் கொள்வோமானால் ஏற்கனவே முதல் நாள் சொற்பொழிவில் சொன்னது போல விநாயகர் வணக்கம் பற்றியோ, அவர்க்குரிய வழிபாட்டுக் கிரியைக்கு என்று தனியே

பாடல்கள் இல்லை. பொதுவாக உள்ள பாடல்களையே இந்த வழிபாட்டிற்கும் கொள்ள வேண்டும். முருகனுக்கு என்ற 3 பாடல்கள் உண்டு. லட்சுமி பற்றி, சரஸ்வதி பற்றி, அம்பிகைப் பற்றி அநேக பாடல்கள் உள்ளன.

நாம் 12 திருமுறை என்று கூறுகிறோம். அந்த 12 திருமுறையிலேயே திருமுறை என்ற பெயரும் அதற்குத் துதியும் திருமந்திரத்தில் தான் உண்டு. பாடலைப் பாருங்கள்.

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி

வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை

பாடுந் திருமுறை பார்பதி பாதங்கள்

சூடுமின் சென்னிவாய் தோத்திரம் சொல்லுமே.

–நாலாந் தந்திரம் 1067ம் பாடல்.

கணநாதர் புராணத்தில் சேக்கிழார் திருமுறை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். பின்னால் இதுதான் திருமுறையாக ஆகப்போகிறது என்பதை தீர்க்க தரிசனமாக முன்னாலேயே கண்டு சொல்லியிரக்கிறார்கள். திருமுறை எழுதுவோர், திருமுறை வாசிப்போர் என்றெல்லாம் கணநாதர் பயிற்சி கொடுத்தார் என்று பெரியபுராணம் சொல்கிறது. சேக்கிழாராவது நம்பி ஆண்டார் நம்பிக்கு பின் வந்தவர். எனவே திருமுறை வகுக்கப்பட்ட பின் சேக்கிழார் திருமுறை என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் திருமூலர் காலமோ கி.மு. 5500 என்று தருக்க இயல்படியும் விஞ்ஞானரீதியாகவும் நிலை நாட்டினோம். பிற்காலத்தில் இது திருமுறை என அழைக்கப்படப் போகிறது என்று அப்போதே சொன்னார் என்றால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! எவ்வளவு பாராட்டப்பட வேண்டிய விஷயம் இது!

இந்தப் பாடல் திரிபுரை சக்கரத்தில் வருகிறது. எம்பிராட்டி மலைமகளாக இருக்கிறாள் அவளே அலைமகளாக இருக்கிறாள் அவளே கலைமகளாகவும் இருக்கிறாள். மூவுருவும் ஒருருவமாக இருக்கிறாள். அதனால் தான் திரிபுரை என்று பெயர் வந்தது. அதனால் அதில் அம்பகை–அதாவது மலைமகளாக வைத்துப் பாடுகிற பாடல் உண்டு. அப்படியே அலைமகளாக நினைத்தும் பாடுகிறார். உடன் கலைமகளாக வைத்தும் பாடுகிறார். இந்தப் பாடல் கலைமகளை நினைத்து பாடிய பாடல். பார்வதியே தான் வேறு வடிவில் கலைமகளாக வந்துள்ளாள். ஏடு அங்கை நங்கை அதாவது சரஸ்வதி. அவள் தனியாக இல்லை. பார்வதியே வேடம் போட்டு வெள்ளையாக வந்திருக்கிறாள். இவளை வெண்தாமரையில் அமர்ந்திருக்கும் பார்வதி என்று கூறலாம் பராசக்தி என்று கூறலாம்.

அம்பிகையின் இரு பாதங்களும் ஞான வடிவானழ. ஒன்று பரஞானம் மற்றொன்று அபரஞானம். இது எல்லாம் உருவகம் தானே. திருவடியைக் கொடு என்று எல்லா அடியார் பெருமக்களும் ஆண்டவினிடம் வேண்டுவது வழக்கம் தானே. அப்படி வேண்டுவது ரு உருவகம் தானே. அது இல்லாமல் திருவடி கொடு என்றால் இத்தனை பேருக்கும் திருவடியை பீஸ் பீஸாகக் கட் பண்ணியா கொடுப்பார்? எனவே அது உருவகம். ஞானத்தை உருவகித்து அப்படிக் கூறினார்கள். திருவடியைக் கொடுன்னா ஞானத்தை கொடுன்னு பொருள். ஒரு திருவடி பரஞானத்தைக் குறிக்கும் மற்றொன்று அபரஞானத்தைக் குறிக்கும். இறைவனது திருவடியை அடைவிப்பது பரஞானம். இந்த உலகத்தினை எப்படித்தன் வசப்படுத்துவது என்பது அபரஞானம். உதாரணத்திற்கு நான் எஞ்சினியரிங் படித்துள்ளேன். அதோடு முடிந்துவிடாது. அது ரிடையர் ஆகற வரைக்கும் உதவும். அதன் பின்னாலே ஆண்டவனை நோக்கி மனம் ஓடி அவன் பாதத்தில் பெறும் அமைதியை –அமைதி இனப்பதை நோக்கிப் போவேன். அதே மாதிரி கெமிஸ்ட்ரி படித்த ஒரு பட்டதாரி. அந்த ஞானம் உதவுகிற வரையில் ஒரு வேலைக்குச் சேர்வான். வேலையிலிருந்து ஓய்வு

பெற்றுவிட்டால் அந்த ஞானமே எல்லாம் என்று சொல்லிவிட முடியாது என்பது புரியும். அதற்கு மேலே அதன் மீது உவர்ப்பு தோன்றி அவன் மெல்ல மெல்ல அருள்நெறிக் கூட்டத்திற்குத் தள்ளப்படுவான். மெல்ல மெல்ல சைவ சித்தான்நதம் வரும் மெல்ல மெல்ல சிவஞான போதம் மீது நாட்டம் வரும். அது அபரஞானத்தின் மணிமுடி. அங்கே அபரஞானமாக இறைவன் யார்? இந்த உடலைத் தந்தவன் யார்? அவனது இலக்கணம் என்ன? அவனை அடைவதற்கு உரிய சாதனம் என்ன? அதனால் அடையும் பயன் என்ன? என்பது விளங்கப்படும். இதையெல்லாம் எடுத்துச் சொல்வதும் அபரஞானம் தான். உண்மையிரேயே இறைவனை அடையும் அருள்நெறிப் பயிற்சியில் புகுந்து முதிர கடைசியில் இதோ நீ தேடிவந்த இறைவன் இவன் தான் என்று எது காட்டுகிறதோ அதுவே பரஞானம்.

இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றாராம் சீர்காழியில் சுமார் 1300 வருடங்களுக்கு முன் பால்சாப்பிட்ட அந்தக் குழந்தை. உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் இரண்டும் பெற்றாராம் சம்பந்தர். இந்த இரண்டு ஞானமும் பார்வதியின் பாதங்கள் என்று இந்தப் பாடலில் சொன்னார் திருமூலர். பாடுந் திருமுறையே பார்வதியின் பாதங்கள் என்றார்.

பலபேர் என்ன சொல்றாங்க? சார்! திருமுஐற தமிழ் எல்லாம் பழங்கால தமிழ் அதைப் பதம் பிரித்துப் படிக்கிறது ரொம்பக் கஷ்டமாயிருக்கு.

திருமூலர் சொன்னார் நீ ஒன்றும் செய்ய வேண்டாம். உள்ளே இருப்பதைப் படிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. நீ பாட்டுக்கு திருமுறையதை தலையில வச்சுக்கோ. உன்வாய் தானாக அந்த திருமுறை தோத்திரங்களை அணிச்சை செயல் போல பாட ஆரம்பித்து விடும்.

பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்

சூடுமின் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே

ஈடு இணையற்ற பாடல். இந்தப் பாடலைப் பாடி திருமுறைகளை வணங்கலாம். திருமுறைகளை அடுக்கி யானைமேல் வைத்து உலா வருவது உண்டு. அதற்கு முன் திருமுறைகளுக்கு ஆசனமிட்டு, பட்டிட்டு, பொட்டிட்டு. பூவிட்டு, மாலையிட்டு, தீபாராதனை செய்வது திருமுறை அன்பர்கள் வழக்கம். அப்போது ஏன் மௌனமாக வழிபட வேண்டும்? திருமுறைகளை வணங்க திருமுறையிலேயே நமக்குப் பாடல் கிடைக்கிறது.

இந்தப் பாடலைச் சொல்லி திருமுறைகளுக்குச் பூச் சொரிந்தால் திருமந்திரத்தின் பலன் கிடைக்காதா என்ன?

திருமூலர் ஒவ்வொரு கிரியைக்கும் ஒரு பாடல் பாடியுள்ளார். பாருங்கள்! திருமுறை வணக்கத்திற்கே ஒரு பாடலைப் பாடியுள்ளளார்! அதை வைத்து நமது கால ஆராய்ச்சிப் புலிகள், ஆகவே திருமுறைகள் வகுக்கப்பட்ட காலமான 10 ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்டவர் திருமூலர் என்று தாண்டிக் குதித்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. இந்தியாவிற்கு சுதந்திரம் வருவதற்கு முன்னே மகாகவி பாரதி ஆனந்த சுதந்திரம் இடைந்து விட்டோம் என்று ஆடுவோமே, பள்ளு பாடுவோமே என்று பாடினால் அது தீர்க்க தரிசனம்! ஆனால் அந்த தீர்க்க தரிசனம் திருமூலருக்கு மட்டும் கிடையாதாம்! பாவம்! அவர்களை விட்டு விடுவோம்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் திருமுறைகள் வகுக்கப்படப் போகின்றன என்பதை ஞானக் கண்ணால் காண முடியாதவரா திருமூலர்? அவர் திரிகால ஞானியல்லவா? அவர் எதைப் பாடவில்லை? தொட்டில் போடுவது முதல் ஈமச்சடங்கு வரை எல்லாச் சடங்குகளுக்கும் திருமந்தரத்தில் பாடல் உண்டு. ஈமச் சடங்கு என்று எடுத்துக் கொண்டோமானால் யார் யாருக்கு எப்படியெப்படி செய்ய வேண்டும்? யாரை

எரிக்கணும்? யாரைப் புதைக்கணும்? யாருக்கு அடக்கம் செய்யணும்? ஒரு பிரம்மச்சாரிக்கு. ஒரு அருளாளரக்கு என்று தனித்தினயே கிரியை முறைகளைக் காட்டிப் பாடல்கள் பாடியுள்ளார் திருமூலர்.

ஒரு மாகேசுவர பூசை எப்படி செய்யனும்? ஒரு சுமங்கலி பூசை எப்படி செய்யணும்? அத்தனையும் பார்க்க பார்க்க, படிக்க எத்தனை ஆச்சரியமாக இருக்கிறது? எவ்வளவு பெரிய பொக்கிஷம் இந்த நூல்? என்ற எண்ணம் தோன்றாமல் இராது. ஆனால் இவ்வளவு பெரிய பொக்கிஷத்தை நாம் இந்நாள் வரை சரிவர வாழ்வியலில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது மிகவும் வேதனை தரும் விஷயம்.

ஒரு உதாரணம் சொல்கிறேன். எல்லோருடைய வீட்டிலும் பிதாமகர்களுக்கு–இறந்த பெரியவர்கட்கு நிதி கொடுப்பது உண்டு. அன்று மூதாதையர்களை வணங்கும் நாள். அன்று வேள்வி ஏதாவது செய்ய வேண்டுமா? சடங்குகள் என்னென்ன செய்ய வேண்டும்? ஐயங்கள் தோன்றும். அந்தச் சடங்கிற்கு உரிய–அந்தக் கிரியைக்கு உரிய திருமந்திரப் பாடல் ஒன்று சொல்கிறேன்.

வளர்பிறையின் தேவர் தம்பாலின் மன்னி

உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி

தளர்வில் பிதிர்ப்தம் தங்கி சசியுள்

உளதுறும் யோகி வுடல் விட்டால்தானே!

குறித்துக் கொள்ளுங்கள்! பாடல் எண்ணிக்கை 1902 (கூட்டத்தில் பலர் திருமந்திரப் புத்தகத்திலும் சிலர் நோட்டுப் புத்தகத்திலும் குறித்துக் கொள்கிறார்கள்)

இந்த ஒரு பாடலுக்கே விரிவுரை செய்ய அரண்டு மணி நேரம் தேவைப்படும். பாடல் பாடலாக இந்த மாதிரி விரிவுரை செய்தால் சில மாதங்கள் ஆகும். அது இந்த எனது மலேசியப் பயணத்தில் இயலாது. வேறு ஒரு முறை நான் மலேசியாவிற்கு வரும் போது இன்னும் விரிவாகப் பார்க்கலாம். எப்போது நான் மீண்டும் மலேசியா வருவது? இது இறைவன் திருவருள். எனவே இப்பொழுது சொன்ன பாடலுக்கு உரிய உரையையும் பொருந்திய பொருளை மொழிப் பாகவும் சுருக்கமாகவும் சொல்லுகிறேன்.

பெரியோர்களே! நாம் நம்முடைய மூதாதையர்களுக்கு உரிய நாளை திதி என்று கூறுகிறோம். ஆனால் நாயன்மார்களுக்கு திதிஎன்று சொல்வதில்லை, ஏன்? இங்கே யாராவது சொல்வீர்களா? (கூட்டத்தினர் அமைதியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.)

சரி! நானே சொல்லி விடுகிறேன். உங்கள் சார்பாக நானே சொல்கிறேன். நாயன்மார்களைப் பொறுத்தவரையில் அவரவர்க்குரிய நட்சத்திரத்தில் தான் குருபூசை செய்கிறோம்.

ஞானசம்பந்தருக்கு வைகாசி மூல நட்சத்திரத்தில் குருபூசை. அப்பருக்கு? இதைப்பற்றி ஒரு பழம் பாடலே உண்டு.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்

நீடிய சித்திரை மாதச்சதயம் நிறைவன்றொண்டர்

ஆடியிற் சுவாதி திருவாதவூரர் நல் ஆனிமகம்

தேடிய சேக்கிழார் வைகாசி பூசம் சிறந்தனரே

இந்தப் பாடலை எல்லாம் அந்த காலத்தில் பஞ்சாங்கத்தில் போட்டிருப்பார்கள். இப்பவும் சில பஞ்சாங்கப் பதிப்பில் போடப்படுகிறது. ஆனால் இந்த காலத்தில் யார் பஞ்சாங்கம் வாஙஙகுகிறார்கள்? (கூட்டத்திலிருந்து ஒருவர் அவரவர் நட்சத்திரங்களை மீண்டும் சொல்லுங்கள் எ்று கேட்டக்கொண்டு கறித்துக் கொள்ள தயாராகிறார்)

மீண்டும் சொல்கிறேன்.

சம்பந்தர்	–	வைகாசி	–	மூலம்
அப்பர்	–	சித்திரை	–	சதயம்
சுந்தரர்	–	ஆடி	–	சுவாதி
மாணிக்கவாசகர்	–	ஆனி	–	மகம்
சேக்கிழார்	–	வைகாசி	–	பூசம்

நன்றாக கவனிக்கவேணும். இவர்களுக்கு மட்டும் நட்சத்திரம் குறிக்கிறோம். நம் பெரியோர்களுக்கு திதி என்கிறோம். திதி என்பது தான் மருவி தேதி ஆயிற்று. நம்முடைய பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தில் பாதி திதி ஆகும். பூமியை சந்திரன் சரியான வட்டமாகச் சுற்றுவதில்லை. நீள்வட்டமாக முட்டைவட்டமாக சுற்றுகிறது. எனவே சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் ஒவ்வொரு நாளும் மாறும். சந்திரனுக்குப் பதினாறு கலைகள் அதற்கேற்ப திதி மாறும். முதலில் அமாவாசை அடுத்த நாள் பிரதமை அடுத்த நாள் துதியை... என்பது போல. கலைகள் ஒவ்வொன்றாக குறையும் போதும், கூடும் போதும் திதியும் குறையும் கூடும். இதை பூர்வபட்சம் மற்றும் அமரபட்சம் என்பார்கள்.

நம்முடைய பெரியவர்களின் ஆன்மாக்ககள் இந்த உலகிலே இருந்து மறைந்து மேலே செல்லுமானால் அந்த ஆன்மாக்கள் செல்லுகின்ற இடம் அதிக பட்சம் சந்திர மண்டலத்தைச் சுற்றித்தான் இருக்கும். அதற்கு மேல் போகாது.

எனவே தான் தளர்வில் பிதிர்ப்பதம் தங்கி சசியுள் உளதுறும் என்றார், இப்ப சொன்ன திருமந்திரப் பாடலில் சசி–சந்திரனைக் குறிக்கும். பிதிர்ப்பத்தில் தங்கி சந்திர மண்டலத்தில் பெரியோர் ஆகிய நம்மூதாதையர் இருப்பர் என்பது பொருள்.

அதற்கு முன் வரியில் உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி என்றார். அதன் பொருள் உயிர்கள் பானுவாகிய இந்த சூரிய மண்டலத்திற்குள்ளாகவே இருக்கும் என்பது பொருள். சூரியனைச் சுற்றி கிரகங்களும் பூமியும் உள்ளன. பூமிக்கு உபகிரகம் சந்திரன். இவையனைத்தும் நாம் பார்க்கின்ற சூரியனின் மண்டலமாகும். நமத பெரியோர்களின் உயிர்கள் சூரிய மண்டலத்தற்குள்ளாகவே இருக்குதட. அதிலும் சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியான சந்திர மண்டலத்தில் பிதிர்ப்பதத்தில் தங்கும் என்பது பொருள்.

ஆனால் நாயன்மார்களோ நட்சத்திர மண்டலங்களில் இருப்பவர்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன் என்பார்கள். நாயன்மார்கள் நாம் காணும் சூரியனையும் அதைச் சுற்றியுள்ள சூரிய மண்டலத்தையும் தாண்டிச் செல்கிறவர்கள். அவர்கள் ஒளி மண்டலத்திலே வாழ்கிறார்கள். நாம் வாழும் ஒளி மண்டலத்தை நோக்க இருள் மண்டலத்திலே இருக்கிறவர்கள் என்றாலும் மிகையில்லை.

சந்திரமண்டலத்திலே வாழும் நம்பெரியோர்கள் அந்த மண்டலத்திற்கு மேல் போக முடியாது. அதற்கு மேல் போகணம்னா உரிய அதிகார தேவர்களின் அனுமதி வாங்கித் தான் அவரவர் நற்பயனுக்கேற்ப மேலே போக முடியும். இதைத்தான் வளர்பிறையின் தேவர் தம்பாலின் மன்னி என்றார் திருமூலர். அங்கே சில அதிகார தேவர்கள் உண்டு. அவர்கள் பால் மன்னி என்றால் அவர்கள் பால் பொருத்தி என்று பொருள்.

இதையெல்லாம் நான் விளையாட்டிற்காகவோ பிரமிப்பூட்ட வேண்டுமென்றோ இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. இதை நன்கு பலமுறை சோதித்துத்தான் சொல்கிறேன்.

இதை ஆவிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு கேசுக்கு பத்து கேசாகப் பார்த்து கேஸ்ஸ்டடி என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே அப்படிச் சோதித்ததுப் பார்ததுத் தான் சொல்கிறேன். அவர்கள் எல்லாம் சந்திரமண்டல எல்லை வரை தான் போகிறார்கள். அதற்கு மேல் போவதில்லை. அதற்கு மேல் போக வேண்டுமானால் அது அருளாளர்களால் தான் முடியும். அவர்கள் சூரியமண்டலத்தில் வீற்றிருப்பார்கள். இதை மகாதேஜோ மண்டலம் என்பார் பாம்பன் சுவாமிகள்.

என்னுடைய நண்பர் ஒருவர் சென்னையில் வண்ணாரப்பேட்டையில் இருந்தார். திருமுறையில் ஈடுபாடு உண்டு. ஆனால் அதை தினமும் அநுட்டிப்பதில்லை. நான் தூண்டி விட்டால் என்பொருட்டு திருமுறைப் பெரியோர்கட்கு எடுக்கும் விழாக்களுக்குப் பணம் உதவுவார். ஏனென்றால் வியாபாரத்தின் காரணமாக இதில் எல்லாம் நேரடியாக ஈடுபட நேரம் இல்லாததுதான். அவர் ஒரு நாள் இறந்துவிட்டார். ஈமச் சடங்கில் நான் சென்று கலந்து கொண்டேன். அவருக்கு 3 மகன்கள். அவர்கள் உத்திரக்கிரியை பத்திரிகை எழுதித்தரச் சொன்னார்கள். நான் உத்திரகிரியை பத்திரிகையில் இன்னார் இத்தனை நாள் அநாய் வாய்ப்பட்டு குறிப்பிட்ட நாளன்று சிவலோக பதவி அடைந்தார் என்று எழுதினேன். அதைப் படித்து பார்த்த மூத்த மகன் அதில் சிவலோகபட பதவின்னு எழுதி இருக்கீங்களே அதை எடுத்துடுங்க என்று சொன்னான். ஏம்பா? என்று கேட்டேன். ஏன்னா என்னுடைய அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் நிச்சயம் அங்கெல்லாம் போக மாட்டார் என்றான். (கூட்டத்தினர் எல்லோரும் சிரிக்கிறார்கள்)

இது வேடிக்கையாக இருந்தாலும் இதில் உண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது. நாம் ஒரு உபசரணைக்காவும், நாகரிகம் கருதியும் யாராய் இருந்தாலும் சிவலோக பதவி அடைந்தார் என்று எழுதினாலும். உண்மை அதுவல்ல. நம்மால் ஓர் மேல் போக முடியாது. நமக்கென்று ஓர் எல்லை உண்டு. அடுத்த பிறவி எடுக்கும் வரை சந்திர மண்டல எல்லைக்குள் சுற்றிக் கொண்டிருப்போம். ஏனென்றால் நமக்க அருளாற்றல் இல்லை.

எனவே இன்னாருடைய மகன், அப்பா, தம்பி, உறவினர் என்று திதியைச் சொன்னால் தான் ஆண்டவனின் தூதுவர்கள் அவர்களை நம் வழிபாட்டில் கலந்துகொள்ள அனுப்ப ஏதுவாகும். இங்கே நம்ம முகவரி திதிதான். நட்சத்திரத்தைச் சொன்னால் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட நட்சத்திர மண்டலத்தில் இருக்கப் போவதில்லை. எனவே முகவரியாளர் இங்கு காணப்படவில்லை என்று நமது வழிபாடு நமக்கே திருப்பிவிடப்படும். அவர்கள் வந்து ஆசிபுரிய இடமே இல்லை.

ஆனால் ஞானசம்பந்தரை வைகாசி மூலத்தில் பக்தர்கள் கூப்பிடுகிறார்கள் என்று சொன்னால் அவரிடம் உரிய தேவர்கள் பணிந்து அதனைச் சொல்லி விடுவார்கள். ஞானசம்பந்தரும் உடனே வந்து அருள்புரிவார் அப்படிப் பல பெரியோர்களுக்கு ஞானசம்பந்தர் அருள்புரிந்திருக்கிறார். அவர்களில் ஒருவர்தான் நேற்று நாம் பார்த்த கண்ணுடைய வள்ளலார்.

இதனால் தான் பெரியோர்களே! நம்முடைய பெரியோர்களை திதியைக் குறித்துக் வழிபடுகிறோம். நாயன்மார்களை நட்சத்திரத்தைக் குறித்து வழிபடுகிறோம்.

இனி திதியை எப்படிச் செய்ய வேண்டும்?

உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி

தளர்வில் பிதிர்ப்பதம் தங்கி சசியுள்

என்பது திருமந்திரப் பாடல் வரிகள். அதாவது நம் கண்ணுக்குப் புலப்படும் சூரியனுடைய எல்லைக்குள்ளாக அதன் கதிர் வீச்சில் உள்ள சந்திரமண்டல எல்லைக்கு உள்ளாக என்று முதலில் இடத்தை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இதுபோலத் தான் ஆகம மந்திரங்களை அபரக்ரியா மந்திரங்கள் என்று கூறுவதைப் பார்த்தால் குறிப்பிட்ட ஆன்மாவைச் சூரியனிடத்தில் கொண்டு போய் பிறகு பிதிர்ப்பதத்தில் கொண்டு வருவார்கள்.

இது எல்லாம் கிரியை முறைகள். இந்தப் பின்னணியெல்லாம் புரிந்து கொண்டாலர் நமக்காக திதி வழிபாடு செய்து தரும் புரோகிதர்கள் இவற்றையெல்லாம் முறைப்படி செய்கிறார்களா என்று சரிப்பார்த்துக் கொள்ளலாம். ஆனால் நமக்கு இந்தப் பின்னணியும் தெரியாது வடமொழியும் தெரியாது. எனவே மக்களுக்கு ஒன்றும் புரிவதில்லை. முறைப்படி புரோகித்தாகள் செய்கிறார்களா என்பதைச் சரிபார்க்கக்கவில்லையானால் விபரீதம் விளையும். இப்படித்தான் ஒரு விபரீதம் விளைந்தது மறைமலையடிகள் வீட்டில். மறைமலை அடிகளின் வீட்டில் ஒரு திருமணம். பேரனுக்கோ பேத்திக்கோ சரியாக நினைவில்லை. ஐயர் வைத்துத் தான் நடத்த வேண்டும் என்று அவரது அம்மாவோ யாரோ கட்டாயப் படுத்தினார்கள். மறைமலையடிகளும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். அவர் மூன்று மொழிகளில் வல்லவர். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று கடல்களின் ஆழம் கண்டவர். அவர் முன்னால் ஐயர் மந்திரம் சொல்ல சொல்ல மறைமலையடிகள் வியர்த்து விறுவிறுத்துப் போனார். காரணம், ஐயர் சொல்லிக் கொண்டு வந்தது கருமாதி மந்திரம். வீட்டில் நடப்பதோ கல்யாணம்.

உடனே ஐயரை நிறுத்தச் சொல்லி இது என்ன என்று கேட்டபோது ஐயர் மலங்க மலங்க விழித்தாராம். இது செவிவழிச் செய்தியாகக் கேட்டது. சற்றுமுன் பின்னாக இருக்கலாம். ஆனால் சம்பவம் நடந்தது உண்மை.

இங்கே பார்த்ததில் மறைமலை அடிகளுக்கு வடமொழிப் புலமை இருந்ததால் புரோகிதரைப் பிடித்தார். நம்மில் எத்தனைபேருக்கு வடமொழி தெரியும்? எத்தனை வீட்டில் இப்படி விபரீதங்கள் நேருகிறதோ, யாருக்குத் தெரியும்?

எனவே ஆன்மாவை சூரியனிடம் காட்டி சந்திர மண்டலத்தில் சேர்த்து திதி வழிபாடு செய்ய வேண்டும். இதை நானாகச் சொல்லவில்லை. திருமந்திரத்தில் சொல்வதைத் தான் நான் சொல்கிறேன்.

திருமந்திரப் பாடலில் தேவர் தம்பாலின்ன மன்னி பிதிர்பதம் தங்கி என்ற வினையெச்சங்கள் உளதுறும் என்ற வினைமுற்றில் முற்றுப் பெறுகிறது. அங்கே கூறப்படும் தேவர் ருத்திரர். இது ஏற்புழிக் கோடாலால் கொண்ட பொருள். அவர்தான் பிதிர்பபதத்திற்கு அதிபதி. இந்தப் பிதிர்பப்தத்தைத் தான் திருவள்ளுவர் தென்புலம் என்று கூறுகிறார்.

திருமந்திரத்திலே சொல்லப்படும் கிரியை முறைகள் எப்படி விஞ்ஞான முறைக்கு ஏற்ப அமைந்துள்ள கிரியை வழிபாட்டு முறைகள் எனபதை அடியேன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அதாவது ஒரு வெளி நாட்டுக்காரரை நாம் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதாவது மலேசியாவிலிருந்து சென்னையில் உள்ள ஒருவரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் ஐ.எஸ.டி. போடுவோம். அங்கே என்ன நடக்கும்? முதலில் நம்பரைப் போட வேண்டும். அதன் பின் இந்தியாவில் சென்னைக்கு உரிய கோடநம்பர் எதுவோ அதைச் சேர்க்க வேண்டும். அதன் பின்னால் அந்த நம்பரின் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணைச் சேர்க்க வேண்டும். அப்போது தான் அந்த நம்பருடன் நாம் பேசமுடியும்.

அதுபோல திதி வழிபாட்டில் நாம் குறிப்பிட்ட பெரியவருடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? முதலில் பிரபஞ்ச வெளியில் உள்ள பல சூரியன்களாக உள்ள நட்சத்திரங்களில் ஒன்றான நமது கண்ணுக்குப் புலப்படும் சூரியனைத் தொடர்பு கொண்டு வழிபட வேண்டும். இது சூரியனுக்கு உரிய

கோட் நம்பரைப் போட்டது போல. அதற்குப் பிறகு அந்தச் சூரிய மண்டலத்தில் உள்ள சந்திரமணடலத்திற்க வர சந்திரனை வழிபட வேண்டும். இது சந்திரனின் கோட் நம்பர் போட்டது போல. அதற்குப்பின் பிதிர்ப்பத அதிபதியான ருத்திரர்க்கு என்று தொடர்பு கொண்டு இன்ன திதி இன்ன பெயர் இன்னார் மகன் அல்லது மகள் என்று கூறிவழிபட்டோமானால் அது அவரவர் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டது போல. உடனே அவர்கள் நம் வழிபாட்டில் கலந்து கொண்டு நம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்வார்கள்.

எனவே திருமந்திரப் பாடலை அதாவது வளர்பிறையினர் என்று தொடங்குகிற திருமந்திரப் பாடலை ஓதி நமது பெரியோர்களின் இடத்தை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னால் அவர்களை மேலும் ஒரு திருமந்திரப் பாடலால் நம்மருகே அழைத்து வைத்து வழிபாடு செய்ய வேண்டும். பாடல் வருமாறு

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்

தவலோகம் சார்ந்துபின் தாம்வந்துகூடி

சிவயோக ஞானத்தால் சேர்ந்தவர்நிற்பர்

புவலோகம் போற்றுநர் புண்ணியத்தோரே

இந்தப் பாடல் என்னிடம் உள்ள பதிப்பில் 1905ஆம் பாட்டு. (அனைவரும் குறித்துக் கொள்கின்றனர்)

பெரியோர்கள் மஞ்சள் பிடித்து வைத்தால் அதில் எழுந்தருளுவார்கள். இது தமிழர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை என்பதற்கு சங்கப் பாடல்கள் சான்று கூறுகின்றன.

சிலர் வீட்டில் நடுவீடு வழிபாடாக ஆயிற்று. மஞ்சளில் வட்டமாக வீட்டின் பூசையறையில் சுவற்றின் ஒரு புறத்தில் இட்டு வைப்பார்கள் வைத்து அதில் மூன்று குங்குமக் கோடுகள் போட்டு மூன்று தலைமுறை பிதிர்க்கள்–தென்புலத்தார் தங்குகிற இடமாகக் காட்டவார்கள் (மூன்று கோடுகள் மூன்று விபூதிபட்டைக்குப் பதிரலாகப் போடுவதல்ல). இங்கே மலேசியாவில் எப்படி என்று எனக்குத் தெரியவில்லை.

ஒரு வீடு என்றால் நடுவீடு வேண்டும். நடுவீடு இருந்தால் தான் வீடு விளங்கும். மூதாதையர் ஆசிர்வாதம் இருந்தால் தான் குலம் விளங்கும். குலம் விளங்க வேண்டுமானால் நடுவீடு என்று ஒன்று அமைக்க வேண்டும். அது ஓரமாக இருந்தாலும் அதற்குப் பெயர் நடுவீடு தான். காரணம் அந்த வீட்டின் மையமே அதுதான். அதாவது அந்த வீட்டாரின் நல்வாழ்விற்கு அந்த வீட்டாரின் மூதாதையர்களின் ஆசியே மையமல்லவா? அதனால் தான் அது நடுவீடு. நடுகல் என்பதில் நடுகின்ற கல் என்பது பொருள் செய்யக் கூடாது.

இனி, பெரியோர்களை இதற்க முன்னாக அவரவர்க்கு உரிய நாளில் மஞ்சள் கும்பிலோ சந்தனக் கும்பிலோ ஏதாவது ஒன்றில் அழைக்கலாம். நீங்கள் எவ்வளவு விருப்பமாக இதைச் செய்கிறீர்களே அவ்வளவு சீக்கிரத்தில் அப்பெரியோர்கள் அங்கே வந்து சேர்வார்கள். உன்னுடைய யோக ஞானம் எவ்வளவு இருக்கிறதோ அதற்கேற்ப சீக்கிரம் வந்து சேர்வார் என்பதை சிவயோக ஞானத்ததால் சேர்ந்தவர் நிற்பர் என்று திருமூலர் பாடினார். யோகம் என்றால் ஒன்றுதல். ஒன்றியிருந்து நினைமின்கள என்றார் அப்பர். அது எல்லா வழிபாட்டிற்கும் பொருந்தும்.

வடமொழியில் இதைச் சிரார்த்தம் என்றார்ககள். சிரத்தையோடு செய்வதே சிரார்த்தம். எவ்வளவு சிரத்தையோடு செய்கிறோமோ அவ்வளவிற்குப் பலன் கிடைக்கும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நிலவுலகில் வாழும் நமக்கும் இது பொருந்தும். இங்கே ஐயா தான்ஸ்ரீ இருக்கிறார்கள். தான்ஸ்ரீ ஐயாவைப் பார்த்து இந்தியாவில் சென்னைக்கு வரும் போது என்னுடைய வீட்டிற்கு அவசியம் வரவேண்டும் என்று ரொம்ப அன்பா அழைத்தால் வருவார். அப்படி இல்லாமல் போகும் போது ஒயிலா ஒரு சல்யூட் வைத்துவிட்டுப் போனால் அவர் வருவாரா? உள்ளார்ந்த அன்போடு அழைத்தால் தானே யாரும் வருவார்கள்?

இதேபோலத்தான் பிதிர்ப்பதத்தில் தங்கி இருக்கும் நமது பெரியோர்களையும் மிக்க அன்போடு கூப்பிட்டால் ஓடி வருவார்கள்.

இப்படிப் பெரியோர்களை அழைத்துப் போற்றுகிறார்களே இந்தப் பூவுலகில்–இவர்களே புண்ணியர்கள் என்கிறார் திருமூலர். புவலோகம் போற்றுநர் புண்ணியத்தாரே என்று பாடினார். இந்தப் புண்ணியர்கள் இல்லை என்றால் இந்த உலகம் வாழாது.

இனி, முதலில் கூறிய திருமந்திரப் பாடலால் குறிப்பிட்ட பெரியோரின் இடத்தை கண்டுபிடித்து விட்டோம். இரண்டாவது பாடல் மூலம் அவரை வரவழைத்து விட்டோம்.

ஒரு தமிழாகமத்தில் கிரியைகள் எல்லாம் எவ்வளவு காரணகாரியத் தொடர்புடன் காணப்படுகின்றன பாருங்கள்! இதை நாம் புரிந்துகொள்ளத்தவறி விட்டோம். பெரியோர்களே! திருமந்திரம் ஒரு பொக்கிஷம்–களஞ்சியம்! அதில் கிரியை முறைகள் எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன!

நமக்குப் பயன்படும் என்று தானே சிந்தித்து சிந்தித்து ஆண்டுக்கு ஒன்றாக ஒரு பாடல் பாடினார். அதைத் தவறவிட்டால்–அதைப் பயன்

அதைப் பயன்படுத்தாமல் விட்டால் அவர் மனம் என்ன பாடுபடும்! பெரியோர்களே! இந்த வேட்டி–நான் இப்போது கட்டி இருக்கிற வேட்டி–நான் வாங்கியது இல்லை. (அன்பர் திரு. தர்மலிங்கம் ஏற்பாட்டில் நடந்த திருமண ஆண்டு நினைவு விழா ஒன்றில் திருமுறை பாடிச் சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சியில் அளித்தது). அவரும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறார். இதை நான் கட்டிக்கிட்டா, நாம குடுத்ததை ஐயா கட்டிட்டிருக்காரு என்று அவர் மனம் மகிழ்வார்.

அதைப் போல சிந்தை செய்து பாடியருளிய பாடல்களை நாம் பயன்படுத்தவில்லை என்றால் திருமூலருக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்? திருமூலர் மனம் மகிழ வேண்டுமானால், அதன் உண்மையான பயன் பெற வேண்டுமானால் நீங்கள் இதைக் கைக் கொள்ள வேண்டும்.

முன்னால் கூறிய இரண்டு பாடல்களையும் ஓதி பெரியோர்களை அவரவர்க்க உரிய திதியில் வரவழைத்து அவர்களுக்குத் தூப, தீப அமுதுகாட்டலைச் செய்ய வேண்டும் செய்யும்போது அவரைச் சிவனாகவே பாவித்துச் செய்ய வேண்டும். வண்ணாரப்பேட்டை அன்பர் உதாரணம் சொன்னேனே அதில் அந்த அன்பரின் மகன் சொன்னது போல என் அப்பா சிவலோகம் செல்லமாட்டார் என்றெல்லாம் சொல்லாமல் சிவனாகவே பாவித்து தூப, தீப, அமுதுகாட்டலைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்துவரின் இந்த வழிபாட்டினால் அவருக்கும் அவரால் நமக்கும் அளப்பரிய நன்மை கிடைக்கும். இது ஒரு பரஸ்பர உதவி என்று கொள்ள வேண்டும். புத் என்கிற நரகத்தை இல்லாமற் செய்பவன் தானே புத்திரன்.

திதி வழிபாட்டில் பூசை முடியும் போது ஒரு பாடல் சொல்ல வேண்டும். அது 545ம் எண்ணுள்ள பாடல். பாடல் வருமாறு :

அறிவார் அமரர் தலைவனை நாடிச்

செறிவார் பெறுவர் சிலர்த்த் துவத்தை

நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்

பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே

நம்முடைய மூதாதையர்கள் நம்முடன் கூடி இருக்கிறார்கள் என்று எண்ணி உவந்து பாடி தீபாராதனை செய்ய வேண்டும்.

தீபாராதனை செய்ய வேண்டும்.

பெரியோர்களே! சில நேரங்களில் நாம் யாருக்கு வழிபாடு செய்கிறோமோ அவர்கள் வேறு ஒரு பிறவி எடுத்திருக்கலாம். அப்படி பிறவி எடுத்திருந்தால் இந்த வழிபாட்டால் என்ன பயன்? என்ற கேள்வி எழும். அதையும் இந்தப் பாடலிலேயே சொல்கிறார். எல்லாவற்றையும் யோசித்த பின்னால தானே மேடை ஏறணும். பாடலில் திருமூலர் என்ன சொல்கிறார்? செறிவார் பெறுவார் சிலர் தத்துவத்தை திருமூலரே சொல்லுகிறார் சிலபேர் 36 தத்துவத்தை அதாவது வேறு ஒரு உடலைப் பெற்று விடுவது உண்டு. அசர் எப்ப போனார், எப்ப வேற உடலில் வந்தார் என நமக்குத் தெரியாது. எனவே பிறவி எடுத்த பிறகு செய்தாலும் அதை விடாதே! நெறிதான் மிக மிக நின்றருள் செய்யும். அந்தப் பூசையை இறைவன் அந்தப் பெரியவர்வழி ஏற்று நமக்கு அருள் செய்வான் என்றார். எநறி–வழி. யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் என்பது சிவஞான சித்தியார் வாக்கு.

அதாவது நீ உன் அப்பாவை நினைத்து வணங்கும் போது அவர் இல்லாவிட்டாலும் உன் அப்பாவாக ஆண்டவன் அருள் செய்வார் என்றார். இதை இப்படி வைத்துப் பார்ப்போம். அவர் வேறு ஓர் பிறவி எடுக்காமல் இருந்து நீங்கள் அவருக்கு உரிய திதியில் வழிபாடு செய்யாவிட்டால் அவர் மனம் எப்படி வருத்தப்படும் தெரியுமா?

இப்ப நான் சொல்லப் ˙போகிற பெரியவரை தான் ஸ்ரீ ஐயாவிற்கு அவரைப் போன்ற மூத்த சிவனடியார்களுக்கும் தெரியும். அதாவது நான் சொல்வது வாரியார் சுவாமிக்கு முன்னால் மிகவும் பரந்த புகழ்பெற்ற ஞானி ஒருவர் இருந்தார் என்றால் அவர் ஞானியார் சுவாமிகள். என்னுடைய தாத்தா ஞானியார் சுவாமிகளின் முதன்மைச் சீடர். ஞானியார் சுவாமிகளோடு ஆவியுலகில் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நான் மிகவும் ஆவலாய் இருந்தேன்.

ஆவியுலகில் அடியேன் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது மறைந்த–ஒடுக்கமுற்ற மதுரை சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் – தொடர்பு படுத்துகிற பெரியவராய் இருந்தார். நான் சொல்வது இப்போது உள்ள மதுரை ஆதீனமல்ல. கையில் துப்பாக்கி இல்லாமல் விபூதிப்பை மட்டுமே வைத்துக் கொண்டிருந்த பழைய மதுரை ஆதீனம்.

பெரியோர்களே! இங்கே அடியேனது புத்தகசெட் இரண்டு வைத்தருக்கிறேன். இந்த செட்டில் சைவ அனுட்டான விளக்கம் என்ற நூல் இருக்கிறதே–அதை நானாக எழுதவில்லை. ஆவி உலகத்தில் உள்ள பழைய மதுரை ஆதீனம் திருப்பெருந்திரு சோமசுந்தர பரமாச்சாரியார் சைவ அநுட்டனானத்தைக் கொண்டு எழுதச் செய் என்ற ஓர் அன்பர்க்கு (புதுவண்ணை திரு.மு. சண்முகசுந்தரம்) ஆணையிட அதன்படி அவர் என்னை அணுக அடியேன் எழுதியது தான் அந்தப் புத்தகம். அதை வெளியிடும் போது என்க்குப் பழக்கமுள்ள இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு வெளியிட எண்ணி இருந்தேன். சுவாமிகள் ஆவியுலகிலிருந்து வள்ளிமலையில் வெளியிடக என்று சொல்லி விட்டார். அதன்படி அந்த நூலை அங்கே வெளியிட்டோம்.

(கூட்டத்திலிருந்து ஒருவர் சைவ அநுட்டமான விளக்கம் என்ற நூல் மதுரை ஆதினம் எழுதியதா என்று கேட்கிறார்)

இல்லை, இல்லை! இந்த நூல் அடியேன் எழுதியது. ஆவியுலகில் இருந்து பழைய மதுரை ஆதினம் ஆணையிட எழுதியது. மதுரை ஆதினம் அவர்கள் நிலவுலகில் இருந்த காலத்தில் ஆவி உலகைப் பற்றி 10 அல்லது 15 நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். ஆவி உலகைப் பற்றி பல போலி நூல்களும் உண்டு. இவற்றில் எது உண்மை என்று படித்துத் தேற வேண்டும். என்னிடம் ஆவிகளைப் பற்றிய நூல்கள் – 126 புத்தகங்கள் – பல மொழிகளில் எழுதியவை உள்ளன. அத்தனையும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத் தான் அதன் உள்ளே நுழைந்தேன்.

சரி! மதுரை ஆதினம் அவர்களிடம் ஒருநாள் உய்ஜா போர்டு மூலமாக பேசிக் கொண்டிருந்த போது ஞானியர் சுவாமிகளுடன் பேச வேண்டும் என்று என்னுடைய ஆசையைத் தெரிவித்தேன். நான் காலை 9 மணியில் இருந்து உய்ஜா போர்டு மூலம் ஆவி உலகத்துப் பெரியவர்களிடம் (காந்தி, காமராஜ், சத்தியமூர்த்தி போன்ற பெரியவர்கள்) பேசிக் கொண்டிருந்து விட்டு திரும்பும் போது இரவு மணி 8. தொடர்புபடுத்தி வைக்குமாறு மதுரை ஆதினம் அவர்களிடம் இடையிடையே கேட்டுக் கொண்டே இருந்தேன்.

பிற்பகல் 1 மணி ஆனபோது நான் அனுட்டானம் செய்யப்போகிறேன் என்று குருநாதர் போய்விட்டார். அடடா ஆவி உலகிலும் ஆனுட்டானம் செய்கிறார். காவி உலகிலேயே ஒழுங்காக அனுட்டானம் செய்பவர்களைப் பார்க்க இயலாத காலம் இது. இந்தக் காலத்தில் ஆவி உலகில் அனுட்டானம்! ஆச்சரியப்பட்டேன். மீண்டும் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் குருநாதா வந்தார். நான் மீண்டும் ஞானியார் சுவாமியிடம் பேச வேண்டும் என்றேன். என் தொந்தரவு தாங்காமல் நச்சரிக்காதே ! இப்போது ஞானியார் சாமி இங்கே இல்லை. பூமியில் பிறந்துவிட்டார் என்றார். இவ்வளவு நேரம் குருநாதர் தவிர்த்தது ஏன் என்று இப்போது தான் புரிந்தது.

எனக்கு உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. உலகத்து மக்களுக்கெல்லாம் வழி காட்டிய மகான் மறுபிறவி எடுத்து விட்டார் என்றால் நாம் எல்லாம் எம்மாத்திரம்! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்கு மோ, ஏது வருமோ அறியேன் என்று தாயுமானவர் பாடலின் ஆழம் எனக்கு அப்போது தான் அனுபவமாயிற்று.

உடனே வேறு ஓர் எண்ணம் தோன்றியது. ஞானியர் சுவாமிகள் பிறந்துவிட்டார் என்றால் அங்கே போய் பார்க்கலாமில்லையா? குழந்தையாய் அவர் பிறந்திருந்தால் எந்த இடம் என்று கேட்டேன். குருநாதர் அது பற்றிப் பேசமால் பிற சங்கதிகளைப் பேசினார். நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினேன். குருநாதர் அதைச் சொல்வதற்கு ஆணையில்லை என்றார்.

அப்படியானால் எதையெதைச் சொல்ல வேண்டும் என்பதை அவர்கள் ஆணை பெற்றுத் தான் சொல்கிறார்கள் என்பது தெளிவாகிறது. எதைச் சொல்லக் கூடாது, எதைச் சொல்லலாம் என்று ஆணையிட அங்கே ஆட்கள்– அதிகாரம் படைத்தவர்கள்–இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது.

எனவே இது மாதிரி சிலர் மறுபிறவியும் எடுத்துவிடலாம். அப்படியிருந்தாலும் நீ நெறியாக நின்று வழிபட்டால் அவர்கள் நெறியில் ஆண்டவன் அருள்புரிவான் என்று திருமூலர் கூறுவது எவ்வளவு பெரிய அறிந்து கொள்ள வேண்டிய உண்மை !

இப்படி வழிபட்டுப் பெரியாருடன் கூடல் பேரின்பமாமே என்ற திருமூலர் பாடினார். இங்கே பெரியாருடன் கூடல் என்பது இறந்த நம்முடைய அம்மா, அப்பா மற்றும் மூதாதையர்களைக் குறித்தது. பெரியாருடன் என்று சொன்னால் ஈரோட்டுப் பெரியாரை நினைத்துவிட வேண்டாம். எனவே இந்த 3 பாடல்களை ஓதி திதி வழிபாடு செய்யலாம்.

இதுபற்றி என் சொந்த அனுபவத்தைக் கூறுகிறேன். அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று கூறுவதை விட சொந்த அனுபவம் வலிய சான்றல்லவா? நான் பணி செய்த மின்வாரியத்தில் கடன் பெற்று வீடு வாங்கினேன். அந்த வீட்டில் சில மாற்றங்கள் செய்து கிரகப்பிரவேசம் செய்தேன். எங்கள் மரபு

என்னவென்றால் பொங்கலுக்கு அடுத்துவரும் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல்–அன்று மூதாதையர்க்கு வழிபாட செய்வார்கள். அது காலக் கோலத்தில் பொங்கலன்றே செய்வதும் உண்டு. இது எங்கள் குலவழக்கம். சிலர் மாளய அமாவாசை, ஆடி அமாவாசை என்று சிறப்பாக வழிபாடுவார்கள். என்னுடைய குலமரபுப்படி நான் செய்ய வேண்டிய திதி வழிபாடு பொங்கலன்றும் மாட்டுப் பொங்கலன்றும் இரண்டு பட்டு வந்தது. எனவே கிரகப் பிரவேசம் செய்த முதல் பொங்கலன்று இந்த வழிபாட்டைச் செய்யலாம் என்று முடிவு செய்தேன்.

பொங்கலன்று மாடியில் சூரிய வழிபாடு நடக்கும். காலையில் சைவசந்தி, நித்திய பூசை இவற்றை முடித்துக் கொண்டு மாடிக்கு சூரிய வழிபாடு செய்ய வந்தேன். திருமந்திரத்தில் வரும் அண்டாதித்தன முதல் சிவாதித்தன் வரை பாடல்களைப் படித்து சூரிய பூசைக் கிரியைகளைச் செய்து முடித்தேன். மாடியில் கால் வைக்க முடியாதபடி கொளுத்தும் வெய்யில். இந்த வெய்யிலில் சூரிய வழிபாடு முடித்துவிட்டு கீழே வந்து திதி வழிபாடு செய்ய நடுவீட்டில் பெரியவர்களை வரழைத்து – யதாஸதானம் என்பார்கள் – அந்த நிரந்தர உறைவிடத்தில் முன்னால் கூறிய திருமந்திரப் பாடல்களைக் கொண்டு கிரியைகளைச் செய்து தூப, தீப, அமுதூட்டல் செய்து பூசையை நிறைவேற்றினேன். இந்த வழிபாட்டிற்காக எனது தமையனாரையும் வரவழைத்திருந்தேன். அடியேன் திருமந்திரத்தால் கிரியைகளைச் செய்து முடித்து தீபாராதனை காட்டி முடிக்கவும் கொளுத்திய வெய்யில் போய் எங்கிருந்தோ மேகங்கள் திரண்டு சுமார் அரைமணி நேரம் கொட்டும் மழையாகப் பெய்தது.

என் தமையனார் அன்று உடனே திருச்சிக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அவரை ஸ்கூட்டரில் ஏற்றி வழியனுப்புவதற்காக உடன் சென்றேன். நான் இருப்பது பதினோராவது தெரு. தெருவில் இருந்து புறப்பட்டுச் சென்று பார்த்தால் பதினோராவது தெருவிலும் அதற்கடுத்த 12வது தெருவிலும் மட்டுமே அரைமணி நேரமாக கனமழை பொழிந்துள்ளது. அந்த இர்டு தெரவையும் தாண்டினால் ஒரு துளி கூட மழை பெய்திருக்கக் காணோம். அப்படியானால் திருமந்திரத்தினால் செய்யப்பட்ட கிரியைகளுக்கு வரவழைக்கப்பட்ட தென்புலத்தார் மனம் அவ்வளவு குளிர அதன் அடையாளமாக அந்த இரண்டு தெருவில் மட்டும் மழை கொட்டி இருக்கிறது. இது ஓர் அதிசயமல்லவா? திருமந்திரத்தினால் செய்யப்படும் கிரியைகள் எவ்வளவு பலனிள்கிகறது என்பதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

இதற்கே இந்தப் பலன் என்றால் திருக்குடமுழுக்குகளைத் திருமந்திரத்தால் செய்தால் நாடும நகரமும் எவ்வளவு செழிக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். ஆனால் திருமந்திரத்தால் கும்பாபிடேகம் செய்வது எப்படி என்று நான் இப்போது சொல்லப்போவதில்லை. அதற்கென்று ஒரு தனி நூலே எழுதியுள்ளேன். அது வெளிவரும் போது தனி வகுப்பு எடுத்து பயிற்சி அளிக்கும் போது அவற்றை விவரிப்பேன்.

முதலில் திருமுறை வழிபாடு பார்த்தோம். அப்புறம் திதி வழிபாடு பார்த்தோம். இப்போது சூரிய வழிபாட்டினைப் பார்ப்போம். இது சிவபூசையில் முதலில் செய்யப்படுவது. திருமந்திரத்தில் சூரியன் ஐந்து வகையாக வைத்து வழிபடப் படகிறது. வடமொழி ஆகமத்திலே கூட இவ்வளவு விரிவாக, இவ்வளவு சிறப்பாக சூரிய பூசை சொல்லப்படவில்லை.

திருமந்திரத்தில் 1975 ஆம் பாடலைப் பாருங்கள். அதற்கு மேல் தலைப்பைப் பார்த்தீர்களேயானால் அண்டாதித்தன் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதில் சில பாடல்கள் இருக்கும். அதன் பின்னால் இரண்டாவதாக பிண்டாதித்தன் என்ற தலைப்பில் சில பாடல்கள் இருக்கும். மூன்றாவத மனவாதித்தன் நான்காவது ஞானாதித்தன் ஐந்தாவது சிவாதித்தன். இது முடிவது 2004ம் பாடலில். மொத்தம் 30 பாடல்கள். இத்தனை பாடல்களும் சூரிய பூசைக்குப் பயன்படுவன.

சூரிய பூசையை எப்படிச் செய்ய வேண்டும்? சூரியனுக்கு உள்நின்று இயக்கும் சிவபெருமானை எண்ணி வழிபாடு செய்ய வேண்டும்.

அப்பர் சுவாமிகள் அருக்கனாவான் அரனுரவல்லனோ என்று பாடினார். அருக்கன் என்றால் சூரியன் என்பது பொருள். அவர் சொன்னது இது தான். சூரியனை வணங்கு. சூரியனுக்குள் இருக்கும், சூரியனை இயக்கும் சிவபெரமானை வணங்கு என்றார். சூரியன் சிவபெருமானாகிய அரனுடைய உருவம். உள்ளே உயிராக இருப்பது சிவபெருமான். அந்த வழியிலே அண்டாதித்தனிலிருந்து ஆரம்பித்து சிவாதித்தனாக வணங்கச் சொல்லியது திருமந்திரம். இப்படி ஒரு வழிபாட்டு முறை வடமொழி ஆகமத்தில் கூட தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால் தமிழாகமமாகிய திருமந்திரமோ தெளிவாகக் கூறுகிறது. இந்தப் பகுதியில் வரும் பாடல்களை விரித்துக் கூறுவதற்கு நேரமில்லை. அன்பர்கள் சூரியபூசைக்கு இந்தப் பாடல்களைப் பயன்படுத்துக என்ற அளவில் அடுத்து வேறு ஒரு முக்கியமான வழிபாட்டுக் கிரியை முறைக்கு உரிய திருமந்திரப் பாடலைப் பார்ப்போம்.

அந்தப் பாடல்,

ஒன்றியவாறும் உடலின் உடன் கிடந்து

என்றும்எம் மீசன் நடக்கும் இயல்பது

தென்தலைக் கேற திருந்து சிவனடி

நின்று தொழுதேன் என்நெஞ்சத்தினுள்ளே

இந்தப் பாடல் சதாசிவலிங்கம் என்ற பகுதியில் வருவது. இது சகளீகரணம் செய்வதற்குரிய மந்திரப்பாடல். சகளீகரணம் இல்லாமல் எந்தக் கடவுளையும் வணங்குவது இயலாது. வழிபாட்டக் கிரியை முறையில் இது மிக மிக முக்கியமானது.

பெரியோர்களே! மிகப் பெரிய நிலையில் இருக்கும் கடவுட் பெருமானை–மிக மிக சூட்சுமமாக இருப்பவரை எளிதில் கல்லில் ஏற்றிவட முடியாது. என் கையில் பனிக்கட்டி இருக்கிறது என்று வையுங்கள்.அதை யார் மீதாவது நான் வீசி எறிந்தால் எறியுண்டவர்க்கு அது வலிக்கும். காரணம் பனிக்கட்டி திடப்பொருள். அதுவே தண்ணீரை வீசினால் வலி ஒன்றும் பெரிதாய் இருக்காது, ஆனால் பனிக்கட்டியும் தண்ணீரும் ஒன்று தான். அது திடமாக இருக்கும் போது வலிக்கிறது. நீராக இருக்கும் போது நெகிழ்கிறது. திடமாப இருந்த நிலையில் இரந்து சூக்குமமாகிவிட்ட நிலை நீர். திடமானதைத் தூலாம் என்று சொல்வோம். தூலமாய் இருந்த பனிக்கட்டி சூக்குமமாய் நீராகி விட்டது. தமிழில் சூக்குததட எனடபராத நோன்மை என்று சொல்வோம். தூலம் என்பதை பருப்பொருள் என்போம். பருப்பொருளாக இருந்த பனிக்கட்டி உருகி நீரானதும் நோன்மையாகிவிட்டது. பனிக்கட்டிக்கு வடிவம் உண்டு. நீருக்கு எது வடிவம்? எந்தப் பாத்திரத்தில் அல்லது எந்த பாட்டிலில் அடைகிறோமோ அந்த வடிவத்தை நீர் எடுத்துக் கொள்கிறது. ஆனால் தீக்கு எந்த வடிவமும் கிடையாது. நீரைத் தொடலாம். ஆனால் தீயைத் தொட முடியுமா? எனவே நீரைவிட தீ நோன்மையானது தீயை விடக்காற்று நோன்மையானது காற்றை விட ஆகாயம் நோன்மையானது. அவ்வளவு நோன்மையாக இருந்ததால் தான் அப்படி ஆகாயம் என்ற ஒரு பொருளே அல்லை என்ற பௌத்தர்கள் கூறினார்கள். ஆனால் இன்று ஆகாயத்தின் இருப்பை விஞ்ஞானம் நிரூபித்து விட்டது. சைவ சித்தாந்திகளோ ஆகாயம் உண்டு என்று விஞ்ஞானம் நிரூபிப்பதற்கு முன்னாலேயே கூறினர். ஆகவே நாம் அதை உணர்ந்தவாக்ள. ஆகாயத்தலம் தானே சிதம்பரம்?

இந்த ஐந்து பூதங்களை விட நோன்மையானவை இந்தப் பூதங்களின் காரணமான தன் மாத்திரைகள் தன் மாத்திரைகளை விட நோன்மையானவை கன்மேந்திரியங்கள் கன்மேந்திரியங்களை விட நோன்மையானவை ஞானங்கள். ஞானேந்திரியங்களை விட நோன்மையானவை மனம் என்று சொல்லப்படும் நான்கு அந்தக் கரணங்கள். மனத்தை ஒப்புக் கொள்ளும் மருத்துவர்கள் கூட இது தான் மனம்

என்று உடலை அறுத்துக் காட்டியதாக வரலாறில்லை. மனம் அவ்வளவு நோன்மையானது. மனதத்துவத்தை விட விந்தியா தத்துவங்கள் நோன்மையானவை. வித்தியா தத்துவங்களை விட சிவதத்துவம் நோன்மையானவை. சிவதத்துத்தில் மேலான நாத தத்துவத்தை விட நோன்மையானது ஆன்மா. ஆன்மாவை விட மிக நோன்மையானது பரமான்மாவான கடவுள்.

இத்தனை நோன்மையான பரமான்மாவை அதாவது கடவுளை மிக மிகத் தூலமான மண் தத்துவம் என்று கூறப்படும் கல்லில் நேரடியாக கொண்டுவர முடியாது. முதலில் பரமான்மாவை நம் ஆன்மாவிற்குக் கொண்டு வர வேண்டும். நம் ஆன்மாவிலிருந்து உடம்பிற்குக் கொண்டு வரவேண்டும். உடம்பிலிருந்து எதிலே நினைக்கிறோமோ அதிலே கொண்டு வர வேண்டும். எதிரில் உள்ள பொருளுக்குக் கொண்டு வருமுன் உடம்பிற்குக் கொண்டு வருகிறாமே அது தான் சகளீகரணம் எனப்படும். தமிழில் மெய்யொன்றால் என்று கூறுவர்.

உதாரணத்திற்கு நம் வீட்டில் கௌரி நோன்பு என்றால் கவசம் வைத்து வழிபடுவோம். நேரடியாகக் கலசத்திற்கு அம்பிகையைக் கொண்டு வரமுடியாது. நம் உடம்பில் ஆவிர்ப்பாவம்–சகளீகரணம் செய்து அதில் இருந்து கலசத்திற்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும். இது தான் முறைமை. இது தான் சகளீகரணம் என்ற கிரியையின் உட்கிடை.

சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பாடலில் இதைக்குறிப்பிடுகிறார்.

சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச்
சகளி செய் திறைஞ் சகத்தியர் தமக்கு
சிந்து மாமணி அணிதிருப் பொதியில்
சேர்வு நல்கிய செல்வம்கண் டடைந்தேன்

அகத்தியரே சகளீகரணம் செய்து வழிபட்டடார் என்று சுந்தரர் கூறுகிறார்.

எனவே எந்த வழிபாடு செய்தாலும் சகளீகரணம் செய்து தான் வழிபாடு செய்ய வேண்டும் என்பது தெளிவு.

இங்கே நாம் பார்த்த ஒன்றிய வாறும் எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல் எல்லா வழிபாட்டிலும் பயன் படுத்திக் கொள்ளக்கூடிய பொதுச் சகளீகரணப் பாடல். யாரை வணங்கி னாலும் சிவபெருமான் தான் வந்து மன்னின்றருள் புரிவான்.

சம்பந்தர் ஒரு பாடலில் கூறும் போது எந்த வேள்வி செய்தாலும் அதில் சிவபெருமானை முன்னாக வைத்தே வேள்வி ஆற்ற வேண்டும் என்று கூறினார். இதுவே ஆதி மாமறை விதி என்றார்.

ஆதிமா மறை விதியினால் ஆறுசூழ்வேணி
நாதனாரை முன்னாகவே புரியுநல் வேள்வி

வேள்வியே சிவபெருமானை முன்னாக வைத்துத்தான் ஆற்றுதல் வேண்டும் என்றால் ஏனைய வழிபாடுகளைப் பற்றிக் கூற வேண்டாம். எனவே இதுவே ஆதி மாமறை விதி என்றதனால் முன்னால் கூறிய ஒன்றியவாறும் என்னும் சிவ சகளீகரணப் பாடலை எல்லா வழிபாட்டிலும் பொதுச் சகளீரணம் பாடலாகப் பாடியே தொடங்க வேண்டும்.

அப்புறம் அந்தந்த தேவதைகளுக்குரிய சகளீகரணப் பாடல்கள் இருப்பின் அவற்றைச் சிறப்பு சகளீகரணப் பாடல்களால் ஓதக் கொள்ளளலாம். இது ஒரு முறைமை ஆதி மாமறை விதி முறைமை.

பொதுச் சகளீகரணப் பாடலைப் பாடிப் பிறகு அம்பிகைக்கு அதாவது கௌரிக்கு உரிய சிறப்புச் சகளீகரணப் பாடலைப் பாடினால் கௌரி–அம்பிகை கலசத்தில் எழுந்தருளி விடுவாள்.

இங்கே கூறிய பூசையைப் பற்றியும் அதற்குப் பயன்படும் பாடல்களையும் பார்த்தோம். இங்கேயும் அதே முறைமையில் சூரிய சகளீகரணப் பாடலை ஒதுக. பாடல் வருமாறு

உணர்ந்தேன் உலகில் ஒண்பொருளானை

கொணர்ந்தேன் குவலயம் கோயில்என் நெஞ்சம்

புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே

பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே

இந்தப் பாடல் 1748ஆம் பாடல். இதைப்பாடி தலை உச்சியில் வைத்த மலரை எதிரிரல் உள்ள கலசத்தில் அல்லது சந்தனக்கூம்பில் அல்லது படத்தில் சொரிக. உடனே சூரியன் அங்கே எழுந்தருளி விடுவான். உடன் தீப, தூப, அமுதூட்டலைச் செய்து முன்னர்க் கூறிய அண்டாதித்தன் முதல் சிவாதித்தன் வரை உள்ள 30 திருமந்திரப் பாடல்களை ஒவ்வொரு பாடலுக்கும் மணியொலித்து மலரிட்டு அருச்சனை செய்து மகாதீபாராதனை செய்து வழிபாட்டை நிறைவு செய்யலாம்.

பெரியோர்களே! முன்னே சொன்ன சூரிய சகளீகரணப் பாடல் (1748) சதாசிவலிங்கம் என்கிற பகுதியில் காணப்படுவது. சதாசிவம் என்பது கோவில் கோபுர கலசத்தைக் குறிக்கும். இதையே தூலலிங்கம் என்றும் கூறுவர். கருவறைக்கு உள்ளே இருப்பது சூக்குமலிங்கம். ஆகவே சதாசிவப்பகுதியில் சூரியனுக்கு உரிய சகளீகரணத்தை செய்யும் பாடலை திருமூலர் ஏன் பாடினார் என்றால் அதைப்பாடி சூரிய சகளீகரணம் ஆகுமானால் சூரியனிடமிருந்து அருளாற்றலை கோபுரக் கலசம் வாங்கிக் கீழே அனுப்பும். இப்படியே சந்திரனிட மிருந்து ஆற்றலை வாங்கிக் கீழே அனுப்ப இதே பகுதியில் சந்திர சகளிகரணப்பாடலும் உண்டு.

அடுத்து இன்னொரு உதாரணம் பார்ப்போம். சரஸ்வதி பூசை செய்ய வேண்டுமானால் சரஸ்வதிக்குக் கலசம் அல்லது படத்தை முன் வைத்து மாலை அலங்காரங்கள் எல்லாம் செய்து ஆயத்தம் செய்ய வேண்டும். கலசத்தில் (அ) படத்தில் சரஸ்வதியை எழுந்தருளச் செய்ய முன் சொன்னது போல ஒன்றியவாறும் எனத்தொடங்கும் பாடல் ஒதுக. பின்னர் கீழ்வரும் கலைமகளுக்கு உரிய சிறப்புச் சகளீகரணப் பாடலை ஒதி சகளீகரணம் செய்து கலசத்தில் (அ) படத்தில் கலைமகளை எழுந்தருளச் செய்து தூப, தீப, அமுதூட்டல் செய்து கலைமகள் துதிப்பாடல்கள் பாடி மகாதீபாராதனை செய்து வழிபாட்டை நிறைவு செய்யணும்.

கலைமகளுக்கு உரிய சிறப்பிச் சகளீகரணப் பாடல் வருமாறு :

தலைவி தடமுலை மேல்நின்ற தையல்

தொலைவில் தவம் செய்யும் தூய்நெறித் தோகை

கலைபல வென்றிடும் கன்னிஎன் உள்ளம்

நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே! – (பாடல் 1060)

இதே மாதிரி லட்சுமிக்கு உரியசகளீகரணப் பாடலும் உண்டு. அது,

கொம்பனை யாளைக் குவிமுறை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்து வைத்தேனே – (பாடல் 1058)

ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
நேரே நின்றோதி நினையவும் வல்லார்க்கும்
காரேர் குழலி கமல மலரன்ன
சீரேயும் சேவடி சிந்தை வைத்தாளே – (பாடல் 1200)

திருமந்திரத்தில் இல்லாதது எதுவுமில்லை அதில் சொல்லாதது எதுவுமில்லை. எது எது எதையெதைக் குறித்தது என்று புரியாததால் நாம் இதைப் பயன் படுத்தாமலே போய்விட்டோம். இப்போது எடுத்துச் சொன்னால் புரிகின்றதல்லவா?

ஒரு பிள்ளைக்கு அப்பா கொஞ்சம்முதல் கொடுத்து வியாபாரம் செய் என்றால் பிள்ளைதான் வியாபாரம் செய்து முதலைப் பெரக்க வேண்டும். அப்பாவே கூட நின்று எல்லா வேளையும் ஊட்டி ஊட்டி உதவ முடியாது.

அது போல பொதச் சகளீகரணம் செய்ய இந்தப்பாடல் அதன் பின் சூரிய சகளீகரணத்திற்கு இந்தப் பாடல் என்று சொன்னால், உடனே பிற எல்லா வழிபாட்டிற்கும் உரிய பாடல்களை நாமே தெரிந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் தானே சதாசிவலிங்கப் பகுதியில் 1747 ஆம் பாடலில் பொதுச் சகளீகரணப் பாடலை வைத்த திருமூலர் உடன் சூரிய சகளீகரணப் பாடலை அதற்கடுத்த பாடலாக 1748 ஆம் பாடலாக வைத்து வழி காட்டினார்?

பள்ளியில் கூட ஆசிரியர் முதலில் ஒரு கணக்கு போட்டுக் காட்டி இது தான் முறை என்று வழிகாட்டுவார். அப்புறம் அதைத் தொடர்ந்து நாம் தான் அந்த முறையைப் பின்பற்றி ஏனைய கணக்குகளைப் போட வேண்டும்.

எனவே திருமந்திரப் பாடல்களை வெறுமனே பாடல் பாடலாகப் பாடி பதம் பதமாகப் பிரித்து சொல்லுக்குச் சொல் உரை கண்டால் போதாது. ஒரு பாடலுக்கு கூறுகிற பொருள்களில் மூன்று வகை உண்டு. அவை 1) செம்பொருள் 2) இலக்கணைப் பொருள் 3) குறிப்புப் பொருள்.

முதலாவதாக, செம்பொருள் என்றால் சொல்லுக்குச் சொல் பொருள் சொல்லுவது. அதாவது பதவுரை– என்ன சொல் உள்ளதோ அதற்கு உரிய பொருளை உரையாகச் சொல்லுவது.

இரண்டாவதாக இலக்கணைப் பொருள் அதாவது ஒன்றைச் சொல்வார்கள். அந்த ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாக இருக்கும். எனவே தொடர்புடைய எல்லாவற்றையும் சொல்லாமல் ஒன்றைச் சொன்னால் தொடர்புடைய எல்லாப் பொருளையும் எடுத்துக் கொண்டு புரிந்து கொள்ளும் பொருள் இலக்கணைப் பொருள்.

ஒரு சின்னக் குழந்தை முதல் வகுப்பு படிக்கிற குழந்தை. அவனைக் கூப்பிட்டு வச்சிப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று வைத்தக் கொள்வோம். அவன்கிட்ட நான் என்ன சைவசித்தாந்தமா பேச முடியும்? என்ன சாப்பிட்டாய் என்று கேட்பேன்.

சாதம்

எப்படா சாப்பிட்டே?

இப்ப

யார் ஊட்டினா?

அம்மா

அந்தக் குழந்தை மழலையில் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்.

இங்கே அந்தக் குழந்தை சாதம் சாப்பிட்டது என்றால் வெறும் சாதமா சாப்பிட்டிருக்கும்? அவன் அம்மா அவனுக்கு முதலில் பருப்புச் சாதம் அல்லது சாம்பார் சாதம் ஊட்டியிருப்பா. அப்புறம் ரசம் சாதம் கொஞ்சம். அப்புறம் தயிர் சாதம் கொஞ்சம் கொடுத்திருப்பா.

இங்கே அந்தக் குழந்தை சாதம் உன்று ஒன்றைத் தான் சொல்லியது. ஆனால் ஒன்றிலிருந்து மற்றொன்றை நாமாக பருப்புச் சாதம், சாம்பார் சாதம், தயிர் சாதம் என்று ஊகித்தக் கொள்கிறோம். இப்படி ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாக இருக்கும் போது ஒன்றிலிருந்து மற்றொன்றைப் புரிந்து கொள்வது தான் இலக்கணைப் பொருள்.

அடுத்தது குறிப்புப்பொருள். பாடலில் அந்தச் சொல்லிலே வந்திருக்காது. ஆனால் அந்தக் குறிப்பை உய்த்துணரும்படி சொல்லி இருப்பார்கள். இதைச் சொல்லெச்சம் பொருளெச்சம் என்றெல்லாம் இலக்கணத்தில் கூறுவார்கள்.

தமிழிலக்கியத்தில் அகத்துறையில் வரும் பாடல்கள் எல்லாம் குறிப்புப் பொருளில் தான் பாடப்பட்டிருக்கும். அகநானூற்றிலே உள்ள நானூறு பாடல்களும் குறிப்புப் பொருளிரேயே பாடப் பட்டவை. சொல்லுக்குச் சொல்பொருள் கூறும்படி நேரடியாகச் சொன்னால் அங்கே ஒரே காதல் மயமாகி விரசமாகி விடும். என்னடா காதலைப் பற்றியே நானூறு பாடலா என்று அலுத்துக் கொள்வான். குறிப்புப் பொருள்படப் பாடினால் அந்தக் குறிப்பை உய்த்துணரும் போது ஒரு விடுகதைக்கு விடை கண்டது போல சுவாரசியமாகி விடும். கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் என்று பாடினார் வள்ளுவர். கண்ணும் கண்ணும் பேசுவது என்றால் அங்கே மொழி ஏது? எல்லாம் குறிப்பினாலே உணரப்படும். சொல்லே இல்லாமல் குறிப்பினால் இருவர் மட்டும் உயர்வதனாலே தானே அதை அகத்துறை என்றான் தமிழன். அங்க போய் எல்லாம் வெளிப்படையா சொன்னா விரசமாகி விடும்.

காதல் மட்டும் குறிப்புப் பொருளில் வருவது அல்ல. அதற்கு உள்ளும் அந்தச் சிற்றின்பத்திற்குள்ளும் பேரின்ப பொருளைக் குறிப்பாக வைப்பது உண்டு. அப்படிப் பாடியது தானே திருக்கோவையார்?

இந்த திருக்கோவையாருக்கு ஒரு பழைய உரை இருக்கும். அதற்கு உள்ளும் அந்தச் சிற்றின்பத்திற்குள்ளும் பேரின்பப் பொருளைக் குறிப்பாக வைப்பது உண்டு. அப்படிப் பாடியது தானே திருக்கோவையார்?

இந்த திருக்கோவையாருக்கு ஒரு பழைய உரை இருக்கும். அதற்கு மேலே கொளு என்று ஒரு கண்ணி கொடுத்திருப்பார்கள். இந்தக் கொளுவில், குறிப்பிட்ட திருக்கோவையார் பாடலில் உள்ள பேரின்பப் பொருள் என்ன என்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கும். இந்தக் கொளு என்பது தான் பின்னாளில் ஆங்கிலத்தில் குளூ என்று மாற்றி எழுதி வைத்தக் கொண்டான்.

திருவள்ளுவர் காமத்துப்பாலை அதாவது அகத்துறையை 25 அதிகாரமாக வைத்தார். அதை மாணிக்கவாசகர் 400 துறையாக விரித்து திருக்கோவையாரைச் செய்தார். பிறகு கடிகை முத்துப் புலவர் என்று ஒருவர் வந்தார். அவர் திருக்கோவையார் காட்டிய நானூறு பாடல்களைப் பாடி விரித்துரைத்தார். அதற்கு ஒருதுறைக் கோவை என்று பெயர். இந்த ஒவ்வொரு பாடடிற்கும் சேதுபரி ராஜா தங்கத்தினால் ஆன ஒரு தேங்காயைக் கொடுத்தாராம். இப்ப நானும் அப்படிப் பாடுவேன். ஆனால் அந்த ராஜா இப்ப இல்லை.

ஆ! ஒரு துறைக்கே 400 பாடல்கள்! எவ்வளவு நுட்பமான அறிவு! எவ்வளவு பாராட்டலாம் அந்தப் புலவரை!

எனவே அகத்துறைப் பாடல்கள் முழுமையும் குறிப்புப் பொருளையே அடிப்டையாகக் கொண்டு பாடப்பட்டவை. இந்தக் குறிப்புப் பொருளிலும் குறிப்புப் பொருளை வைத்துச் சிவபெருமானைப் போற்றிப் பாடினார்கள் புலவர்கள். எனவே தானட பொய்படிமை இல்லாத புலவர் என்று போற்றப்பட்டனர்.

சொல்லே கூறப்படாமல் குறிப்பு காட்டி பொருளை உய்த்துணரச் செய்வதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்!கறேன். ஞானசம்பந்தர் வரலாற்றறை சேக்கிழார் பாடுகிறார். ஞானசம்பந்தர் பிறந்தார் வளர்த்தார் தொட்டிலிலே இட்டார்கள். பிள்ளை வளர்ந்து மூன்றாம் ஆண்டில் ஞானப்பால் உண்டு தமிழமுத மறை மொழிகளைப் பொழியும் வரை 3 ஆண்டு வளர்ச்சியையம் பாடுகிறார் சேக்கிழார். தொட்டிலிலே இடுவதைப் பாடும் போது இவர் தான் முருகன் என்று குறிப்புப் பொருளில் கூறுகிறார்.

இக் குழந்தையை மெல்ல மெல்ல வளாக்கிறார். அவரைத் தான் தன் கையால் வளர்க்க வேண்டும் என்று சேக்கிழாருக்கு ஆசை. ஞானசம்பந்தருக்கு ஒரு சின்ன பிள்ளைத் தமிழே பாடிவிடுகிறார்.

முதலில் காப்பு பிறகு தாலாட்டு அப்புறம் சப்பாணி என பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களை வைத்து இலக்கண மரபுப்படி பாடுகிறார்.

ஆறுலவு செய்ய சடை ஐயர் அருளாலே

பேறுல கினுக்கென வரும் பெரியவர்க்கு

வேறுபல காப்பு மிகை என்றவை விரும்பார்

நீறுதிரு நெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்

இப்படிப்பாடி ஞானசம்பந்தர்க்கு திருநீற்றுக் காப்பு செய்கிறார்.

பெரியோர்களே! குழந்தைப் பருவத்திலேயே தழும் பருவம் இருக்கிறதே அது மிகவும் அழகான பருவம்ம்! தவழும் பருவத்தில் குழந்தை முன் யாராவது போக வர சென்றால் அந்தக் குழந்தை அவர்கள் போகும் பக்கமெல்லாம் பக்கமெல்லாம் தலையைத் திருப்பித் திருப்பிப் பார்க்கும். ஞானசம்பந்தர்க்

குழந்தையும் இப்படித் தலையை அசைத்து அசைத்துப் பார்க்கிறதாம். அந்த அசைவுக்கு சேக்கிழார் பொருள் சொன்னார். என்ன தெரியுமா? சிவபெருமானுக்குத் தொண்டுச் செய்வதல்லாமல் பிற சமயத்தொண்டுகளைச் செய்யேன், செய்யேன் என்று ஞானசம்பந்தக் குழந்தை தலையை அசைத்து அசைத்துச் சொன்னதாம்.

பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்

திருமுகமண் டலமசயச் செங்கீரை ஆடினார்.

சேக்கிழாருக்கு ஈடு இணையாக வேறு யாரையும் சொல்ல முடியாது என்று நாமும் தலையை அசைக்க வேண்டியது தான். இப்படி அற்புதம் அற்புதமாக எல்லா பருவங்களுக்கும் பருவத்திற்கு ஒன்றாகப் பாடல்களைப் பாடுகிறார் சேக்கிழார்.

தாயர் மடித் தலத்தினிலும் தயங்குமணித் தொட்டிலும் இது தாலாட்டுப் பருவப் பாடல். மொத்தம் பத்துப் பருவம். இதில் ஒரு பருவத்தை மட்டும் பாடாமல் விட்டுவிட்டார். ஏன் தெரியுமா? ஏனென்றால் 3 ஆண்டுகள் முடிந்ததும் இந்தக் குழந்தை எம்பிராட்டியாகிய அம்பிகையின் ஞானப்பால் உண்ணப் போகிறது. அவ்வாறு ஞானப்பால்உண்ணப் போகும் வாயை எச்சிலாக்கக் கூடாது என்று முத்தப்பருவத்தை வேண்டுமென்றே விட்டார். (கூட்டத்தினர் கை தட்டல்)

தாம் இப்படி ஒரு குறிப்புப் பொருளில் முத்தப் பருவத்தைப் பாடாமல் விட்டதற்கே இன்னோரிடத்தில் குறிப்பு வைத்தார். அதாவது சிறுத்தொண்டர் புராணத்தில் இந்தக் குறிப்பைக் காட்டுகிறார். அங்கே அரிந்து சமைத்து அடியார்க்கு அமுதாகப் போகிற தம் குழந்தை சீராளனைத் குளிப்பாட்டினார்களாம் பவுடர் போட்டார்களாம் (கூட்டத்தினர் முறுவலிக்கிறார்கள்) ஏன்? நறுமணத் தூள் எல்லாம் அப்பவே உண்டு. அதை இந்தக் காலப் பாஷையில் சொன்னேன். அவ்வளவு தான். சரி, சீராளக் குழந்தைக்குப் பவுடர் அடித்து பொட்டு வைத்தார்களாம். உடன் தூக்கி முத்தமிடப் போகும் போது இக்குழந்தை அடியார்க்குரியது அதை எச்சில் செய்யக்கூடாது என்று எண்ணி முத்தமிடாமல் விட்டு விட்டார் என்று சேக்கிழார் பாடினார்.

இந்த எண்ணம் சேக்கிழார் மனதில் ஊற அதன் அடிப்படையிலே ஞானச்சம்பந்தக் குழந்தைக்குத் தாமும் முத்தப்பருவத்தைப் பாடாமல் விட்டார். இதை நாமாக உணரும் படி சிறுத்தொண்டர் புராணத்திலே காட்டினார்.

பெரியபுராணத்தை முழுமையாகப் படித்தால் தான் அதற்கு உடைர எழுத முடியும். இது சி.கே.எஸ., உரையில் கூட இருக்காது. அடியேன் இறையருளால் உணர்ந்து வெளிப்படுத்திச் சொன்னேன்.

எனவே குறிப்புப் பொருள் மிக மிக முக்கியம். செம்பொருளை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். இலக்கணைப் பொருள்களை பரந்த அறிவுள்ளவர்கள் சொல்லலாம். ஆனால் குறிப்புப் பொருளை இறையருளால் தான் சொல்ல முடியும். இதைத் திருமந்திரத்திலேயே திருமூலர் சொல்லி இருக்கிறார்.

அருட்கண் இல்லார்க்கு அரும்பொருள்கள் தோன்றா என்பது திருமந்தரவாக்கு. அருட்கண் இருந்தால் தான் அருளாளர் நூல்களுக்கு உரை எழுத முடியும். அருள் இல்லாவிடில் உரை எழுத இயலாது. அப்படி மீறி எழுதினால் அந்த உரை தலையணை உறை ஆகிவிடும்.

இந்தக் குறிப்புப் பொருளில் தான் திருமூலர் வழிபாட்டிற்கு உரியகிரியை முறையை திருமந்திரத்தில் கூறினார். முதலில் ஒன்றியவாறும் என்று தொடங்கும் பாடலை பொதுச் சகளீகரணம் செய்யப்பாடு என்று அந்தப் பாடலைப் பாடி அடுத்து க்ஷரியனைச் சகளீகரணம் செய்வதற்குச் சிறப்புப பாடலைப் பாடினார். இங்கே இதே மாதிரி எல்லா வழிபாட்டிற்கும் செய் எனற் குறிப்புப் பொருளை வைத்தார். இந்தக் குறிப்புப் பொருளை உணர்ந்து ஏனைய கடவுளர் வழிபாட்டிற்குரிய பாடல்களை எடுத்தாளுதல் வேண்டும். எல்லாக்

கிரியைகளுக்கும் உரிய பாடல்கள் திருமந்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே வைக்கப்பட்டுள்ள குறிப்புப் பொருளை உணர்ந்து அந்தந்த பாடல்களைக் கண்டுபிடித்து நாம் கையாளுதல் வேண்டும். இது பெரிய வேலை அறிஞர்களின் கடமை. இதில் ஒன்றிரண்டு கோடிகாட்டியுள்ளேன். எஞ்சியவற்றிற்கு அடியேன் எழுதியுள்ள செந்தமிழாகம திருக்குட நன்னீராட்டு நன்னூலைப் பார்க்கலாம். அது அச்சில் உள்ளது. விரைவில் வெளிவரும் என்று கூறிக்கொண்டு திருமந்திரத்தில் கிரியைகள் என்ற என் உரையை நிறைவு செய்கிறேன்.

கேள்வி நேரம் :

அடுத்தபடியாக வழக்கம் போல கேள்வி நேரம். திருமந்திரத்தில் கிரியைகள் என்பது தொடர்பாக அடியேன் பந்தாய் என்ற இடத்தில் வேறு ஒரு தலைப்பில் பேசியபோது திரு. மயில் வாகனனார் என்ற அன்பர் சில கேள்விகளை முன் வைத்தார். நான் அவருக்கு தொடர்புபற்றி இங்கே பதில் சொல்கிறேன் என்று கூறியிருந்தேன். அவரும் இங்கே வந்திருக்கிறார். அவருக்கு விடை சொல்ல வேண்டும். அவரது கேள்விகளைப் படிக்கிறேன்.

முதல் கேள்விக்குப் பதில் இரண்டு கேள்விகளுக்கு நேரம் கருதி தொகுத்து பதில் சொல்கிறேன். யந்திரங்களைப் பற்றி திருமந்திரத்திலே நாலாவது தந்திரம் முழுதும் சொல்லப்பட்டிருக்கிறது. அடியேன் வேள்விகளில்–கோயில் குடமழுக்குகளுக்கென செய்யும் வேள்விகளில் – பயன்படுத்தும் யந்திரங்கள் அனைத்தும் திருமூலர் சக்கரங்களே. வேறு சக்கரங்களை அடியேன் பயன்படுத்துவதில்லை. வடமொழியில் உள்ள சக்கரங்கள் எதற்காகச் செய்யப்பட்டவை என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. அது உண்மையிலேயே அந்த தேவதைக்கு உரியது தானா என்பதைப் பரிசோதிக்கவும் அறியோம். நமக்கு வடமொழி தெரிந்து அதன்பின் அந்த சக்கரத்தைப்பற்றி தெரிந்து கொண்டு உபயோகிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. எனவே திருமந்திரத்தில் கூறப்பட்ட சக்கரங்களையே பயன்படுத்துகிறேன்.

திருமந்திரத்திலே அநேக சக்கரங்கள் உள்ளன. திருவம்பலச் சக்கரம் அதில் முதன்மையானது. பாடல் எண்ணிக்கை **920**ஐ எடுத்துக் கொள்ளுங்கள்

இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த அதனுள் இரேகை ஐந்தாக
இருந்த அறைகள் இருபத்தைஞ்சாக
இருந்த அறையொன்றில் எய்து மகாரமே

இது ஒரு வகை திருவம்பலச் சக்கரம். இதற்கு அடிப்படையான திருவம்பலச் சக்கரம் பற்றிய பாடல் **904.**

திருவம் பலமாகச் சீர்சசக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்
திருவம்பலமாகச் செபிக்கினறவாறே

இவற்றையெல்லாம் சொற்பொழிவாகச் சொன்னால் மனத்தில் பதியாது. அடியேன் ஒருவருடத்தில் நடத்திய திருமந்திர முகாமில் **3** நாட்களும் நாலாம் தந்திரம் மட்டுமே முழுக்க முழுக்கப் பார்த்தோம்.

அப்போது ஒரு கரும்பலகை வைத்து அதில் சக்கரங்களை எழுதிக் காட்டினேன்–சொன்னால் ஞாபகத்தில் நிற்காது என்பதால் ஒவ்வொரு சக்கரங்களையும் எழுதிக் காட்டினேன்.

திருவம்பலச் சக்கரம் எப்படி அமைக்க வேண்டும் என்று இப்பச் சொன்ன திருமந்திரப் பாடல்களில் திரு+லர் சொல்லி இருக்கிறார். ஆறு கோடுகள் குறுக்காகவும் ஆறுகோடகள் எநடுக்காகவும் போடச் சொல்கிறார். போட்டால் இருபத்தைந்து அறைகள் கிடைக்கும். ஒவ்வொரு கிடைவரிசையிலும் பஞ்சாட்சரத்தை இப்படி அடைக்க வேண்டும். (எழுதிக் காட்டப்படுகிறது)

நமசிவய

மசிவயந

சிவயநம

வயநமசி

யநமசிவ

ஒவ்வொரு வரிசையிலும் மேலிருந்து கீழாக நமசிவய, மசிவயந, சிவயநம. வயநமசி, யநமசிவ என்று அடைத்தால் அது இயல்பாக சுழலும்–இது பொதப் பலனுக்கான திருவம்பலச் சக்கரம். இதிலேயே எந்தெந்தப் பலனை வேண்டுகிறோமோ அந்தந்தப் பலனுக்கேற்ப திருவம்பலச் சக்கரத்தை மாற்றி மாற்றி எழுதிக் காட்டுவதற்கு உரிய பாடல்கள் திருமந்திரத்தில் உண்டு.

வாயுவைத் தூண்ட வேண்டுமா? அதற்கு ஒரு சக்கரம். நீரைப் பெருக்க வேண்டுமா? அதற்கு ஒரு சக்கரம். ஒவ்வொன்றையும் எப்படி எப்படி அமைக்க வேண்டும் என்பவை திருவம்பலச் சக்கரப் பாடல்களில் கூறப்பட்டிரக்கினற்ன. அவையெல்லாம் விவரிக்க இப்ப நேரமில்லை.

ஒரு சிலர் இந்தச் சக்கரத்தை எழுதும் போது நமசிவய என்று எழுதி அறைகளை அடைக்காமல் நமசிவாய என்று எழுதி விடுவார்கள். வகரத்தை நெடிலாகப் போட்டால் அது சக்கரமாகாது. அது மந்திரமல்ல. அது ஒரு சொற்றொடர். பெரியோர்களே! வகரம் எம்பிராட்டிக்குரிய எழுத்து. சிகரம் சிவபெருமானுடைய எழுத்து. இதை விரிவாகச் சொல்லப் புகுந்தோமானால் நேரமாகும். ஐந்தாம் நாள் திருக்கூத்து தரிசனத்தைப் பார்க்கும் போது இதுபற்றி விளக்கம் சொல்கிறேன்.

இப்போதைக்கு மந்திரமாக உச்சரிக்கும் போது நமசிவய என்றுதான் உச்சரிக்க வேண்டும். சக்கரமாக எழுதும் போதும் நமசிவய என்று தான் எழுத வேண்டும். அப்போது தான் உயிர் உள்ளதாக இருக்கும். குருவினிடம் மந்திரமாகப் பெறும் போது நமசிவய என்று தான் சொல்லப் பெறும் சொல்லப் பெற வேண்டும். குருமுகமாக மறை வாகப் பெற்றதை வெளியே எடுத்துச் சொல்லும் போது அந்த மந்திரத்தை அப்படியே சொல்லக் கூடாது என்பது மரபு விதிக்கும் விதி. எனவே அதை மந்திரமாக அப்படியே சொல்லாமல் அதன் சாயலாக நமசிவாய என்பார்கள். இங்கே நமச்சிவாய என்பது ஒரு சொற்எறாடர். மந்திரசாயல் பெற்ற சொற்றொடர். எனவே தான் குருமுகமாக மறைவகப் பெறுவதை வெளியே கூறும் போது திருவாசகம் நமசிவாய வாழ்க என்று எடுத்துக் கூறுகிறது. யானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப்பெற்றேன் என்று மணிவாசகத் பாடும் போதும் சிவயநம என்ற ஐந்தெழுத்தின் சாயலாக சிவாயநம எனப் பாடப்பட்டது.

யந்திரங்களைச் செய்யும் போது தகடு சதுரமாகவே இருக்க வேண்டும். இரண்டங்குல சதுரமாக இருப்பது நல்லது. கிடைத்த தகடை வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. செய்யத் தெரிந்தவர்களிடம் கொடுத்துச் செய்ய வேண்டும். இதில் வெறும் தொழில் நுட்பம் மட்டும் போதாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உரிய நேரத்தில் உரிய முறையில் சக்கரம் செய்பவர் சிவசிந்தையுடன் செய்தல் வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும் யந்திரத்தைப் பூசை செய்யும் போது தகட்டின் நடுவில் சந்தன குங்குமத்தை வைத்து எழுத்தை மறைத்து விடுவார்கள். இது தவறு. எந்த எழுத்து செயல்பாட்டுக்கு வரவேண்டுமோ அதை மறைத்துவிட்டால் என்ன பொருள்? எனவே இரண்டு எழுத்திற்கு இடையிலோ அல்லது யந்திரத்தின் மூலைகளிலேயோ சந்தன குங்குமத்தை வைக்க வேண்டும். சொன்னால் உங்களுக்குப் பயனாகும் என்பதால் இதையெல்லாம் சொல்கிறேன்.

திருவம்பல சக்கரம் எங்கே இருந்தாலும், அது எங்கே முறையாக பூசிக்கப்பட்டாலும் அங்கே பேரின்பம் குடி கொண்டிருக்கும் என்பது உறுதி வீடு விளங்கும். எனவே கெடுதலான சக்திகள் நீங்கும். நீங்களே கூட இதைச் செய்து கொள்ளலாம்.

தாய்மார்கள் வீட்டிலே கோலம் போடும் போது தூய்மையான இடத்தில் இதைப் போட்டு வணங்கவும் செய்யலாம். பாலும் குங்குமமும் கலந்து அறைகளை அமைக்கலாம் என்று ஆகமம் அனுமதிக்கிறது. யந்திரத்திற்கு பூபோடு முன் உருவேற்ற வேண்டும். உருவேற்றுதல் என்றால் மெல்லேன உச்சரித்தல். இதனை ஐதுரை என்று தமிழில் சொல்வார்கள். பாதி தனக்கு மட்டும் கேட்பதாகவும் பாதி மகத்திற்குள்ளாகவும் உச்சரிப்பதை ஐதுரைத்தல் என்பார்கள். திருமுருகாற்றப்படையில் கூட இது வரும். ஐயவி அப்பி ஐதுரைத்து என்பது திருமுருகாற்றுப்படை வாக்கு.

எனவே எவ்வளவுக்கெவ்வளவு ஐதுரையாக உருவேற்றுகிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு பலன். என்ன மயில்வாகனன்! நன்றாகக் கவனிக்கிறீர்களா? திருமந்திரயந்திரம் வைத்து ஜவிப்பது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

வழிபாட்டின் முடிவில் தூப, தீப ஆராதனை செய்து சிவ சிவ என்கிலர் தீவினையாளர் என்ற திருமந்திரப்பாடலைப் பாடுங்கள் என்ற கூறி நிறைவு செய்கிறேன். (கூட்டத்தில் இப்பாடலைப் பற்றி ஏதோ கேள்வி கேட்கிறார்)

சரி, இந்தப் பாடலைப் பற்றி கொஞ்சம் சொல்கிறேன். ஏனென்றால் இதை மறுபடியும் எப்ப சொல்ல நேருமோ? மறுபடியும் நான் மலேசியாவிற்கு விசா வாங்கி வரவேண்டும்.

இந்தப் பாடலில் வரும் சிவ என்பது சொல் அல்ல மந்திரம். நமசிவய என்பது தூல பஞ்சாட்சரம். சிவயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம். சிவயசிவ என்பது காரண பஞ்சாட்சரம். சிவ என்பது அதி சூக்கும பஞ்சாட்சரம். சி என்பது மகாகாரண பஞ்சாட்சரம். இந்தப் பாடலில் வரும் சிவ என்பது அதிசூக்கும பஞ்சாட்சரம். இதை வைத்தப் பாடிய இந்தப் பாடல் தமிழில் வரும் சிவகாயத்ரி பாடல். இப்பாடலில் வரும் சிவ என்பது அதிசூக்கும் பஞ்சாட்சரம். இந்தப் பாடலில் ஒரு குறிப்பு வைத்திருக்கிறார்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்றிடத் தீவினை மாளும் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்றிடத் தேவரு மாவர் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்னச் சிவகதி தானே – இதில் மூன்று சிவ

மொத்தம் எண்ணினால் இந்தப் பாடலில் 9 சிவ வரும். இந்தப் பாடலை 12 முறை பாடினால், 129=108 முறை அதிசூக்கும பஞ்சாட்சரத்தை செபித்த பலன் கிடைக்கும். இப்படி ஒரு குறிப்பை வைத்துப்பாடியிருக்கிறார். இதையெல்லாம் தெர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்வது நம் கடமை.

திருவம்பல சக்கரத்தை உருவேற்றித் தீபாராதனை காட்டும் போது இந்த சிவகாயத்ரி திருமந்திரப்பாடலை 12 முறை பாடினால் அந்த வீட்டில் ஜோதி விளங்கும். அது உங்களுக்கு ஊக்கம் தரும் உங்களை உட்செலுத்தி நிற்கும். வேறு எந்த யந்திரமும் வேண்டியதில்லை. இது ஒன்றே உங்களுடைய வீட்டிலே எல்லாவற்றையும் உருவாக்கிக உற்சாகம் அளிக்கும் என்று சொல்லி இதற்கு மேலும் நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்து மயில் வாகனனின் கேள்விக்கு உரிய பதிலை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். திருமந்திரத்திலே குறிப்பிடப்படும் கிரியைகளை முழுமையாக சொல்லிவிட்டதாக நான் நினைக்கவில்லை. அப்படியொரு மனநிறைவு எனக்கு இல்லை. காரணம் திருமந்திரத்திலே எவ்வளவோ இருக்கு. இந்த குறிப்பிட்ட நேரத்திலே எவ்வளவு சொல்ல முடியுமோ அதை இறைவன் திருவருளால் உங்கள் முன் எடுத்து வைத்திருக்கிறேன். இந்த அளவாவது சொல்லுதற்கு திருவருள் வாய்த்ததே என்று சொல்லிக் கொண்டு அதற்காக திருமூலருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

(கூட்டத்திலிருந்து வேறொரு அன்பர், மந்திரம், தந்திரம் என்று சொல்கிறார்களே அவற்றிற்கு என்ன பொருள் என்று கேட்கிறார்)

பெரியோர்களே! மந்திரம் வேறு தந்திரம் வேறு. அப்பர் சுவாமிகள் ஒரு பாடலில் பாடுகிறார்

மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி

தீராநோய் தீர்ததருள வல்லான்றன்னை

திரிபுரங்கள் தீயெழத் திண்சிலைக்கைக் கொண்ட

போராளை புள்ளிருக்கு வேளூராளைப்

போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே!

அப்பர் சுவாமிகளின் வருத்தத்தைப் பாருங்கள்! அவர் வாழ்நாளில் பெரும் பகுதியை எதிர் முகாமில்– கடவுள் இல்லை என்ற முகாமில் கழித்துவிட்டார். பிறகு இங்கே வந்தார். அதனால் அந்த ஆதங்கம்.

போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே என்று பாடினார். இந்தப் பாடலில் மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி என்று பாடி இருப்பதைப் பாருங்கள். எனவே மூன்றும் வேறு வேறு என்று தெரிந்து கொள்கிறோம்.

மந்திரம் என்ற சொல்லிற்கு அடியேன் என்னுடைய நூல் ஒன்றில் உரை எழுதியுள்ளேன். அதாவது பாம்பன் சுவாமிகள் பாடியருளிய பதினோரு பாடல்களைக் கொண்ட தெளத்தியம் என்ற நூலிற்கு அடியேன் அனுபவப் பேருரை ஒன்றை எழுதி உள்ளேன். அதிலே மந்திரம் என்பது பற்றி உரை செய்துள்ளேன். நேற்றும் மந்திரம் என்ற சொல்லைச் சிறிது ஆராய்ந்தோம்.

அதையே இன்று வேறு ஒரு கோணத்தில் சிந்திப்போம். பெரியோர்களே! எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியம். இந்த உலகை உற்பத்தி செய்வது பெருமான்–அதாவது இறைவன். எதற்காக?

அறியுந் தன்மை உடைய சித்துப் பொருள் ஆன்மா. ஆனால் இந்த அறிவை வேலை செய்யவிடாமல் ஆணவம் எனள்ற அறியாமையாகிய இருள் அழுத்துகிறது. இந்த இருளைப் போக்க வேண்டும். அதற்காக இந்த உலகை இறைவன் படைக்கிறான். இந்த உலகைப் படைக்கும் போது மாயை என்னும் பெரிய பொருளில் இருந்து படைக்கிறான். சித்தாந்தத்தில் மாயை என்பது உள்பொருள். ஆதிசங்கரரின்

ஏகான்மவாதத்தில் அது இல் பொருள். அப்படியே கொள்ளலாமா என்று கேட்டால் உடனே அது சொல்லொணாதது–அநிர்வசனீயம் என்பர். சொல்லொணாதது என்றால் அது என்ன என்றால் எனக்குத் தெரியாது என்கிறான். இங்கே மாயைக்கு அது பொருள் அல்ல. மாய்+ஆய் என்கிற தூய தமிழ்ச் சொல் இரண்டின் கூட்டுச் சொற்றொடராக அது கொள்ளப்படுகிறது. அதாவது உள் பொருளாகக் கொள்ளப் படுகிறது. மாயை என்றால் பிரமை அல்ல மாயை என்றால் அவித்தை என்ற பொருளில் சித்தாந்தத்தில் கையாளப் படுவதில்லை. இந்த மாயையை எடுத்து உலகத்தைப் படைக்கிறான் பெருமான்.

சுத்த மாயைக்குப் பெயர் விந்து என்று சொல்வார்கள். அதிலிருந்து எழுத்தை உருவாக்குகிறான் இறைவன் அதிலிருந்து சொல் உருவாகிறது. அதிலிருந்து மந்திரம் உருவாகிறது. எனவே சுத்தமாயையான விந்துவிலிருந்து 3 உருவாகின்றன. அவை 1) எழுத்து 2) சொல் 3) மந்திரம். எழுத்து–வன்னம் என்று வடமொழியில் சொல்லப்படுகிறது சொல்–பதம் என்று சொல்லப்படுகிறது. அதற்கப் புறம் மந்திரம்–இது மந்த்ரம் என்று வடமொழியில் சொல்லப்படுகிறது.

வன்னம், பதம், மந்திரம் என்ற இந்த மூன்றும் பெருமான் சுத்தமாயையிலிருந்து நம் அறிவு விளங்கவதற்காக விரித்துக் கொடுக்கப்பட்டன. இந்த மூன்றையும் சேர்த்து சொல் உலகம் என்று கூறுவர்–சொல்லினாலே ஆக்கப்பட்ட உலகம். இது சூக்குமமானது. நம் கண்ணுக்குப் புலப்படாமல் ஒலி வடிவில் இருப்பது. இந்தச சொல் அத்தனையும் தூலமாகப் படைத்தது பொருள் உலகம். அது தான் கலை, தத்துவம், புவனம் என்று மூன்றாக விரிந்து தூல உலகமான பொருள் உலகமாயிற்று.

ஆகவே மாயையில் ஒரு பகுதி சொல்லுலகமாக இருக்கிறது. இன்னொரு பகுதி பொருள் உலகமாக இருக்கிறது. இரண்டும் ஒன்றில் இருந்து தானே வந்தது. எனவே ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு. ஆகவே இந்த உலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களையும் குறிப்பிட்டுச் சொல்ல சொல்லை வைத்தான். அந்தச் சொல்லின் மூலம் அறிவை விளங்க வைத்தான்.

இந்த சைவ சித்தாந்தக் கருத்தை உள்வாங்கித்தான் தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று நூற்பா செய்தார்.

எனவே, சொல் உலகம் அனைத்தும் பொருளுலகத்துடன் தொடர்பு உடையது. தொல்காப்பியத்திற்கு சேனாவரையர் உரையில் தான் இந்தக் குறிப்பைப் பார்க்க முடிகிறது. மற்றவர்கள் எல்லாம் இதன் பக்கமே போகவில்லை. நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், பேராசிரியர் யாரும் இவ்வளவு அழகாக சொல்லதிகாரத்திற்கு உரை செய்யவில்லை.

சொலலுக்கும் பொருளுக்கும் தொடர்பு உண்டானாலும் சொல்லோடு பொருளை முழுமையான தொடர்பு கொள்ளும் வகையில் நமக்கு ஏற்ற அருள் பக்குவம் வேண்டும்.

நான் ஒரு எலக்டரிகல் எஞ்சினியர்–மின்னியல் பொறியாளன். ஒரு மின் விசிறி பழுதென்றால் அதனை நான் சரி செய்து கொடுத்து விடுவேன். அதற்குரிய அறிவு என்னிடம் உள்ளது. வேறு ஒருவரைப் பார்த்து–ஏன் சார்! நீங்கதானே இந்த மன்றத்தின் செயலாளர். மன்றக் கட்டிடத்தில் உள்ள இந்த மின்விசிறி பழுதாகி விட்டிருக்கிறது. இதைச் சரி செய்யுங்கள் என்று கட்டளையிட்டால் அவர் என்ன செய்வார் பாவம்! அவருக்கு என்ன தெரியும்? ஒரு மின்விசிறி பழுதுபார்க்கும் எலக்ட்ரிஷியனை நோக்கி ஓடுவார்.

அதைப்போலச் சொல்லுக்கும் அதற்குரிய பொருளுக்கும் உரிய முழுத் தொடர்பையும் அறிந்து பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவர்கள் மொழி நிறைமொழி அந்த ஆற்றல் குறைந்தவர் என்று கூறும் மொழி குறைமொழி.

சுந்தரர் முதலையுண்ட பாலனைப் பாடல் பாடி மீட்டார். கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே என்று பாடினார் அது நடந்தது அது நடப்பதற்குரிய எல்லாம் நடந்தது. ஏனென்றால் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு எது? எப்படி அதை முறையாகப் பயன்படுத்தினால் குறித்த

பொருளை நிகழ்விக்க முடியும் என்று சரியாகத் தெரியும் அவர்க்கு. நமக்கோ சொல்லுக்கும் பொருளுக்கும் உரிய தொடர்பு சரியாகத் தெரியாது.

தமிழ்ப் புலவர்களில் பலர் அறம்பாடி வாழவும் தாழவும் வைக்கும் வல்லமை படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை வரலாறுகள் மூலம் அறிகிறோம். எனவே அவர்கள் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பை முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஔவையார் பட்டுப்போன மரத்தில் பலாத் தழைக்கப் பாடினார். எப்படியென்றால் அவருக்கு அந்தத் தொடர்பு அத்தகுப்படி. ஒரு பெண் கீரையைச் சமைத்துக் கொடுத்தாள்–ஔவையாருக்கு. சுவைத்து உண்ட பாட்டி மகிழ்ந்து பாடினாள்

வெய்தாய் நறியதாய் வேணடளவு தின்பதாய்

நெய்தான் அளாவி நிறம்பசந்து–பொய்யா

அடகென்று சொல்லி அமுதத்தை இட்டாள்

கடகம் செறியாதோ கைக்கு

என்று பாடினாள். உடனே பொன்னால் ஆன வளையல் அப்பெண்ணின் கைகளில் அணிபெற நின்று குலுங்கியது. இதைக் கேட்ட இங்குள்ள பெண்களுக்கு ஐயோ! இப்ப ஔவையார் இல்லையே என்ற ஏக்கம் தோன்றும். இருந்தால் நம்ம வீட்டிற்குக் கூப்பிட்டுப் போகலாமே என்று எண்ணம் அவர்கள் முகத்தில் ஓடகிறது என்பது பார்த்தாலே தெரிகிறது.

அது ஒரு புறம் இருக்கட்டும். இவ்வாறு சொல்லுக்கும் பொருளுக்குமத் உள்ள தொடர்பை முறையாகப் பயன்படுத்தும் ஆற்றல் உடையவர் களே நிறைமொழிமாந்தர். அந்த நிறைமொழிமாந்தர் உரைப்பதே மந்திரம். இதையே, நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்று பாடினார் தொல்காப்பியர்.

அந்த மொழியில் அந்த ஆற்றல் வெளிப்படையாக நமக்குத் தெரியவில்லை மறைவாகப் பொதிந்துள்ளது. எனவே அந்த நிறைமொழியை ஆற்றல் மறைந்துள்ள மறைமொழி என்றார்.

இந்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்றார் தொல்காப்பியர். இங்கே தானே என்ற சொல்லுக்கு உரையை சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மூவருமே ஒஅரே மாதிரா எழுதி உள்ளனர். அதாவது தானே என்று ஏகாரத்தால் பிரித்ததர் இவை தமிழ் மந்திரம் எனறற்கு என்று உரைஆசிரியர்கள் எல்லாம் உரை செய்திருக்கிறார்கள். எனவே தமிழில் மந்திரங்கள் இருந்தன என்பதை உரை ஆசிரியர்கள் மூவரும் உறுதி செய்துள்ளனர்.

இதில் இன்னொன்றும் நாம் நினைவில் வைக்க வேண்டுமம. அதாவது முதலில் சொல்லக்கு உரிய பொருள் எது என்பதை அறிந்த கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொண்டால் மந்திரம் தெரிந்துவிடும். இதை மந்திரான்மா என்று கூறுவர். அடியேன் இதை தௌத்தியம் என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

ஒரு எருமையை வரவழைக்க வேண்டுமென்றால் முதலில் எருமை என்ற சொல் தெரிந்திருக்க வேண்டும். அந்தச் சொல் அதற்கு அடிப்படை. இந்தச் சொல்லுக்கும் அது குறித்த எருமை என்ற பொருளுக்கும் உரிய தொடர்பறிந்து சொல்லைப் பயன்படுத்தினால் எருமையை நினைத்த இடத்தில் வரவழைத்து விட முடியும். ஏன் சார்! முதல் முதலில் எருமையை எடுத்துக் கொண்டீர்கள் என்று நினைத்துவிடாதீர்கள். மந்தத்திலிருந்து தானே தீவரத்திற்குப் போக வேண்டும். எடுத்தவுடனே தீவிரத்திற்குப் போவது அருமை ஆகவே இங்கே எடுதுத்துக் கொண்டது எருமை.

ஒரு சின்ன உதாரணம் கூறினால் இது விளங்கும். நான் நேரில் பார்த்த சம்பவத்தை கூறுகிறேன். கருடராஜா என்ற பெயருடைய ஒருவர் இருந்தர். அவர் ரயிலவே டெபார்ட்மெண்டில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். அவர் மந்திரத்தால் பாமிபன் விஷத்தைப் போக்குவார். அவருக்குப் பாம்பு தீண்டிவிட்டது என்று தொலை பேசியில் அழைப்பு வரும். வந்தததும் உடனே பெயரைக் கேட்பார். எந்த இடம் என்று கேட்பார். உடனே ஒரு மந்திரம் சொல்வார் அங்கே பாம்பு தீண்டப் பெற்றவர்க்கு விஷம் இறங்கிவிடும். இப்படி டெலிபோன் மூலமாக அல்லது நேரடியாகப் பலபேருக்கு நன்மை செய்தார். இவர் வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவு ஒன்றிற்கு வந்தார். (அது வேலூரில் வருடா வருடம் நடக்கும் சஷ்டித் தொடர் சொற்பொழிவு). அங்கே ஒருவருக்கு அரவம் தீண்ட இவர் விஷத்தைப் போக்கினார். அப்போது தான் தெரிந்தது இவர் இப்படிச் செய்ய வல்லவர் என்பது. சொற்பொழிவு கேட்க வந்தவர், வந்த இடத்தில் பாம்பின் கடியுண்ட ஒருவர்க்கு விஷத்தைப் போக்கி காட்டினார். இவர் மந்திரத்தைச் சொல்லும் போது முகமே மாறிவிடும். இங்கே கூட கூலாயில் நடைபெற்றக் தமிழ்க் குடமுழுக்கில் பிரதிட்டையின் போது கலசத்தில் திருமூலரின் முகம் தெரிந்தது என்று சிலர் சொன்னனார்கள். அது தமிழ் மந்திரத்தின் ஆற்றல்.

இங்கே கருடராஜா விஷம் இறக்க மந்திரம் சொல்லும் போது நடப்பது என்ன? அவருடைய தூல ஆன்மா மந்திரான்மாவாக மாறி கருடனுடைய தன்மையைப் பெற்று விடுகிறது. அந்தப் பார்வையில் கருடனுடைய விஷம் நிக்கும் ஆற்றல் தளும்ப விஷம் தீர்நதுவிடுகிறது.

நமசிவய என்பதும் அப்படித்தான். இறைவனை நம்மிடம் கொண்டு வந்து சேர்ந்துவிடும். இதற்குத் தான் மந்திரம் என்று பெயர். இந்த மந்திரமே நடராசப் பெருமானின் திருமேனி வடிவாகி நிற்கும். இந்த மந்திரத்திற்கு 5 படி நிலைகள் உண்டு. அத்தனைக்கும் உரிய மந்திரான்மாவாக இறைவன் இருக்கிறான் அதன்படி 5 படிநிலைகளில் மந்திரானன்மா விரிந்து நிற்கும். இதையெல்லாம் எடுத்துச் சொல்ல இப்போது நேரமில்லை. ஐந்தாம் நாள் திருக்கூத்து தரிசனம் பற்றிப் பார்க்கும் போது ஓரளவி பார்க்கலாம்.

எனவே சொல் உரிய ஆற்றல் பொதிய மந்திரமாகி மந்திரான்மா தோன்றி நிற்க அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வவற்றைப் பயப்பிக்க நிற்பதே மந்திரம்.

இனி தந்திரத்தைப் பார்ப்போம். மந்திரத்தைப் பயனக்படுத்தி என்ன காரியங்களைச் சாதிக்க வேண்டுமோ அந்தக் காரியங்களைப் பற்றி–முறைகளைப் பற்றி கூறும் நூல் தந்திரம். தந்திரம் என்பது ஆகமத்தைக் குறிக்கும். காரணம், ஆகமம் மந்திர வடிவில் முறைமைகளை எடுத்துக் கூறுவது.

வடமொழி வேதநெறி வந்த அந்தணர்கள் எல்லாம் சைவ நெறியினைப் பின்பற்றும் சைவ ஆகமங்களைத் தாந்திரீகம் என்று அது எதுவோ இழிவானது என்பது போல இகழ்ந்து பேசினார்கள்.

தந்திர வழி ஒழுகினோர் மூடர் பாசுபத நெறியில் நிற்போர் என்று திலீபன் என்ற திராவிட மன்னன் முன்னிலையில் வசிட்டன் என்னும் ஆரிய முனிவன் பேசியதாக வாசிட்டலைங்கம் என்ற நூலில் வருவதாக சிவஞான பாடியத்தில் வருகிறது. எனவே வசிட்டரும், வசிட்டரைப் பின்பற்றுவோரும் திராவிட ஆகம நெறிக்குப் புறம்பானர்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

எனவே மந்திரங்களைப் பற்றி பேசி இறைவனை அடைவதற்கான கிரியை முறைகளை எடுத்துச் சொல்லும் நூல் தந்திரம். நாம் தந்திரம என்றால் நரி போலச் செய்வதைத் தான் தந்திரம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

மந்திரங்களை உள்ளடக்கி என்னென்ன காரியங்களைச் சாதிக்கலாம் என்று கூறுவது மூன்று வகையாக விரியும். அவை 1) மந்திரம் 2) தந்திரம் 3) ஔஷதம்–மருந்து. இந்த மூன்றும் நெறி முறைப்படி பயன்படுத்தப்படுமானால் உலகம் வாழ்வதற்கு ஏற்றதாகிவிடும். இந்த மூன்றுமாக இறைவன் இருக்கிறான் என்று,

மந்திரம், தந்திரமும், மருந்தும் ஆகி

தீரா நோய் தீர்த்தருள வல்லான்தன்னை

என்று பாடினார் அப்பர்.

நான் தாய் நாட்டில் சென்னையில் சைதாப்பேட்டையில் திருமந்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 67 பாட்டு தான் நடந்திருக்கிறது. ஒரு பெரியவர் சொன்னார். ஒவ்வொரு பாட்டிற்கும் இப்படி 2 மணி நேரம் விரிவுரை செய்திட்டு இருந்தீங்கன்னா மூவாயிரம் பாட்டுக்கும் 3000+2=6000 மணி நேரம் ஆகும். இதுவும் வாரம் ஒரு முறைக்குப் பங்கிட்டால் நீங்களும் இருக்க மாட்டிங்க, நானும் இருக்க மாட்டேன். என்னுடைய ஆதங்கம் என்னன்னா என் ஆயுசுக்குள் எல்லாவற்றையும் உங்கள் மூலம் கேட்ட விட வேண்டும் என்று ஆசை. இதை நீங்க மனசில வச்சிகிட்டு சொல்லணும் என்றார். அதனால் வாரத்திற்குப் பத்துப் பாடலாக விரைவுபடுத்தி உரை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால் இப்ப மந்திரம், தந்திரம், மருந்து என்றால் என்னன்னு கேட்டா அதற்கு ஒரு வரியிலா பதில் சொல்ல முடியும்? அவற்றின் உள்ளார்ந்த பொருளை சொன்னால் தானே விளங்கும். ஆனால் ஆண்டவனோ ஒரே நொடியில் எல்லாவற்றையும் உணர்த்தி விடுவானாம். ஒரு பார்வை எல்லாம் நொடியில் விளங்கிவிடும். முருகப் பெருமான் ஒரு பார்வை பார்த்ததானாம் அருணகிரியார்க்கு எல்லாம் விளங்கிவிட்டது.

ஆணவ அழுக்கடையும் ஆவியும் விளக்கி

அநுபூதி அடைவித்ததொரு பார்வைக் காரனும்

என்று பாடினார் அருணகிரியார்.

இப்படித்தான் நாரையூர் பொல்லாப் பிள்ளையாரும் நம்பி ஆண்டார் நம்பி என்ற ஐந்து வயது சிறுவனுக்கும் கணத்திலே எல்லாவற்றையும் உணர்த்தினானாம். பள்ளிக் கூடத்துக்குப் போகணும். நேரமாயிற்று. இப்படி நேரம் கடந்து போனால் தேசிகன் அடிப்பானே என்று குழந்தை பிளளையாரிடம் முறையிட்டது. தேசிகன்னா ஆசிரியர். பிள்ளையார், பயப்படாதே என்று அந்தக் குழந்தைக்கு ஒரே கணத்தில் எல்லாவற்றையும் உணர்த்திவிட்டார். அதற்கப்புறம் தானே நமக்குத் திருமுறைகள் கிடைத்தன. அப்படித் தானே நமக்குப் பெரியபுராணத்திற்கு அடிப்படை நூல் (திருத்தொண்டர் திருவந்தாதி) கிடைத்தது.

இப்படிக் கணத்திலே எல்லாவற்றையும் உணர்த்த எனக்கும் ஆசை தான். ஆனால் நான் கணபதி இல்லையே. எனவே கேள்விக்குப் பதிலாக சிலவற்றை விளக்கியதில் சற்று நேரமாயிற்று. இதற்காகப் பொறுத்தருள வேண்டும் என்று உங்களை வணங்கி இந்த அளவில் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

உ

முருகா

திருமந்திரம் – ஆறந்தம்

நான்காம் நாள் சொற்பொழிவு

(04–09–1999)

பெரியோர்களே! எல்லாம் வல்ல வள்ளி மணவாளனது வற்றாத கருணை நலத்தாலே இந்த அற்புதமான திருமந்திரத் தொடர் சொற்பொழிவு என்னும் ஞான வேள்வியிலே நாம் இன்றைய தினம் நான்காவது கட்டமாக திருமந்திரத்தில் ஆறந்தம என்பது பற்றி பார்க்க இருக்கிறோம். எந்த வேள்வியும் நிறைவடைவது பூராண குதியில்–அதாவது நிறையவி நல்கலில். நாம் தொடங்கியுள்ள இந்த ஞான வேள்விக்குப் பூராணாகுதியாய் நாளை திருக்கூத்து தரிசனம் நடைபெறும். இன்று அதற்கு அடிப்டையாக உள்ள ஆறந்தத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

திருமந்திரத்திலேயே கடினமான பகுதி சூன்ய சம்பாஷனை பகுதி எவ்வளவி கடினதேப அதைவிட கடினமானது இந்த ஆறந்தம் என்ற பகுதி. ஆனால் திரு. தான்ஸ்ரீ ஐயா அவர்கள் இந்தப் பெரும்பொறுப்பை நேயர் விருப்பமாகக் கேட்டு என் தோளில் சுமத்தியிரக்கிறார். அதை என் நா சுமக்க வணங்கும் எனது ஆன்ம நாயகனான முருகனை வேண்டித் தொடங்குகிறேன்.

திருமூலர் ஆறந்தம் என்னவென்பதை முதலிலேயே தோற்றுவாய் செய்து விடுகிறார்.

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்

நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்

ஓதத் தகுமெட் டியோகந்த அந்தமும்

ஆதிக் கலாந்தமும் ஆறந்த மாமே.

அந்தங்கள் என்னென்ன என்பதை இந்தப் பாடலில் கூறுகிறார். செய்யுள் என்பதால் அவற்றின் வரிசை முறை மாறியிருக்கிறது. அதை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். முறைப்படுத்தும் போது எது முன்னாலே எது பின்னாலே என்று நமக்குப் பல அறிஞர்கள், பெரியவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதன்படி இங்கே பார்ப்போம்.

1. யோகாந்தம்
2. கலாந்தம்
3. நாதாந்தம்
4. போதாந்தம்
5. வேதாந்தம்
6. சித்தாந்தம்

இது தான் படி முறை என்ற புவன கலை தீபம் என்னும் நூலும் புவன கரைல ஞான வளிக்கம் என்றும் நூலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாக நிரல் செய்திருக்கிறது. இவை இரண்டும் அந்தங்களைப் பற்றி மட்டும் எடுத்தக் கூறுவது. இந்நூற்கள் எங்கும் அவ்வளவாகக் கிடைப்பதில்லை. யாராவது பெற்றிருந்தால் அவர்கள் செய்த புண்ணியம் என்று தான் சொல்ல வேண்டும். உயர்நதநூல் யாரிடமும் அவ்வளவாக இருக்காதே. இது தானே உலகம்!

இங்கே நாம் யோகாந்தத்தை முதலிலே வைத்துச் சொன்னோம். ஆனால் முதலில் வருவது கலாந்ததந்தான் போலிருக்கிறதே என்ற சிலர் கூறலாம். ஏன்னா, ஆதிக் கலாந்தம் என்று இப்ப சொன்ன திருமந்திரப் பாடலிலேயே அப்படித்தானே வருகிறது? இது கேள்வி.

இதற்கு விளக்கம் கண்டால் தான் மூல ஆசிரியரின் கருத்து என்ன என்பது தெளிவுபடும். முதலில் ஆறந்தம் என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு சிறு மன்னுரை–விளக்கவுரை சொன்னால் தான் புரியும். முதலில் இதன் அடிப்பைடையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்ப நான் கலாந்தம் ஏன் ஆதிக்கலாந்தம் என்று அதுவே முதல் போலக் கூறப்பட்டுள்ளது என்பது தெரியும்.

பள்ளிகளில் எட்டாவது வகுப்பிற்கு ஒரு பாடத்திட்டம் (சிலபஸ்) வைத்திருப்பார்கள். 9வது வகுப்பு னெஙறதல் அதற்கு ஒரு பாடத்திட்டம் வைத்திருப்பார்கள். எட்டாவது வகுப்புப் பாடத்திட்டப்படி படித்துத் தேர்ந்தால் தான் ஒன்பதாவது வகுப்பு பாடத்திட்டப் படியான பாடம் புரியும். இதுக்குத் தான் வைப்பு முறை என்று பெயர். யாப்பு என்றும் சொல்வார்கள். நாலாவது வகுப்பு மாணவனுக்கு கால்குலஸ் கணக்கு சொன்னால் புரியுமா?

அதனால் இந்த ஆறந்தங்களுக்கும் அடிப்படை என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அதன்படி முறையாக மேலே மேலே சென்றோமானால் தெளிவாகப் புரிந்துவிடும்.

பெரியோர்களே! வாழ்க்கையில் நாம் சந்திக்கிற ஒவ்வொரு புதிய விஷயத்திலேயும் நாம நான்கு நிலைகளைச் சந்திக்கிறோம். ஒரு வகையில் உலகியலில் நாம் அடைகிற நான்கு நிலைகளைப் போலவே அருளியல் நிலையிலும் நான்கு நிலைகளைச் சந்திக்கிறோம். உலகியல், அருளியல் ஆகிய இதில் எதுவாக இருந்தாலும் இந்த நான்கு நிலைகளிலேயும் ஒவ்வொன்றாகத் தேறித் தேறித்தான் கடைநிலை அனுபவத்தை அடைய வேண்டும்.

இதன் அடிப்படையில் தான் இறைவனை அடைய பெரியோர்கள் நான்கு நிலைகளை வைத்துக் காட்டினார்கள். அவை 1) தாசமார்க்கம் 2) சற்புத்திர மார்க்கம் 3) சக மார்க்கம் 4) சன்மார்க்கம். தமிழில் இவற்றை 1) அடிமை நெறி 2) மகன்மை நெறி 3) தோழமை நெறி 4) நன்னெறி என்பர்.

இதில் தாசமார்க்கத்தை அப்பர் விளக்கிக் காட்டினார் சற்புத்திர மார்க்கத்தை ஞானசம்பந்தர் விளக்கிக் காட்டினார் சக மார்க்கத்தை சுந்தரர் விள்கிக் காட்டினார் சன்மார்க்கத்தை மணிவாசகர் விளக்கிக் காட்டினார். இப்படி நமக்க விளக்கப்பட்டு இந்த நான்கு நிலைகளிலே நாம் இறைவனை அடையலாம் என்று ஆன்றோர்கள் கூறினார்கள். இந்த நான்கு நிலைகளும் அருளியல் போலவே உலகியலுக்கும் பொருந்தும்.

தாச, சற்புத்திர, சக, சன்மார்க்கம் இன்னும் நான்கு நிலைகளிலே நாம் இறைவனை எப்படி அடைவது என்பது மிக ஆழமாகப் பார்க்க வேண்டியது. அது புரிய முதலில் நாம் உலகியலைப் பார்த்து விட்டோமானால் இது எப்படி அருள்நிலையில் அமைகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு ஒரு கிராமத்தான் கோழிப்பண்ணை வைக்க வங்கியில் கடன் வாங்குகிறான் என்று வைத்தக் கொள்வோம். அது மிகவும் சிறிய கிராமம். வங்கியை முதன் முதலில் இப்பத்தான் திறக்கிறார்கள். வங்கியில் லோன் மேளா திட்டம். யார் வேண்டுமானாலும் உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைக் காட்டி கோழிப் பண்ணை வைக்கக்கடன் பெறலாம். கிராமத்தில் இருப்பவர்களில் ஒருவர் இதைக கேள்விப்பட்டு வங்கிக்கு வருகிறார். துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு பெரிய

மீசையுடன் சந்தன வீரப்பன் கணக்கிற்கு ஒரு கூர்க்கா வங்கி வாசலில் நிற்கிறான். பார்த்தாலே பயமா இருக்கு. எங்க வந்துட்டம், இது என்ன வங்கியா? இராணுவ முகாமா? ஆசாமி மெல்ல கிட்ட போய் இதுதானே வங்கி என்று கேட்கிறார்.

அவன் கட்டை குரலில் போர்டு பாக்கல இதுதான் வங்கி என்கிறான்.

என்ன வேணும்? அதட்டுகிறான் கூர்க்கா.

கோழிப் பண்ணை வைக்க லோன் வாங்க வந்திருக்கேன்

ஒரு சல்யூட் அடித்தக் கொண்டே சொல்கிறார் கிராமத்து ஆசாமி சப்தநாடியும் ஒடுங்க.

கோழிப் பண்ணையா? போய் அந்த மூலைல உக்காரு. ஏய்! ஏய்! எங்க போற? அது ஆட்டுப் பண்ணை கியூ.

உடனே பயந்து போய் மூலையில் பல்லி சுவற்றில் ஒட்டிக் கொண்டாற் போல ஒட்டிக் கொண்டு குந்தினாற் போல உட்காருகிறார் அந்த ஆசாமி. பாவம்! அவருக்கு யார் என்னன்னு தெரியாது! பயந்து பயந்து அக்கம் பக்கத்துல இருக்கறவங்க, அந்த கூர்க்கா எல்லாரிடமும் எப்பக் கூப்பிடவாங்க, எப்ப கூப்பிடுவாங்க என்று விசாரிக்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் அவரை அதட்டி உட்காரச் சொல்கிறார்கள். இதென்னடா வம்பாய் போச்சு. லோனும் வேணும். கீனும் வேணும்னு திரும்பிடலாமான்னு ஒரு எண்ணம். நப்பாசை யாரை விட்டது. மேனேஜர் எப்ப சரியா 10.30 மணிக்கு வந்தார்? அதுவும் அந்தக் கிராமத்தில் காத்திருந்து காத்திருந்து கடைசியில் காலை 11.30 மணிக்கு மேனேஜர் உள்ள போய் நாற்காலியில் உட்கார்ந்தார்.

இன்னைக்கு யார் யாரெல்லாம் லோன் வாங்க வந்திருக்காங்க வரச் சொல் மேனேஜர் தர்பார் ஆரம்பம்.

இந்த தர்பார் ஆரம்பிக்கறதுக்கள்ள இந்த ஆசாமி பட்ட பாடு. அடடா! இவனுக்கு முதல்ல இருக்கிறவன் எல்லாம் போய்விட்டு வந்த பிறகு தான் போகணும். அப்பப்பா மேனேஜர் வந்துட்டாரான்னு இவர் உள்ளே எட்டிப் பார்க்கிறதும் அங்கே போகிறவர் வருகிறவர் எல்லாம் இவரை அதட்டறதும். ஐயா! மேனேஜர் எப்ப வருவாங்க? சும்மா இருய்யா! அவரைத் தானே நானும் தேடிக் கிட்டிருக்கேன்.

இப்படி தேவடிந்த செல்வமாக மேனஜர் கடைசியில் வ்நதேவிட தர்பாரும் ஆரம்பமாயிற்று. இவர் முறைவந்ததும் உள்ளே போகிறார்.

மேனேஜர் நிமிர்ந்து கூட பார்க்காமல், உன் பெயர் என்ன? நான் உங்க பியூன் நாராயணசாமி சார்! பியூன் தன்னைக் கேட்டதாக எண்ணி பதில் கூற அவர் சப்தம் போட, இவருக்கு இந்த அமளியில் நாக்கு உலர்ந்து தன் பேரே மறந்துவிடுகிறது. தன் பெயரைச் சொல்லவே பயம். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நாகநாதன் என் பேர். நாகத்தைப் பார்த்துப் படையும் நடுங்குவது போக இங்கே இவர் நடுங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த ஃபாரத்தை ஃபில்லப் செய்தவிட்டு வா

எனக்கு படிக்கத் தெரியாதுங்க

அதோ அந்த மூலைல இருக்காரே ஒருத்தர். அவரிட்ட கொடுத்து ஃபில்லப் செய்துக்க

அவரோ பக்கத்திலிருந்து லேடி டைப்பிஸ்டிடம் சுவாரசியமாக பேசிட்டு இருந்தார் – ஏதோ அதுவே அவர் வேலை போல.

ஐயா! இதைக் கொஞ்சம் எழுதிக் கொடுங்க

என்னையா?

ஐயா! நீங்க தானே சோமசுந்தரம்?

ஆமாம். நான் தான் சோமசுந்தரம். அதுக்கென்ன இப்ப?

பயந்து நடுங்கி உரிய விண்ணப்பப் படிவத்தை நீட்டி விஷயத்தைச் சொல்கிறார் நாகநாதன்.

அவ்வளவு தானே! இப்ப என்ன அவசரம்? கோழிக்கும் ஆட்டுக்கும் எல்லாம் நான் ஆட முடியுமா? கொஞ்சம் உக்காரு. அப்புறம் நீ சொல்லும்மா! மத்தியானம் டிபன் என்ன கொண்டு வந்திருக்கே

பொறுமையாக இந்தக் கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டு காத்திருந்த பின்விண்ணப்பப்படிவம் நிரப்பிக் கொடுக்கப்படுகிறது. யார் மேனேஜர், யார் கிளார்க், யாரிடம் கொடுக்க வேண்டும் என்று தெரியாமல் ஒருவராகப் பார்த்து ஒவ்வொருவரிடமாக வசவு வாங்கிக் கட்டிக் கொண்டு கடைசியில் உரியவிடம் அந்த விண்ணப்பப் படிவத்தைக் கொடுக்கறதுக்குள்ள அவரக்கு உயிர் போய் உயிர் வந்தது.

கையெழுத்துப் போட்டுட்டியா? ஒரு அதட்டல்

ஊம் போட்டுட்டேங்க

சரி வரும்–போ

திரும்பும் போது எல்லார்க்கும் கும்பிடு போட்டுவிட்டு மற்ககாமல் அந்த கூர்க்காவிற்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு–அவர் முஃசைக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு வீடு திரும்புகிறார் அந்த ஆசாமி நாகநாதன்.

ஒரு மாதம் ஆயிற்று, போஸ்ட் ஆபிசே இலர்லாத ஊர். எப்படியோ ஒரு போஸ்ட்மேன் வந்து நாகநாதன் இங்க யாருன்னு கேட்டு அவருக்கு வங்கியிலிருந்து கோழிப் பண்ணை வைக்க கடன் அனுமதித்த கடிதத்தைக் கொடுததுவிட்டுப் போகிறார். நாகநாதனுக்குப் படிக்கத் தெரியாததால் அக்கம் பக்கத்திலிருக்கிறவர்களை அணுகிப் படிக்கச் சொல்லி கேட்க உனக்கு லோன் சாங்க்ஷன் ஆயிருக்காம் என்று சொல்ல ஒரே சந்தோஷம். அப்பவே அவனுக்கு வீடு முழுவதும் கோழி நிறைந்து கொக்கரித்துக் கொண்டிருப்பதாக ஒரு மாயத் தோற்றம்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு வங்கிக்குச் செல்கிறார் நாகநாதன். இப்ப அவர் மனநிலையே வேறு, அங்கே வாசலில் அதே கூர்க்கா நிற்கிறார். யாருய்யா நீ அவர் அதட்டுகிறார். அட சும்மா இருங்க! எனக்கு லோன் சாங்ஷன் ஆயிருக்கு என்று கூர்க்காவைத் தாண்டி விறுவிறுனனு–முன்னே மூலையில் காத்திருந்தவர்–இப்ப வந்தவுடன் மேனேஜரிடம் வந்து பணமும் வாங்கி விடுகிறார். அந்தப் பணத்தை வைத்து ஒரு சிலர்போல வட்டிக்கு விடாமல் உண்மையிரேயே கோழிப் பண்ணை வைக்கிறார். கோழிப்பண்ணையைச் சரிவரப் பராமரித்து அதிலே கொஞ்சம் லாபம் சம்பாதித்து நேர்மையாகக் கடன் தவணைகளைச் செலுத்த அடிக்கடி வங்கிக்குச் செல்கிறார். இப்படி அவர் அடிக்கடி வங்கிக்குச் சென்று வருவதால் சோமசுந்தரம் கிளார்க் பழகிவிடுகிறார். இவரைப் பார்த்து காபி சாப்பிடுகிறீர்களா என்று உபசரிக்கும் அளவிற்கு நெருக்கம் வளர்ந்துவிடுகிறது. இன்னும் வங்கியில் உள்ள ஏனையோரும் பழகி விடுகின்றனர். எல்லோரும் இவரை நேர்மையாக நடந்து கொள்கிறார் தவறாமல் பணத்தைக் கட்டி வருகிறார் என்று பாராட்டுகிறார்கள்.

இந்த நிலையில் கோழிப் பண்ணைக்குக் கடன் வாங்க புதிதாக ஒருவன் வருகிறான். அவனுக்கு யார் ஷீரிடி (Surety) போடுவது? இவர் போட்டால் வங்கிக்கடன் தரலாம் என்று அங்கு உள்ளவர்கள் கூற இவரும்

புதிதாக வந்தவனுக்கு ஷீரிடி போட்டுக் கொடுக்கிறார். அவனுக்க கடன் அனுமதி கிடைத்து விடுகிறது. இப்ப நாகநாதனுக்கு வங்கியில் உள்ள செல்வாக்கே தனி.

ஆரம்பத்தில் வங்கிக்கு உள்ளே நுழையவே எப்படிப் பயந்தார்? யார், யார் என்பது தெரியாமல் பார்த்தவர்களுக்கெல்லாம் வணக்கம் போட்டார். அப்போது அவர் ஓர் அடிமை போல இருந்தார். இதுதான் தாசமார்க்கம்.

அதன்பின் அவருக்கு கடன் அனுமதி கிடைத்து விடுகிறது. கூர்க்காவிடம் உள்ளே விடு என்று உரிமையுடன் சொல்லி வங்கிக்கு உள்ளே புகுகிறார். அந்த அனுமதிக் கடிதம் அவருக்கு உரிமையை வழங்கி விடுகிறது. உரிமையுள்ள மகன் தந்தையிடம் நெருங்குவது போல உள்ள நிலைமை இது. எனவே இது மகன்மை நெறி. அதாவது சற்புத்திர மார்க்கம் என்று வடமொழியில் கூறினர்.

அதன் பின்னால் நேர்மையாகக் கடன் தவணைகளைச் செலுத்தும் வகையில் வங்கியில் உள்ள யாவரிடமும் நன்கு பழகி விடுகிறார். இது தோழமை நெறி. அதாவது சக மார்க்கம் என்றனர்.

கொஞ்ச காலத்தில் வங்கியில் இவர் கையெழுத்துப் போட்டால் பிறருக்குக் கடன் கொடுக்கும் அளவில் வங்கிக்குச் சமமாக வளர்ந்து விடுகிறார். இது சன்மார்க்கம் என்என்னும் நன்னெறி நிலை.

இது போன்ற தான் எல்லாம். ஒரு டெலிபோன் கட்டணம் கட்டப்போனால் கூட இந்த நான்கு நிலைகளையும் தாண்டித்தான் அனுபவம் வரும். முதலில் எங்கே கட்டுவது என்று கேட்டு அலைவது பிறகு எந்த கியூ என்று அலைவது. நான் மைலாப்பூர் என்பான். அவன் இது வண்ணாரப்பேட்டை கியூ, அங்க போய்யா என்று கத்துவான். பயந்து பயந்து ஒரு கியூவில் நின்று இதுபற்றி எல்லாம் தெரிந்து கொண்டதும் இவன் புதிதாக வருகிறவனுக்கு வழிகாட்டுவான். எல்லாவற்றிலும், இந்த தாச, புத்திர, சக, சன்மார்க்க நிலை உண்டு.

ஒருவன் இசை கற்றுக் கொள்ள ஒரு பாடகரிடம் போகிறான். பயந்த நிலையில் செல்கிறான் சீடன் ஆகிறான். சீடன் என்று உரிமை கொண்டாடகிறான். பாடகருக்குப் பாட இவன்மூலம் வாய்ப்பு வாங்கித் தருகிறான். பாடகரிடம் பழகி அவரோடு இணைந்து கச்சேரி செய்கிறான். பின்னால் வாத்தியார் தளர்ந்து போகிறார். இவன் அவரிட்ததைப் பிடித்து அவரது சாயல் முழுமையும் இவனிடம் இருக்கிறது என்று பலரும் கூற அவருக்குச் சமமாகி விடுகிறான். சில நேரங்களில் வாத்தியாரையும் மிஞ்சி விடுகிறான். வாத்தியாருக்குக் கிடைக்கம் வாய்புக்களை வனே தட்டிப் பறிதழுதுக் கொள்கிறான். அவருக்கு வயசாயிடுச்சு பாடினால் காத்துத் தான் வருதுன்னு சொல்லி வாத்தியார் வாய்ப்பை அவனே பெறுகிறான். இது கடைசி நிலை.

இப்படி உலகில் எந்தப் பொருளை அடைவதிலும் இந்த நான்கு நிலைகளும் தவறாமல் இடம் பெறுவதைப் பார்க்கிறோம்.

இந்த நான்கு நிலைகளும் உலகியலில் மட்டுமல்லாமல் பரம்பொருளை அடைவிக்கும் அருளியல் நெறியிலும் உண்டு. இதைத்தான் தாசமார்க்கத்திற்கு அப்பர் என்றும், சன்மார்க்கத்திற்கு மாணிக்கவாசகர் என்றும் அவரவர் நிலையில் பெரும்பான்மை பற்றித் தனித்தனியே உதாரணம் காட்டி ஆன்றோர்கள் விளக்கினர்.

இந்த நான்கு நிலைகளையும் நன்கு அறிந்து கொண்டால் தான் ஆறந்தத்தின் அடிப்படை நமக்கு எளிதில் விளங்கும்.

பெரியோர்களே! ஆண்டவனை நாம் அடைய வேண்டுமானால் 36 தத்துவங்களையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

ஆறா றையும் நீத் ததன்மே னிலையைப்

பேறா அடியேன் பெறுமா றுளதோ

என்று அருணகிரியார் கந்தரநுபூதியில் பாடினார். ஈறாறு முப்பத்தாறு தத்துவங்களையும் நீத்துத்ததான் மேலான பரம்பொருளை அடைய வேண்டும். எப்படி கோழிப் பண்ணைக்கு என் முதன் முதலில் வங்கியல் நுழைந்தானோ அப்படி ஒவ்வொரு தத்துவமாக நுழைந்து தங்கி அதன்பின் அதன் மேலே போய் அடுத்த தத்துவத்திற்குப் போக வேண்டும். ஒவ்வொரு தத்துவமாக பார்த்துப் பயந்து உள்ளே நுழையலாமா வேண்டாமா என்று சிந்தித்து நுழைந்து அதோடு பழகித் திளைத்து அதன்பின் அடுத்த தத்துவத்திற்கு மேலே ஏற வேண்டும். இப்படி முப்பத்தாறு தத்துவங்களை ஒவ்வொன்றாகத் தாண்டிச் செல்ல வேண்டும். இதைத் தேதி தத்துவம் என்ற உபநிடதங்கள் கூறுகின்றன.

அதாவது முதலில் ஒரு தத்துவத்தில் நுழைய வேண்டும். பிறகு அதுவே முடிவில்லை என்று உணர்ந்து மேலேறல் வேண்டும். இவ்வாறு இது இல்லை, இது இல்லை, இதற்கு மேலே போவோம் என்று போவதைத் தான் நேதி, நேதி என்று உபநிடதங்கள் கூறின.

இந்த முறைமையில் முப்பத்தாறு தத்துவங்களையும் முன்னர்க்கூறிய நான்கு நிலைகளின் அடிப்படையில் கடப்பதை உண்மை நெறி விளக்கம் மூன்று வகையாகச் சுருக்கி விளக்குகிறது.

அதாவது முதலில் நாம் எதோடு தொடர்பு கொள்கிறோமோத அதோடு அதன் வண்ணமாகவே மாறி நிறறல். ணஒன்றின் வண்ணம் என்பதை ரூபம் என்று வடமொழியில் சொல்வர். எந்த ரூபத்தோடு தொடர்பு கொள்கிறோமோ அதன் ரூபமாகவே ஆகிவிடுதல். அதில் திளைத்த பிறகு அது என்ன என்று தெரிந்து விடும். தெரிந்த பின் இது இவ்வளவு தானா என்று அதை நீங்கி மேலே போதல். இதனை உண்மைநெறி விளக்கம் இவ்வாறு 3 வகையாகப் பேசுகிறது. அவை 1) ரூபம் 2) தரிசனம் 3) சுத்தி. இதையே தமிழில் உருவம், காட்சி, நீங்கல் என்பர்.

முதலில் ஒன்றிற்கு அடிமையாகி அதன்பால் உரிமை உறவை வளர்த்தக் கொள்வது அதன் வண்ணமாய் நிற்கும் ரூபநிலை. பின்னர் அது என்ன, தான் யார், தனக்கும் அதற்கும் உள்ள தொடர்பு என்ன என்று புரிந்து பழகுதல் தரிசன நிலை. பின்னர் அதை விட்டு மேலேறல் நீங்கல் என்ற சுத்திநிலை. அதாவது ரூப நிலையில் தாசமார்க்கமும், சற்புத்திர மார்க்கமும் அடங்கி விடுகிறது. அதன்பின் தரிசன நிலையில் தான்யார், அது எது என்ற பார்வை கிடைத்துப் பழகுவதால் அது சகமார்க்கம் ஆகிவிடுகிறது. பிறகு அதைவிட்டு மேலேறல் என்னும் சன்மார்க்கம் என்று பேசப்பட்டு இங்கே அது சுத்தி நிலையாகக் கொள்ளப்பட்டது. எனவே தாச, புத்திர, சக, சன்மார்க்கம் என்ற நான்க நிலைகளை உண்மை நெறி விளக்கம் மூன்றாக–தோவது ரூப, தரிசன, சுத்தி என்ற நிலைகளாகச் சுருக்கிக் காட்டியது.

(கூட்டத்திலிருந்து ஒருவர் நூல் பெயர் உண்மை விளக்கமா என்று கேட்கிறார்.)

உண்மை விளக்கம் என்பது மனவாசகம் கடந்தார் என்ற ஆசிரியர் பாடிய சாத்திரநூல். இப்போது நான் சொன்னது உண்மைநெறி விளக்கம் என்ற சாத்திர நூல். இது உமாபதி சிவத்தால் அருளப்பெற்றது. இதில் பேசப்படும் தசகாரியம் என்பது இந்த ரூப, தரிசன, சுத்தி என்ற நிலைகளில் காட்டப்பெற்றன. தசகாரியம் என்பது இறைவனை அடையும் நெறியை பத்து வகைகளில் கூறுவத. அவை

1. தத்துவரூபம்
2. தத்துவ தரிசனம்
3. தத்துவசுத்தி
4. ஆன்மரூபம்

5. ஆன்ம தரிசனம்

6. ஆன்ம சுத்தி

7. சிவரூபம்

8. சிவ தரிசனம்

9. சிவ யோகம்

10. சிவபோகம்

சிவபோகத்தோடு முடிந்துவிடும். அதற்கு மேல் நிலை கிடையாது. சிவத்தோடு இருந்து ஆனந்தம் அனுபவிக்க வேண்டியது தான்.

மண்முதல் சிவம தீறாம் வடிவுகாண் பதுவே ரூபம்

மண்முதல் சிவமதீறாம் மலம்சடம் என்றல் காட்சி

மண்முதல் சிவமதீறாம் வகைதனில் தான்நிலாது

கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதுமன்றே.

இது உண்மைநெறி விளக்கப் பாடல். இம் மாதிரிப் பாடல்களை எல்லாம் இது போன்ற இடங்களில் தானே கேட்கமுடியும். இந்த அருள்நெறித் திருக்கூட்டத்தில் வந்து உட்காருவதற்கே சிவபெருமான் அருள் வேண்டும். இந்த ஊரிலே இருக்கிற உள்ள அத்தனை பேருமா இங்கு வந்திருக்கிறார்கள்? இங்கே வந்து அமோரவே ஒரு நல்லுழ் வேண்டாமா? அது ஒரு பிறமிருக்கட்டும்.

நம்முடைய லட்சணம் என்ன தெரியுமா? இதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் ஜீவனது பருப்பொருள் தன்மை என்ன–அதாவது அதன் அளவு என்ன தெரியுமா? அது எந்தப் பரிமாணத்தில் இருக்கிறது என்பதை யாராவது துல்லியமான துலாக்கோல் தட்டில் வைத்து அளந்து சொல்ல முடியுமா? உலகத்தில் ஏனைய பொருள்களை எல்லாம் அளக்கக் கருவிகள் உண்டு. இதற்கு உண்டா? திகைக்கிறோம். இந்த நேரத்தில் நமக்குக் கை கொடுப்பவர் திருமூலர்தான். உயிரின் நீள அகலங்களை அளந்து சொல்கிறேன் கேள் என்று அவர் ஒரு பாடல் பாடுகிறார் அதைக் கேளுங்கள்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்

கோவின் மயிரொன்று நூறுடன் கூறிவிட்டு

மேவிய கூறது ஆயிர மாயினால்

ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே

இந்தப் பாடல் திருமந்திரத்தில் ஏழாம் தந்திரத்தில் வருவது. இப்படி வேறு எந்த சமயமும் சொல்லவில்லை. பைபிளில் இல்லை குர் ஆனில் கிடையாது சைவ சமயத்தில் மட்டும் தான் உள்ளது. அதுவும் திருமூலர் திருமந்திரத்தில் தான் உண்டு. இந்தப் பாடல் என்ன சொல்கிறது?

மாட்டினுடைய வாலிலிருந்து ஓர் உரோமத்தை எடுத்தக் கொள். அதை ஆயிரம் கூறாக கூறுபோடு நெடுக்காக போடு குறுக்காக அல்ல. போட்டாச்சா? அந்த ஆயிரம் கூறையும் மேலும் நூறாயிரமாகக் கூறுபோடு. நூறாயிரம் என்றால் ஒரு லட்சம். அந்த ஒரு லட்சம் கூறில் ஒன்று தான் உயிரின் அளவு– அதாவது நாம் என்கிறார் திருமூலர். இது தான் நம்ம லட்சணம் என்கிறார் திருமூலர்.

இவ்வளவு சிறிய ஆன்மா தான் முப்பத்தாறு தத்துவங்களையும் தாச, புத்திர, சக, சன்மார்க்க நெறி முறையை அடிப்டையாகக் கொண்டு மேலேறி தச காரியம் சாதித்து இறைவனை அடைய வேண்டும். இது எவ்வளவு கடினம்? இதற்கு எத்தனை பிறவிகள் ஆகுமோ?

இதைத் தான் மாணிக்கவாசர், புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி பல் விருகமாகிப் பறைவயாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராயப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் செல்லலா அநின்ற இத்தாவர சங்கம்துதுள் எத்தனை எத்தனை பிறவி எடுத்தேனோ, என்னென்னவாய் இருந்தேனோ, எப்படியெல்லாம் வாழ்ந்தேனோ என்று பாடி அலமருகின்றார்.

இந்த நடுக்கம் அருளாளர்களுக்கெல்லாம் அவர்களது அருள் முயற்சியில் ஏற்படும். தாயுமானவர் கூட அப்பிறவி த்பிபனால் ஏ்பிபறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன் என்று பாடிப் பயப்படுகின்றனர். சென்றது முடிந்தது அடுத்து என்ன? என்கிறதார். இப்பிறவி முடிந்தால் இனி அடுத்த பிறவி ஏதோ என்று தாயுமானவர் கவலைப் படுகிறார். இதை நினைத்து அவரது நெஞ்சம் பகீரென நடுங்குகின்றதாம். ஆனால் நாம் இதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்வதில்லை. நிம்மதியாக உறங்குகின்றோம்.

சரி! இப்படிப் பலபிறவிகள் எடுத்து, எடுத்து, இளைத்து, இளைத்து இன்று இந்த மானிடப் பிறவி எடுத்துக் கடவுளாவது மண்ணாவது என்று காலத்தைக் கழித்து ஏதோ ஒரு நல்லூழால் தெய்வ அருள் வாய்க்கிறது. அருள் பெறும் அந்நிலையில் அருள் முயற்சிகளில் ஈடுபடும் போது நம்மைக் குழப்புவதற்கென்றே நூறாயிரம் பேர் வருவார்கள். இதை நான் சொல்லவில்லை. மாணிக்கவாசகர் சொல்கிறார்.

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி

முனிவிலா ததோர் பொருளது கருதலும்

ஆறுகோடி மாயா சத்திகள்

வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.

பலவிதமான நம்மைக் குழப்புவான் விபூதி கொடுத்து நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் தீர்கிகறேன் என்று விபூதி எடுத்து வந்து விசித்திரம் செய்து ஏமாற்றுவதன். நமக்கு இல்லாத பிரச்சினையா? ஒன்றா, இரண்டா? பலப்பல பிரச்சினைகள். நாம் அவங்கிகட்ட போகலான்னாலும் அவன் டிவியில் வந்து குழப்புவான். போததற்குச் சிலர், உங்க பிரச்சினை தீரணும்னா மேல் மருவத்தூருக்குப் போங்க என்பான். உடனே மேல் மருவத்தூருக்குக் கிளம்புவான். வேட்டி சிவப்பு வேட்டியாகும். கொஞ்ச நாள் கழித்து இன்னொருத்தன் மெல்ல வருவான். ஏன் சார்? அங்க போய்ட்டு வரேன் என்கிறான் இவன். அதெல்லாம் விடுங்க சார்! வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை மாங்காடு போய் வாங்க! நிச்சயம் பலன் கிடைக்கும். வெள்ளிக்கிழமை தோறும் மாங்காட்டிற்குப் போக ஆரம்பிப்பான். சிவப்பு வேட்டி கலர் மாறி பச்சை வேட்டி ஆகிவிடும். அப்புறம் இந்த விரதம்–அந்த விரதம்! ஒவ்வொருத்தர் இவனை ஒவ்வொரு விதமாக அலைப்பர்.

விரதமே பரமாக வேதியர்

சரதமாகவே சாத்திரம் காட்டினர்

இதுவும் மணிவாசகர் வாக்கு. இப்படி நம்மைக் கெடுப்பதற்கென்றே பலபேர் இருப்பார்கள்.

உனக்கு இது நடக்கணம்னா, இந்த விரதம் இரு.

உடனே சங்கடஹர சதுர்த்தி விரதம் இருப்பான். இன்னொருத்தர் ராகுகால பூசையின் மகிமையைச் சொல்வார். உடனே பெண்கள் கூட்டம் அங்கே மொய்க்கும். இப்ப ராகு கால பூசை எங்கள் ஊரில் (ஆகிவிட்டது) வேகமாக வளர்ந்து விட்டது.

திருநாகேசுவரத்தில் போய் பார்த்தீங்கன்னா திருநாகேஸ்வரர் தனியாக அம்போ என்று இருக்கிறார். ராகுவின் இடத்திலே ஒரே கூட்டம். சுமார் 500,600 பேர் டிக்கட் வாங்கி ராகுவிற்குப் பூசை செய்கிறார்கள். நான் அந்தக்கோயில் நிர்வாக அதிகாரியை இவ்வளவு பேரும் திருநாகேஸ்வரருக்கு பூசை செய்துவிட்ட இங்கு வந்து ராகுவிற்குப் பூசை செய்கிறார்களா என்று கேட்டேன். அவர் இல்லை என்றார். சுவாமிக்குப் பூசை செய்ய எத்தனை டிக்கட் போச்சு என்று கேட்டேன். மொத்தம் ஏழு என்றார். அடபாவமே! சாமிக்கு 7 ராகுவிற்கு 500. பாவம்! மக்கள் தேர்வில் சாமி குறைந்த ஓட்டு வாங்கித் தோற்றுவிட்டார். சாமிக்கு டெபாசிட் கூட கிடைக்காது போலிருக்கிறது. இதில் வேடிக்கை என்ன என்றால் இந்தத் தலத்தில் ராகு திருநாகேஸ்வரரை பூசித்து தனது தோஷம் நீங்கப் பெற்றான் என்பது வரலாறு. கடவுளே!நாம் எங்கே போகிறோம்?

இதைத் தான் ஆறு கோடி மாய சத்திகள், வேறு வேறுதம் மாயை தொடங்கின என்று கூறினார் மாணிக்கவாசகர். எது உண்மையான சமயநெறி என்று அறிந்து வந்து சேர்வதற்கே ஊழ்வினை இருக்க வேண்டும். உங்களுக்கெல்லாம் நல்ல ஊழ்வினை இருப்பதால் தான் இங்கே வந்து சேர்ந்துள்ளீர்கள்.

இப்படி நல்ல ஊழ் பெற்ற வரவானேயானால் மெல்ல மெல்ல அவன் யோக நெறிக்கு உந்திச் செலுத்தப்பட்டு யோகம் செய்வதற்கு எண்ணம் தோன்றும்.

யோகம் என்ற வடமொழிச் சொல்லிற்கு சேர்தல் என்று பொருள். இறைவனுடைய அடியைச் சேர வேண்டும்–அதைச் சார வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் மேலோங்கி நிற்கும்.

அப்படி இறைவனுடைய அடியைச் சேர யோகப் பயிற்சி செய்ய வேண்டும் என்று தொடங்கினால் அதிலே பலவகை!

ராஜயோகம், கருமயோகம், அடயோகம் எனப் பலப்பல. இங்கேயும் குட்டையைக் குழப்பிப் பலர் மீன் பிடிக்கக் காத்திருப்பார்கள் சார் உங்களுக்கு குண்டலினி சத்தியை மேலெழுப்ப வேண்டுமா? ஆமாம் என்றால் அதற்குக் கட்டணத் ரூ100 என்பான் விளம்பரம் செய்வான். குண்டலினி சத்தியை எழுப்புவதற்கு நூறு ரூபாய் மக்களை எப்படியெப்படி எல்லாம் ஏமாற்றுகிறார்கள்! நூறு ரூபாயைக் கட்டணமாக வாங்கி எழுப்பப் படுவதா குண்டலினி சத்தி! காய்கறி விற்பது மாதிரி கூவி இதை விற்கிறானே பாவி!

நம்முடைய இளைஞர்கள் பலர் அங்கே போவார்கள். என்னடா! உலகம் திருந்திவிட்டதா? யோகம் பயில இளைஞர் கூட்டம் இவ்வளவா? என்று பார்த்தால் பிரம்மகுமாரிகள் என்ற பெயரில் அங்கே இளம் பெண்கள் யோகப் பயிற்சி டீச்சர்கள்!

(ஒருவர் கூட்டத்திலிருந்து அது இங்கேயும் உண்டு என்கிறார்)

இங்கேயும் அது உண்டா? எந்த நாட்டிற்குப் போனாலும் அந்தப் பீடை விடாது போலிருக்கிறது! பெண்கள் சொல்லித் தருகிறார்கள் என்றதும் உடனே இளைஞர்களுக்கு ஒரே ஆர்வம். ஓட்டமா ஓடி வரான்! இதை என்ன சொல்ல?

முதலிலே யோகம் செய்யலாம் என்று எண்ணுவதே நல்ல சிந்தனை தான். ஏதோ நல்லூழினால் நல்ல சிந்தனையோடு தான் அவன் இங்கே வருகிறான். அவன் சிந்தையைச் சிதைக்கப் பல மாயா சத்திகள்! இதைத் தான் மணிவாசகர் சொல்லி வருத்தப்படுகிறார்.

திருமந்திரத்திலே கூட பல யோகங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது மூன்றாம் தந்திரத்திலே. அத்தனையும் சொல்லி நான் பரிந்துரைக்கும் யோகங்கள் இவையல்ல. நான் போற்றிச் சொல்லும் யோகம் சிவயோகம் என்று பிரித்தெடுத்து அறிவுறுத்துகிறார்.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருஐக்கினும்

கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை

உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கிடின்

கண்ணாடி போலக் கலந்திருந் தானே!

சிவயோகம் ஒன்று தான் கண்ணாடி போல இறைவனைக் காட்ட வல்லது. சிவயோகம் என்பது மூச்சு பயிற்சியிலே இல்லை. யோகம் என்றவுடனே என்ன நினைக்கிறோம்? மூச்சை அடக்கி உள்ளே இஅரசகம், பூரகம், கும்பகம் என்று சொல்லி ஒவ்வொன்றிற்கும் கணக்க எண்ணிச் சொல்லி அதன் அடிப்படையில அடைவதே யோகம் என்று நினைக்கிறோம். இதைப் பற்றி எல்லாம் இந்தக் கணக்குகள் எல்லாம் திருமந்திரத்திலேயும் வருகிறது. கேசரி யோகம் என்று ஒன்று உண்டு. கேசரி என்றால் சிங்கம் என்று பொருள். நமக்குத் தெரிந்த இன்னொரு கேசரியும் உண்டு அது ரவா கேசரி. இதற்கும் யோகத்திற்கும் எந்த விதச் சம்பந்தமுமில்லை. இதைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமை. ஏனென்றால் பின்னாளில் ரவா கேசரி சாப்பிட்டு விட்டு இந்த யோகம் செய்யப்பட வேண்டும் என்று குழம்பினாலும் குழப்பக் கூடும்.

இந்த யோகத்தில இன்னொன்று உண்டு. உள்நாக்கை நுனி நாக்குத் தொடும் படி உ்ளளே வைத்து மேல்நோக்கிப் பார்த்தவாறு செய்வது ஒரு வகை யோகம். இப்படிச் செய்தால் வீட்டில் இருப்பவர்கள் நம்மை ஒரு மாதிரி பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். இது வரைக்கம் நல்லாத்தான் இருந்தார். எங்கேயோ போய் யோகம் கத்துக்கிட்ட இந்த மாதிரி ஆயிட்டார் என்பார்கள். இந்த யோகத்தில் ஒரு ஆசனம் பேசப்படுகிறது. அதாவது விபரீத யோக கரணி. பேரே சரியில்லை பாருங்கள்!

எனவே தான் திருமூலர் சொன்னார்–சைவர்கள் செய்ய வேண்டியது தியானமேயகமே. இதற்குப் பெயர் சிவயோகம் என்று பெயர். சிவயோகம் என்பது கண்ணில் இரந்து தொடங்குவது. மூச்சிற்கும் அதற்கும் சம்பந்நமில்லை. உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கு என்றார் திருமூலர்–நோக்கு என்பது கண் பார்வையைக் குறிப்பது.

திருமூலரின் ஞானப் பேரர் அருணகிரியாரும் இதையே கந்தரலங்காரத்தில் வலியுறுத்தினார். திருமூலநாதருடைய அம்சம் அருணகிரிநாதர் என்று ஒரு கர்ண பரம்பரை வழக்கு உண்டு. இதை ஒரு பேச்சுக்குச் சொன்னேனே ஒழிய நம்பத்தக்கது இது என்று நான் சொல்லவில்லை. அவர் எந்தக் காலரத்தவரோ? இவர்எந்தக் காலத்தவரே? இருவரையும் தொடர்புபடுத்திப் பேசுவதும் உண்டு என்பதற்காக இதைச் சொன்னேன்ன. இருவரும் ஒரே கருத்தப்பட எடுத்துக் கூறுகிறார்கள்.

அதற்காகச் சொன்னேன். அருணகிரியார், கந்தரலங்காரத்தில்,

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்(கு)

அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம்? சிவயோகமென்னும்

குருத்தை அறிந்து முகம் ஆறுடைக் குரு நாதன் சொன்ன

கருத்தை மனத்தில் இருந்தும் கண்டீர்முத்தி கைகண்டதே

சிவயோகத்தால் வீட்டினுள் (முத்திப்பேற்றில்) நுழைவது மிகவும் எளிதே என்றார். இது ரொம்பச் சுலபம்! இதைவிட்டு ஏன் மூச்சைப் பிடித்து ஏற்றி, இறக்கி, எண்ணி அவத்தைப் பட வேண்டும்?

மூச்சைப் பிடிப்பதனால் பலன் இல்லாமல் இல்லை அதற்குரிய பலன் உண்டு. மூச்சைப் பிடித்தச் செய்வது ஒரு படிதானே தவிர அதுவே நேராக இறைவனை அடைவிக்காது. அதன் பலன் வேறு. இவையனைத்தும் திருமந்திரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. யோகம் என்றால் இவை இவை உண்டு இதில் நீ மேற்கொள்ள வேண்டியத இது என்று அந்தப் பாங்கை எடுத்துக் கூறுகிறார்.

நாம் இதையெல்லாம் படிக்கிறோம். ஆனா திருமூலர் எதை பண்ணச் சொல்கிறாரோ அதை விட்டு விடுகிறோம். திருமந்திரத்துர இது வருதா சார், அது வருதா சார் என்று கேட்டுக் கேட்டுக் கடைசியில் கேசரியைக் கிளறிவிட்டு இருப்பான்.

திருமூலர் தெளிவாக நமக்குச் செல்கிறார். உள்நாடி உள்ளே ஒளி பெற நேக்கிடின் இதை நாம் கவனிப்பதில்லை.

சிவயோகம் கண் தொடர்புடையது என்பதை திருமூலர் மட்டுமா சொன்னார்? மாணிக்க வாசகரும் சொன்னார்.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா

விழுப்பொருளே உன தொழுதபடி யோகங்கள்

மண்ணகத் தேவந்து வாழச்செய்தானே

வண்திருப் பெருந்துறை யாய் வழியடியோம்

கண்ணகத்தே நின்று களிதரு தேனே

கடலமுதே கரும் பேவிரும் பாடியார்

எண்ணகத்தாய் உலகுக்குயி ரானாய்

எம் பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

இந்த தீரவெம்பாவைப் பாடலில் கண்ணகத்தே நின்று களிதருதேனாக இறைவன் கிடைக்கிறான் என்று கூறப்பட்டது–தோவது சிவயோகம் கண்ணகத்தே நின்று அடைவது என்று கூறப்பட்டது. இந்தப் பாடலிலே ஓர் அழகு! எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே என்று எம்பெருமானை விளித்துப் பாடுகிறார். எம்பெருமானே! என்று விளிக்கவில்லை. எம்பெருமான்! என்று விளிக்கிறார். தூரமாக உள்ள ஒருவரை சங்கரா! வா! என்று கூப்பிடுவர். இதற்கு சேய்மைச் சுட்டு என்று பெயர். கிட்ட இருந்தால் சங்கு என்று கூப்பிடுவர். இதற்கு அண்மைச் சுட்டு என்று பெயர். நெருக்கமாக இருப்பவரை நீட்டி அழைக்க

வேண்டியதில்லை. மாணிக்கவாசகருக்கு சிவயோகம் காரணமாக இறைவன் நெருக்கமாக வந்துவிட்டானாம்! அதனால் எம்பெருமானே என்னாமல் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே என்றார். ஒவ்வொரு சொல்லிலும் எவ்வளவு நுட்பம்!

இனி, கண்ணகத்தே இருந்து யோகம் எப்படித் தொடங்குகிறது என்பதைப் பார்ப்போம். இங்கே உங்கள் திருவடிகளைத் தொட்டு ஒரு விண்ணப்பத்தை வைக்கிறேன்–ஒரு இரண்டரை மணி நேரம் செலவு செய்து ஒரு சொற்பொழிவைக் கேட்கிறோம் என்றால் அதற்குப் பலன் கிட்ட வேண்டும்–எனவே உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். தினமும் 5 நிமிடம் கண்மூடித் தியானப் பயிற்சி செய்யுங்கள். அது ஒன்றே உங்களைக் கடைத்தேற்றும்.

முதலில் கண்மூடித் தியானத்தைத் தொடங்கும் போது எண்ணங்கள் எல்லாம் எங்கெங்கேயோ ஓடிக் கொண்டிருக்கும். அப்போது தான் ஒருத்தன் வந்து பெல் அடிப்பான் பத்திரிகை போடுவான் பால் கொண்டு வருவான். இதையெல்லாம் பார்த்துவிட்டு மீண்டும் அப்பாடா என்று உட்கார்ந்தால் வேலைக்காரி கதவைத் தட்டுவாள். இத்தனையும் மீறி தியானம் செய்ய வேண்டும். இதில் எது உசிதமான நேரமோ அதைத் தொந்தெடுத்துக் கொள்ளுங்கள். நேர விஷயம் முடிந்தாயிற்று. அடுத்து தியானத்திற்கு உரிய உருவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பெரியோர்களே! கோவிலில் பல உருவங்கள் உள்ளன. அந்த உருவங்களில் சிறந்ததான ஓர் உருவத்தைத் தேர்ந்தெடுத்து அந்த உருவத்தை மெல்ல மெல்ல மனத்தில் கொண்டு வர வேண்டும். ஒரு முறை தேர்ந்தெடுத்தபின் உருவத்தை மாற்றிக் கொண்டே இருக்கக் கூடாது.

கோயிலுக்குச் செல்வோமானால் கருவறை வெளிச்சமற்று இருட்டாக இருக்கம். அருகில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அந்த இருட்டில் கடவுளின் உருவம் மங்கலாகத் தெரியும். சுவாமிக்குச் சூடம் ஏற்றிக் காட்டும் போது உருவம் சற்று பளிச் செனத் தெரியும். அந்தச் சமயம் பார்த்துக் கடவுளைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு கன்னத்தில் போட்டுக் கொள்வான். எந்த நேரத்தில் கடவுளின் உருவத்தை நன்கு பார்த்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமோ அந்த நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டால் எப்படி? பெருமானுடைய உருவம் நம்முடைய மனதில் பதிய வேண்டும். அது தான் முக்கியமானது.

பாம்பன் சுவாமிகள் சொல்வார் ஒவ்வொரு தலத்திற்கு போவேன். அங்கே ஒவ்வொரு கடவுள் பிரதிமையிலும் முருகா! உன்னுடைய உருவத்தை நான் தரிசிக்கிறேன். அப்படி அநதப் பிரதிமையில் உன்னுடைய உருவம் படியாவிட்டால் அதில் என் உள்ளம் படியாது என்றார்.

திருவா ரெந்தத் தலமுற்றாலும் தெய்வம் தொழுதாலும்
பெருவாரி படிந்தாலும் தெய்வப் பெயர்கள் சொற்றாலும்
மருவா ரளிநக் கடம்பார் மார்பா மங்கா ஒளியாம் உன்
உருவா னதிலே படியா விடின் என் உள்ளம் படியாதே

பாம்பன் சுவாமிகள் மதுரை மீனாட்சியம்மனைப் பார்க்கப் போகிறார். அவர் ஏற்கெனவே முருகப் பெருமானின் உருவத்தை மனதில் பதியவைத்தக் கொண்டவர். அவர் மீனாட்சியம்மனைப் பார்க்கிறார் அங்கே அவருக்கு மீனாட்சியம்மன் தெரியவில்லையாம், முருகப்பெருமான் தான் தெரிந்தாராம். எங்கே எங்கே பார்க்கின்றேனோ அங்கேயங்கே தென்படும் உருவத்தையெல்லாம் முருகப் பெருமானே! உன்னுடைய உருவமாகப் பார்க்கிறேன் என்கிறார். மீனாட்சியம்மனைப் பார்த்து அன்னையே அருட் குகப்பிரமமே என்று

பாடுகிறார். மீனாட்சியம்மன் அவருக்குக் குகப்பிரமமாகத் தெரிகிறது. அப்படித் தெரியவில்லை என்றால் என்ன பண்ணுவாராம்? அந்த வழிபாடே வேண்டாம் என்று அந்தக் கோயிலை விட்டு வந்து விடுவாராம்.

.....கடம்பார் மார்பா மங்கா ஒளியாம் உன்

உருவா னதிலே படியாவிடின் என் உள்ளம் படியாதே

அப்படியானால் எது முக்கியம்? நமக்கு உருவந்தான் முக்கியம். அதை வைத்துத் தான் தியானம் செய்ய வேண்டும். அதற்றகாகத் தான் நம்முடைய சமயத்தில் இவ்வளவு வகையான உருவங்களைப் படைத்தார்கள், வேண்டியதைத் தெர்ந்தெடுத்துக் கொள் என்று.

ஆண்டவன் மூன்று நிலையில் உள்ளான். அவை அருவம், உருவம், அருவுருவம், அருவுருவம் என்பது இலிங்க வடிவம் உருவம் என்பது நடராசரின் உருவம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இத்தனை உருவங்களை கடவுளுக்கு ஏற்றிப் படைத்துக் கொடுத்தார்களே, எதற்காக? அந்த உருவத்தை மனத்தில் பதித்துக் கொள்வதற்காகத் தான். மனம் எதையாவது பற்ற வேண்டுமானால் உருவம் அவசியம். உருவம் இல்லாவிடில் மனது பற்றாது. பழங்காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி, இன்றைக்கு என்ன தேதி? 4,9,99 ஆகிய இன்றைக்கு சரி இனிமேலும் சரி, மனிதன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவனுக்கு மனம் என்று ஒன்று உண்டானால் ஒவ்வொரு சொல்லையும் சொல்லும் போதும் அவனுக்கு அந்தச் சொல் குறித்த உருவம் முதலில் தோன்றிய பின்தான் அந்தச் சொல் விளங்கும். மாடு என்று சொன்னவுடனே உங்களுடைய மனதில் மாட்டின் உருவம் வந்து போகும். அதுபோல ஆண்டவன் என்றால் ஆண்டவனின் உருவம் வந்து போக வேண்டும். அதற்கு ஆண்டவன் ஓர் உருவத்தை எடுக்க வேண்டும். எந்த உருவத்தை எடுப்பான்? யார் யார் எந்தெந்த உருவத்தில் ஆண்டவனை நினைக்கிறார்களோ அந்தந்த உருவத்தை எடுப்பானாம்.

ஆருருவம் உள்குவார் உள்ளத்துள்ளே

அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

என்று அப்பர் பாடி இதை உறுதி செய்கிறார்.

அருவமாய் இருக்கிற ஆண்டவன் நம்பொருட்டு அருவுருவும், உருவும் எடுக்கிறான். நம் பொருட்டு மூன்று நிலைகளிலும் வருகிறான். நாம் எந்த உருவத்தை நினைக்கிறோமோ அந்த உருவத்தில் வருவது அவனது வான்கருணையைக் காட்டுகிறது.

மொழி வரலாற்றைப் பார்த்தோமானால் முதலில் வந்த எழுத்து உருவ எழுத்து தான். உருவ எழுத்தே நாள் பட நாள்பட வட்ட எழுத்தாகி அதன்பின் இப்போது சதுர எழுத்தாக மாறியுள்ளது. காரணம் மனது பற்ற வேண்டுமானால் உருவம் வேண்டும். எனவே உருவம் இல்லாத ஆண்டவன் நம்முடைய வசதிக்காக நாம் நினைத்த உருவம் எடுப்பது அவனது வான்கருணை அல்லவா?

ஆனால் சில மதங்கள் ஆண்டவனுக்கு உருவம் கிடையாது என்கின்றன. அப்படிச் சொல்வதில் முத்னமையாக இருப்பது இஸலாமிய மதம். இது ஆண்டவனுக்கு உருவம் கிடையாது அருவாக மட்டுமே அவன் இருக்கிறான் என்று கூறுகிறது. கடவுளுக்கு உரவம் கூறும் நம்மை அவர்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

நான் நால்வர் படம் போட்டு ஒரு லெட்டர் பேடு வைத்திருந்தேன். என் வீட்டில் ஒரு வேலைக்காக ஒரு இஸ்லாமியர் வந்தார். நான் சில பொருட்களை அந்த லெட்டர்பேடில் எழுதிக் கொடுத்து அதை வாங்கி வந்து வேலை செய்யும் படி அவரிடம் கொடுத்தேன். அந்த நால்வர் படம் இருக்கும் பகுதியைக் கிழித்துவிட்டு சீட்டை மடித்துவைத்துக் கொண்டார். ஏன் அதைக் கிழித்தீர் என்று கேட்டபோது நான் விக்கிரகத்தை எல்லாம் தொடமாட்டேன் என்றார். அவர் மீது கோபித்துக் கொள்ளவில்லை. அவர் ஏதோ ஒரு கொள்கை வைத்திருக்கிறார் அதன்படி அவர் நடந்து கொள்கிறார் என்று விட்டுவிட்டேன். அவர் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள் சார்! எங்கள் தூதுவர் சொன்னார் கடவுள் விக்கிரமாக இல்லை கடவுள் அருவம் தான். எனவே உருவங்களைத் தொடுவது எங்கள் கொள்கைக்கு எதிரானது என்றார்.

இதைப்பற்றி சிவஞான சித்தியார் ஒன்றை மிக அற்புதமாகக் கூறுகிறது. குறித்ததொன்று ஆகமாட்டாக் குறைவிலன் ஆதலானும் இது ஓர் அற்புதமான பார்வை.

இங்கே ஒன்றை நான் சொல்ல வேண்டும். மாக்ஸிம் கார்க்கி என்ற கம்யூனிச எழுத்தாளன் ரஷ்ய மொழியில் தாய் என்ற நூலை எழுதினான். அது உலகெங்கும் பரவிய நூல். பெரியோர்களே! உலகிலேயே மிக அதிகமான மொழிகளில் மொழி கெயர்க்கப்பட்ட நூல் பைபிள். அதற்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். அதற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படக் கூடிய நூல் மாக்ஸிம் கார்க்கி எழுதிய தாய் என்ற இந்த நூல். அவ்வளவு புகழ் பெற்றது இந்த நூல்.

இந்த நூலில் கார்க்கி ஒரு கருத்தை எடுத்து வைக்கிறான். கம்யூனிச கொள்கையில் கடவுளுக்கு இடமில்லை என்பது நமக்கத் தெரியும். கடவுளைப் பற்றி எழுதிதிய கார்க்கி ஒரு எலி கடவுளை வரித்துக் கொள்ள வேண்டுமானால் அந்தக் கடவுள் எலியாகத் தான் இரக்கும் என்றதன். இத சரிதானே! அது தானே அதனுடைய சிந்தனைக்கு எட்டிய வடிவம்! ஒரு எலி கடவுளை மனித வடிவத்தில் வைத்த வணங்கப் போவதில்லை. காரணம் என்னவென்றால் அதனுடைய மனது அதனுடைய வடிவத்தைத் தான் ஏற்றுக் கொள்ளும். அது போல மனிதனுடைய மனம் எதை ஏற்றுக் கொள்கிறதோ அதைத் தான் கடவுளுக்கு ஏற்றி வழிபடும்.

இப்ப எலிக்கு அருள்புரிய வேண்டும் என்று சொன்னால் ஆண்டவன் என்ன செய்வான்? எலி நினைக்கும் எலி வடிவில் சென்று அதற்கு அருள்புரிய வேண்டும். இப்படித் தான் அருள்புரிந்தான் என்று திருவிளையாடற்புராணம் சொல்கிறது. அதில் நாரைக்கு முந்தி கொடுத்த படலம் என்று வரும். பன்றிக் குருளைகளுக்கு அருள்புரிந்த படலம் வரும். பன்றிக் குருளைகள் ஆண்டவனிடம் எந்த மொழியில் வேண்டி இருக்குடங? வடமொழியிலா? அவற்றிற்கு ஏது மொழி? அவற்றிக்கு என்ன தோன்றுகிறதோ அது தான் மொழி அது தான் கடவுள். மாக்சிம் கார்க்கி சொன்னது போல அது பன்றியாகவே கடவுளை நினைத்து வழிபட்டிருக்கலாம். அதனால் தான் ஆண்டவன் தாய்ப் பன்றியாகவே கடவுளை நினைத்து வழிபட்டிருக்கலாம். அதனால் தான் ஆண்டவன் தாய்ப் பன்றியாக வந்து பன்றிக்குருளைகளைக் காப்பாற்றி அருள்புரிந் தான் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

எனவே எந்த உருவத்தினை உயிர்களின் மனம் ஏற்றுக் கொள்கிறதோ அந்த உருவத்தில அறைவன் வந்து அருள்புரிய வேண்டும். அப்படி வந்தால் தான் அவன் இறைவன். ஏனென்றால் இறைவனுக்கு நானும் ஒரு பிள்ளை (எதிரில் உள்ளவரைச் சுட்டிக்காட்டி) அவரும் ஒரு பிள்ளை ஒரு பசுவும் அவரக்குப் பிள்ளைதான். சர்வ ஜீவராசிகளுக்கும் அவன் தான் தந்தை. அவையவை எப்படியெப்படி ஆண்டவனை வணங்குகிறதோ அவற்றிற்கேற்ப ஆண்டவன் வந்தாக வேண்டும். இல்லாவிடில் அவன் ஆண்டவன் இல்லை.

ஆக, எந்த உருவத்தை நினைத்து உயிர் வணங்குகிறதோ அந்த உருவத்தை ஆண்டவன் எடுக்க முடியாவிட்டால்–அந்த சத்தி அவனுக்கு இல்லையெனில் அவன் சர்வ வல்லமை படைத்தவன் என்று கூறுவது தவாறகப் போய்விடும். எனவே,

குறித்ததொன்று ஆகமாட்டா குறைவிலன் ஆதலானும் என்று ஆண்டவனைக் குறித்துச் சித்தியார் அழகுபட உரைத்தது. யார் யார் எப்படி எப்படி குறிக்கிறார்களோ அப்படி ஆண்டவன் ஆகவேண்டும். ஆகவில்லை என்றால் அது அவனுக்கு ஒரு குறையாகி விடும். அந்தக் குறை அவனுக்குக் கிடையாது. அவனும் ஒரு உருவத்தில் வந்தாக வேண்டம். இதையெல்லாம் அந்த இஸ்லாமிய சகோதரனிடம் எடுத்துக் கூறியதும் அந்தச் சகோதரன், சார்! நீங்க சொல்றதும் சரியாத்தான் இருக்கு. ஆனா இதையெல்லாம் எங்க மௌல்வி கிட்ட கேட்டுகிட்டு எடுத்துக்கறேன் என்றார். சரி! அது அவருடைய நிலை! அதை விட்டு நம் பொருளைப் பார்ப்போம்.

தியானத்திற்கு நாம் குறிப்பிட்ட ஒரு உருவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். உருவமின்றி தியானம் கைகூடாது. எந்த உருவத்தை எடுத்துக் கொள்வது? உருவத்தைத் தேர்ந்தெடுக்கும் போது அறிவார்ந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். உமதணைத்திற்கு நடராசர் உரவத்தை எடுத்துக் கொள்வோம். இதுவும் இதுபோன்று நமது சைவ சித்தாந்த நெறியிலே போற்றப்படும் அத்தனைக் கடவுள் உருவங்களுக்கு அறிவார்ந்த பொருள் புதையல் போல உண்டு. எல்லாவற்றையும் இப்ப ஆராய முடியாது. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சட்டிக் காட்டுகிறேன். ஒரு சிலர் முருகனை வணங்குவர். ஒரு சிலர் முருகனது வேலை மட்டும் வணங்குவதும் உண்டு. சில கோவில்களில் வேல் மட்டும் இருக்கும். இதனை வேற்கோட்டம் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கதிர்காமத்தில் வேலை மட்டுமே வணங்குவர். வேல் மடடும் அங்குள்ள கோயில் கருவறையில் உள்ளது.

சிலர் கேட்கலாம் ஏன் இந்த வேலை வணங்க வேண்டும்? வேல் ஓர் ஆயுதம் தானே! இது குத்திக் கிழிக்கப் பயன்படுவது இதே போல குத்திக் கிழிக்கப் பயன்படும் கத்தி, பிளேடு, சத்திரி ஆகியவற்றை வணங்கலாமே! எல்லாமே ஆயுதம் தானே!

பெரியோர்களே! வேல் ஆயுதம் மட்டுமல்ல அறிவின் வடிவம். அறிவின் இலக்கணம் என்ன? அறிவு அகன்று, கூர்ந்து ஆழமாக இருத்தல் வேண்டும். ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்பது திருவாசக வாக்கு. இறைவன் பேரறிவின் வடிவம் எனேவ அவ்வாறு மணிவாசகர் இறைவனை விளித்தார்.

எனவே அறிவென்றால் அது ஆழ்ந்து அகன்று கூர்ந்திருக்க வேண்டும். ஒருவன் நிறைய படித்திருப்பான் ஆனால் எடுத்துச் சொல்லத் தெரியாது. அவன் படிப்பு அகன்ற படிப்பாய்இருந்து என்ன பிரயோசனம்? அது அவனுக்குப் பயன் தரலாம் மற்றவாக்க்குனது அறிவு ஒரு பயனும் தராது. நிறையப் படிப்பது வேறு, அதன் ஆழம் காண்பது வேறு. படித்தவற்றின் சாரம் தெரியாவிட்டால் படித்ததனுடைய பயன் என்ன? அடுத்து ஒருவன் பலவற்றைப் படித்திருக்கலாம். அவற்றின் சாரத்தையும் கண்டிருக்கலாம். ஆனால் படித்த அத்தனையும் எந்த நேரத்திரல் எப்போது பயன்படுத்த வேண்டுமோ அப்போது பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்த இயலவில்லை என்றால் அவனது அறிவு பயன்பாட்டுக்கு உரிய கூர்மையற்று போய் மழுங்கி விட்டது என்று பொருள். எனவே அறிவில் கூர்மை வேண்டும்.

ஒரு உதாரணம் சொல்கிறேன். வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவினை முடித்த் பின்வாக்கம் போல் விபூதி வழங்கிக் கொண்டு இருந்தார். அன்பர்கள் ஒவ்வொருவராக வாங்கிச் சென்றனர். ஒரு வைணவ அன்பரும் அவரிடம் விபூதி வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டு ஒரு சந்தேகம் கேட்டார். சாமி! பெருமாள் கோவிலில் சிவன் கிடையாது. ஆனால் சில சிவன் கோவில்களில் பெருமாள் இருக்கிறாரே, இது எதைக் குறிக்கிறது? அவர் சொன்னது போல காஞ்சியில் ஏகாம்பரேஸ்வரர் கோயி!லில் நிலாத்துண்ட பெருமாள் சந்நிதி உண்டு. இப்படி ஏன் பெருமாள் கோவிலில் சிவன் இருப்பதில்லை என்பது அவர் சந்தேகம். இந்தச் சந்தேகத்தைக் கேட்ட வைணவ அன்பருக்கு இது பெருமாளுடைய பரத்துவத்தைக் காட்டுவது என்ற எண்ணம். அதைப் புரிந்து கொண்ட வாரியார் சுவாமிகள் பட்டென்று உடனே சொன்னார். அது ஒன்றும் பெரிய விஷயமில்லையப்பபா! கலெக்டர் வீட்டுல பியூன் இருப்பான். பியூன் வீட்டுல கலெக்டர் இருக்க மாட்டார். அவ்வளவு தான்.

உலகியலை எவ்வளவு கூர்ந்து கவனித்திருந்தால் இதை வாரியார் உடனே சொல்ல முடியும்? இது தான் அறிவுக் கூர்மை.

எனவே பெரியோர்களே! அறிவென்றால் அது கூர்ந்து அகன்று ஆழமாக இருக்க வேண்டும். வேலாயுதத்தைப் பார்த்தோமானால் நுனி பாகம் கூர்ந்து, இலைப்பாகம் அகன்று, தண்டுப்பாகம் ஆழ்ந்திருக்கிறது. எனவே அறிவே வேல் வேலே அறிவு. வேலுக்கு அபிடேகம் செய்தால் அறிவிற்கு அபிடேகம் செய்தது ஆகும். வேலுக்கு பூ போட்டால் அது அறிவுக்குப் பூ போட்டதாகும். தீபாரதனை காட்டினால் அறிவுக்குத் தீபாராதனை காட்டியது போலாகும். இதைப் புரிந்து கொண்டு வேலுக்கு வழிபாடு செய்தல் வேண்டும். வேலுக்கு மட்டுமல்ல எந்த உருவத்தை வழீபட்டாலும் அதன் அறிவார்ந்த பொருளை உணர்ந்து வழிபாடு செய்ய வேண்டும். இதைத்தான் சித்தியார் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்

வழுக்கிலாத் தவந்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை

அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி

இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்

அறிவொடு அர்ச்சிக்க வேண்டும் என்கிறது சித்தியார். நீ எதை வேண்டுமானாலும் வணங்கு. ஆனால் அதன் பொருளை அறிந்த அறிவோடு அதனை அர்ச்சித்து வணங்கு என்று சித்தியார் இந்தப் பாடலில் கூறுகிறது. இப்படி வேறு எந்த வேதத்திலும், மதத்திலும் சொல்லவில்லை. எதைச் செய்தாலும் அதைப் புரிந்து கொண்டு செய் என்பது எவ்வளவு உயர்ந்து அறிவார்ந்த கொள்கை!

ஆகவே, வேலை வணங்கு முன் அது எதைக் குறடிக்கிறது என்று பிரிந்து கொண்டு லை வணங்குவதே வேலையாகக் கொள்ள வேண்டும். இப்படி எந்த உருவத்தை வணங்கினாலும் அல்லது தியானித்தாலும் அந்த உருவம் எதைக் குறிக்கிறது என்று அறிந்து கொண்டு வணங்க அல்லது தியானிக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுத்த உருவத்தை மெல்ல மெல்ல தியானத்திலே கொண்டு வர வேண்டும்.

நாம் அப்போது சொல்லிக் கொண்டிருப்பது யோகாந்தத்தைப் பற்றி ஆகும். யோகாந்தத்தில் தியானம் முக்கியமான படி. எனவே தான் இவ்வளவு விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஓர் அன்பர் நான் இங்கு நுழையும் போதே தியானம் செய்யும் முறையைக் கூறுங்கள் என்று கேட்டார். அவருக்கு அவர் மூலமாக எல்லாருக்கும் பயனாகும்படி இதைச் சொல்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒரு வெள்ளைத் தாளில் ஒரு புள்ளி வையுங்கள். உடன் கதவைச் சாத்தி விட வேண்டும். இது மனதை ஒரு முகப்படுத்தத் தானே தவிர, இது ஒன்றும் மாந்தீரீகமல்ல. கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தால் மனைவி மத்தியானம் சாப்பாட்டிற்கு என்ன மெனு என்று கேட்பாள். டெலிபோன் மணி அடிக்கப் பையன் ஓடிவந்து கூப்பிடுவான். இப்படி பலப்பல விதமாக தொந்தரவுகள். எனஅவ கதவைச் சாத்தித் தனித்திருக்க வேண்டும். 5 நிமிடம் அந்த வெள்ளைத் தாளில் உள்ள புள்ளியையே பார்க்க வேண்டும். பெண்களுக்கு ஒரு நேரம் வசதியாக இருக்கும். இப்படி நேரத்தை நாம் முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். முதல் நாள் இரவு 11 மணி என்றால் மறுநாள் அதே இரவு 11 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும் கால தத்துவ அடிப்படையில் தான் செய்கிறோம். நமது உடல் தத்துவம் முப்பத்தாறில் கால தத்துவம் ஒன்று. எனவே நீங்கள் ஆரம்பிக்க வில்லையானால் உடல் தானாக ஆரம்பிக்கும். இரவில் படுக்கிறோம் காலையில் சீக்கிரம் எழுந்து கொள்ள வேண்டும். காலையில் 4 மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று மனதில் நினைத்தக் கொண்டு படுத்தால் தானாக காலை 4

மணிக்கு விழிப்பு வந்து விடும். இந்த அனுபவதட பெரியவர்களுக்குத் தெரியும். அந்தக் கால தத்துவம் நம்மை நாம் நினைத்த நேரத்திற்கு எழுப்பி விட்டு விடும்.

ஆகவே குறிப்பிட்ட நேரத்தில் தினமும் 5 நிமிடம் என்று இந்தப் பயிற்சியை மேற்கொள்ளுங்கள். முதல் நாள் 5 நிமிடம் என்றால் அடுத்த நாள் 10 நிமிடம் அதற்கடுத்த நாள் 15 நிமிடம் என்று இப்படியே பயிற்சி நேரத்தைக் கூட்டிக் கொண்டே வாருங்கள். இப்படியே சுமார் அரை நேரம் பயிற்!ச என்ற வரையறைக்கு வாருங்கள். இப்போது வெள்ளைத் தாளை எடுத்துவிட்டாலும் அந்தப் புள்ளி தெரிய வேண்டும். அவ்வாறு தெரியாவிட்டால் இன்னும் பக்குவப்படவில்லை என்று பொருள். அப்போது பயிற்சி நேரத்தை இன்னும் கூட்டிக் கொள்ள வேண்டும். சிலருக்கு 5 நிமிடத்திலேயே அந்தப் பக்குவம் வந்துவிடும். சிலருக்கு மூன்று மணி நேரம் கூட தேவைப்படலாம். இது அவரவர் பக்குவம். பயிற்சி முடிவில் வெள்ளைத்தாள் இல்லாமலே புள்ளி நமக்கு எங்கு பார்த்தாலும் தெரியும். இப்போது புள்ளி நம்மைச் சார்ந்து விட்டது. அல்லது நாம் புள்ளியைச் சார்ந்து விட்டோம்.

பெரியோர்களே! நம்முடைய மனம் சார்ந்ததன் தன்மையுடையதாக மாறும் தன்மையுடையது. இதனை சைவ சித்தாந்தத்தில் சார்ந்ததன் வண்ணமாதல் என்பர். திருவள்ளுவர் இந்தத் தன்மையை உணர்ந்து நமக்கு வழிகாட்டி ஒரு குறளைக் கூறுகிறார். அதாவது,

சார் புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றைச்

சார்தரா சார்தரு நோய்

சார்ந்ததன் வண்ணமாக மாறுபவர்களாகிய நாம் முதலில் எது நமக்கு உரிய சார்பு என்று உணர்ந்து அதை தேர்ந்தெடுக்க வேண்டும். முன்னால் புள்ளிப் பயிற்சி ஒரு உதாரணத்திற்குச் சொல்லப்பட்டதே ஒழிய அந்தப் புள்ளியைச் சார்வதால் நமக்கு என்ன பயன்? எனவே இப்பயிற்சியல் சாரும் பொருளை நமக்கேற்றவாறு தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அறிவார்ந்த அடிப்படையில் தான் நம் கடவுளின் உருவங்கள் அமைக்கப்பட்டன.

முருகப் பெருமானுக்கு ஆறுதலை என்றால் அது ஓர் அறிவார்ந்த அடிப்டையில் அமைக்கப்பட்டது. நடராசருக்க நான்கு கரங்களைக் காட்டினார்கள் என்றால் அதற்க ஓர் அறிவார்ந்த அடிப்படை உண்டு. அதை உணர்ந்து அந்தந்த உருவத்தைத் தியானம் பயிற்சி செய்தோ மானால் அந்த உருவம் மனதில் பரிணமிக்கும். இப்படி முருகனைத் தியானம் செய்து முருகப் பெருமானாகவே மாறி நிற்கும் முருகனடியார்கள் எத்தனையோ பேர் உண்டு.

இதில் இன்னொன்றையும் தெளிவு செய்கிறார் பாம்பன் சுவாமிகள். அதாவது முருக வழிபாட்டை மேற்கொள்ள எண்ணித் தொடங்கினால் அங்கே முருகனது உருவம் ஒன்றாயில்லை. பல உள்ளன. முருகன் ஆறுமுகத்தில் இருக்கிறார் ஒரு முகம் காட்டித் தனியாக இருக்கிறார் ஒரு முகமோடு இரு மனைவியருடன் இருக்கிறார் ஒரு முகமாகக் குழந்தையாகத் தவழ்கிறார். முருக உருவங்களிலே கூட எத்தனை பேதங்கள்! இதில் ஏதாவது ஓர் உருவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த உருவம் ஒன்று தான் உங்கள் மனதில் படிய வேண்டும். பாம்பன் சுவாமி சொன்ன மாதிரி எந்தச் சாமியைப் பார்த்தாலும் அந்த உருவம் தான் அதில் தெரிய வேண்டும். தெரியலேன்னா மீண்டும் பயிற்சி பண்ண வேண்டும்.

அப்படி தினந்தோறும் பயிற்சியில் பழகப்பழக எல்லா இடத்திலேயும் அந்த உருவம் தெரிய வேண்டும். எனடககு பார்க்குமிடமெல்லாம் என் உள்ளார்ந்த முருகப்பெருமானின் உருவம் தெரிகிறது. இது பயிற்சியால் தானாக வரும். இது ஏதோ, சத்தியவேல் முருகனின் தனிப்பட்ட சொத்தல்ல யாருடைய சொத்துமல்ல. நம் மூதாதையாக்ள் நமக்கு வைச்சிட்டுப் போன பொதச் சொத்து. இதை யாரும் பயன்படுத்தலாம். அவரவர் பயிற்சிக்கேற்ப எல்லா இடத்திலேயும் நடராசர் தெரியலாம் எல்லா இடத்திலேயும் தேவியின் உருவம்

தெரியலாம். அப்படித் தெரியுமானால் அந்த உருவமாக நமக்கு ஆண்டவன் அருள் புரிவான். கண்ணை மூடினாலும் அந்த உருவம் நம் மனக்கண்ணில் தெரிய வேண்டும். தெரிந்தால் அதை அங்கேயே அப்படியே நிறுத்துங்கள். அங்கேயே அதற்கு மனத்தினாலே பூசை செய்யுங்கள். இதைத்தான் சிவஞான பாடியம் அகப்பூசை என்கிறது.

மனதிலே நிறுத்தப்பட்ட அநத்உருவத்திற்க மனத்தினாலே தண்ணீர் ஊற்றுங்கள் மனத்தினாலே பட்டு சாத்துங்கள் மனத்தினாலே தீபாராதனை செய்யுங்கள். இப்படி மனத்தினாலே எல்லாக் கிரியைகளையும் ஆற்றுங்கள். இதுவே அகப்பூசை. நான் உங்களை மேலே கொண்டு செல்வது. புறப்பூசை அதற்கு அனுசரணையாக இருக்கும். சிவபூசை செய்பவர்கட்கெல்லாம் அவர்களது தீடசா குரு அகப்பூசையை முதலில் செய்ய வேண்டும் என்றே சொல்லிக் கொடுத்திருப்பார்கள்.

மெல்ல மெல்ல அகப்பூசையை உள்ளமாகிய தாமரையில் வைத்துச் செய்யப் பழக வேண்டும். அதற்குரிய பாடல்கள் இருக்கின்றன. சிவஞான போதத்தில் மெய்கண்டார் ஓர் அற்புதமான அகப்பூசைப் பாடலைப் பாடியிருக்கிறார்.

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை

அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில்–அஞ்செழுத்தால்

குண்டலியிற் செய்தோமம் கோதண்டம் சானிக்கில்

அண்டனாம் சேடனாம் அங்கு.

இந்தப் பாடலைச் சொல்லி இதயத்தைத் தாமரையாக முறையாகக் கண்டு, அந்த தாமரைப் பொருட்டின் மையத்திலே முருகப்பெருமானையோ, சிவபெருமானையோ, கணபதியையோ, தேவியையோ எது அவரவர்க்கு உபாசானா மூர்த்தியோ அதனை இருக்கையிட்டு அமாத்தி அபிடேகம் பண்ணி–எத்தனை விதமான அபடேகம் உண்டோ அத்தனையும் மனத்தால் பண்ணி–அகப்பூசை செய்தல் வேண்டும். உள்ளே பூசையை எத்தால் இயற்றுவது எனின் மனத்ததால் என்க என்பது சிவஞான முனிவர் வாக்கு. மனத்தினாலே செய்ய செய்ய உருவத்தில் மனம் ஒன்றும். ஒன்றிய பின் தான் யார் அது எது என்பது பற்றிய காட்சி கிடைக்கும். பின்னர் உருவமும் மறைந்து அருவமாக உணர்வு ஒன்றே மேலோங்கி நிற்கும். இது தான் உருவம், காட்சி, கத்தி என்று தசாரியத்தில் கூறப்பட்டது. இதன் முடிவில் ஒளி தோன்றும். அந்த ஒளியை வழிபட வேண்டும்.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மனதில் உருவத்தைப் பற்றிய பினதான் அருவத்தைப் பற்ற முடியும். முதலில் வீடு கட்ட வேண்டுமானால் சாரங்கள் அவசியம். கிரகப் பிரவேசம் செய்யும் போது சாரத்தை எடுத்து விட வேண்டும். ஆகா! இந்த சாரம் தானே வீடு கட்ட உதவியது என்று சாரத்தை எடுக்காமல் யாராவது கிரகப் பிரவேசம் செய்வானா? அதைப் போல்இந்த உருவ பூசையெல்லாம் சாரம் போல. மெல்ல மெல்ல உருவ வழிபாடு என்ற சாரத்தால் உள் ஒளியை நாட்டிய பின்னால் உருவ வழிபாட்டின் தேவை இருக்காது. ஒளியையே வழிபட வேண்டும்.

இந்த ஒளி வழிபாட்டிற்கு முன் முதலில் ஒலி கேட்கும். உலகியலில் கூட ஒளியும் ஒலியும் இணைந்தே வரும். மின்னல் ஒளி வரும் அப்புறம் அதனுடன் இணைந்து இடி முழக்கம் கேட்கும். ஆனால் அருளியலில் அதற்கு நேரெதிராக நடக்கும். முதலில் ஒலி கேட்கும் அப்புறம் ஒளி தெரியும். கேட்கப்படும் ஒலிகள் ஒன்றிரண்டல்ல பத்து ஒலிகள் கேட்கும்.

மணிகடல் யானை வளர்குழல் மேகம்

அணிவண்டு தும்பி வளைபேரிகையாழ்

தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்

பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே.

இது திருமந்திரப் பாடல் எண் 606. எனக்குத் தெரிந்ததை எல்லாம் ஒப்புவித்துக் கொண்டே போகக் கூடாது. உங்களுக்கும் தெரிய வேண்டும். அதனால் அந்தந்தப் பாடல் எண்களையும் உடன் சொலிலக் கொண்டு வருகிறேன்.

உள்ளொலி கேட்கும் போது மணியோசை போல கேட்கும் அலைகடல் ஒசை போல் கேட்கும் பெண்கள் வளையோசை போல் கேட்கும் தும்பி ரீங்காரம் செய்வது போல கேட்கும் மேகம் இடிப்பது போல கேட்கும் பேரிகை தட்டுசது போல கேட்கும் குழல் ஊதுவது போல் கேட்கும் யாழ் வாசிப்பது போல கேட்கும் வண்டு ரீங்காரம் செய்வது போல கேட்கும் யானை பிளிறுவது போல கேட்கும்.

இதுவே தசநாதம் என்று கூறப்படுகிறது இந்த அனுபவத்திற்குப் பெயர் நாத சம்மியம். இதைத்தான் சிலம்போசை கேட்டார் சேரமாபன் பெருமாள் நாயனார் என்று கூறினார். யோக அனுபவத்திலே ஒலி அனுபவம் கட்டாயம் உண்டு. அது தான் அதற்கு அடிப்படை.

இந்த ஒலி அனுபவத்தைத் தான் கண்ணப்பர் காளத்தி காட்டில் கேட்டார். ஏதோ ஓர் ஒலி கேட்கிறதே! இந்த மாதிரி ஒலியை நான் கேட்டதே இல்லையே! உனக்குக் கேட்கிறதா என்று தன்னோடு கூட வந்த வேடன் நாணனைக் கேட்டார். அவனுக்கு ஏது அந்த அனுபவம்? ஏதோ வண்டு கத்தி இருக்கும் என்கிறான் அவன். வண்டு ரீங்காரம் செய்திருக்கும் என்று கூடசொல்லத் தெரியவில்லை. வண்டு கத்தி இருக்குமாம்! கத்துவது கழுதை!

கண்ணப்பன் கேட்டது உள்ளொலி நாணன் கேட்டது வெளியொலி. என் மனத்திற்குள்ளேயே அந்த ஒலி கேட்கும். பூசை செய்து கொண்டிருப்பேன் அது கேட்கும். அலுவலகத்திலே வேலை செய்து கொண்டிருப்பேன். அது கேட்கும். நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். அது பாட்டுக்கு கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி சார் வேலை செய்வது? என்று இன்றைக்கு வாக்மென் என்ற ஒரு கருவி இருக்கிறது. தொடர் வண்டியில் போய்க் கொண்டிருப்பான். பலர் பேசிக் கொண்டிருப்பார்கள். இவன் வாக்மென் காதில் வைத்துக் கொண்டிருப்பான். அவன் காதுக்கள் மட்டும் தனியே பாடல்கள் கேட்டக் கொண்டிருக்கும். அது வெளியில் இருப்பவர்கட்குக் கேட்காது. உள்ளுக்குள்ளே பாடலையும் கேட்டுக் கொண்டு வெளியில் இருப்பவர்களோடும் வேண்டும் போது இடையிடையே இவன் பேசுவான்.

தசநாதம் உள்ளுக்குள்ளே கேட்கும் அனுபவமும் இதே போல் தான். இதையே தணிந்தெழுநாதங்கள் தாமிவை பத்தும் என்று திருமூலர் அற்புதமாக படம் பிடித்துக் காட்டினார்.

இந்த ஒலி அனுபவம் இல்லாத ஒளி அனுபவம் கிடையாது. இதையே பணிந்தவர்க்கல்லது பார்க்கவொண்ணாதே என்று அறுதி இட்டுக் கூறினார் திருமூலர்.

ஒரு அன்பர் கேட்டாரல்லவா? தியான முறைகளை எப்படி மேற்கொள்வது? என்று அவருகங்கதவும், உங்களுக்காகவும் இதை இவ்வளவு விரிவாகச் சொல்லி வருகிறேன். எல்லாவற்றையும் மூடி மறைத்துக் கொண்டே இருந்தால் எப்படி? வெளிப்படையாக ஆக்கணும். இதுதானே எங்களைப் போன்றவர்களின் வேலை.

முதலில் உருவம் உருவம் தேய்ந்து அருவமாகும் ஒலி கேட்கும் அப்புறம் ஒளி அனுபவத்தில் மேலேற வேண்டும். இது தான் யோக சாதனையின் பலன். ஒலி அனுபவத்திற்குப் பின் முதலில் நீல ஒளி தோன்றும். இது அம்பிகையின் குறிக்கும். அதனால் தான் அம்பிகைக்கு நீலி என்று பெயர். நீலி என்றால் எதையும் சொல்வதற்கு முன்னாலே அழுகிறாளே அவள் என்று அர்த்தம் பண்ணக் கூடாது. பெரிய யோக அடிப்படையை வைத்து நீல ஒளியைக் குறிக்கும் அம்பிகையை நீலி என்று கூறினார்கள். இந்த நீல ஒளியில் பழகப் பழக நீல ஒளி மஞ்சள் ஒளியாக மாறும் மஞ்சள் ஒலி சிவப்பொளியாக மாறும் சிவப்பொளி வெள்ளொளியாக மாறும். இந்த வெள்ளொளிக்கு மேல் வேறு ஒளி சொல்லப்படவில்லை. உரிய நூல்களில் இதுவரை தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அவரவர் அனுபவத்தில் அறிய வேண்டும்.

அவ்வா றறிவார் அறிகின் றதலால்

எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே

என்று அருணகிரியார் இதனை அற்புதமாகப் பாடியருளினார்.

இதுவரை யோக நிலைபற்றி ஓரளவிற்கு விரிவாகப் பார்த்தோம். இதுவே யோகாந்தம் என்பது. ஒருவன் யோக நிலையிலே ஈடுபடுகிறான் அதிலே சமாதி நிலை வரும். அந்த நிலையில் ஓர் இன்பம் இருக்கும். எந்த நிலையில் இந்த சமாதி கூடினாலும் அந்தந்த நிலைக்கு உரிய ஓர் இன்பம் கிடைக்கும். அந்த இன்பத்தில் தோய்வான். தோய்ந்த அங்கேயே தங்கிவிடக்கூடாது. அதிலிருந்து அடுத்த நிலைக்கு ஏறிச் செல்ல வேண்டும். இப்படி ஏறிச் செல்லும் மார்ககத்தையே சன்மார்க்கம் என்றனர். சன்மார்க்கம் என்றால் நன்னெறி. இது தான் தாச, புத்திர, சக மார்க்கத்தின் மணி முடியானது என்று முன்னாலே விளக்கமாகப் பார்த்தோம்.

யோக அனுபவத்திலே ஒளி கிடைக்கும் என்றோம். அது தான் நெற்றிக்கண் பார்வை. இந்தப் பார்வையில் நமது உடம்பின் கூட்டுத் தத்துவங்களான முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொரு தத்துவமாகப் பார்க்க வேண்டும். அதில் தோய வேண்டும் இன்பம் கிடைக்கும் பிறகு மேலேறி அடுத்த தத்துவத்திற்குப் போக வேண்டும். இப்படி தத்துவங்கள் முப்பத்தாறையும் தாண்டுபவர்களும் உண்டு. ஏதாவது ஒரு தத்துவத்திலே முடங்கி விடுபவர்களும் உண்டு. மேலே சிந்தனையைச் செலுத்தாமல் யார் யார் எந்தெந்த தத்துவத்தை வழிபடுகிறார்களோ அந்தந்த தத்துவ இடத்தை அடைந்து அங்கேயே இன்புற்று அதுவே மத்தி என்று இருப்பார்கள் என்று இதை ஆன்றோர்கள் விளக்கினர். இதில் சாக்கிய ஆன்றோர்களுக்கு அதாவது புத்த மதத்தினர்க்கு தங்க ஓர் இடமே இல்லாமல் போய் விடுகிறது. காரணம், புத்தமதத்தினர் எல்லாம் சூன்யம் என்பர். அவர்கள் எந்த தத்துவத்தையும் ஒப்புக் கொள்வதில்லை. எனவே தங்கி இன்புற ஓர் இடமில்லாதவர்கள் ஆனார்கள். இதையே சம்பந்தர் தஞ்சமிலாச் சாக்கியர் என்று பாடினார்.

எனவே ஏதாவது ஒரு தத்துவத்தைக் கொள்ள வேண்டும். கொண்டால் அந்த தத்துவ இன்ப உறையுள் கிடைக்கும். அதிலேயே மூழ்கி விடாமல் மேலேறும் திருவருள் இருக்குமானால் மேலேறுதல் வேண்டும். இப்படி ஒவ்வொரு தத்துவத்திலேயும் ஏறுகிறோமல்லவா? அங்கே ஒவ்வொரு தத்துவத்திலேயும் காட்சி கிடைக்குமல்லவா? அக்காட்சியில் அந்தந்த தத்துவங்களில் ஏற்கெனவே தங்கியிருக்கின்ற ஆன்றோர்களைச் சந்திக்கலாம்.

அவ்வாறு சந்திக்கும் போது இது தான் கடைசியா அல்லது இதற்கு மேலும் உள்ளதா என்று அவர்களைப் பார்த்துக் கேட்கத் தொன்றும். நாம் ஓர் ஊருக்குப் போகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அங்கே சிலரைப் பார்ப்போம். அவர்களைப் பார்த்து இந்த வழியே மேலே போகலாமா என்று அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவோம் அல்லவா? அது போல யோக நெறிக்கு உரியவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்கிறார்.

கரையும் கடலும் மலையும்

காலையும் மாலையும் எல்லாம்

உரையில் வருவான் ஒருவன்...

அரையன் இருப்பது ஆரூர் அவன்

எம்மையும் ஆள்வரோ கேளீர்

என்று பாடினார். இதையே மணிவாசகரும்,

கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்!

ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? யார் உற்றார்? யார் அயலார்?

ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

என்று, என்னைவிட முன்னால் சென்று அங்கங்கே பிணைக்கப்பட்டிருக்கிற பெரியோர்களே! கூறுங்கள்! என்று வழி விசாரித்துச் செல்வதாகப் பாடினார். இந்த அனுபவம் எல்லார்க்கும் பொது. யார் இதில் ஈடுபட்டாலும் இப்படித் தான் கேட்பார்கள். இப்படிக் கேட்டுக் கேட்டுத் தான் மேலே போக வேண்டும்.

இவ்வாறு மேலே செல்லும் போது கடவுள் வழி கொடுத்தால் மேலே போகலாம். இல்லாவிடில் அந்தந்த தத்துவத்தில் தங்க வேண்டியது தான்! மரம் வைத்தவன் தண்ணி ஊற்றுவான் என்பது போல அவனுக்குத் தெரியும், நம்மை எந்தப் பிறவியில் எந்த தத்துவத்தில் நிறுத்தி வைப்பது என்பது. இந்த நிலை இந்த ஆன்மாவிற்கு இப்போதைக்கு போதுமா அல்லது மேலேற்றும் அளவிற்கு பக்குவம் பெற்றிருக்கிறதா என்பதை அவன் நிர்ணயம் செய்கிறான். நம்முடைய பக்குவம் அவனுக்குத் தானே தெரியும்! இவன் தேறுவானா தேறமாட்டானா என்பதை அவன் அறிந்த ஒவ்வொரு அந்தமாக அவன் ஏற்றினால் தான் ஆறந்தத்தையும் நாம் காணமுடியும். இன்று கூட இங்கிருப்பவர்கள் அனைவர்க்கும் பக்குவம் உண்டா என்ற அவன் நமது பக்குவத்தை அளந்து அனுமதித்தால் தான் நாம் ஆறந்தத்தையும் காணமுடியும்!

சரி! நமது ஆறந்தப் பயணத்திற்கு வருவோம். முதலில் யோகாந்த அடிப்படையிலே ஒவ்வொரு தத்துவமாக ஏறி வருகிறோம். 24 தத்துவங்களைத் தாண்டிவிட்டோம் அதாவது ஆன்ம தத்துவத் தொகுப்பைத் தாண்டிவிட்டோம் அதற்கப்புறம் குண தத்துவம் வரும் அதன் பின் சில தத்துவங்களைக் கடந்து கலை என்ற தத்துவத்தை அடைகிறோம்.

அந்தக் கலை என்பது என்ன என்று புவனகலை ஞானதீபம் என்ற நூல் கூறுகிறது. கலை என்பத இரண்டு பகுதியாக ஒளிர்வது. ஒரு பகுதி மங்கல் ஒளியாக இருக்கும் இன்னொரு பகுதி கதிரவனைப் போலத் தெளிவான ஒளியாக இருக்கும்.

மங்கல் ஒளி என்பது கலைஞானம் உலகம் இப்படி இப்படி இருக்கிறது என்று நமக்குத் தெரிவிப்பது. பௌதிகம், ரசாயனம், கணிப்பொறியியல் என்று இப்படிப் பல துறை உண்டு. தொல்காப்பியம் கூறுவது போல எழுத்து, சொல், பொருள், உச்சரிப்பியல் என்றெல்லாம் உள்ள துறைகளும் இதில் சேர்ந்தவையே. இதையெல்லாம் நாம் அறிவதற்கம் ஓர் ஒளி வேண்டும். அந்த ஒளியே அறிவொளி எனப்படும். இதை மங்கல ஒளிப்பகுதியான கலைப் பகுதியால் விளக்கம் பெறுவது. எனவே இதைக் கலைஞானம் என்றனர். இந்த ஒளியை மங்கல் ஒளி என்று சொன்னதற்குக் காரணம் என்னவென்றால் இவை நம்முடைய ஐம்புலன்களாலே அதாவது ஐயறிவாலே உணர்கின்ற உணர்வு எனவே இதைஐயுணர்வு எனப்பட்டது. ஐம்புலக் கருவிகளால் அன்றி அருளே கருவியாகக் காண்பது மெய்யுணர்வு எனப்படும். கலையின்

மெய்யுணர்வி பக்கம் விளங்குமானால் வெட்ட வெளிச்சமாக எல்லாம் தெரியும். திருவள்ளுவர் மெய்யுணர்வு என்றே ஓர் அதிகாரம் வைத்தார்.

மெய்யுணர்வு தோன்றும் இந்த நிலையிலே கலாந்தம் என்பது. ஆறந்தம் என்ற தலைப்பிலே திருமூலர் இதனை அற்புதமாகப் பாடியருளியிருக்கின்றார்.

கொள்கையிலான கலாந்தங் குறிக் கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தாதி மோதாதிக்(கு)
உள்ளன வாம் விந்து உள்ளே ஒடங்கலும்
தெள்ளி யதனைத் தெளிதலும் ஆமே.

இந்தப் பாடல் எண்ணிக்கை 2377. இதில் கலாந்தம் என்றால் என் எண்ன என்று சொல்கிறார். கலை என்பது சைவ சித்தர்நதத்தில் வித்யா தத்துவங்களில் ஒன்று. இது கலை ஞானத்தைத் தருவதால் பாடலில் இதை மேதாவி என்று சொன்னார். கலாந்தத்தில் ஓர் அனுபவம் வரும். அதை அவரே எடுத்துச் சொல்கிறார். அதாவது கலாந்தம் என்னும் அனுபவம் வந்தவுடனே பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங் களாக மாறிவிடும். பசுகரணமாக இருக்கும் நேரம் தெளிவாக தெரியாத நேரம். பதிகரணமாக இருக்கும் நேரம் ஒளி தெரியும் நேரம்.

தேசார் சிவமாகும் தன்ஞானத்தின்கலை
ஆசார நேயம் மறையும் கலாந்தத்துப்
பேசா உரைஉணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை 2380. தேசு என்றால் ஒளிப்பிரபை தேஜஸ் என்று வடமொழியில் சொல்வார்களே அதைப் தமிழ்ப படுத்தும் போது தேசு என்பர். தேசு என்பது ஒளியல்ல ஒளிப்பிரபை. ஒளியுள்ள அருளாளர் உடம்பை புகைப்படம் எடுக்க முடியாது. குழல் விளக்கைப் புகைப்படம் எடுக்க முடியாது அதை நேர் நோக்கி எடுத்தால் ஒரே ஒளிச்சிதறலாய் தான் தெரியும். அது போல ஒளியுடம்பு பெற்ற அருளாளர்களைப் புகைப்படம் எடுக்க முடியாது. இந்த தேகத்தை சொர்ணதேகம் என்பர் பொன்னுடம்பு என்றும் கூறலாம்.

பசுகரங்கள் பதிகரணங்களாகி விட்டதால் இந்த நிலையில் அவன் அதிகமாகப் பேசமாட்டான். சிந்தனை மட்டுமே சென்று கொண்டிருக்கும். வேறு எதுவும் தெரியாது. இது கலாந்தத்தின் அனுபவ நிலை.

கலாந்தத்தின் அனுபவம் மேல் வரும் அனுபவங்களுக்கு எல்லாம் கதவைத் திறந்து விடும். ஏனென்றால் அங்கே தானே கருவிகளே அருளாக மாறுகின்றன. எனவே ஆதிக் கலாந்தம் என்ற பாடினார் திருமூலர்.

கலாந்தத்தின் அனுபவத்திலேே திளைத்து நின்ற விடாமல் இன்னும் மேலேறினால் சிவ தத்துவங்ள ஐந்தையும் காணலாம். சிவ தத்துவ வகையிலே சுத்த வித்தைத் தத்துவத்தைத் தாண்டினால் ஈசுர தத்துவம். அதைத் தாண்டினால்சதாசிசவ தத்துவம். அதைத் தாண்டினால்சத்தி தத்துவம். அதைத் தாண்டினால் சிவ தத்துவம் அல்லது நாத தத்துவம்.

இந்த நாதமும் நான்கு வகைப்படும். அவை 1) வைகரி 2) மத்திமை 3)பைசந்தி 4) சூக்குமை. இந்த சூக்குமை பரநாதம் எனப்படும். இதற்கு மேல் தத்துவங்கள் இல்லை. இந்த இடத்திற்குப் போய் விட்டால் ஒலி ஒளியாகத் தெரியமாம்.

சூக்கும வாக்கதுள்ளோர் சோதியாய் அழிவதன்றி

ஆக்கிடும் அதிகாரத்திற் கழிவினைத் தன்னைக் கண்டால்

நீக்கமில் அறிவானந்த முதன்மை நித்தியம் உடைத்தாய்

போக்கொடு வரவிளைப்பும் புருடனுக்கு விகாரம் இன்றாம்.

வாக்கில் சூக்கும வாக்கைத் தரிசித்து விட்டால் ஒலி ஒளியாகக் காட்சி கொடுப்பது தெரியும். ஒலியே ஒளியாவது எப்படி? நாம் எல்பிஜி வாயு சிலிண்டர் வைத்திருக்கிறோம். வெளியே வாயு எனக்காணும் அதுவே சிலிண்டருக்குள்ளே திரவமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அழுத்தத்திலே வாயு திரவமாகிறது அல்லது திரவம் வாயுவாக மாறுவதைப் பார்க்கிறோம். எனவே ஒரு குறிப்பிட்ட அருளழுத்தத்திலே ஒலியே ஒளியாகத் தெரிகிறது. இந்த இடத்திற்கு வந்து விட்டோமானால் நாம் நாதாந்த்தை அடைந்தவர்கள் ஆகிறோம். அப்போது நம் உயிர் அப்படியே ஓம் என்கிற பிரணவ மயமாகி விடும். அதை ஓம் மயமாதல்என்பார் திருமூலர் இதையே பிரணவ தேகம் பெறுதல் என்பர். இதைக் குறித்த திருமந்திரப் பாடலைக் கூறுகிறேன்.

ஆம் அவரில் சிவனார் அருள் பெற்றுளோர்

போமலந் தன்னால் புகழ்விந்து நாதம்விட்(டு)

ஓமய மாகி ஒடுங்கலின் நின்மலந்

தோமறும் சுத்தா வவத்தைத் தொழிலே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை 2233. இந்த பாட்டு ஆறந்தம் என்ற தலைப்பிலே வரவேண்டியது. தவறிப்போய் கேவல சகல சுத்தம் என்ற தலைப்பில் வந்திருக்கிறது. பதிப்பிலே பார்த்தால் பல வேறுபாடுகள் பல குளறுபடிகள். போதாந்தம என்பது ஆறந்த தலைப்பிலேயே விளக்கப்பட்டிருக்காது. வேதாந்ததிலே வர வேண்டியது சிறப்புப் பாயிரத்திலே வரும் அல்லது வேதச் சிற்பில் வரும். பதிப்பித்தவர்கள் இதில் எது முறைமை என்று தெரியாமல் வைத்துப் பதிப்பித்திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் குருமுகமாக திருமந்திரத்தை ஓதி அறியாமல் பதிப்பித்ததது தான். ஏதோ ஓலையில் இருந்தது என்று எடுத்து வைத்து அதை அப்படியே பதிப்பித்து விட்டார்கள். நல்லறிஞர்கள் எல்லாம் திருவருள் துணையோடு கூடி ஒரு செம்பதிப்பு செய்ய வேண்டும்.

திருப்பனந்தாள் பதிப்பிலே ஒரு மாதிரி ப. ராமநாதம் பிள்ளை பதிப்பிலே (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) ஒரு மாதிரி திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பில் ஒரு மாதிரி. இப்படி அவரவர்க்குத் தோன்றியபடி மாற்றி மாற்றிப் பதிப்பித்திருக்கிறார்கள். இது தான் நம் தவக்குறை. தமிழர்கள் மூலநூலை உள்ளது உள்ளவாறே போற்றிக் காப்பதிலிருந்து தவறிவிட்டார்கள். பதிப்பு வித்தியாசத்தை மூலநூல் கொண்டு திருத்தலாம். மூல நூலையே தவற விட்டோமானால்? ஒரு சின்ன உதாரணம் கூறுகிறேன்.

அத்தன் நவதீர்த்தம ஆடும் பரிசு கேள்

ஒத்த எமய்ஞ் ஞானத்து உயர்ந்தார் பதத்தைச்

சுத்தம தாக விள்கிகத் தெளிக்கவே

முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே.

இந்தப் பாடலின் எண்ணிக்கை திருப்பனந்தாள் பதிப்பின் படி 1829. ஒரு அடியாரின் பாதத்திற்கு அபிடேகம் செய்த அருள் நீரைத் தலையில் தெளித்தக் கொண்டால் முத்தி அடைவாய் என்பது பாடலின் பொருள். கங்கையாடுதல், குமரியாடுதலர் போன்ற உலக தீர்த்தங்கள் வேண்டாம் அடியார் பாத தீர்த்தத்தைத் தலைமேல் தெளித்துக் கொள். நீ வேண்டிய முத்தி பெறுவாய் என்று மூலன் சொன்னான் என்று பாடலில் வருகிறது. மூலன் சொன்னான் என்றாலேயே தெரிந்துவிடுகிறது–அது திருமூலர் பாட்டல்ல என்பது. வேறு யாரோ ஒருவர் பாடியதாக அது இருக்க வேண்டும். இதை எப்படி திருமூலர் பாட்டாக திருமந்திர மூவாயிரத்தில் ஒன்றாக சோத்து எண்ணுவது? ஆனால் சேர்த்திருக்கிறார்கள். இப்படி பதிப்புக் கோளாற்றினால் இடைச் செருகலாகவும் இடம் மாறி வந்தனவுமாக ஏறத்தாழ 800 பாடல்களைக் கூறலாம்.

அது ஒரு புறமிருக்கட்டும். கலாந்தத்தில் பொன்னுடம்பு பெறுகிறவன் நாதாந்தத்திலே ஓம் மயமாகி பிரணவதேம் பெற்று விடுகிறான். மனதத்துவம் முதல் நாததத்துவம் ஈறாக நம் உடம்பனைத்தும் பிரணவமயமாகி விட்டது என்றால் நம் ஆன்மா மாயையை விட்டு நீங்கிற்று என்ற பொருள்.

இதுவரை சகலர் என்ற நிலையில் மூன்று மலங்களையும் உடைய ஆன்மா இங்கே மாயையை விட்டு நீங்கியதால் இருமலங்கள் மட்டும் உடையதாய் பிரளயாகலர் என்ற நிலையை அடைகிறது. நம்மால் இப்படியெல்லாம் சாதிக்க முடியுமா என்று திகைக்க வேண்டாம். அனுபவங்கள் எப்படியெப்படி எல்லாம் நிகழும் என்பதை ஓர் உதாரண புருஷனை வைத்தக் கொண்டு காட்டிச் செல்லுகின்றோம்.

இப்போது அந்த உதாரண புரஷர்க்கு மாயை என்ற மலம் நீங்கிய பின் எஞ்சியுள்ள மலங்கள் 1) கன்ம மலர் 2) ஆணவமலம்.

இப்போது அவரது ஆன்மா மாயையை விட்டுத் தனித்து நிற்கிறது. எப்போதுமே ஆன்மா தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதது எதையாவது ஒன்றைச் சார்ந்து தான் நிற்கும். அப்படி உள்ள ஆன்மா தனித்து விடப்படுவது என்றால் எப்படி இருக்கும்? திடீரென யாரையுமே அறியாத நான் மலேசியா விமானநிலையத்தில் வந்து இறங்கியது போல இருக்கும். ஆன்மாவானது தனித்து, பயந்த, திகைத்து, ஒடுங்கி ஓலமிடும். அப்போது அருந்துணை நான் இருக்கிறேன், கவலைப்படாதே! என்று அம்பிகை ஓடி வந்து காப்பாற்றுவாள். அருள் ஆன்மாவைத் தூக்கி நிற்கும். தூக்கி நின்று ஒரு கண்ணாடி காட்டுவது போல எல்லாவற்றையும் காட்டும் நம்மையும் காட்டும். அப்போது தான் முதன் முதலில் நம்மை நாமே பார்க்கிறோம். இதைத் தான் என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து என்று பாடினாள் ஒளவை.

முதலில் இங்கே ஆன்மா தன்னில் தோய்ந்து ஆன்மரூபமாகிறது. அதன்பின் ஆன்ம தரிசனம் கிட்டும். இதை நாம் தசகாரியத்திரே பார்த்தோமல்லவா? ஆன்மா இன்னும் இரண்டும் மலங்களை நீத்துச் சென்று மேலேற வேண்டும். இங்கே மலங்களைத் தாண்டுதல் ஆன்ம சுத்தி எனப்படும். இப்படித் தாண்டுவதற்கு அங்கே ஆன்மா என்ன செய்ய வேண்டும்? இனிமேல் என் செயல் என்று எதுவும் இல்லை என்று அருட்சத்தித் தாயிடம்செயல்களை ஒப்புவித்து விட வேண்டும். இதைத் தான் சிவஞான போத பத்தாம் சூத்திரம் ஏகனாகி இறைபணி நிற்றல் என்று கூறுகிறது. செயலை விட்டோம் என்றால் என்ன பொருள்? வினையை விட்டோம் என்று பொருள்.

உன்னுடைய வினையை ஆண்டவனின் வினையுடன் சேர்ந்து விட்டால் உனக்கென்று வினை எதுவும் இராது. நம் நிழல் விழக்கூடாது என்றால் நாம் பெரிய நிழலில் ஒதுங்கிவிட வேண்டும். இப்படி ஆண்டவனிடம் செயல்களை ஒப்டைத்து விடுவதால் வினை என்ற கன்ம மலம் நீங்கி விடுகிறது.

இனு! எஞ்சியிருப்பது ஆணவ மலம் ஒன்று தான் இதையும்ஒழிக்க வேண்டும். ஆணவம் என்பது தன்முனைப்பு தன்னைப் பற்றிய எண்ணம். இதை விடுத்து இறைவன் திருவடியைப் பற்ற வேண்டும். முற்றிலுமாக இறைவனைச் சரணடைவது. அதாவது முன்னால் தன் செயலை ஆண்டவனிடம் ஒப்படைத்தது போல இப்போது தன்னையே ஒப்படைத்து விடுதல். இதனை ஆதம் நிவேதனம் என்பர்.

நாம் பூசையில் நிவேதனம் செய்யும் போத என்ன நினைத்துச் செய்ய வேண்டும்? நாம் கொடுக்கிற பொங்கலையா கடவுள் சாப்பிடப் போகிறார்? அப்படி அவர் சாப்பிட்டால் அந்த நிமிடமே அவர் நம்மில் ஒருவர் ஆகிவடுவார். அப்புறம் நம்முடைய நிழற்படங்களில் தோற்றம் மறைவு என்று குறிப்பது போல கடவுளுக்கும் நாள் குறித்து படம் மாட்ட வேண்டியது தான்.

உபசாரமாக பெருமானே! நான் உனக்க இதைப் படைக்கிறேன் என்று படைத்தால் கடவுள் அதை வாங்கி சண்டேசுவரருக்குக் கொடுத்து விடுவார். அப்படியானால் பொங்கலைப் படைப்பதன் பொருள் என்ன? அந்தப் பொங்கலைப் போல பெருமானே! உனக்கு என்னைக் கொடுக்கிறேன். ஏற்றுக்கொள்! என்று தன்னையே கொடுப்பது.

என்போத நைவேத்தியம் என்று இதை திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அற்புதமாகப் பாடியருளினார்.

இப்ப நினைத்துப் பாருங்க! ஏற்றுக் கொள்கிற ஆண்டவனும் சித்துப் பொருள் ஏற்கப்படும் ஆன்மாவும் சித்துப் பொருள். ஆனால் அந்தச் சித்து வேறு இந்தச் சித்து வேறு. அது எல்லாம் வல்ல பேரறிவப் பரம்பொருள். இது இறைவனையன்றி எதுவும் செய்ய இயலாத சிற்றறிவுப் பொருள். ஆனால் இரண்டுமே அறிவுப் பொருள் என்ற முறையில் மூன்று குணங்களைப் பொதுவாக உடையன. அதாவது ஆண்டவனுக்கும் அறிவு, இச்சை, செயல் உண்டு. நமக்கும் அறிவு, இச்சை, செயல் உண்டு. நமக்கு இச்சை என்றால், நம்மை அறியாமைத் துயரிலிருந்து விடுவிப்பது அவனது இச்சை. இதைக் கருணை என்போம். இந்த இச்சை அறிவு, செயல் என்ற மூன்றும் ஆண்டவனிடத்தில் எல்லையற்ற நிலையில் இருக்கிறது நம்மிடம் இவை மிகச்சிறய அளவில் உள்ளன.

நம்முடைய இச்சையை நாம் முதலில் ஆண்டவன் மீது செலுத்த வேண்டும். அப்படி நாம் நமது இச்சையை ஆண்டவன் மீது செலுத்துவதில்லை. வேறு எது எதன் மேலோ இச்சையை வைக்கிறோம். ஆண்டவன்பொறுடைமயாக காத்திருக்கிறான். நாம் எது எதன் மேலே யெல்லாம் இச்சை வைக்கிறேதாமோ அது அதையெல்லாம் நமக்குக் கொடுத்து அனுபவிக்க வைத்து அனுபவத்தில் அந்தந்த இச்சையைக் கழிக்கிறார். இதையே வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய் என்றார் அப்பர்.

சின்ன வயதிலே எல்லோர்க்கும் ஐஸ்கிரீம் பிடிக்கும். கல்யாணம் ஆன பிறு ஐஸ்கிரீமா, பெண்டாட்டியா என்றால் போய்யா, எனக்குபட பெண்டாட்டி தான் வேணும் என்பான். வளர வளர ஆசை மாறிவிடுகிறது. முதலில் பிடித்ததில் பின்னால் உவர்ப்பு வந்து விடுகிறது. இப்ப போய், ஐயாவுக்கு என்ன வேணும்னு? கேட்டா, லாலி பாப் என்று நான் பதில் சொன்னா நல்லாவா இருக்கும்? அது ஒரு காலத்திலே எனது விழைவாக இருந்திருக்கலாம். ஒரு காலத்தில் அது உவ்ப்பாக மாறி விடுகிறது. இப்படி ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் விழைவுகளில் நமக்கு உவர்ப்பு வரும் வரை காத்திருக்கிறான் கடவுள். எப்ப என் திருவடி வேண்டுமென்று விழைகிறாயோ, அப்ப கண்டிப்பா அதைத் தரேன் என்று சொல்லிக் கடவுள் காத்திருக்கிறான்.

இவ்வாற நமது இச்சை ஆண்டவனது இச்சையோடு பொருந்தணும். பொருந்தினால் இந்த முறைமை– தோவது யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம் என்ற அனுபவ முறைமைகள் –பொருந்தும். இச்சையோடு

இச்சை பொருந்தியதால் வந்த விளைவு இது. அடுத்து நாதாத்தின் அனுபவ நிலைக்கு மேலாக நமது செயலை ஆண்டவனத செயலிடம் ஒக்கடைத்து வினையை ஒழித்தோம் வினை வினையோடு பொருந்தி விட்டது. இனி எஞ்சியிருப்பது அறிவு ஒன்று தான். நம்முடைய அறிவு இனி இறைவனது அறிவில் பொருந்தினால் இறைவனிடம் பரிபூரணமாக நாம் ஒன்றி விடலாம். நம்முடைய அறிவை –சீவ போதம் என்பர். இது இறைவனது அறிவான சிவபோதத்தில் ஒடுங்கினால் எல்லாம் நிறைவெய்திவிடும். தன்முனைப்பு ஒழிந்து சீவபோதம் சிவபோதத்தில் அடங்கும் அனுபவம் தான் போதாந்தம் என்று கூறப்பட்டது.

போதாந்தத்திற்குப் பின்னால் என்ன? மூன்று மலங்களும் ஒழிந்துவிட்டன. இப்போது ஆன்மாவின் மீது அருள் அருவி மாதிரி கொட்டித் திளைக்க வைக்கும். இதை அருள் வீழ்ச்சி என்று தமிழிலும், சந்திநிபாதம் என்று வடமொழியிலும் கூறவர். அருள் வீழ்ச்சியில் ஆன்மா திளைக்கம் போது அது ஞான தேகத்தைப் பெறும்.

முதலில் கலாந்தத்திலே ஆன்மா சொர்ண தேகம் பெறுகிறது பினனர் நாதர்நத்திலே பிரணவ தேகம் பெறுகிறது. அதன்பின் போதாந்தத்திற்கு மேல் ஆன்மா ஞான தேகம் பெறுகிறது.

ஞானதேகம் பெற்றவுடன் அருள்சக்தி எனப்படும் எம்பிராட்டியாகிய தாய் இதோ, உன் அப்பா சிவபெருமான் என்று காட்டும். ஞானந்தானே ஞேயத்தைக் காட்ட இயலும்!

இதன் பின் மெல்ல மெல்ல ஒளிபெருகிக் கொண்டே வரும். உடல் முழுவதும் இறையொளி நிறைந்துவிடும். அதில் ஆன்மஒளியும் கலந்து நிற்கும். சில நேரங்களில் கண்ணை மூடியதும் மங்கலாக ஒளி தெரிவது உண்டல்லவா? அதுவல்ல இது என்றாலும் அது போல என்று ஓர் உதாரணத்திற்கு வைத்துக் கொள்ளலாம். இறையொளி உடல் முழுவதும் அதாவது பிண்டம் மழுதும் ஒளியாகத் தெரியும். ஆண்டவனும் ஆன்மாவும் ஒளியாகத் தெரியும். பிண்டத்திற்குள்ளே இறைவனோடு ஆன்மா சமமாக்க கலந்து நிற்கும். சமமாக என்றால் இறைவனொட ஆன்மா சமம் என்று பொருள் பண்ணக் கூடாது. இது எல்லை பற்றிய சமம். உடம்பெல்லை முழுதும் சமமாக இப்படி இறைவனோடு ஆன்மா கலந்து நிற்றல் வேதாந்தம் எனப்படும்.

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்

வேதாந்தங் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்

வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்

வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட்டாரே.

இந்தப் பாடல் எண்ணிக்கை **229.** இப்பாடலைத் தவறிப் போய் பாயிரத்திலே கொண்டு போய் வைத்திருக்கிறார்கள்.

இதிலே வருகிற வேதாந்தம் என்பது ஏகான்மவாதத்தைக் குறித்தல்ல. அதே போல உபநிடத்தையும் வேதாந்தம் என்று குறிப்பிடுவதுண்டு. இங்கே சொல்லப்படும் வேதாந்தம் உபநிடத்தையும் குறிக்காது ஆதிசங்கரர் கூறிய ஏகான்ம வாதமாகிய வேதாந்தையும் குறிக்காது. வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம் என்றார் திருமூலர். வேட்கை என்பது அவாவைக் குறித்த அதன் வழி பெறப்படும் பிறவியைக் குறிக்கும் வேட்கை ஒழிந்திடம் என்ற கூறவே வேதாந்தம் என்பது இனி பிறவி இல்லை என்று உறுதியாகிற இடம். வேதாந்தம் என்பது நூல் அல்ல இனி அடுத்துப் பார்க்க இருக்கிற சித்தாந்தம் என்பதும் நூல் அல்ல அதாவது **14** சாத்திர றூல்கள் அல்ல. இவை இரண்டும் அனுபவ இடங்கள். பிண்டத்திலே இறையொளியொடு கலந்து நிற்கிற நிலை வேதாந்தம். இதையே சீவன் முத்தி என்றும் கூறுவர். ஆக,

பிண்ட அளவில் இறையொடு கலந்து நிற்றல் வேதாந்தம் அண்ட அளவில் இறையொடு கலந்து நிற்றல் சித்தாந்தம் அல்லது சித்தாந்த முத்தி.

வேதாந்தம் என்பது பற்றி இன்னும் ஒன்றைக் கூற வேண்டும். இது ஓர் ஒளி அனுபவ இடம் என்றோம். முதலில் சுழிமுனை நாடி வழியாக ஆன்ம ஒளி பரவுகிறது. அந்த ஒளி எப்படி இருக்கும்? சுழிமுனை நாடி உள்ளே அந்த ஒளி ஒரு நூல்போல இருக்கும். இவ்வாறு போய் விரியும் ஒளி நூலைத்தான் மார்பில் அணியும் பூணுலாகக் காட்டினார்கள். இந்த ஒளி நூல் அல்லாத மற்ற பூணுல் எல்லாம் வெறும் பருத்தி நூல்தான். நூலும் என்று தொடங்கும் இந்தப் பாடலில் நூலது வேதாந்தம் என்று ஒளி அனுபவ நிலையைக் குறித்தது காண்க. ஒளி நூல் உடல் நடுவே உள்ள சுழிமுனை நாடியில் விளங்குவது மார்பில் அணிந்த ஒரு பூணுல் போலத் தெரியும்அல்லவா? இந்த ஒளி நூல் கிடைக்கத் தான் பாடுபட வேண்டுமெயொழிய–இதையே அணியாகக் கொள்ள வேண்டுமே ஒழிய, பூண வேண்டியது பருத்தி நூல் அல்ல. இதைப் போய் பிரம்ம ஞானத்திற்கும் அடையாளமாகச் சொல்லலாமா? இந்த நூல் யாருக்கு வேண்டுமானாலும் கிடைக்காதா என்ன? நமது அன்பர் கலியபெரு மாளைக் கேட்டா கிலோ கணக்கிலே நூலை வாங்கிக் கொடுத்துவிட மாட்டாரா? இந்த நூலையே பெரியவர்கள் சொன்னார்கள்?

நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே என்று அப்பர் இதனால் தான் அப்படிப் பாடினார். இது திருமூலரிடம் இருந்து அப்பர் கையாண்டது. திருமூலர் தான் முதன் முதலில் நீங்கள் பூணும் நூலிலும் வைத்தக் கொள்ளும் குடுமியிலும் பெரிதாக என்ன இருக்கிறது? என்று கேட்டார். கேட்டு நூலது கார்ப்பாசம், நுண்சிகை கேசமாம் என்றும் பாடினார்.

அப்படியானால் கொள்ள வேண்டிய நூலும் சிகையும் எவை? என்பார்ககுப் பதிலாக நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம் என்றும் பாடினார்.

எனவே வேதாந்த அனுபவ ஒளி நூலே பூணுல். ஞான தேகம் பெற்று ஆண்டவனை அடைவதற்காக சிரங்குவிந்து கூர்ந்து செல்கிறதே அதுவே குடுமி. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க என்று மணிவாசகர் பாடியதும் இதையே.

குடுமி என்றால் கண் வேண்டும். அதுதான் பிரமரந்திரம். இந்த உடம்பி என்கிற எல்லையை விட்டு மேல் பக்கம் செலவதற்கு அண்டவெளியில் ஏறிச்செல்வதற்க இதுவே இடம். ஊற்றுப் பெருகும் இடத்தை ஊற்றுக் கண். இதை இடமாகக் கொண்டு வேதாந்த முத்தியில் – சீவன் முத்தியில் இருந்து – சித்தாந்தம் என்கிற ஆறாவது அந்தமாகிய அந்த அற்புதமான நிலையை அடைய வேண்டும்.

சித்தாந்தத்தைப் பற்றி திருமூலர் பாடிய பாடல்களைப் பார்ப்போம்,

சிவனைப் பரமனட் சிவனுள் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானால்
நவமுற் றவத்தையில் ஞானம் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தோரே

இந்தப் பாடல்களிலே உடம்புக்குள்ளே அனுபவிப்பது வேதாந்தம் அண்டத்திலே அனுபவிப்பது சித்தாந்தம என்று கருத்தக்களை அமைத்துப் பாடியுள்ளார். இவற்றையெல்லாம் நாம் தான் நழுவ விட்டோம். இதைப் பலப்பல நிலைகளிலே எடுத்துச் சொல்லியும் பலரும் இதை நழுவ விட்டனர். இன்னொரு பாடலையும் பாருங்கள்.

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்

சித்தாந்தத் தேநிற்பர் முத்திசித்தித்தவர்

சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்

சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே

சிவஞான போதத்திலும், சிவப்பிரகாசத்திலேயும் முடிந்த முந்தியில்–சித்தாந்த முத்தியில் ஆன்மாவும் ஆண்டவனும் நீரும் நிழலும் போல கலந்திருக்கம் என்று கூறப்பட்டிரக்கும்.

நீரும் பாலும் போல கலந்திருத்தல்வேதாந்த முத்தி என்கிறார் திருமூலர் ஒரு பாடலில்

இதுவரை நாம் ஆற்ந்தத்தைப் பற்றிப் பார்த்ததைத் தொகுத்துப் பார்ப்போம். முதலில் யோகாந்தத்தில் தியானம் செய்த பரம்பொருளை மனதில் தேர்ந்தெடுத்த உருவத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அது பின் அருவமாக மாறி நெற்றிக்கண்ணொளி கிடைக்கும். அதன் துணைகண்ட உடல் தத்தவங்களில் ஒவ்வொரு தத்துவமாக தாச, புத்திர, சக மார்க்கத்தில் ஏறி கடைசியில் சன்மார்கக் நிலையில் ஒவ்வொரு தத்துவத்தையும் நீங்கி மேலேறி இப்படி 36 தத்துவங்களுயம் நீத்தல் வேண்டும். இதனையே ரூப, தரிசன, சுத்தி என்று தசாரியத்தில் வைத்தப் பெரியோர்கள் கூறினார்கள். அப்படி ஏறிவரும்போது கலை என்கிற தத்துவத்தை அடையும போது கலாந்த அனுபவம் வரும். அங்கே நமக்கு சொர்ண தேகம் அமையும். அதாவது பசுகரணங்கள் எல்லாம் பதிகரணமாக மாறி விடும். அப்போது பதிசரணமானதாலே ஆன்மா சொல்லும் மொழி நிறைமொழியாகி வடும். அது சொன்னதெல்லாம் மந்திரம்.

நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப

ஒரவர் கேட்டார், நான் சொன்னால் நடக்காதா? நடக்காது. காரணம் நீங்கள் பசுகரணங்களோடு இருக்கிறீர்கள். பதிகரணம் பெற்றால் உங்களுடைய மொழி குறைமொழியாக அல்லாமல் நிறைமொழியாகிவிடும். அதுவரை ஆற்றல் இல்லாத மொழியாக இருந்தது அப்போது ஆற்றல் பொதிந்த மொழியாகி விடும்.

பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்

காலனைஅன் றேவிக் கராங்கொண்ட–பாலன்

மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்

கரணம் போல அல்லாமை காண்.

என்று திருக்களிற்றுப் படியாரிலே இது அற்புதமாாக் கூற்ப்பட்டிருக்கிறது. பசுகரணம் மாறி பதிகரணம் பெறும் கலாந்த நிலை அடையும்பாது அந்த ஆன்மா சொல்வது எல்லாம் இறைவன் வாக்கு. எனவே தான் சம்பந்தர் எனதுரை தனதுரையாக என்று பாடினார்.

கலாந்த நிலையிலிருந்து மெல்ல மெல்ல மேலேற நாத தத்துவத்தின் விளிம்பில் சூக்குட வாக்கில் ஆன்மாவிற்குப் பிரணவ தேகம் அமையும். இது நாதாந்த அனுபவம். அதற்கும் மேலே போனால் மாயை என்கிற மலம் நீங்கும். அதற்கு மேல் செய்ய நமக்கென்று இல்லை எல்லாம் இறைவன் செயல் என்று இறைபணியில் ஒடுங்கும் நிலை. அங்கே கன்ம மலம் ஒழியும். பின்னால் தன்முனைப்பு ஒழிய வேண்டும். சீவபோதம் சிவபோதத்தில் ஒடுங்க ஆணவமலம் நீங்கிட போதாந்த அனுபவம் வரும். அதற்கும் மேலே செல்லும் போது அருள்வீழ்ச்சி ஏற்பட்டு ஆன்மா அருளில் திளைத்து ஞானதேகம் பெறும். ஞானதேகம் பெற்றபின் இஅறையொளி பிண்டத்துள் நடுநாடியுள் நிறைய அதனுடன் ஆன்ம ஒளி கலக்க வருவது வேதாந்த அனுபவம். இங்கே ஒளி மயத்திரே காணுகிற நூல் போன்ற ஒளியையே பூணுல் என்கிறோம். இந்த ஒளிநூல் பிரமரந்திரம் வழியாக பிண்டத்திலிருந்து மேலேறி அண்டத்தில் உள்ள இறையொளியோடு கலந்து நிற்க வருவது சித்தாந்த அனுபவம்–இதுவே சித்தாந்த முத்தி.

இவ்வாறாக யோகாந்தத்திலிருந்து சித்தாந்தம வரை ஆறந்தங்களையும் பார்த்தோம். மனம் தோய்ந்து நின்று கேட்ட இத்திருக்கூட்டத்திரல் ஓரிருவராவது இவ்வனுபவ மயற்சிகளிலே ஈடுபட்டு இறைவன் திருவடியின்பத்தில்–அந்தப் பேரா இயற்கைப் பேரின்பத்தில் தோய இவ்வுரை பயன்படுமானால் அடியேன் மிகப்பெரிய பேறுடையவன் என்று இவ்வரிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

ஓம் சிவம் ஓம்.

உ

முருகா

திருமந்திரம் – திருக்கூத்து தரிசனம்

ஐந்தாம் நாள் சொற்பொழிவு

(05–09–1999)

பெரியோர்களே!

எல்லாம் வல்ல வள்ளி மணவாளனது வற்றாத கருணை குலத்தாலே நாம் நான்கு நாட்களுக்கு முன்னதாகவே தொடங்கிய எழில் ஞான வேள்வி இன்றைய தினம் பூரணாகுதி என்ற நிலையை எட்டி நிறைவுற இருக்கிறது. தலைப்பு ஏற்கெனவே அறிவித்தபடி திருமந்திர சிந்தனையில் திருக்கூத்து தரிசனம். இன்றைய தினம் கடைசி நாள் என்பதால் இயன்ற அளவிற்கு எல்லாவற்றையும் தொகத்து இறைவன் திருவருளாலே நிறைவு செய்ய இருக்கிறோம். இன்று பல அன்பர்கள் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். நிறைய கேள்விகள் வந்திருக்கின்றன என்றால் என்ன பொருள்? ஒன்று, நான் சரியாக சொல்லவில்லை என்றிருக்கலாம் அல்லது உங்கள் சிந்தனையைத் தூண்டி விட்டிருக்கலாம். இன்று நிறைவுநாள் என்தால் சில மரபுகளுக்கு இடம் கொடுக்க வேண்டும். இடையில் தேநீர் இடைவேளை இருப்பதாக தான்ஸ்ரீஐயா கூறியிருக்கிறார்கள். கேள்விகளுக்குப் பதில் கூற நேரம் ஒதுக்க வேண்டும். இவற்றிற்கிடையே திருக்கூத்து நடக்க வேண்டும் அதை நீங்கள் தரிசனம் செய்ய வேண்டும். எனவே அதற்குரிய போதிய அளவில் நாம் நம்முடைய சொற்பொழீ!வு திட்டத்தை வகுத்தக் கொள்வோம் என்று தொடங்கு!ன்றேன்.

திருமந்திரத்திரல் திருக்கூத்து தரிசனம் என்பது மிக அற்புதமான பகுதி. ஒன்பது தந்தரங்களிலே இதுவே உயிரான பகுதி.

பெரியோர்களே! நடராசப் பெருமானின் திருவடிவம் எப்போது முதன் முதலில் உருவாயிற்று? காலமே தெரியாது உரிய சான்றுகள் எங்கும் கிடைக்கவில்லை. இது ஏதோ மிகமிகப் பழைய நெறியில் அமைந்திருக்கிறது என்பது மட்டும் புரிகிறது.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலை யார் பிரதிட்டை செய்தார்கள் என்று சரித்திரத்தைப் பார்த்தால் அங்கே கருவூர் சித்தர் என்று பதில் கிடைத்துவிடும். கருவூர் சித்தர் அங்கே எப்போது வந்தார்? எப்போது ராஜராஜ சோழன் வந்து அந்தக் கோயிலைக் கட்டினான்? இவற்றை ஆராய்ந்தால் தேதி கிடைத்து விடும். பழநித் திருக்கோயில் எப்போது நிறுவப்பட்டது என்று அதன் சரித்திரத்தை ஆராய்ந்து போகரால் அது நிறுவப்பட்டது என்று விடை கிடைத்து விடும். போகரின் காலத்தை ஆராய்ந்தால் அதற்கு தேதி கிடைத்து விடும். இப்படி பலப்பல இடங்களில், பலப்பலத் தலங்களில் பிரதிட்டை எப்போது நடந்தது என்பதை வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் நடராசப் பெருமானை எப்போது பிரதிட்டை செய்தார்கள்? யார் பிரதிட்டை செய்தது? காலம் குழிந்து, குழிந்து, ஆழந்து, ஆழ்ந்து அடையாளம் தெரியாமல் போகிறது.

சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தது எப்போது? நமக்குத் தேதி கிடைக்கிறது. விக்கிரம சோழன் தான் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தான் என்று வரலாறு குறித்து வைத்திருக்கிறது. விக்கிரம சோழன் கூரை

மட்டும் தான் பேந்தான் கோயிலைக் கட்டவில்லை. கோயில் கட்டியது யார்? தெரியாது. கோயில் என்றாலே சைவர்களுக்கு தில்லையைத் தானே குறிக்கும். வைணவர்களுக்கு கோயில் என்றால் அது ஸ்ரீரங்கத்தைக் குறிக்கும். தில்லைக் கோயிலுக்கு ஒரு புராணம் உண்டு உமாபதி சிவம் அதைப் பாடினார். அதற்கு கோயில் புராணம் என்றே பெயர். உமாபதிசிவமம் கொடுத்தருளிய கோயில் புராணத்தைப் புரட்டினால் கூட வியாக்ரமரும், பதஞ்சலியும் வருவதற்கு முன்னரே நடராசப் பெருமானின் உருவம் இருந்ததாகச் சொல்லப்படுகிறதே ஒழிய அது எப்போது அமைக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை. திருமூலரும் பொதிய மலைப் பயணத்திற்கு முன் ஒருமுறை தில்லைக்கு வந்து போயிருக்கிறார் என்று வரலாறும் கூறுகிறது. அப்போது அவர் புளிக் கண்டவர்க்குப் புனலூறு மாப் போல் நடராசர் வடிவத்தைத் தரிசனம் செய்திருக்கிறார். அப்படியானால் எப்போது தான் நடராசர் வடிவம் அமைக்கப்பட்டது? தெரியவில்லை.

வரலாற்றைத் துருவித் துருவி ஆராய்ந்தோமாளால், மொகஞ்சதாரோ, அரப்பா என்கிற இடங்களில் அகழ்ந்தெடுத்த ஆராய்ச்சிகளின் மூலம் சில உண்மைகள் தெரிய வருகின்றன. அங்கே கிடைத்த பொருள் களைப் பட்டியலிட்டு வைத்திருக்கிறார்கள். அதில் ஒரு நாணயத்தில் ஒரு பக்கத்தில் இடது காலை தூக்கி வலது காலை ஊன்றி இருக்கும் நடராசரின் வடிவம் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தவர் சர்ஜான் மார்ஷல் என்ற வெள்ளைக்காரர். காய்தல் உவத்தல் என்ற பாகுபாடுகளின்றி இந்த நாணயமும் இதையொட்டிய திராவிட நாகரிகமும் கி.மு. 5000 ஆண்டிற்கு முந்தையதாக இருக்க வேண்டும் என்று வரையறை செய்துள்ளார். இப்போது கிறிஸ்து பிறந்து 2000 ஆண்டுகளாகிவிட்டன. எனவே இதையும் சேர்க்க இந்நாளிலிருந்து ஏறத்தாழ 7000 வருடங்களுக்கு முன்னாலேயே நடராசர் வடிவம் கிடைக்கிறது என்றால் அதற்கு முன்னால் எப்போதிலிருந்து இவ்வடிவம் வழிபாட்டிற்கு உரியதானதோ? யாருக்குத் தெரியும்?

நடராசர் வடிவ வழிபாடு மிகமிக்த தொன்மையானது என்பது மட்டும நனக்கு புரிகிறது. சரியான தேதி வேண்டுமானால் கிடைக்காமல் போகலாம் ஆனால் நிச்சயம் நடராசர் வழிபாடு 7000 வருடங்களுக்கு முந்தையது என்பதை உறுதிபடக் கூறலாம். உலகின் மூத்த கடிகளான தமிழச் சமுதாயத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களின் சிந்தனையில் சைவ சித்தாந்த அடிப்படையில் மலர்ந்தது இந்த வடிவம் என்பது தெளிவு. காரணம், இந்த வடிவ வழிபாட்டை தமிழக எல்லைக்க அப்பால் காணமுடியாது. தமிழ்நெறி அறிவு அடிப்படையில் அமைந்தது என்று நேற்று சொன்னேன். சைவ சித்தாந்தம் ஒரு மனிதனுக்கு உரிய பதினாறு பேறுகள் இவையிவை என்று கூறுகின்றது

ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம்

வழுக்கிலாத் தவந் தானங்கள் வந்தித்தல்வணங்கல் வாய்மை

அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொ டார்ச்சித்தல் ஆதி

இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்.

அழுக்கிலாத் துறவு–இதை இப்போது பெரும்பாரும் நம்மால் பார்க்க முடிவிரில்லை. மிகப்பெரிய துறவி செய்தித்தாளில் பார்க்கிறோம், சில நாள் கழித்து அவரை ஜெயிலில் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அது ஒருபுறம் இருக்கட்டும் அறிவொடு அர்ச்சித்தல் என்ற பாடலில் வருகிறது. அதாவது இதை அறிவு, அர்ச்சித்தல் என்று இரண்டாகவும் பொருள் பண்ணலாம் அர்ச்சனை செய் நீ எதை அர்ச்சனை செய்தாலும் அந்த உருவம் அறிவு பூர்வமான அடிப்படையில் இருக்க வேண்டும். அந்த உருவம் எதைக் குறிப்பது என்பதைத் தெரிந்து கொண்டு அர்ச்சிக்க வேண்டும் இல்லாவிட்டால் நீ பூ போடுவது வீண். என்று பாடலில் சைவ சித்தாந்தம நம்மைப் பார்த்து அறுதி யிட்டுச் சொல்கிறது.

விநாயரை வழிபடுகின்றாயா? விநாயகருடைய வடிவத்திற்கு ஒரு பொருள் இருக்கிறது. முருகப் பெருமானை வணங்குகிறாயா, முருகப் பெருமானின் ஆறுமுகத்திற்கு ஒரு பொருள் இருக்கிறது. இவற்றைப் புரிந்து கொண்டு அந்தந்த வழிபாட்டு வடிவத்திற்குப பூ போட வேண்டும். பொருள் புரிந்த பின் தான் அதற்கு தூபம் காட்ட வேண்டும் பொருள்பிரிந்து செய்யும் வழிபாட்டினால் தான் நிறைவான பலன் கிடைக்கும் வெறுமனே பூ போட்டால் பலன் இல்லை. வழிபாட்டு உருவங்களை ஏன் அறிவுப் பூர்வமாக அமைத்தார்கள் என்றால் பிற்காலத்தில் மூட நம்பிக்கை அதில் நுழைந்து விடக்கூடாது என்பதற்காக அப்படி அறிவுபூர்வமாக அமைத்தார்கள். ஆனால் மக்களோ உருவ வழிபாட்டில் கொள்ளும் வடிவங்களில் பொருள் புரியாமல் மூட நம்பிக்கையில் கனத்தக் கொண்டே போகிறார்கள்.

இந்த சாமிக்கு மூன்று அங்குல சரிகைக் கரை உள்ள பட்டு வேட்டியைத் தான் கட்டணும் அது தான் ஐதீகம் என்பான். அந்த மூன்று அங்குல கரை பட்டு வேட்டியை அங்கே சாமிக்கத் தான் சாத்துகிறானா? அல்லது அதை மக்கள் மறந்த பின் வீட்டுக்குக் கொண்டு போகிறானா? யாருக்குத் தெரியும்? மௌடீகமான விஷயங்களை வளரவிட்டால் அப்புறம் அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் சுயநலத்தினைக் கருத்தில் கொண்டு இதைக் கையாளத் தொடங்கி விடுவார்கள் தொடங்கி விடுவார்கள் என்பது என்ன? இப்போது அது தான் நடந்து கொண்டிருக்கிறது.

அவ்வாறு நடராசர் உருவத்தைச் சுயநலமிகள் சமயத்தின் பேரால் கையாள விட்டவிடக் கூடாது. எனவே நாம் வணங்குகிற உருவங்கள் எதைக் குறிப்பன என்பதை அறிந்து கொள்வது அவசியம். அதைப்பற்றிச் சொல்வது தான் திருமந்திரத்தில் திருக்கூத்து தரிசனம் என்னும் பகுதி.

82 பாடல்களினாலே திருக்கூத்துத் தரிசனம் 9ம் தந்திரத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இதை மகுடாகமத்தின் பிழிவு என்று கூறுவர்.

82 பாடல்கள் என்ற பாடல் எண்ணிக்கைக்கு ஒரு பொருள் உண்டு. இதற்கு அலகு நிலைப் பொருள் என்பது பெயர். 63 நாயன்மாரைப் பாடவந்த சேக்கிழார் 63 எழுத்துக்களை அமைத்து ஒரு பாடல் பாடி புராணத்தைத் தொடங்குகிறார். இந்தப் புராணம் 63 நாயன்மார்களைப் பற்றியது என்ற குறிப்பை அமைத்து 63 எழுத்துக்களில் பாடலை அமைத்த மதிநுட்பத்தை என்னென்ற சொல்வது?

இப்படியெல்லாம் தமிழில் தான் பார்க்கமுடியும். எல்லாத் துறையிலும் தமிழரைரப் போல் முத்திரை பதித்தவர்கள் வேறு யாருமில்லை. இதை நான் தமிழன் என்ற காரணத்தால் கூறவில்லை. தமிழன் தான் உலகில் முதன் முதலில் தோன்றிய மூத்த குடி.

இப்போது எண்ணிக்கை பற்றிய அலகு நிலைப் பொருளைப் பற்றிப் பேசுவதால் எண் தொடர்பான கணிதத்தில் தமிழன் பதித்த முத்திரையை ஓர் உதாரணத்திற்கு சொல்கிறேன். பொருள்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டே போகலாம் இப்படி ஆதிமனிதனின் சிந்தனை செல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றுமில்லாத ஒன்று என்று ஒரு எண்ணிக்கையை தமிழன் தான் முதலில் கண்டு காட்டினான் அதைப் பாழ் என்றான். வடமொழியில் இதனைப் பின்பற்றி பூஜ்யம் என்ற அதைக் கூறினான். பூஜ்யத்திற்குச் சரியான தமிழ்ச் சொல் பாழ் என்பது. நம்முடைய சங்க இலக்கியங்களிலே பாழ் என்ற இந்த எண்ணிக்கையை வைத்துப் பாடியிருப்பதைப் பார்க்கின்றோம். இந்தப் பாழ் இல்லையானால் கணக்கு ஏது? இன்று நாம் பாழ் என்ற இந்தத் தூய தமிழச் சொல்லைக் கையாளுவதில்லை. பூஜ்யம் என்ற வடமொழிச் சொல்லையே பயன்படுத்தி வருகிறோம். எல்லாம் காலத்தின் கோலம்! எப்படியோ, பூஜ்யத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவன் தமிழன் தான்.

கணிதத்தில் தமிழர்கள் இன்னும் எவ்வளவு ஆழ்ந்து துறைபோய் இருந்தார்கள் என்பதற்கு அவர்கள் பின்னங்களுக்கு வைத்த பெயர்களே சாட்சி சொல்லும். ஆங்கிலத்தில் அரையை ஹாஃப் என்றான் காலை

குவார்ட்டர் என்றான். அதற்கு கீழ் உள்ள பின்னங்களுக்கு அவர்கள் (ஆங்கிலேயர்) பெயர் வைக்கவில்லை. காரணம், அவர்களின் எண்ணம் குவாட்டரோடு முடிந்து விடுகிறது (மக்கள் சிரிக்கிறார்கள்) நீங்கள் எதை எண்ணி சிரித்தீர்களோ அதற்கு நான் பொறுப்பில்லை.

இனி, காலுக்கும் கீழே 8ல் ஒன்றிற்கு அரைக்கால் என்றும், 16ல் ஒன்றிற்கு வீசம் என்றும் 20ல் ஒன்றிற்கு மா என்றும் 80ல் ஒன்றிற்கு காணி என்றும் இப்படி 160ல் ஒன்றிற்கு கீழரை என்பது வரை தமிழன் பெயர் வைத்தான். இங்கே எனக்கு ஒரு திருக்கழுக்குன்றப் பாட்டு நினைவிற்கு வருகிறது.

காணியும் காணியும் காணியும் காணியும் காணியும்கால்

காணியும் காணியும் காணியும் காணியும் காணிமுக்கால்

காணியும் காணியும் காணியும் காணியும் காணியும் நால்

காணியும் காணியும் காணியும் காட்டும் கழுக்குன்றமே

இந்தப் பாட்டை பத்தக் கம்பர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் முன்னால் பாடி, இதன் பொருள் என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம் என்று சவால் விட்டாரம், ஒருவர். ஒன்றுமில்லையப்பா, இந்தப் பாடலில் வருகிற எல்லாக் காணியையும் கூட்டு. மொத்தம் இருபது காணி வரும். ஒரு காணி என்பது 80ல் ஒன்று. இருபது காணி என்றால் 80ல் இருபது. அதாவது கால் காட்டும் கழுக்குன்றமே என்று மணிவாசகருக்கு திருக்கழுக்குன்றத்தில் காலைக் காட்டி ஆண்டது இப்பாடலில் குறிக்கப்பட்டது. அவ்வளவு தான்!

இது தான் தமிழனுடைய மதி நுட்பம். ஆகவே எண்ணிக்கையை வைத்து எவ்வளவோ பொருளைத் தமிழன் குறிப்பு காட்டுவான். இதற்குப் பெயர் அலகு நிலைப் பொருள் என்றோம். அப்படி திருக்கூத்து தரிசனம் பாட வந்த திருமூலர்இதற்குப் பாடல் எண்ணிக்கையை 82 என வகுத்துப் பாடினார். காரணம் என்ன? எட்டும் இரண்டும் உருவானவன் இறைவன். அவன் திருக்கூத்தும் எட்டையும் இரண்டையும் குறிப்பது.

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே

நட்டம் புதல்வா நவிலக் கேள்

என்பது சித்தாந்த சாத்திரத்தில் ஒன்றான உண்மை விளக்க வரிகள். இது எட்டும் இரண்டும் உருவான திருக்கூத்தைக் குறிப்பது என்பதை உணர்த்த 82 பாடல்களைப் பாடினார். இதை என்ன சொல்லி பாராட்டுவது!

இப்பகுதி மகுடாகமத்தின் பிழிவு என்றோம். மகுடாகமம் என்றால் ஆகமங்களுககே மகுடமாக அமைவது இந்த ஆகமம் என்று பொருள். வேறு எந்த ஆகமத்திலும் வழிபாட்டு முறைகள் இவ்வளவு சிறப்பாக கூறப்படவில்லை. இந்த ஆகமத்தில் தான் அது சிறப்பாக அமைந்துள்ளது. எனவே அது மகுடாகமம்.

சிதம்பரம் என்று தற்காலத்தில் வழங்குகிற தில்லைக்குப் பொது என்று பெயர் உண்டு. கிறித்தவர்களும் வந்து வழிபடலாம் இசுலமியர்களும் வந்து வழிபடலாம். வழிபாட்டு முறை பொதுவாக

இருந்தால் தானே எல்லா மதத்தினரும் வந்து வழிபட முடியும். இப்போது சிதம்பரத்தில் கிறித்துவர்களும் இசுலாமியர்களும் வந்து வழிபடுகிறார்களா என்பது வேறு. ஆனால் அங்கே வழிபாட்டு முறைகள் எல்லோருக்கும் பொதுவாக அமைக்கப்பட்டுள்ளது என்பதே அறிந்து கொள்ள் வேண்டிய அதிசய உண்மை.

பெரியோர்களே! ஆண்டவனுக்கு மூன்று நிலைகள் உண்டு. அவை 1) அருவம் 2) அருவுருவம் 3) உருவம். அதாவது ஒரு காலத்தில் அருவமாகி இருந்து பின்அருவுருவமாகி அதன் பின் உருவமாக மாறுதல். ஆனால் தில்லையில் இறைவன் அருவமாகவும், அருவுருவமாகவும், உருவமாகவும் காட்சியளிக்கிறார். இம்மூன்றுமாக இறைவன் ஒரே நேரத்தில் காட்சியளிக்கிறான் என்பதே இந்தத் தலத்தின் சிறப்பு.

எல்லாத் தலங்களிலும் இலிங்கத்தை வைத்து வணங்குகிறோம். அந்த இலிங்கத்திற்கு நாகேஸ்வரர், அண்ணாமலை என்று வேறு வேறு பெயரிட்டு வணங்குகிறோம். இருப்பது ஒரே இலிங்கம் தான் பெயர் தான் வேறு வேறு. இந்த இலிங்கத்தைப் பார்த்தால் அதனை உருவம் என்று சொல்வதற்கில்லை. ஏன் என்றால் கை, கால் போன்ற உறுப்புகள் அதில் இல்லை. சரி, அருவம் என்று சொல்லிவடலாமா என்றால் அதுவும் இல்லை.

அருவத்தைக் கண்ணால் காணமுடியாத. ஆனால் இலிங்கத்தைக் கண்ணால் காணகிறோமே எதிரே கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறதே! எனவே இலிங்கம் உருவத்திற்கும் அருவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கிறது. இதனை அதனால் அருவுருவம் என்று கூறலாம்.

எனவே தலங்கள் தோறும் அருவுருவமான இலிங்கங்களைத் தான் வணங்கிக் கொண்டிருக்கிறோம். பாடல் பெற்ற தலங்கள் மொத்தம் 274. அதில் 273 தலங்களில் நாம் செய்வது அருவுருவ வழிபாடே. தில்லையில் மட்டும் தான் கருவறையில் உருவமும் உண்டு. அதாவது நடராசர் உருவம். எனவே தில்லையைத் தவிர 273 தலங்களில் நாம் செய்யும் வழிபாடு அருவுருவ வழிபாடே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பெரியோர்களே! ஒரு வழிபாட்டு முறையில் அமைத்த கோயிலில் இன்னொரு வழிபாட்டு முறையல் வணங்குவது கூடாது. அப்படி வணங்கினால் பொருளில்லை பொருளில்லாத வழிபாட்டால் அதில் அருளும் இல்லை என்பது உறுதி. எனவே ஓர் ஆகமப்படி அமைத்த கோயிலில் இன்னொரு ஆகமப்படி வழிபாடு செய்யக்கூடாது. அதாவதுகாரணாகமப்படி அமைத்த கோயிலில் காமிகாகமப்படி வழிபாடு செய்யக்கூடாது. கதமிகாகமப்படி அமைத்த கோயிலில் காரணமாகப் படி வழிபாடு செய்யக்கூடாது. ஒவ்வொன்றிலும் ஒரு பொருள் உண்டு. ஆறு அத்துவாக்களையும் கடந்து இறைவனை அடைய வேண்டும் என்று ஆறு சுற்றுக்களை (பிரகாரங்களை) அமைத்தது காரணாகமம். ஐந்து கோசங்களின் உள்ளே விளங்குபவன் இறைவன் என்ற பொருளில் ஐந்து சுற்றுகளை அமைத்துக் காட்டியது காமிகாகமம். பஞ்சகோசங்கள் என்பன. அன்னமயகோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மய கோசம் ஆகியன. கோசம் என்றால் எல்லை என்று பொருள். ஐந்து எல்லைகளை வைத்து ஐந்து சுற்றுக்களை அமைத்தது காமிகாகமம்.

பஞ்சப் பள்ளியில் பான்மொழி தன்னோடும்

எஞ்சாதீண்டு இன்னருள் விளைத்தும்

என்ற திருவாசகத்தில் வருவது இதைக் குறித்தே பாடப்பட்டது. பஞ்சப்பள்ளி என்பது ஐந்து சூழுமுறை என்று பொருள்.

பஞ்சப்பள்ளி அமைப்பிலே உள்ள கோயிலில் ஆறு அத்துவாக்கள் அமைப்பிலே வழிபாட்டு முறைகளைச் சொல்லிய ஆகமப்படி வழிபாடுகள் நடத்தக்கூடாது. இதே மாதிரி ஆறு அத்துவாக்கள் அமைப்பிலே அமைக்கப்பட்ட கோயிலில் பஞ்சப் பள்ளி அமைப்பிலே வழிபாட்டு முறைகளை வகுத்த ஆகமத்தின் படி வழிபாடுகள் நடத்தக் கூடாது.

இதனை எப்படித் தெரிந்து கொள்ளுவது? குறித்து வைத்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு ஒரு டிப்ஸ்

முதலில் சாமி அதாவது இலிங்கம் எதிரே நந்தி அதன்பின் பலிபீடம் அதன் பின் கொடிக்கம்பம்– இப்படியிருந்தால் காமிகாகமப்படி அமைக்கப்பட்ட கோயில்.

முதலில் சாமி எதிரே கொடிமரம் அதன்பின் பலிபீடம் அதன்பின் நந்தி–இருந்தால் காரணாகமப்படி அமைக்கப்பட்ட கோயில்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் மலேசிய அன்பர்கள் தாயகம் வந்து பல கோவில்களுக்குத் தல யாத்திரை செய்யும் போது இக்கோவில் காரணாகமப்படி அமைந்தா அல்லது காமிகாகமப்படி அமைந்ததா என்பதை அவரவ்களே பார்த்துக் கெரிந்து கொள்ளளலாம். ஆகமங்களை வாங்கி நீங்கள் படித்தது எப்போது? எனவே உங்களுக்குப் பயனாகட்டுமே என்று இந்தச் செய்தியைக் கூறினேன்.

இன்றைய தினம் பார்த்தால் எந்த ஆகமம் பயன்பாட்டிலே இருக்கிறதோ அதுவே நின்றிருக்கிறது. பயன்பாடு இல்லாதவை மறைந்தொழிந்தன. அதாவது 28 ஆகமங்கள் இருப்பதாகப் பேசுகிறோம். அவ்வளவும் கிடைக்கவில்லை. ஏன்? பெரும்பாலானவை வழிபாடு என்ற பயன்பாட்டில் வழக்கில் இல்லாதது தான். இன்று அமைந்திருக்கும் கோவில்களில் பெருமளவில் காமிகாகமப்படி அமைந்தவையே. அங்கெல்லாம் காமிகாகமப்படி தான் வழிபாடு நடைபெறுகிறது. இன்று வழக்கில் பிரபலமாக உள்ள அகோர சிவாச்சாரியார் பத்ததி எல்லா ஆகமங்களின் கலவையாக இருந்தாலும் அதிலும் கூட சொல்லப்போனால் காமிகாகம வழிபாட்டு முறையே பெரும்பான்மையாக பின்பற்றப்பட்டிருக்கிறது.

காரணாகமப் படியும் சில கோவில்கள் உண்டு. நான் மீஞ்சூர் சென்றிருந்தேன். அங்கே ஒரு சிற்றூரில் சேக்கிழார் மாநாடு நடைபெற்றது. தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றத்தின் செயலாளராக அடியேன் நீண்ட நாட்கள் பணி செய்த காலம் அது. மாநாட்டிற்குச் சென்றிருந்த நான் அந்தப் பழைய கோவிலுக்குச் சென்றிருந்தேன். அந்தக் கோவிலுக்குச் சென்றதுமே அது காரணாகமப்படி அமைந்த கோயில் என்பதை அறிந்து கொண்டேன். பல இடங்களில் காமிகாகமப்படி அமைந்த கோயில்களையே பார்த்து வந்த எனக்குள் காரணாகமப்படி அமைந்த கோயிலைப் பார்த்தவுடன் ஓர் ஆவல் தூண்டிநின்றது. இங்க எந்த ஆகமப்படி வழிபாடு நடைபெறுகிறது என்று சிவாச்சாரியரிடம் கேட்டேன். ஆகமமாவது, ஒண்ணாவது? ஏதோ எங்க அப்பா சொன்னார். அதை நான் சொல்லிகிட்டிருக்கேன் என்றார்.

உங்க அப்பாவை அது என்ன ஆகமம் என்று கேட்டீர்களா? நான் விடவில்லை. ஏதோ அவர் சொன்ன மந்திரங்களைச் சொல்லி தண்ணி ஊத்திகிட்டிருக்கேன. இங்க ஆட்கள் வருவதே அதிசயம. சூடத்தைக் கொளுத்தி விபூதியை வாங்கிட்டப் போங்க என்று வேர் அலுத்துக் கொண்டார்.

அவரே இரவு என்னிடம் வந்தா. மாலையில் என்னுடைய பேச்சைக் கேட்டிருப்பார் போல் இருக்கிறது. காலையில் அலட்சியமாகப் பேசியதற்கு மன்னிப்புக் கேட்டக் கொண்டு, பெரியவர்களை விசாரித்தேன். காமிகாகமப்படி தான் வழிபாட்டினைச் செய்து வருவதாகச் கூறினாரார்கள் என்றால். இந்தக் கோயில் காரணாகமப்படி அமைந்திருக்கிறது. எனவே காமிகாகமப்படி வழிபாடு செய்வது தவறல்லவா? என்று கேட்டேன். எனக்கு எந்த ஆகமமும் தெரியாது. நீங்கள் சொன்ன பிறகு தான் தெரிந்து கொண்டேன் என்றார்.

நான் காரணாகமப்படி வழிபாடு செய்வதற்குப் புத்தகம் அனுப்பி வைக்கிறேன். அதைக் கற்று அதன்படி செய்யுங்கள் என்று சொல்லி அப்படியே உரிய புத்தகமும் அனுப்பி வைத்தேன். அவர் அதன் பின் அப்படியே செய்து ஒரு நன்றிக் கடிதமும் எழுதினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? எந்த ஆகமப்படி கோயில் அமைந்திருக்கிறதோ அந்த ஆகமப்படி தான் பூசைகள் அங்கே நடக்க வேண்டும். மாறிச் செய்யக் கூடாது. கிரணாகமம் என்று ஒன்று உண்டு. இதன்படி கோயில்கள் அமைக்கப்படவில்லை. எனவே கிரணாகமத்தை கோயில்களில் பயன்படுத்த இயலாது. ஆனால் அகோர சிவாச்சாரியார் தமது பத்ததியில் கிரணாகம முறைகளையும் எடுத்தாள்கிறார்.

மைசூர் மாநிலத்தில் அதாவது கர்நாடக மாநிலத்தில் கோவில்கள் வீராகமப்படி அமைந்துள்ளன. வீராகமத்திற்கென ஒரு வழிபாட்டு முறை இருக்கிறது. அதுவே அங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. இப்படி வழிபாட்டிற்குரிய கோவில்களில் அந்தந்த கோயில்களுக்கு உரிய ஆகமப்படி வழிபாடுகள் நடைபெறுவதால் அந்த ஆகமம் மற்றும் அதன்வழி அந்த ஆகம வழிபாட்டு முறை நிலைபெறுகிறது.

எனவே ஏட்டளவிலே பல ஆகமங்கள் சொல்லப்பட்டாலும், பொதுவாக காமகாகமப்படி பல கோயில்களிலும், சில இடங்களில் காரணாகமப் படியும், கர்நாடக மாநிலத்திலே வீராகமப்படியும் வழிபாடுகள் நடைபெற்ற வருகின்றன. ஆனால் மகுடாகமம் ஒரே ஒரு இடத்திற்கு மட்டும்உரியது. தில்லைக் கோயிலுக்கு மட்டுமே மகுடாகமம் உரியது. இங்கே கோயிலின் அமைப்பே மகுடாகமப்படி அமைந்தது வழிபாடும் அப்படியே. எல்லா ஆகமங்களையும் உள்ளடக்கி அவற்றிற்கு மேலாக அமைந்தது மகுடாகமம்.

ஏற்கெனவே கூறியபடி 273 பாடல் பெற்ற தலங்களில் அருவுருவ வழிபாடு தான் நடக்கிறது. தில்லையில் மட்டும் தான் மூன்று நிலைகளிலும் அதாவது அருவம், அருவுருவம், உருவம் என்ற நிலைகள் மூன்றிலும் வழிபாடு அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்று நிலை வழிபாடும் ஒரு சேர கருவறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் அது தில்லை ஒன்றில் தான் அது தான் மகுடாகமத்தின் சிறப்பு.

தில்லையிலே கருவறையில் நடராசர் இருப்பார் இந்த வழிபாடு உருவ வழிபாடு. இங்கே கட்டளை தீட்சிதர் பெட்டகம் ஒன்றைக் கருவறையில் இருந்து எடுத்து வந்து திறந்து பூசைப்பீடத்தில் வைப்பார். அது படிக லிங்கம். இந்த வழிபாடு அருவுருவ வழிபாடு–மற்ற எல்லாக் கோயில்களிலும் உள்ளதைப் போல. படிகலிங்கத்திற்குப் பூசை முடிந்த பின் கட்டளை தீட்!சதர் நடராசருக்குப் பூசை செய்வார். பொதுவாக சிவலிங்கத்திற்கு அபிடேகம் செய்யும் போது அந்த அபிடேக நீர் விழும் இடத்தில் சண்டிகேஸ்வரரை அமைத்திருப்பார்கள். இங்கே படிகலிங்கத்திற்கு ஆட்டும் அபிடேகம் நீர் விழுமிடத்தில் பிரம்மாவை அமைத்திருப்பார்கள். இதிலிரந்து ஓர் உண்மையை அறியலாம். ஒரு பிரம்மா சண்டீஸ்வரராக இருக்கிறார் என்பது அது. எந்தக் காலம்? அறுதியிட்டக் கூறுகின்ற அளவிற்குச் சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

சண்டீசர் என்பது ஒரு பதவி. ஐ.ஜி என்கிறோமே அதைப்போல. (இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்). இந்தப் பதவியில் யார் வேண்டுமானாலும் இருக்கலாம். தமிழகத்தில் ஒரு காலத்தில் அருள் இருந்தார் அடுத்து ஒரு காரத்தில் மகாதேவன் இருந்தார்–அதைப்போலவே சண்டீசர் என்ற பதவியிலே காலத்திற்கும் காலம் ஒவ்வொருவர் இருப்பார். முதலில் உள்ளவர் அடுத்து வருபவர்க்கு பதவியை மாற்றிக் கொடுப்பது போல இங்கேயும் உண்டு. முதன் முதலில் சண்டீசப் பதவியில் இருந்தவர் அறக்கடவுள் எமன்னு சொன்னா ஒரு மாதிரியாகப் பார்க்கத் தோணும். அதற்காக அறக்கடவுள் என்றேன். எமனை எமதர்மராஜா என்று தானே கூறுகிறோம். தருமராஜா என்றால் அறக்கடவுள். திருவாரூரிலே பார்த்தால் சண்டீசராக அந்த இடத்தில் இருப்பவர் அறக்கடவுள்.

அவர் ஏற்கெனவே மனிதர்களை அவரவர் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பாகுபடுத்தி சொர்க்கம், நரகம் என்ற இடங்களுக்கு அனுப்பி வைத்து இன்ப துன்பங்களை துய்க்க வைப்பது என்ற வேலையைச்

செய்பவர். இந்தக் கூறுதல் பொறுப்பு எனக்கு வேண்டாம் என்று அவர் முறையிட்டிருப்பார் போலிருக்கிறது ஆண்டவன் அவரிடமிருந்து பொறுப்பை மாற்றி பிரம்மாவுக்கு கொடுத்தார் போலிருக்கிறது. அதை ஏற்று சில காலம் பிரம்மா சண்டீசனாகவும் இருந்திருக்கிறார். இதைத்தான் தில்லையில் காண்கிறோம். இவருக்கு இது கூடுதல் பொறுப்புத் தான். ஏற்கெனவே அவருக்கு உரிய தொழில் படைப்பு. எனவே அவரும் இந்தக் கூடுதல் பொறுப்பு வேண்டாம் என்று இறைவனிடம் முறையிட்டிருப்பார் போலிருக்கிறது. அதற்கு அடுத்து இப்பொறுப்பை ஏற்றவர்தான் விசாரசர்மர் என்ற குழந்தை. பெரியபுராணத்தில் இவர் சண்டீசரான வரலாறு வருகிறது. இன்று நாம் அநேக கோயில்களில் சண்டீசனாக வணங்குவது இவரைத் தான். எனவே விசாரசர்மர் என்பது அவர் பெயர் அவர் வகிக்கும் பதவிப் பெயர் சண்டீசன்.

ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து

பூமலி கொன்றை சூட்ட பொறாததன் தாதை தாளைக்

கூர்மபவொன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றைமாலைத்

தாமம்நற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவினாரே

என்று அப்பர் இதைப் பாடுகிறார். எனவே அருவுருவமான படிகலிங்கத்திற்கும் ஆற்றும் அபிடேக நீர் கோமுகம் வழியாக தில்லையில் பிரம்மாவைச் சென்றடைகிறது.

இந்த அருவுருவ வழிபாட்டிற்குப் பின் நடராசருக்கு வழிபாடு நடக்கும். நான் எத்தனை எத்தனை பிறவிகளிலே புண்ணியத்தை ஈட்டினேனோ அவ்வளவும் திரண்ட பயனாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே எனது பொறியியற் பட்டப்படிப்பு இப்போது இருப்பது போல 4 வருடங்கள் அல்ல ஐந்து வருடங்கள். ஐந்து வருடமும் தினந்தோறும் தில்லைக் கோயிலில் நடைபெறும் அந்தப் பூசையான சாயரட்சைக்குச் செல்வேன். இதற்கென தனிக்கூட்டமே திரண்டிருக்கும். இதை அங்கே ஒரு விசேட வழிபாடு என்றே சொல்ல வேண்டும். நடராசர், சிவகாமி ஆகியோர்க்கு சோடச உபசாரம், விபூதிசாத்து முடிந்தவுடன் இடது புறமாக எல்லாக் கூட்டமும் ஓடி வரும். அங்கிருந்து அனைவரும் அதோ, அதோ என்று சுட்டிக்காட்டிக் கன்னத்தில் போட்டக் கொள்வார்கள். அவர்கள் சுட்டிக் காட்டும் இடத்திலே ஒரு திரை இருக்கும் அதை விலக்குவார்கள் விலக்கி அங்கே தீபாராதனை காட்டப்படும்.

நேற்று கூட ஓர் அன்பர் என்னைச் சிதம்பர ரகசியம் என்கிறார்களே, அது என்ன என்று கேட்டார். அது இது தான். சிதம்பரத்திலே நடராசருக்கு வலப்புறம் ஒரு திரை தொங்கவிடப்பட்டிருக்கும். திரையின் முன் பக்கம் கறுப்புத் துணி வைத்துத் தைக்கப்பட்டிருக்கும். உட்புறம் சிவப்புத் துணி வைத்துத் தைக்கப்பட்டிருக்கும். இந்தத் திரையை விலக்கினால் அங்கே ஒன்றும் இருக்காத எல்லாம் வெட்ட வெளியாக இருக்கும். அங்கே இறைவனை ஆகாய வடிவமாகப் பாவித்து அந்த ஆகாயத்திற்கு ஒரு வில்வ மாலையைச் சாத்தியிருப்பார்கள். திரையை விலக்கினால் இந்த வில்வ மாலை மட்டும் தெரியும். இது ஆண்டவனை அருவ நிலையில் வழிபடுகிற வழிபாடு. தில்லையில் இறைவன் ஆகாயவடிவில் இருக்கிறான் என்பதையே வழக்கில் சிதம்பர ரகசியதட என்றார்கள். சித் + அம்பரம் =சிதம்பரம் என்றாயிற்று. சித் என்றால் அறிவு பூர்வமாக அமைந்ததது என்று பொருள். அம்பரம் என்றால் ஆகாயம். பஞ்சபூத தலத்திலே சிதம்பரம் ஆகாயத்தைக் குறித்தது என்று சொல்வார்கள் இல்லையா? இங்கே ஆகாய வடிவமாக இறைவனைப் பாவித்து அதற்கு வில்வமாலை, ருத்ராட்சமாலை, விசேட நாட்களில் விசெட கண்டிகை, கொளரிசங்கம் போன்றவற்றை சாத்தி வணங்குவார்கள். மார்கழித் திருவாதிரையிலே இங்கே விசேட மாலைகள் வெளிவரும்.

ஆக இங்கே படிகலிங்கத்தை வழிபடுகிறார்கள் இது அருவுருவ வழிபாடு. நடராசருக்கு வழிபாடு செய்கிறார்கள் இது உருவ வழிபாடு. ஆகாயத்திற்கு வழிபாடு செய்கிறார்கள். இது அருவ வழிபாடு. இவ்வாறு அருவ, உருவ, அருவுருவ வழிபாடு மூன்றும் ஒரு சேர நடைபெறும் இடம் தில்லை ஒன்றுதான். இது தான் தில்லைக்குப் பெருமை. அருவ வழிபாட்டினை முஸ்லீம்கள் ஏற்பர் உருவ வழிபாட்டை கிறித்துவர் ஏற்பர் காரணம் அவர்கள் ஏசுவையும், மரியாளையும் உருவம் காட்டி வணங்குபவர்கள். அருவுருவ வழிபாடு பெரும்பாலான சைவக்கோயில்களில் இலிங்க வழிபாட்டில் நாம் செய்வது. இம்மூன்றும் ஒரு சேர தில்லையில் வழிபடப் பெறுவதால் எல்லோர்க்கும் அது பொது வாயிற்று. எனவே தில்லைப் பொது என்றே ஆன்றோர்கள் அழைப்பர். உலகில் உள்ள எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று இங்கே மூன்று வகை வழிபாட்டையும் வைத்தார்கள். இந்த மூன்று வகை வழிபாட்டு முறைகளையும் கூறுவது தான் மகுடாகமம்.

இங்கே அமைக்கப்பட்டிருக்கும் கோயிலின் அமைப்பகளை ஆராய்ந்து பார்த்தால் வியப்பினால் மூர்ச்சித்துப் போவோம். இங்கே ஒவ்வொன்றையும் ஒவ்வொர காரண காரியத் தொடர்போடு அறிவு பூர்வமாக அமைத்துள்ளார்கள்.

இங்கே கருவறை மண்டபத்தில் அறுபத்திநாலு கைச்சாத்துகள் இருக்கும். இது 64 கலைகளைக் குறிக்கும். சதாசிவ பீடத்தின் மேல் நடராசரும் சிவகாமியும் எழுந்தருஐளியிருப்பார்கள். இது சித்தாந்தத்தில் சாதாக்கிய தத்துவத்தின் மேல் அதாவது சதாசிவ தத்துவத்தின் மேல் சத்திதத்துவமும் சிவதத்துவம் அமைந்திருப்பதைக் குறிக்கும். சதாசிவ பீடத்திற்குக் கீழே தாங்கு தூண்கள் பத்து இருக்கும். அவை வேதம் நான்கையும் அவற்றின் அங்கங்கள் ஆறையும் குறிக்கும். இம்மன்றத்தில் 28 மரத்தூண்கள் இருக்கும். அவை இருபத்தெட்டு ஆகமங்களைக் குறிக்கும். அன்றி இம்மன்றத்தில் பதினெட்டு கல்தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும். அவை பதினெண் புராணங் களைக் குறிக்கும். மேலே ஒன்பது கலசங்கள் இருக்கும். இதற்கும் ஒரு பொருள் உண்டு.

இதைப் பார்ப்பதற்க முன் தில்லை என்பது எதைக் குறிக்கும் என்பதைப் பார்ப்போம். தில்லை என்பது உடம்கைக் குறிக்கும். அருளாளர்களிடையே இது ஒரு சங்கேதமொழி. இதைப் பரியாய பாஷை என்பார்கள். பரியாய பாஷை என்றால் கோடுவோர்டு என்று பொருள்.

ஒரு பாத்திர வியாபரி பாத்திரத்தின் மேல் அதனத்ன வாங்கிய விலையை கோடு பாஷையில் எழுதி வைத்தீரப்பான். விற்கிற விலையை எல்லோருக்கும் தெரிந்த எண்ணில் காகிதத்தில் அச்சிட்டு ஒட்டி வைப்பான். கல்லா பெட்டியில் முதலாளி உட்கார்ந்திருப்பார். கடைக்குப் பாத்திர வாங்க வரும் பெண்கள் 80 ரூபாய் என்ற விலைச்சீட்டு ஒட்டியிருந்தால் 20 ரூபாய்க்குத் தருகிறாயா என்று அடிமாட்டு விலைக்கக் கேட்பார்கள். கடையில் உள்ள பையன் விழிப்பான். பாத்திரத்தை எடுத்து வந்து முதலாளியைக் கேட்பான். முதலாளி அதை உருட்டி உருட்டிப் பார்ப்பான். ஓரிடத்தில் துஆ என்று எழுதியிருக்கும். அப்படியானால் அது பதினெட்டு அல்லது பதினாறு ரூபாய் என்று பொருள். அதைப் பார்த்த பின் வியாபார நிலைமைக்கு ஏற்ப 20 ரூபாய்க்கு கொடக்கலாம் என்றோ இல்லை என்றோ முதலாளி சொல்வான். அந்தப் பாத்திரத்தில் துஆ என்று எழுதப்பட்டிருந்தே அது தான் கோடு–சங்கேத பாஷை.

இதுபோல அருளாளார்கள் உடம்பை தில்லை என்று குறிப்பிடுவார்கள் இது அவர்களிடையே வழங்கும் பரிபாஷை–சங்கேத மொழி–கோடு வோர்டு.

தில்லை என்பது ஒரு வகை மரம். இந்த மரம் அதிகமாக வனம் போல சூழ்ந்திருந்தால் அந்த இடத்திற்குத் தில்லைவனம் என்று பெயர் வந்தது. தில்லை வனத்தின் நடுவிலே இருந்ததால் அந்த இடம் தில்லையாயிற்று. இது ஆகு பெயர். முன்பெல்லாம் தில்லை என்று தான் அழைத்தார்கள். காலப்போக்கில் பிற்காலத்தில் தான் சிதம்பரம் என்ற வடமொழிப் பெயரால் இவ்விடம் வழங்கப்படத் தொடங்கியது.

இப்போது தில்லை மரம் அங்கே இல்லை. ஒருவேளை அபூர்வமாக ஒன்றிரண்டு இங்கொன்றும் அங்கொன்றுமாக காணப்படலாம். இந்த மரலத்திற்கு என்ன சிறப்பு என்றால் இது பால் மரம். அதாவத இந்த தில்லை மரத்தைச் சற்றுக் கீறினால் பால்வரும். அந்தப் பால் தப்பித்தவறி உடம்பின் மீது பட்டதால் உடம்பெல்லாம் புண்ணாகி விடுமாம். எனவே தான் இந்த மரங்களை ஒழித்து விட்டிருக்கிறான் மனிதன். இதுவே ரப்பர் தொழிற்சாலையை மேம்படுத்திட அந்தச் சந்தடியில் நடராசப் பெருமான் காணமற் போயிருப்பார் என்பது நிச்சயம். நல்லவேளை! அந்த அசம்பாவிதம் நடக்கவில்லை. தில்லை மரப்பால் புண்ணாக்குவதால் மரம் போயிற்று நடராசர் தப்பினார்.

இந்த மரத்தின் பால் மேலே பட்டவுடன் உடம்பைப் புண்ணாக்கம் என்றோம். இதை ஏன் அருளாளர்கள் நம் உடம்பிற்கு சங்கேதப் பாஷையாக வைத்தர்கள்? பிறவிப் புண்ணை மேன்மேலும் புரையோடச் செய்வது தான் இந்தப் உடல் ஒரு பறிவி எடுக்கிறோம் அந்த உடலைக் கொண்டு மேலும் ஒரு பிறவியைப் பெறுகிறோம். எனவே பிறவி எடுக்க எடுக்க அந்த உடம்பு மேலும் மேலும் பிறவி என்கிற புண்ணையே சேர்ப்பது பெருக்குவது என்ற கண்டு இதைத் தில்லை மரப்பாலுக்கு உவமித்து ஒரு சங்கேத பாஷையாகக் கொண்டார்கள் கொண்டு இந்த உடம்பையே தில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இனிநாம் விட்ட இடத்திலிருந்து வருவோம். பத்துத் தாங்கிகள், 28 மரத்தூண்கள், 18 கல்தூண்கள் என்பன தில்லை மன்றில் ஒவ்வொன்றைக் குறித்தது என்றோம். அது போல தில்லை உடம்பானதால் அந்தக் கோயிலின் மேல் உள்ள கலசங்கள் ஒன்பதும் மனித உடம்பில் உள்ள ஒன்பது வாயில்களை குறித்தது. 11 கலசங்களை வதைத்திருக்கலாம் இல்லை 7 கலசங்கள் வைத்திருக்கலாம் இல்லை 5 கலசங்கள் வைத்திருக்கலாம். ஆனால் ஒன்பது கலசங்களை வைத்ததன் பொருள் – ஒன்பது வாயிலை உடைய உடம்பு இது. அந்த உடம்பின் உள்ளே ஆடுகின்ற நடம் இறைவனது. எனவே மேலே ஒன்பது கலசங்களை அமைத்தார்கள்.

முன்பே இந்தத் தில்லைக் கோயில் கூரையைப் பொன்னால் வேய்ந்தவன் விக்கிரமச் சோழன் என்று பார்த்தோம். அந்தக் கூரையில் பொன்னால் ஆன தகடுகள் வைக்கப்பட்டுள்ளனவே, அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 21,600. காரணம், நாம் ஒரு நாளைக்கு விடுகின்ற மூச்சின் எண்ணிக்கை 21,600. அறுபது கணம் கொண்டது ஒரு நாழிகை. அறுபது நாழிகை கொண்டது ஒரு நாள். நாம் ஒரு கணத்திற்கு ஒரு மூச்சு விடுகிறோம். எனவே ஒரு நாளைக்கு நாம் விடுகிற மூச்சின் எண்ணிக்கை 60 x 60 x 60 = 21,600. இந்த எண்ணிக்கையை வைத்து கூரையின் பொன்தகடுகளுக்கு எண்ணிக்கை அமைத்தான். ஒரு மூச்சு கூட நாம் வீணாக்கி விடக்கூடாது என்று ஒவ்வொரு தகட்டிலும் திருவைந்தெழுத்து எழுதி வைத்தானாம். இதை.

எழுதி மேய்ந்த சிற்றம்பலக் கூத்தனை

இழுதையேன் மறந் தெங்ஙனம் உய்வனோ

என்று அப்பரும் போற்றிப் பாடுகிறார்.

இந்தப் பொன் தகடுகளைப் பூட்டுகிறான். பூட்டாணிகள் எவ்வளவு வைத்தான் தெரியுமா? 72,000. நமது உடலில் இருக்கிற நாடிகளின் எண்ணிக்கை 72,000 என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர். எனவே இவற்றால் பூட்டப்பட்டது இது என்று காட்ட 72,000 பூட்டாணிகள் கொண்டு பொற்றகளைப் பூட்டிக் கூரை வேய்ந்தான். கோவிலைக் கட்டும் போது சும்மா அழகுக்காகக் கட்டவில்லை. எல்லாவற்றிற்கும் பொருள் வைத்து ஒவ்வொரு மனித உடம்பின் உள்ளே இறைவன் ஆடுகின்ற நடனம் இது என்று காட்டினார்கள்.

ஆ! எவ்வளவு மதிநுட்பத்தின் அறிவார்ந்த அடிப்படையில் மிகக் கவனமாக அமைக்கப்பட்டது தில்லைக் கோயில்! இதை நானாகச் சொல்லவில்லை ஒரு பழம் பாடல் கூறுகிறது.

ஆறுசாத் திரம்நாலு வேதம் அதிதூணாக
மங்கள்இரு பத்தெட்டுடன்
ஐம்பெரும் பூதங்கள் பதினென் புராணங்கள்
அரியசிறு தூண் உத்திரம்
ஏறுகலை அறுபத்து நாலுகைம் மரநாடி
எழுபத் திரண்டாயிரம்
எழில்வரிச் சுடராணி புவனமிரு நூற்றோடும்
இருபத்தி நாலுகமலம்
கூறுதொண் ணுற்றாறு தத்துவம் பலகணிகள்
கும்பமொன் பது வாசலும்.
குலவுசிற் றோடுமிரு பத்தோரா யிரமுடன்
கூறுமறு நூறுமாகத்
தேறுமொரு வீடுகட் டிக்குடி இருக்குமுமை
சிறுவீடு கட்டியருளே!
சிவகாம சுந்தரி எனும் பெரிய விமலையே
சிறுவீடு கட்டியருளே!

இந்தப் பாடல் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழில் சிற்றில் பருவத்தில் வருவது. என்ன அழகான பாடல்! தில்லை மன்றிலே பலகணிகள் உண்டு. அந்தப் பலகணியிலே உள்ள துவாரங்கள் மொத்தம் 96. நமது உடல் தத்துவங்கள் மொத்தம் 36 தாத்துவிகங்கள் 60. மொத்தம் கூட்ட தொண்ணுற்றாறு. இந்தத் தொணணுற்றாறையும் குறிக்கப் பலகணியிலே தொண்ணுற்றாறு. இந்தத் தொண்ணுற்றாறையும் குறிக்கப் பலகணியிலே தொண்ணுற்றாறு துளையிடம் வைத்தனர்.

இப்படி ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள் வைத்து அமைத்தர்கள். இவற்றையெல்லாம் முன்னாலே வைத்தார்களா? அல்லது படிப்படியாகக் காலப் போக்கில் ஒவ்வொன்றாக அமைக்கப்பட்டதா? பார்க்க பார்க்கஅதிசயமாய் இருக்கிறது! எண்ண எண்ண ஆச்சரியமாய் இருக்கிறது!

இப்படிப்பட்ட அறிவார்ந்த அடிப்படையில் அமைந்த கோவிலை வேறு எங்கேயும் பார்க்க முடியாது! வேறு எந்த மதத்திலும் இதற்கு இணையாக ஒரு இறையிடத்தைக் கூறமுடியாது! அவ்வளவு ஏன்? நம்முடைய சமயத்திலேயே நம்முடைய கோவில்களிலேயே கூட இதற்கு இணையான கோயில் வேறு எதுவும் இல்லை!

ஐந்து சூழுறை வைப்பான் பஞ்சப்பள்ளியைக் காட்டுவான் பின் அதிஷ்டானத்தை வேறு மாதிரி வைப்பான் உபாதிஷ்டானம்–அது வேறு மாதிரி இருக்கும். அதன்பின் அந்தந்த சிற்பியின் கலைவண்ணம் காணலாம் அவ்வளவுதான்!

திருப்பெருந்துறையிலே மண்டபத்திலே ஒரு கொடுங்கை வைத்திருப்பான். அம்மாதிரி கொடுங்கை இனிமேல் யாராலும் நினைத்துப் பார்த்தாலும் செய்ய முடியாது அதன் சிறப்பை நேரில் பார்த்தால் தான் உணர முடியும். மண்டபத்தின் மேல்தளத்தில் நடுவில் கல்லின் கனம் தடிமனாக இருக்கும். நடுவிலிருந்து வெளியே வரவர கூரைக்கல்லின் கனம் மெலிதாகிக் கொண்டே வரும். மண்டபத்தின் வெளியே வழிந்த கொடுங்கைப் பகுதியில் கல் காகித அட்டையின் கனத்திற்கு வந்துவிடும். இப்படிப்பட்ட கூரைக்கல் பலகைகள் மேலே பரப்பி அவற்றைக் கல்லால் ஆன பூட்டாணிகளால் ஒன்றாகச் சேர்த்திருக்கிறான். போல்ட் என்றால் அதற்கு திருகு மறைப் புரிகள் கல்லிலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆச்சரியமாக இருக்கிறது! கொடுங்கை வீழும் பகுதியில் கல்லின் கனம் என்ன என்று பார்க்க துப்பாக்கியால் அந்தப் பகுதியில் ஒரு வெள்ளைக்காரன் சுட்டிருக்கிறான். குண்டு துளைத்து ஓட்டை விழுந்திருக்கிறது. இன்றும் அதைப் பார்க்கலாம். அந்தத் துளையிடத்தில் கல்லின் கனம் ஒரு அப்பளத்தின் அளவில் இருக்கும். அதுவே கூரையின் நடுப்பகுதியில் பார்த்தால் கல் மிகத்தடிமனாக இருக்கும்.

இன்றைக்கே ஒரு தபதியை வைத்து மலேசியாவில் ஒரு கோவில் கற்றளியாகக் கட்டுவதாக வைத்துக் கொள்வோம். தபதி தமிழகத்தில் இருந்து வருகிறார் என்றும் வைத்துக் கொள்வோம். அவரிடம் கட்டுமானத்திற்கு ஒப்பந்தம் போட்டால் அந்தத் தபதி அந்த ஒப்பந்தத்தில் திருப்பெருந்துறை கொடுங்கையும், திருவீழி மிழலை விமானமும் நீங்கலாக எந்த சிற்ப வடிவிலும் கோவில் கட்டித் தருவதாக எழுதிக் கைச்சாத்திடுவார். இது தமிழகத் தளபதிகள் கடைபிடித்து வரும் மரபு. காரணம் அவை வேறு எந்தச் சிற்பியாலும் கல்லில் வடிக்க முடியாத கலை நுணுக்கம் உடையவை.

இது எதைக் காட்டுகிறது? கலை அம்சத்தை கற்பனைத் திறத்தை சிற்ப நுணுக்கத்தைக் காட்டுகிறது எனலாம். இங்கே நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது திருப்பெருந்துறையில் உள்ள கொடுங்கையிலும், திருவீழிமிழலை விமானத்திலும் கலை அம்சம் இருக்கலாம் ஆனால் தில்லைக் கோயில் ஒன்றில் தான் கலசம் முதல் ஆணி வரை எல்லாவற்றிலும் அறிவார்ந்த அடிப்படை உள்ளத்தைக் காண்கிறோம். இதற்கு இணையாக வேறு எந்தக் கோவிலையுமத் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

தில்லை மண்டபத்திற்கே இவ்வளவு பெருமை என்றால், அதன் கூரையில் வேய்ந்த ஆணிக்கும் அர்த்தம் உண்டு என்றால் உள்ளே மூலவராக எழுந்தருளியிருக்கும் நடராசரின் உருவத்திற்க அர்த்தம் இல்லாமலா அமைத்திருப்பார்கள்? அங்கே பலகணியில் இருக்கும் துளைக்கே பொருள் உண்டு என்றால் உள்ளே மூலவராக எழுந்தருளியுள்ள நடராசர் உருவத்திற்கு எவ்வளவு பொருள் இருக்க வேண்டும்?

இதைத் தான் 82 பாடல்களில் எடுத்துச் சொன்னார் திருமூலர். அதில் முதல் பாடலே மிக உயர்ந்த பாடல்

எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கம் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளையாட்டதே. – பாடல் எண் 2722.

இங்கே இடைப்பிறவரலாக ஒரு பயன்மிக்க் செய்தியைச் சொல்கிறேன். இது புரோட்சண செய்தற்குரிய பாடல். கலசம் வைத்து வழிபாடு செய்கிறோம். பின்னர் வழிபாடு முடிந்தபின்கலச நீரை எல்லா இடங்களிலும் தெளித்து அவ்வவ்விடங்கைளக் கடவுள் மயமாக்க இப்பாடலை ஓதுக. உங்களுக்கு எந்தெந்த இடத்திலே அருள் நிறைய வேண்டுமோ அங்கெல்லாம் கலச நீரைத் தெளிக்கும் போது இந்தப் பாடலையே மந்திரமாக ஒதினால் உரிய பலன் கிடைக்கும்.

திருமூலர் பாடும் போது இதைப் புரோட்சணம் செய்வதற்கென்று பாடவில்லை. சிவபெருமான் உலகெங்கும் தங்கி இருப்பதாகப் பாடுகிறார் அது புரோட்சணத்திற்கு உதவுகிறது.

சிவபெருமானின் திருநடனத்தால் உலகெங்கும் அருள் தங்கி நிறைகிறது என்பது பாடலின் கருத்து. இது பொதவாகப் பாடப்பட்டதாயிருந்தாலும் இத்தனை பெரிய உலகில் நம் சிறிய இல்லத்திலும் அவனது அருள் தங்கி ஆட வேண்டாமா? எங்கும் திருநட்டம் ஆயிற்றே? எனவே இதை நம் வீட்டில் சடங்குகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை நினைவூட்டுகிறேன்.

இந்தப் பாடலில் சிதம்பரம் என்னம் வார்த்தை இருக்கிறதே–அதைப் பார்த்து–இதை வைத்துத் திருமூலரின் காலத்தை நிர்ணயம் செய்து விடலாம் என்று ஒரு பேராசிரியர் குதிக்கிறார். சிதம்பரம் என்ற சொல் வடசொல். இது பிற்காலத்தில் வந்தது. தில்லை என்ற சொல்தான் மூவர் பாடல்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கும். சிதம்பரம் என்ற சொல் வராது. திருமந்திரத்தில் இந்தப் பாடலில் இஅந்த வார்த்தை வந்துள்ளதால் திருமூலர் மூவருக்கும் பிற்பட்டவர் எனலாம். இல்லையானால் குறைந்தது இவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினராகவாவது இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. சொல்லொருமையினாலே மட்டும் நாம் எதையும்–குறிப்பாக ஒருவரது காலத்தை–நிர்ணயம் செய்யக்கூடாது. வேறு உறுதியான சான்றுகளுக்கு இதனைத் துணைச் சான்றாகக்கொள்ளலாமே ஒழிய இஅதையே மக்கியச் சான்றாகக் கொள்ள முடியாது. கடவுள் அருளால் குமரகுருபரர் தமக்குத் தெரியாத மொழியான இந்தியில் திடீரென ஒளரங்கசீப் அவையில் டில்லியில் கவிகள் பாடினார் என்றால் பின்னால் வழங்கவரும் சொல்லை அருளாளரான திருமூலர் முன்னாலேயே கையாள இயலாதா என்ன? திரிகால ஞானிகளுக்கு இதெல்லாம் இயல்பு. எனவே சொல்லொற்றுமையினாலே மட்டும் எதையும் தீர்மானிக்க இயலாது.

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். வியாழக் கிழமையைச் சில பேர் விசாலக்கிழமை என்பார்கள். உயிர் என்பதை உசிர் என்பார்கள். இங்கே பார்த்தால் யகரம் சகரமாக மாறி உச்சரிக்கப்படுகிறது. யகரம் சகரமாகத் திரிந்த காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் சான்றுகளுடன் உறுதி செய்திருக்கிறார்கள். ஆண்டாள் திருப்பாவையில் நாமும் நம்பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ என்று பாடுகிறார். கிரியைகள் என்பதில் உள்ள யகரம் சகரமாகத் திரிந்து கிரிசைகள் என்று பாடலில் வந்திருப்தால் ஆண்டாள் காலம் ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டு என்று கணக்கிட்டுச் சொல்லி விடலாம். ஆனால் இது ஒன்றே போதாது. மேலும் சான்றுகள் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

ஆண்டாள் ஒரு பாடலில் தாம் கடைபிடிக்க விரும்பும் பாவை நோன்பை மேலையார் செய்வனகள் என்று ஒரு பாடலில் பாடுகிறார். எனவே பாவை நோன்பை வேறு ஒருவரிடமிருந்து பெற்றாள் என்பது தெளிவாகிறது. அது யார் என்று பார்த்தால் மணிவாசகர். அவர் தான் முதலில் பாவை நோன்பை பத்திச் சுவை கலந்து சிவபெருமான் மேலதாக வைத்துப் பாடியவர். எனவே அவர் பாடிய திருவெம்பாவையைப் பார்த்து ஆண்டாள் திருப்பாவை பாடினாள் என்று கருத இடமிருக்கிறது. பாவை நோன்பை அடிப்டையாக வைத்ததுப் பாடிய பத்திப் பாசுரங்களில் முதலாவதாக வைத்து எண்ண வேண்டுவத திருவெம்பாவை. அதன் பின் வந்தது திருப்பாவை. ஆனால் இப்போது திருப்பாவையை முதலில் திருவெம்பாவையைப் பின்னால் சொல்கிறார்கள். மார்கழி மாதத்தில் வானொலி அப்படித்தான் உரிய விரிவுரையை அமைக்கிறது. உண்மையில் திருவெம்பாவை தான் முதலாவதாக வர வேண்டும். காரணம், திருப்பாவையில் தான் யகரம்

சகரமான திரிவைக் காண்கிறோம். திருவாசகத்தில் எந்த இடத்திலும் இப்படிப் பார்க்க முடியாது. எனவே திருவெம்பாவையே முதலில் வந்தது. அம்மாவும் அதை உறுதிப்படுத்துவது போல தமது திருப்பாவையில் மேலையார் செய்வனகள் என்று பாடியுள்ளார். திருப்பாவை பத்தாம் நூற்றாண்டினதாக இருக்க திருவெம்பாவை மூன்றாம் நூற்றாண்டினது.

மணிவாசகர் காலத்தை எவ்வளவு தான் வெள்ளைவாரணனார் பின்னே தள்ளினாலும் எட்டாம் நூற்றாண்டிற்கு மேல் அவரால் தள்ள இயலவில்லை. இங்கே நான் வந்தவுடன் சிலர் என்னிடம் தமிழறிஞர் கா.சு. பிள்ளை அவர்களைப் பற்றி பேசினார்கள். கா.சு. பிள்ளை என்பது கா. சுப்பிரமணியப் பிள்ளை என்பதன் சுருக்கம். அவர் படித்தவர். அந்தக் காலத்திலேயே சட்டத்திலே முதுகலைப் பட்டம் பெற்றவராதலினால் பிள்ளை என்றே அவரை அழைப்பார்கள். தாகூர் சட்டக்கல்லூரிக்கு சென்னையிலிருந்தே பணியாற்றியவர். மிகப்பெரிய தமிழறிஞர் மறைமலையடிகளும் இவரும் ஏறத்தாழ சம வயதினர். மாணிக்க வாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்று ஒரு செப்பேட்டினை ஆதாரம் காட்டினார் கா. சு. பிள்ளை. அவர் ஒரு வழக்கறிஞர் அல்லவா? ஒரு வழக்கு என்றால் வழக்கறிஞர்கள் எக்ஸிபிட்டுகளைக் காட்டுவர். அதுபோல இந்த வழக்கில் ஒரு செப்பேட்டை எக்ஸிபிட்டாகக் காட்டினார்.

அவர் காலத்தில் வாழ்ந்த அவரது நண்பரான மறைமலை அடிகள் மாணிக்கவாசகர் காலத்தைப் பற்றி ஆராய்ந்து வாழ்நாளெல்லாம் உழைத்து உழைத்து இரண்டு பாகமாக நூல்களை எழுதி மணிவாசகர் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறினார். கா. சு. பிள்ளை அவர்கள் ஒரு செல்பேட்டைக் காட்டி மணிவாசகர் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று மிக எளிதாக, ஆனால் மிக உறுதியாக மெய்ப்பித்தார். அதன்பின் யாரும் மணிவாசகர் காலம் மூன்றாம் நூற்றாண்டு என்பதை எதிர்த்துக் கூறவில்லை. வெள்ளைவாரணனார் தான் மணிவாசகர் எட்டாம் நூற்றாண்டினர் என்று குறுக்கு சால் போட்டார். அவரது வாதங்களில் கா.சு. பிள்ளை காட்டிய செல்பேட்டைப் பற்றி எந்த குறிப்பும் காட்டாமல் தவிர்த்திருப்பதே அவர் மணிவாசகரின் கால வரையறையைச் செய்தது தர்க்கரீதியாக ஏற்புடையதல்ல என்று சான்று கூறும்.

வெள்ளை வாரணனார் கூற்றுப் படியே மணிவாசகர் எட்டாம் நூற்றாண்டினர் என்று வதைத்துக் கொண்டாலும் கூட ஆண்டாள் பத்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்பதால் மணிவாசகருக்குப் பின் வந்தவரே எனவே திருப்பாவை பின்னால் தான் வந்திருக்க வேண்டும் திருவெம்பாவைதான் முதலில் வந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

அது மட்டுமா? ஆண்டாள் முதல் பாடலிலேயே மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் என்று பாடுகிறார். மார்கழி திருவாதிரையில் மதி நிறையும் அதாவது பௌர்ணமி நகழும். திருவாதிரை சிவபெருமானுக்கு உரிய நாள். எனவே சில வழிபாடாக பாவை நோன்பு முன்பே வழக்கில் இருக்க அதைப் பார்த்து வைணவியாகிய இவள் மாற்றிக் கொண்டாள் என்பதை முதல் பாட்டே காட்டிக் கொடுத்து விடுகிறது. இரண்டாவது பாட்டில் பிள்ளைகள் எல்லாம் பாவைக் களம் புக்கார் என்று பாடுகிறாள். பாவைக் களத்தில் பாவையாக உமாதேவியை வழிபடுவார்கள். எம்பிராட்டி உமை தவமிருந்து சிவபெருமானைக் கணவனாகப் பெற்றவள். அவரது இடப்பாகத்தையே பெற்றவள். அதைப் போல் தங்களுக்கும் சிறந்த கணவன் அமைய வேண்டும் என்று மணப் பருவத்தில் உள்ள சிறுமிகள் கேட்டு வழிபடுவதாக பாவை நோன்பு வழிபாட்டை அமைத்தார்கள். என் வீட்டிற்க நல்ல கணவர் நாட்டிற்க நல்ல மழை. இந்த இரண்டு தான் அந்த பாவை நோன்பில் வைக்கப்படும் வேண்டுகோள்கள். இது தான் திருவெம்பாவையின் அடிப்படைக் கருத்து.

இதையே சற்று மாற்றி அம்பிகையை வழிபட்டு கண்ணனையே தனக்கக் கணவனாக வரவேண்டும் என்று அமைத்தாள். வைணவர்க்கு உமாதேவி வழிபாடு பொருந்தாதே! மறந்தும் புறந்தொழாதவர்கள் என்று

சொல்லிக் கொள்பவர்களாயிற்றே வைணவர்கள். உமாதேவியின் வழிபாட்டை ஆண்டாள் இங்கே மேற்கொள்வதாலும் ஆண்டாள் மணிவாசகர் காட்டிறய திருவெம்பாவை நோன்பை பின்பற்றினாள் என்பது தெளிவாகிறது. இத்தனை கோணங்களில் ஆராய்ந்தில் ஒன்றிற்கொன்று ஆதாரங்கள் உறுதுணையாவாதால் ஆண்டாள் யகரம் சகரமான பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவள் என்பதை உறுதிப்படுத்திச் சொல்லலாம்.

இப்படி வேறு ஆதாரங்கள் துணை செய்யாதே போது சிதம்பரம் என்ற சொல்லைத் திருமூலர் பயன்படுத்தினார் என்ற ஒரே காரணத்திற்காக அவர்காலத்தை மிகப் பின் தள்ளிக் கொண்டு வருவது அறிவுடைமையாகுமா? திருமூலர் யார்? ஒரு யோகி. யோகிகள் யோகக் காட்சி உடையவர்கள். காலம் கடந்தவர்கள். அவர்களுக்கு மூன்று காலமும் தெரியும். முன்னால் நடந்ததும் தெரியம் பின்னால் நடக்கப் போவதும் தெரியம்.

சிவஞானசித்தியாரிலே காட்சிகள் நான்கு வகைப்படும் என்று கூறப்படுகிறது. அவை 1) வாயிற் காட்சி 2) மானதக் காட்சி 3) தன்வேதனைக் காட்சி 4) யோகக் காட்சி.

யோகக் காட்சியில் என்ன தெரியும் என்றால் இறைவன் திருவருளாலே எல்லாம் தெரியும். ஆகாயத்திலே சில பதிவேடுகள் உண்டு. ஆகாஷிக் ரெக்கார்ட்ஸ் (Ahashik Records) என்று அன்னிபெசண்ட் அம்மையார் இதை விளக்குகிறார். இந்த ஆகாயப் பதிவுகளில் உள்ளன எல்லாம் யோகக் காட்சியில் தெரியும்.

நாம் நாடி சாத்திரம் பார்க்கிறோமே இதற்க அடிப்படையே இந்த யோகக் காட்சி தான். கௌசிகர் நாடி, அகத்தியர் நாடி என்றொல்லாம் சொல்கிறார்களே இவர்கள் யார்? யோகியர். இவர்களுக்கு யோக காட்சியில் தெரியும். ஒவ்வொருவருடைய பதிவேட்டையும் இவர்கள் பார்க்கிறார்கள். நாமெல்லாம் தொலைக்காட்சி பார்க்கிறோமே அது போல. தொலைக்காட்சி இல்லாவிட்டால் ஜன்னலைத் திறந்து வைத்துவிட்டு அடுத்த வீட்டில் அல்லது வெளியில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். அதில் ஒரு சுவை. அதைப்போல தவம் இயற்றும் ஞானிகள் அதனிடையில் பெறும் யோகக் காட்சியில் இந்த ஆகாயப் பதிவேடுகளை பார்க்கிறார்கள். வெறும் சுவைக்காகப் பார்க்காமல் அவரவர்கட்குப் பயனாகட்டுமே என்று அவற்றை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தனர். இது தான் நாடி சாத்திரம்.

எனக்கு நீண்ட நாட்களாக இது என்ன என்று பார்த்துவிடவேண்டுமு் என்று ஆவல். இதைப் பார்க்க பழநிக்குப் போனனேன். கௌசிக நாடி பார்த்தேன். காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை எனக்கு உரிய ஓலை கிடைக்கவில்லை. சரி, இன்று பழநி பஞ்சாமிர்தத்துடன் முடிந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது 4 மணிக்கு ஒரு பழைய கட்டில் எனக்குரிய ஓலை கிடைத்தது.

என்னுடைய தகப்பனாருக்கு சத்தியத்திலே மிகவும் ஈடுபாடு. எனவே எனக்கு சத்தியவேல் முருகன் என்று பெயரிட்டார். எனக்கு மட்டுமல்ல எங்கள் வீட்டில் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் கூட சத்திய என்ற அடைமொழியுடனே தான் பெயர் வைக்கப்பட்டது. பொதுவாக சக்திவேல் முருகன் என்பது தான் உலக வழக்கு. இதுவே அதிகமாகப் புழக்கத்தில் உள்ள பெயர் அல்ல. சத்தியவேல் முரகன் என்பது இன்னும் மிக மிக அபூர்வம். இந்தப் பெயர் ஓலைச் சுவடியில் எழுத்து மாறாமல் வந்திருந்தது ஆச்சரியப்பட்டேன். முதல் பாடலிலே இப்பிறவியில் சத்தியவேல் முருகன் என்ற நாமத்தைக் கொண்டு பிறந்திருக்கிற இவருடைய வரலாற்றை கூத்தபிரானே! உன்னை வணங்கிச் சமர்ப்பிக்கிறேன் என்று வருகிறது. பாடியிருப்பவர். கௌரிசகர்–அதாவது விசுவாமித்திரர். இவர் ராமர் காலத்தவர். அதாவது ஏறத்தாழ கி.மு. 5000த்தில் வாழ்ந்தவர். இப்போதைக்கு ஏறத்தாழ 7000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். இவர் பாடுகிறார், சத்தியவேல் முருகன் என்று. நான் இதைப் பார்க்கம் வரை எனக்குப் பெயரை என் அப்பாதான் வைத்தார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அப்போது தான் தெரிந்தது இது 7000 ஆண்டுகட்கு முன்பே நிர்ணயிக்கப்பட்டு விட்டது என்று. என் மகன் பெயர் அருட்செல்வி. இந்த

தூய தமிழ்ப பெயர்கள் எல்லாம் நான் அரிதில் முயன்று எண் சோதிடப்படி அமைத்து வைத்தது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இவையெல்லாம் அந்த ஓலைச் சுவடியிலே இருந்தன.

7000 வருடங்களுக்கு முன் விசுவாமித்திரர் என் மகன் பெயரைத் திருச்சுடர் நம்பி என்று எழுதிவைத்திருக்கும் போது, திருமூலருக்கா தெரியாது, பின்னால் தில்லைக்கு சிதம்பரம் என்ற பெயர் வழங்க இருக்கிறது என்று.

எனவே சிதம்பரம் என்ற ஒரு சொல்லை திருக்கூத்து தரிசனத்தின் முதல் பாடலில் பார்த்து விட்டு அதை வைத்து திருமூலரின் காலத்தை நிர்ணயம் செய்தால் நம் அறிவைத் தானே சந்தேகிக்க வேண்டும். திருமூலர் என்ன கணியன் பூங்குன்றனார் போன்ற சாதாரண புலவரா? சாதாரண புலவர்கள் பாடலில் சொற்களைக் கொண்டு அவர்களது காலத்தை நிர்ணயிக்கலாம். ஆனால் அருளாளர்கள் பாடலில் வரும் வார்த்தைகளைக் கொண்டு அவர் இன்ன காலம் என்று சொல்லலாமா?

அவ்வளவுக்கு என்ன? பின்னால் ஐயப்பன் வழிபாடு சிறப்பாக வரும் என்பதையே முன்னமேயே அறிந்தவர் போல் திருமந்திரத்தில் ஐயப்பனைக் குறிப்பால் காட்டிய பாடல்கள் உண்டு. ஐயப்பன் வழிபாடு எங்கள் தாயகத்தில் அண்மைக்காலத்தில் தான் பலர் புகழ் பெற்றது. எனவே இதைக் குறித்து திருமந்திரத்தில் பாடல்கள் இருப்பதால் திருமூலர் 1925க்குப் பிற்பட்டவர் என்று கூறலாமா? அது எவ்வளவு பேதைமை?

எனவே அறிஞர் பெருமக்கள் சிதம்பரம் என்ற சொல் இநதப் பாடலில் வருவது கொண்டு எந்தத் தவறான முடிவிற்கும் போகக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனை

சொற்பதமாம் அந்தச் சுந்தரக் கூத்தனைப்

பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை

அற்புதக் கூத்தனை யாரறி வாரே!

ஐந்து வகையான கூத்துக்களை இந்தப் பாடல் மூலம் சொல்கிறார். அவை 1) சிவானந்தக் கூத்து 2) சுந்தரக் கூத்து 3) பொற்பதிக் கூத்து 4) பொற்றில்லைக் கூத்து 5) அற்புதக் கூத்து. இந்தக் கூத்துக்களைப் பற்றிச் சொல்லப்போகிறேன் என்று தோற்றுவாய் செய்து கொள்கிறார். ஐந்து கூத்துக்களுக்கும் தனித்தினயாகப் பாடல்களைப் பாடி இருக்கிறார். அந்தப் பாடல்கள் கூட முன்னுக்குப் பின் முரணாக கிடைக்கும் பதிப்புகளில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அறிவார்ந்த நிலையிலே ஆராய்நது எதையெதை எதோடு சேர்க்க வேண்டும் என்று பார்த்து சேர்க்க வேண்டும். பொற்பதிக் கூத்தில் வர வேண்டிய இரண்டு பாடல்கள் பொற்றில்லைக் கூத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சிவானந்தக் கூத்தில் வரவேண்டியவை பின்னால் அற்புதக்கூத்தில் வரும். இதையெல்லாம் ஆராய்ந்து சரியான முறையில் திருமந்திரத்திற்குச் சரியான செம்பதிப்பு வரவேண்டும். திருவருள் என்று கைகொடுக்குமோ தெரியவில்லை.

இங்கே முதலில் கூறப்படும் சிவானந்தக் கூத்து தான் கடைசிக்கூத்து அதாவது ஆனந்தக் கூத்து (ஆனந்த தாண்டவம்). சிவனுடைய திருவடியிலே அடையும் ஆனந்தக் கூத்தே சிவானந்தக் கூத்து.

கூத்து என்பது அசைவைக் குறிக்கும். ஒரு மூன்று மணி நேரம் நாம் ஒரு அசைவும் இல்லாமல்உட்கார்ந்திருந்தோமானால நமக்குப் பறைகொட்டி சங்கு ஊதிவிடுவார்கள் அசைதல் வேண்டும்.

அசைதலும் உரியன் அதா அன்று என்று திருவாவினன் குடிப்பகுதியிலே திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பாடினார். இப்படி இவர் பாட பழநியிலே பழனி ஆண்டி இரண்டு முறை அசைந்து விட்டார். பெரியவர் வாக்குகளட எலலாம் அப்படித் தான் பலிக்கும். தென் பழநி என்றமையால் வடபழநி என்று ஒன்று வரவேண்டும் என்று சென்னையில் வடபழநி வந்து விட்டது. அருணகிரியாரின் வாக்கு வன்மையைப் பாருங்கள்! அவ்வளவு ஏன் இப்போது நடுப்பழநி கூட வந்து விட்டது.

பழநியில் இருக்கிற முருகன் சிலை போகரால் அமைக்கப்பட்டது. அது மூலிகைக் கல்லால் ஆனது. அதன் மீது அபிடேகம் செய்த நீரைப் பருகினால் தீராத நோயெல்லாம் தீரும் என்பது ஒரு நம்பிக்கை. அதனால் பழநி ஆண்டிக்கு வந்தது ஆபத்து. அவரைச் சுரண்டி சுரண்டி பழநி ஆண்டி இளைத்துக் கொண்டே போனார். கடைசியில் அந்த சிலையை எடுக்க வேண்டி வந்தது. போகர் ஒரு பத்தர் கனவில் வந்து தாம் பிரதிட்டை செய்தது போல இன்னும் மூன்று சிலைகள் உண்டு என்றும், அவற்றில் ஒன்றை ஒரு குறிப்பிட்ட இடத்தில் புதைத்து வைத்திருப்பதாகவும் இடம் சுட்டிக் காட்டினாராம். அதன் படி இரண்டாவது சிலை பிரதிட்டை செய்யப்பட்டது. சில நூற்றாண்டுகள் கழிந்த பின் இரண்டாவது சிலைக்கும் முன்சிலைக்கு ஏற்பட்ட அதே கதி ஏற்பட்டது. பிறகு போகர் முன்போல் வழிகாட்ட பிரதிட்டை செய்யப்பட்ட மூன்றாவது சிலை தான் இப்போது பழநியில் உள்ளது. இதுவும் மிகவும் இளைத்து நாபியில் ஓட்டை விழுந்து விட்டதாகக் கூறுகிறார்கள். இப்போது உள்ள சிலைக்கு அபிடேகம் செய்வது தவிர்க்கப்பட்டு முன்னால் ஓர் உலோகச் சிலை வைக்கப்பட்டு அதற்குத் தான் அபிடேகம் நடைபெறுகிறது.

எனவே சிலை இருமுறை அசைந்து விட்டது அசைந்ததால் வேறு புதிய சிலைகள் பிரதிட்டை செய்யப்பட்டன. நக்கீரர் அசைதலும் உரியன் என்று பாடினார். சாமி இரண்டு முறை அசைந்து விட்டார். பெரியவர்கள் வாக்கு இப்படித்தான் அப்படியே பலிக்கும்.

ஒரு பொருள் அசைவில்லாமல் இருந்தால் அதில் நமக்கு ஈடுபாடு இருக்காது. அசைந்தால் அப்பொருளின் மீது நம் கவனம் பதியும். அதைப் பார்ப்பதில் ஓர் இன்பம் வரும். சீரியல் லைட் அலங்காரம் செய்பவர்கள் கூட அந்த விளக்குகளில் ஒளி மாறி மாறித் தோன்றி ஓடி மறைவது போல அமைப்பார்கள். அப்படியே விளக்குகளின் ஒளி இருக்குமானால் அது அவ்வளவு கவனத்தைக் கவராது. அந்த அசைவு நம்மை ஈர்க்கும். அந்த அசைவில் ஓர் ஆனந்தம்.

ஆண்டவன் அசைகிறான் நாமும் அந்த அசைவினால் அசைகிறோம். அவன் ஆட்டம் முடிந்ததானால் நம்முடைய ஆட்டம் முடிந்தது. இதைக் கருத்தில் கொண்டே இறைவனை ஆடும் நிலையில் கண்டது நம்முடைய நெறி. அதனால் தான் அவனன்றி அணுவும் அசையாது என்று கூறினர். அவன் ஒவ்வோர் அணுவையும் அசைக்கிறானே அந்த அசைவு தான் கூத்து.

சிவானந்தக் கூத்து என்றால் பக்குவமற்ற ஆன்மாக்களைத் தன் திருவடியிலே இணைத்து இன்பத்தை ஊட்டுகின்றானே இறைவன், அந்த இன்ப ஊட்டலுக்கான அசைவே ஆனந்தக் கூத்து ஆனந்த தாண்டவம். அந்த சிவதனந்தக் கூத்து எப்படி இருக்குமாம்? அங்கே எல்லாம் ஆனந்தமாக இருக்குமாம்.

ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்

ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்

ஆனந்த மாக அகில சராசரம்

ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே!

இந்த சிவானந்தக் கூத்திற்கு நாம் வரவேண்டுமானால் இரண்டு நடனத்தைத் தாண்டி வர வேண்டும். அவை 1) ஊன நடனம் 2) ஞானநடனம்.

ஊன நடனம் என்பது நாம் இந்த உலகிலே உலகமே வாழ்க்கை என்ற உலக முகமாக வாழ்கிறோமே, அந்த வாழ்க்கையிலே ஊடாக உள்ளிருந்து உதவுகிறானே, அந்த நிலையில் அவன் செய்கிற நடனம் ஊனநடனம்.

உலகதுக வாழ்க்கையை உவர்த்து ஆண்டவனுடைய திருவடி ஒன்றையே வேண்டி அவன் பக்கம் நம் எண்ணம் திரும்புமானால் – நேற்றுச் சொன்னேனே, கலாந்த நிலை என்று – அந்த நிலையில் பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களாக மாற்றச் செய்கின்றானே அதுவே ஞானநடனம்.

மெல்ல மெல்ல அதற்கும் மேலே ஆன்மாவை மேலேற்றி ஆறாவது அந்தமாகிய சித்தாந்த நிலையில் இன்பத்தை ஊட்டுகின்றானே அதுவரை ஆனந்த நடனம். ஐவகைக் கூத்துக்களில் கடைசிக்கூத்து ஆனந்தக்கூத்து. ஆனந்தமே குறிக்கோள் என்பதாலும் பயனை முதலில் சொன்னால் ஆன்மாக்களுக்கு அதை அடைய விருப்பம் மேலிடும் என்பதாலும் கடைசிக் கூத்தை முதலில் வைத்தார். நாம் இதனை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

முன்னதாக கூறிய ஐவகைக் கூத்தில் சிவானந்தக் கூத்திற்கு அடுத்து இரண்டாவாதாகக் கூறப்பட்டது சுந்தரக் கூத்து பரம்பொருள் எல்லாவற்றையும் ஒடுக்கி நிற்பது தான் லயக்கூத்து. இந்த லயக் கூத்தை வியந்து சுந்தரக்கூத்து என்றார்.

இந்த முறைமையில் பார்ததோமானால் சிவனந்தக் கூத்தினை அடுத்து வரும் மூன்று கூத்துக்களை இப்படிச் சொல்ல வேண்டும்.

சுந்தரக் கூத்து – லயக்கூத்து

பொற்பதிக் கூத்து – போகக்கூத்து

பொற்றில்லைக்கூத்து – அதிகாரக்கூத்து

லய நிலையிலே இறைவன் எல்லாவற்றையும் ஒடுக்கிக் கொள்கிறான். அயன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம், ஏன் சத்தியைக் கூட உள்ளே ஒடுக்கிக் கொள்கிறான். இந்த லயநிலையை திருவைந்தெழுத்திலும் வைத்துக் காட்டினார்கள். திருவைந்தெழுத்தில் மகாகாரண பஞ்சாட்சரம் சி என்ற ஒரே எழுத்து. நமசிவய, சிவயநம, சிவ, சி என்று ஐந்தெழுத்து ஐந்து வகைப்படும் என்பது இந்த அருள்நெறித் திருக்கூட்டத்தார்க்கு நன்கு தெரியும். நான் இதை விரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஐந்தெழுத்தில் சி என்பது சிறப்பாகிய சிவபெருமானைக் குறிக்கும். வ என்பது அருளாகிய சத்தியைக் குறிக்கும். எல்லாவற்றையும் ஒடுக்கும் போது இந்த வ என்ற எழுத்தும் சி என்ற எழுத்தில் ஒடுங்கி அது ஒன்றே நிற்கும். ஏனைய நான்க எழுத்துக்களும் அதில் ஒடுங்கி நிற்பதால் தான் அது ஒரே எழுத்து என்றாலும் அதனை ஐந்தெழுத்து என்று கூறினர். இதுவே மகா காரண பஞ்சாட்சரம் என்ற வடமொழியில் கூறுவர். திருமூலர் இதை நாயோட்டு மந்திரம் என்று சொல்லுவார். இந்த நாயோட்டு மந்திரத்தில – சி யில் – வ வும் ஒடுங்குகிறது என்பதை புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தும் கூறுகிறது.

பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று அவ்விரு

தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்

பரம்பொருள் சத்தியாகிய வ என்பதைத் தோற்றியும் நிற்கும் – அதுவே சிவ என்பது. இதனைப் பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று என்ற வரியால் உணர்த்தினார். அப்புறம் அவ்வுரு தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் என்ற வரி மூலம் வ வும் சியில் ஒடுங்கி சி மட்டுமே தனித்து நிற்கும் என்பதைக் கூறியது. கரத்தல்–ஒளித்தல். சித்தாந்தக் கருத்து புறநானூற்றுப் பாடலிலே கூறப்படுவது காண்க.

இந்த லய நிலையில் எவ்வெவற்றை எல்லாம் ஒடுக்கி எப்படி லயக்கூத்து ஆடுகிறான் இறைவன் என்று பாடல்கள் சில கூறுகின்றன. அவற்றில் அனைத்தையும் இங்கே பார்க்க முடியாது. எனினும், ஒரே ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்

உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேல்

கண்டங் கரியான் கருணை திருவுருக்

கொண்டங் குனமகாணக் கூத்துகந் தானே – பாடல் எண் 2732

சதாசிவத்திற்கு ஐந்து முகங்கள் திசைக்கு ஒன்றாக நான்கு திசைகளுக்கு நான்கு முகம் உச்சியில் வடகிழக்காக ஈசானிய மூலையில் ஒருமுகம்–ஆக ஐந்து முகங்கள். இதனைத் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, உச்சியில் அற்புதமானதோர் அஞ்சு முகம் என்றார். இந்த சதாசிவத்துடன் தொடர்பு கொண்டு போக நிலையில் இந்த உலகைப் படைப்பதற்காக ஓர் அசைவு–அது தான் போகக் கூத்து. என்றும் மாறாத் தன்மையுடைய தலைநிலையினர் சதாசிவர் ஆதலால் அவரிடம் கொண்டு ஆடும் நடனத்தை பொற்பதிக்கூத்து என்றார்.

இந்தக் கூத்தின் பின்னாலே வருங்கூத்து பொற்றில்லைக் கூத்து. இறைவன் உலகை விரிக்கும் பணியை நேரடியாகச் செய்யாமல் சதாசிவம், அவர்க்கு கீழ் உள்ள மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் இவர்களைஎயல்லாம் ஒருவர் கீழ் ஒருவராகக் கொண்டு அவாக்கள் மூலமாக உலகை விரிப்பான். இது அதிகார நிலை. இப்படி இறைபணி ஏற்று பிரகிருதி மாயையை விரித்தாலும் இவர்கள் எல்லாம் சிவபெருமானுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் அல்லர். இவர்கள் சிவபெருமானை நேராகப் பார்த்தில்லை. எனவே தான், மூவரும் அறிகிலர் யாவர்மற்றறிவார்? என்று பாடினார் மணிவாசகர். மூவர் என்பது இங்கே உருத்திரன், மால், பிரம்மாவைக் குறிக்கும்.

சில மர்மப் படங்களைப் பார்த்தால் அதில் ஒரு தலைவன் கீழே பலர் பணி செய்வார்கள். ஆனால் தங்கள் பாஸை இவர்களுக்கே தெரியாது. ஏவல் யார் மூலமாவது கிடைக்கும். இட்ட ஏவலைச் செய்து முடிப்பவர்களே ஒழிய தமக்கு ஏவலிடும் பாஸ்யார் என்று தெரியாது. படத்தின் கடைசிப் பகுதியில் தான் அவன் யார் என்று அறிந்து அதிசியப்பார்கள். அதுபோல சிவபெருமான் ஏவலை மூவர் செய்தாலும் மூவரும் சிவபெருமானை அறியார். ஓரே வேறுபாடு படத்தில் வரும் பாஸ் ஒரு வில்லன் சிவபெருமான் நல்லன். சிவபெருமானையும் வில்லன் என்று ஒரு வகையில் கூறலாம். இவன் மேருவை விலாக வளைத்ததனால் மேரு வில்லன். மேரு மிக உயர்ந்த மலை ஆதலால் மிக உயர்ந்த சூப்பர் வில்லன் சிவபெருமான்.

அது ஒரு புறமிருக்கட்டும், அதிகார நிலையில் மூவரோடு பிரகருதி மாயையில் இறைவன் ஆடும் கூத்து பொற்றில்லைக் கூத்து. தில்லை உடம்பைக் குறிக்கும் என்ற முன்னமே பார்த்தோம். தூலகமாகக் கண்ணுக்குத் தெரியும உடம்பு பிரகிருதி மாயையினால் ஆனது. எனஅவ இதைப் பொற்றில்லைக் கூத்து என்றார். இது மூவரோடு ஆடுவது என்பதை ஒரு பாடலில் கூறுகிறார்.

தேவரோ டாடித் திருவம் பலத்தாடி

மூவரோ டாடி முனிசனத் தோடாடி

பாவினுள் ஆடிப் பராசக்தியலாடிக்

கோவினுள் ஆடிடும் கூத்தப் பிரானே – பாடல் எண் 2757

இந்தப் பாடலை விரித்துரைக்க வேண்டிய அவசியமில்லை. பொருள் வெளிப்படையாக உள்ளது.

பெரியோர்களே! சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து பொற்றில்லைக் கூத்து இம்மூன்றும் புனர்உற்பவம் என்ற உலகத்தோற்றத்தைக் கூறியதாலே இவை ஊன நடனம் எனப்படும். இந்த ஊன நடனத்தில் உடம்பை ஆன்மாவிற்கு அமைத்துக் கொடுத்து அனுபவிப்பதற்கு உலகையும் படைத்துக் கொடுத்து விட்டார். அதோடு ஆன்மாவின் உள்ளிருந்து ஆட்டுகிறான். இதைக் கோவினுள் ஆடிடும் கூத்தப்பிரானே என்று பாடினார். கோ–பசு. பசு என்பது ஆன்மாவைக் குறிக்கும்.

ஊன உடம்பையும், ஊனக் கண்ணால் கண்டு அனுபவிக்கும் உலகையும் படைத்த பெருமான் உள்ளிருந்து நாம் வேண்டியதையெல்லாம் பெற்றுத் தருகிறான். இதன் பின்னால் இறைவனையே வேண்டும் போது குருவாக வந்து தீட்சை கொடுத்து பசு கரணத்தைப் பதிகரணமாக மாற்றகிறானே அது ஞான நடனம். அதைத்தான் அற்புதக்கூத்து என்ற பாடினார் திருமூலர். எனவே சிவானந்தக் கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என்று ஐவகைக் கூத்துகளின் சாராம்சத்தையும பார்த்தோம். இனி நடராசரின் உருவத்தில் இந்த ஐந்தையும் எப்படி அமைத்துக் காட்டினார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஊன நடனத்தையும், ஞான நடனத்தையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து அமைத்தது தான் நடராசப் பெருமான் திருவுருவம். முன்னால் நாம் வணங்குகிற ஒவ்வொரு உருவத்தினுடைய பொருளையும் அறிந்து வழிபட வேண்டும் என்றோம். இப்போது நடராசப் பெருமான் உருவம் எதைக் குறிக்கிறது என்பதைப் பார்ப்போம். இதை ஒரு பாடலில் திருமூலர் உருவில் சிவாய நம என ஓதே என்று விளங்குகிறார். இந்தப் பாடல் எண் 2798. அதாவது திருவைந்தெழுத்தையே நடராசரின் உருவமாாக் காட்டியுள்ளது என்கிறார்.

தாயகத்தில் ஓட்டல் சரவணபவன் மிகப் பிரபலம். அதன் உரிமையாளர் சிறந்த முருக பக்தர். எனவே ஓட்டல் சரவணபவன் என்பதின் சுருக்க எழுத்துக்களை என்ற எழுத்துக்களையே வேல் உருவத்தில் அமைத்திருப்பார். அது போல் திருவைந்தெழுத்தையே நடராசப் பெருமானின் உருவமமாக் காட்டினார்கள்.

ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே!

நாடும் திருவடியி லேநகரம்–கூடும்

மகரம் உதரம் வளர்தோள் சிகரம்

பகருமுகம் வாமுடியப் பார்.

என்பது மனவாசகம் கடந்தார் திருமூலரை அடியொற்றிப் பாடிய உண்மை விளக்கப் பாடல். இதற்கு மூலக் கருத்து வழங்கியவர் திருமூலரே.

இதை விளக்க வேண்டுமானால் நடராசர் படம் வேண்டும். பெறுமனே வாயால் சொல்லி அதைப் புரிய வைக்க முடியாது.

ந என்னும் தமிழ் எழுத்து இரண்டு திருவடிகளிலும் உள்ளதைக் காணலாம். சாமுத்திரிகா லட்சணத்தின் படி வயிற்றில் மடிப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற சாத்திரம் கூறுகிறது. இதைச் சிற்பிகள் சிலையை வடிக்கும் போது தெளிவாக காட்டுவார்கள். அது ம கரம் போல் அமைந்திருப்பதைக் காணலாம். அடுத்து வீசி நின்றாடும் கைகளை மேலிருந்து பிளான் எழுதினால் சி என் எழுத்து தெரியும். தமிழனுடைய அறிவே அறிவு! எப்படியெல்லாம் பிளான் பண்ணி உருவம் அமைத்திருக்கிறான்! நான் ஒரு பொறியியலாளன் என்பதால் பிளான் எப்படி அமையும் என்று தெரியும். ஆனால் 13ஆம் நூற்றாண்டில் வழழ்ந்த மனவாசகம் கடந்தாரும் அதற்கு முன் பன்னூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருமூலரும் பிளான் எப்படி இருக்கும் என்பதைக் கண்டறிகிறார்களே அது அல்லவா ஆச்சரியம்!

இதுவரை திருவடி இரண்டில் ந கரத்தைப் பார்த்தோம் வயிற்று மடிப்பில்–உதரத்தில் ம கரத்தைப் பார்த்தோம் வளர்தோளில் சி கரத்தைப் பார்த்தாம். முகத்தில் வ என்ற எழுத்து அமைந்துள்ளதை ஊன்றிப் பார்த்தால் தெரியும். ஆடும் பெருமானின் சடைமுடி இருக்கிறதே அதன் வடிவத்தைப் பார்த்தால் ய கரம் தெரியும். பாடலில் முடி ய ப் பார் என்று பிரித்தப் பொருள் காண வேண்டும்.

பாடலில், பார்! என்று ஆணை தந்ததால் நடராசரின் உருவத்தில் அந்த திருவைந்தெபத்துக்கள் எப்படி அமைகின்றன என்று பார்கக் வேண்டியது நமது கடமை. அதோடு அந்த ஐந்தெழுத்துக்களின் பொருளையும பார்க்க வேண்டியது நமது கடமை. அவை எவ்வெவற்றைக் குறித்தன என்று கூறுகிறேன்.

ந – நடப்பு

ம – மறைப்பு

சி – சிறப்பு

வ – வனப்பு

ய – யாப்பு

இதை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

உலகமுகமாக நம்மைச் செலுத்துகிற சத்தி இருக்கிறதே அனை நடப்பு என்றனர். இதன் முதலெழுத்தே ஐந்தெழுத்தில் ந கரமாகக் கொள்ளப்பட்டது.

அறியாமை என்னும் மறைப்பு இருக்கிறதே, மூல மலமாகிய ஆணவம்–இது ஒன்றே இறைவனை அறியாதவாறு ஆன்மாக்களுக்கு மறைப்பைச் செய்வது. மறைப்பு என்ற இதன் முதலெழுத்தை ம கரமாக திருவைந்தெழுத்தில் அமைத்தார்கள்.

இதில் சிவபெருமானைக் குறித்து எழுத்து சி. சிறப்பு என்ற சொல்லின் முதலெழுத்தை மட்டும் ஐந்தெழுத்தில் எடுத்துக் கொண்டு சிவபெருமானைக் குறித்தனர். சிறப்பென்னும் செம்பொருள் என்று திருவள்ளுவர் பரம்பொருளான சிவபெருமானைக் குறிப்பார். அதனால் தான் சிவபெருமானுடன் ஒன்றி முத்தியடைந்தால் சிறந்தனர் என்று கூறுவர். சிறந்தது பயிற்றல் இறந்ததன் கடனே என்பது தொல்காப்பியம்.

அடுத்து வனப்பு மிக உயர்நதவனாக இருப்பான். அவன் நம்மோடு சரளமாகப் பழகினால் அதுதான் வனப்பு. கோடி கோடியாகச் சொத்தைக் குவித்திருப்பான். என் அருகில் யாரும் நெருங்காதீர்கள் என்று எல்லோரையும் விரட்டினால் அது அழகல்ல. அவனே அடியார்களுக்கெல்லாம் அமுது படைத்து, இலை

வைத்துக் காய்கறிகளைப் பரிமாறி சாப்பிடச் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோமானால், எவ்வளவு பெரிய செல்வந்தன் எவ்வளவு எளிமையாக அன்பாக எல்லோரிடம் இறங்கி வந்து பழகுகிறான் என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அருமையில் எளிய அழகே போற்றி என்று போற்றுவார்கள். இது தானே ஒருவர்க்கு வனப்பு.

திருமாலும் பிரம்மாவும் தேனார்களாம் சிவபெருமானை அவர்களுக்கும் கிடைக்கவில்லை. அவ்வளவு அரிய பொருள் அடியார்கள் அழைத்தவுடனே அடியார்க்கு எளியன் என்று ஓடிவருகிறானாம். உமாபதி சிவத்திடம் பெத்தான் சாம்பான் என்னும் ஒரு விறகு வெட்டிக்காக ஒரு பரிந்துரைக் கடிததம் கொடுத்தானாமத் சிவபெருமான். கடிதத்தைத் தொடங்கும் போது எப்படித் தொடங்குகிறார்? அண்டாண்டங்களுக்கு அதிபதியாகியயான் என்றா தொடங்குகிறார். இல்லை

அடியார்க்கு எளியன் என்றுதான் தொடங்குகிறார் ;

அடியார்க்கு எளியன் சிற்றம் பலவன் கொற்றங்

குடியார்க்கு எழுதிய கைச்சீட்டு–படியின்மிசை

பெத்தான் சாம்பானுக்குப் பேதமற தீக்கைசெய்து

முத்தி கொடுக்க முறை.

இப்படி எளிவந்து எழுதுவது தானே சிறப்பு. வடமொழியில் சொல்ப்பிய விசேஷம் என்பர். தமிழில் எளிவந்த வான்கருணை என்று கூறுவர். இந்த அழகு வருவதற்குக் காரணம் எம்பிராட்டி தான். அவள்தான் கருணையின் வடிவமாக நின்று பெருமானை அடியார்க்கு எளி வந்து கருணை செய்ய வைக்கிறாள். இறைவனின் கருணையாக அம்பிகை இருக்கிறாள். இந்தக் கருணை தான் இறைவனது வனப்பு. எனவே கருணைக்கு நாயகியாக இருக்கிற எம்பெருமாட்டியை வனப்பு என்ற சொல்லால் திருவைந்தெழுத்தில் குறித்தார்கள்.

எம்பெருமாட்டிறயின் கருணை வனப்பை என்னென்று சொல்வது? திருச்சதகத்திலே மானின் நேர்விழி என ஒரு பாடல் வரும். அதற்கு பண்டிதமணி கதிரேஞ் செட்டியார் உரை எழுதுகிறார். நயந்து நயந்து படிக்க வேண்டிய உரை அது.

மானினுடைய விழி பார்க்க அழகாய் இருக்கும். அதுபோல அழகான கண்களை உடையவள் அம்பிகை என்பதை மானின் நேர் விழி என்ற சொற்றொடர்க்குப் பொருளாகச் சொல்லலாம். ஆனால் செட்டியார் பார்க்கும் கோணமே வேறு. மான்விழி மருட்சியை உடையது. காரணம் மான் மற்ற விலங்குகளுக்கு எளிதில் இரையாகி விடக்கூடிய எளிய விலங்கு. தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளும் திறன் இல்லை. எந்த நேரம் எந்த விலங்கு தம் மீது வந்து பாயுமோ என்ற அச்சம். புல்லைத் தின்னும் போது கூட அதன் கண்கள் எந்த விலங்காவது வந்து விடுமோ என்று அச்சத்தால் அலைபாய்ந்து கொண்டே இருக்கும். எனவே மருட்சியையுடைய கண்கள் மானின் கண்கள. இதை அம்பிகையின் கண்களுக்கு உவமை கூறினால் அம்பிகையின் கண்களும் மருட்சியுடையன என்று ஆகிவிடும். அம்மாவே மருட்சியுடையவராக இருந்தால் பக்தர்கள் அம்மாவிடம் என்ன பெற முடியும்?

இந்தக் குறை வராமல் அமைதிப்படுத்தி அற்புதமான உரை எழுதுகிறார் கதிரேஞ்செட்டியார். அதாவது மணிவாசகர் இறைவன் முன் நின்று திருவாசகப் பாடல்களை பாடிக்கொண்டிருக்கிறாராம். இறைவன் பக்கலில் இருந்து சிவகாமி அம்மை நெஞ்சினிக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறாளாம். இறைவன் கண்ணை

மூடி அனுபவித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இப்போது அம்பிகைக்கு ஓர் அச்சம் உதிக்கிறதாம்– பக்குவம் முதிர்ந்த இந்த மணிவாசகன் என்னும் ஆன்மா பனந்தமிழில் நெஞ்சுருகப் பாடகிறான். இவனை ஆண்டவன் எங்கே கைவிட்டு விடுவாரோ என்ற அச்சத்தால் இறைவனையும் மணிவாசகரையும் மாறி மாறி பார்க்கிறாளாம். அது மருட்சியுட் அரைபாயும்மானின் கண் போன்று இருக்கிறதாம். எனவே மானின் நேர் விழி என்று மணிவாசகர் பாடினார் (கை தட்டல்) என்று உரை எழுதினார். எவ்வளவு அற்புதமான கருத்து! எங்கே அந்தக் குழந்தைக்க அருள்புரியாமல் அப்பா விட்டுவிடுவாரோ என்று அங்குமிங்கும் அலைபாயப் பார்க்கும் அந்தத்தாய்!

பெரியோர்களே! கண்ணுக்கு எது அணிகலன் சொல்லுங்கள பார்க்கலாம். கைக்கு–வளையல் வாட்ச். காதுக்கு–கம்மல் கடுக்கன் . கழுத்துக்கு–செயின். கண்ணுக்கு? கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம் என்றார் திருவள்ளுவர். கண்ணோட்டம் என்றால் பரிவுப் பார்வை என்று பொருள்.

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்

புண்ணென்று உணரப் படும்

என்பது வள்ளுவர் வாக்கு. இவர் எளியவர் இவருக்கு நம்மையன்றி யார் உள்ளர்? இவருக்க உதவ வேண்டும் என்று கருணையோடு பார்க்கிறோமே அது தான் கண்ணோட்டம். இந்தக் கண்ணோட்டம் உடையது ஆதலால் மானின நேர்விழி என்று பாடினார் மணிவாசகர். கணஙணேதட்டம் என்கிற கருணையே வனப்பு என்றோம். வனப்பே இறைவி. இறைவியை இங்ஙனம் வனப்பு என்று குறித்த சொல்லின் முதலெழுத்தான் வ கரத்தை திருவைந்தெழுத்தில் ஒன்றாகக் கொண்டனர்.

அடுத்து ஐந்தெழுத்தில் எஞ்சி நிற்பத ய. இது யாப்பைக் குறித்தது. யாப்பு என்பது நீங்களும் நானும். இந்த ஆன்மா உடம்புக்குள் பிணைத்துயாக்கப்படுவது. இந்த யாப்புக்கு உட்பட்டவர்கள் நாம். எனவே ய கரம் ஆன்மாவைக் குறித்தது.

இத்தனை பொருள்களையும் உள்ளடக்கியது நமசிவய என்னும் ஐந்தெழுத்து. இதில் வரும்நம என்பது போற்றி என்னும் பொருள் உடையதல்ல. நம அதாவது நமஹ என்னும் வடமொழிச் சொல்லிற்குத்தான் போற்றி என்று பொருள். நமசிவய என்பதில் வருவது நம என்பது தானே ஒழிய நமஹ அல்ல. அதே போல் சிவாய நம என்றால் சிவாய போற்றி என்று பொருள் பண்ணக்கூடாது. அப்படிப் பண்ணினால் ந–நடப்பு என்பதும் ம–மறைப்பு என்ற அந்த வைப்பு முறையின் பொருளும் சிதைந்து போகும்.

நமசிவய என்பதில் நடப்பாகிய திரோதமரத்திற்கும் மறைப்பாகிய மூலமலத்திற்கும் யாப்பாகிய ஆன்மாவிற்கும் உள்ளே சிவ என்பதிலிருந்து செலுத்தி வருவது குறிக்கப்பட்டது. இங்கே நடப்பும் மறைப்பும் முன்னே நிற்கிறது. இது தான் உலகமுகமான வாழ்க்கையைக் குறித்தது.

பின்னர் ஆன்மா பக்குவம் பெற்று பசுகரணம் பதிகரணமான பின் சிவ முன்னிற்கும் நமவாகிய மலங்கள் பின்னிற்கும். இடையில் ஆன்மாவாகிய யகரம் இருக்கும். இந்த இரண்டு நிலைகளையும் எழுத்துக்களை வைத்த முறையிரேயே எடுத்துக் காட்டினார்கள். ஆகவே ஐந்தெழுத்தில் எழுத்துக்களின் வைப்பு முறைக்கும் பொருள் உண்டு. இதை உள்ளடக்கித் தான், யானையோ தவம் செய்தேன், சிவாயநம எனப் பெற்றேன் என்று பாடினார் மணிவாசகர்.

சிறப்பும் வனப்பும் முன்னிற்க அதற்கடுத்து யாப்பாகிய நான் இன்று அருள் பெற்று சிவாயநம என்ற நிலையில் இருக்கிறேன் என்பது பாடல்வரியின் பொருள்.

எனவே நமசிவய என்பது ஊன நடனத்தைக் குறித்தது சிவயநம என்பது ஞான நடனத்தைக் குறித்தது.

முன்னே ஊன நடனத்தைக் குறிக்கும் படியாக நடராசன் திருவடியிலிருந்து நமசிவய என்ற எழுத்துக்கள் எப்படி மேலே சடைமுடி வரை அமைந்துள்ளன என்று மனவாசகம் கடந்தார் பாடலில் பார்த்தோம்.

இனி, ஞான நடனத்தைக் குறிக்கும் சிவய நம என்பது எங்ஙனம் நடராசர் உருவத்தின் மேலிருந்து கீழ்வரை அமைந்துள்ளது என்பதைப் பார்ப்போம்.

நடராசரின் வலக்கரத்தில் உடுக்கை ஒன்றிருக்கும். அது எப்படி இருக்கும் என்பதைப் படத்தில் பாருங்கள்

இது கம்ப்யூட்டர் யுகம். 8 என்ற எண்ணிற்கு இரண்டு சதுரத்தை ஒட்டி வைத்துக் கம்ப்யூட்டர் இப்படிக் காட்டும். அது போல மேலே உடுக்கையின் வரி வடிவத்தைக் கூர்ந்து பாருங்கள். உடுக்கையின் இரு பகுதியும் சகரம் போலவும் அதில் கட்டியிருக்கும் நூல் சகரத்தின் மேல் வைத்த கொம்பு போலவும் காணப்பட்டு சிகரத்தைக் குறிக்கும்.

நடராசரின் வலதுகரம் அபய கரம். அதில் உள்ளங்கையின் அடிப்பகுதியில் ய கரம் தெரிவதைப் பார்க்கலாம்.

நடராசரின் இடது மேல் கரத்தில் தீ கொழுந்துவிட்டு எரியும். அந்தத் தீயின் உருவில் நகரம் தெரியும்.

எனவே மேலிருந்து கீழாக சிவயநம என்ற எழுத்துக்கள் நடராசரின் உருவத்தில் பொதிந்துள்ளதைக் காணலாம். இதை வரும் பாடலில் திருமந்திரம் கூறுவதைப் பாருங்கள்

திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்த வாவென் றணைத்த மலர்கையும்
பொருந்தி யமைப்பில் யவ்வென்ற பொற்கையும்
திருந்தநத் தீயாகும் திருநிலை மவ்வே. – பாடல் எண் 2797

(உதறியகை–உடுக்கை உதறும்கை)

இவ்வாறு ஊன நடனத்திற்குரிய திருவைந்தெழுத்தையும், ஞான நடனத்திற்க உரிய திருவைந்தெழுத்தையும் நடராசர் உருவில் காட்டி. உருவில் சிவாய நமஎன ஓதே என்று கூறியவர்கள் அந்த நடராசர் வடிவத்தில் ஊன நடனத்திற்குரிய செய்கையையும் ஞான நடனத்திற்கும் உரிய செய்கையும் அமைத்துக் காட்டினார்கள்.

முதலில் ஊன நடனத்திற்கு உரிய செய்கைகளைப் பார்ப்போம். அதற்கு உரிய பாடல் இது,

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்

அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி

அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே – பாடல் எண் 2799

இந்தத் திருமந்திரப் பாடலுக்கு உரை வகுத்தாற் போல மனவாசகம் கடந்தார் உண்மை விளக்கத்தில் இப்படிப் பாடினார்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்

சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்–ஊற்றமா

ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி

நான்ற மலர்ப்பதத்தே நாடு.

தோற்றம் துடியதனில் என்றார். துடி என்றால் உடுக்கை. உடுக்கையிலிருந்து ஒலி தோன்றும். இந்த உலகில் ஒலிதான் முதலில் தோன்றியது என்று எடுத்துச் சொல்கிறது. முதலில் சொல்லுலகை உருவாக்கி அவற்றினால் சுட்டப்படும் பொருள் உலகத்தை இறவைன் பின்னால் படைத்தான். இதை கிறித்துவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆதியிலே வார்த்தை இருந்தது என்ற பைபிள் சொல்கிறது. எனவே உடுக்கை மூலம் இறைவனது படைப்புத் தொழில் சுட்டிக் காட்டப்பட்டது.

உண்டாக்கிய உலகம் நிலைபெறுக என்று வீசி அமர்த்திக் காட்டும் இடது கரம் காட்டியது. இதனால் காத்தல் தொழில் சுட்டிக் காட்டப்பட்டது.

உலகை அழிக்கும் தொழிலை நடராசர் ஏந்தும் தீ காட்டியது. அங்கி என்றால் தீ. அங்கியிலே சங்காரம் என்று இதனைப் பாடினார் மேலே.

வலது காலால் முயலகனைத் திருப்பிப போட்டு அழுத்துவதால் இது மறைத்தல் தொழிலைக் காட்டிறயது. ஒவ்வொரு பிறிவியிலும் ஏற்படும் சம்பவங்களை மறைக்கும் படி முயல்கனை கவிழ்ந்த நிலையில் காலால் ஊன்றி நிற்கிறார். இந்த நாளில் தான் ஸ்ரீஜயாவை, திரு. கலிய பெருமாளை, திரு. சண்முகத்தை, இன்னும் பல அன்பர்களைச் சந்திப்பேன் என்று தெரியுமா? எந்தப் பிறவயில் எப்படி இருந்தோம் என்று தெரியாது. இதைத்தான் மறைத்தல் தொழில் என்பது. இது ஊன்றிய காலால் காட்டப்பட்டது.

மறைத்தல் தொழில் மிக அவசியம். போன பிறவி என்ன என்பது மறைக்கப்படுவதே மறைத்தல் தொழில். திரு. கலிய பெருமாளிடம் போன ஜென்மத்தில் கடன் வாங்கித் திருப்பித் தரவில்லை என்று வைத்தக் கொள்வோம். கலியபெருமாள் என்னை விடுவாரா? முதலில் பண்ததை கொடுத்துவிட்டு அப்புறம் எல்லாம் பேச்சையும் வச்சுகோ என்ற சொல்லமாட்டாரா? பத்திரகிரியார் பட்டினத்தாரின் சீடர். அவருக்கு முன்னால் அருள் பெறுகிறார். காசிராஜன் மகள் வந்து பத்திரகிரியாரிடம் என்னை ஏற்றுக்கொள் என்கிறாள். அவர் யார் என்று பார்த்தால் முன் ஜன்மத்தில் பத்திரகிரியாரைச் சுற்றி வந்து உண்டநாய். ஒரு சாது உணவின் சேஷத்தால் நாய் காசிராஜன் மகளாயிற்று. இப்ப சொல்லுங்க! இது மாதிரி நம் மனைவி போன ஜன்மத்தில் நாய் என்றால் நம்ம வாழ்க்கை நடக்குமா? மறைத்தல் எவ்வளவு அவசியம்!

நடராசரது தூக்கிய இடது பாதம் மலத்திலிருந்து ஆன்மாவைத் தூக்கியருளுவதைக் காட்டுவதால்இது அருளுந்தொழில் பாற்பட்டது.

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இவைனது ஐந்தொழில்களும் நடராசர் வடிவில் இடம் பெறுவதைக் கூர்ந்து நோக்கிட இவ்வடிவத்தை அமைத்த நம் முன்னோரின் மதி நுட்பத்தைப் பாராட்டாமல் இருக்க இயலாது.

அடுத்து நடராசர் உருவத்தில் எவ்வாறு ஞான நடனச் செய்கைகள் காட்டப்பட்டுள்ளன என்று திருமூலர் காட்டிய வழியில் சிந்தித்து மனவாசகம் கடந்தார் பாடினார்.

மாயை தனை உதறி வில்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து–நேயத்தால்
ஆனந்த வாரிதியல் ஆன்மாவைத் தானழுத்தால்
தானெந்தை யார்பரதம் தான்.

உடுக்கையை உதறுவது ஆன்மாவைச் சூழ்ந்த மாயையை உதிற எடுத்தாகப் பொரள். இதன் மூலம் மாயாமலம் கழிந்தது. அடுத்து கன்ம மலம் கழிய வேண்டும். நடராசர் ஏந்திய தீ வலிய வினைகளைச் சுட்டெரிப்பதைக் குறித்து கன்ம மலக் கழிவைக் குறிக்கிறது. முயலகன் ஆணவமலத்தைக் குறிப்பவன். அவனை அமுக்குவதன் மூலம் ஆணவத்தின் வலியடக்குவது காட்டப்பட்டது. இடது கால் தூக்கி நிற்பது மூலமலத்தில் தோய்ந்த ஆன்மாவைத் தூக்கி அருள் கொடுப்பதைக் காட்டியது. அந்த இடது கால் ஆன்மாவைத் தூக்குவதாக விரல் நுனிப்பாகம் வளைந்திருக்கும். அந்த வளைவே கொக்கி போல் ஆன்மாவைத் தூக்குவதால் இதனைக் குஞ்சிபாதம் என்று அடியார்கள் போற்றினர். குஞ்சிதம்–வளைவு.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும் முயலகனைக் கால்களால் அழுத்தி அடக்கி வைத்தாக நடராசர் வடிவத்தில் வைத்தக் காட்டினார்கள். சைவ சித்தாந்தக் கருத்தே ஆணவ மலத்தை அடக்குவது தானே! அதாவது அதைச் செயல்பட விடாமல் தடுப்பது. ஆணவத்தை அழிக்க முடியாது. அது இருக்கும் ஆனால் அதைச் செயல்பட விடாமல் தடுக்கலாம்.

இன்னும் சொல்லப் போனால், ஆணவமலம் இருப்பதும் ஒரு விதத்தில் நமக்கு உதவியே. ஆண்டவனுடைய பேரின்பத்தை அனுபவிப்பதற்கு ஓர் உணர்வு வேண்டும். இன்பம் இறைவன் இன்பத்தை அனுபவிவப்பது நான் என்ற நிலை இருந்தால் தான் இன்ப அனுபவமே நிகழும்.

இதைத் தான் இன்பம் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல் மலம் என்று மனவாசம் கடந்தார் பாடினார். எனவே முத்தியிலும் ஆணவம் வேண்டும். முத்தியில் ஆணவ மலம் என்ற தலைப்பிலேயே முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் ஒரு கட்டுரை எழுதி அது சித்தாந்தம் இதழில் வெளிவந்தது. திரு. இரத்தினம் செட்டியார் அடியேனுக்கு நல்ல நண்பினர். இந்த மலேசியப் பகுதியில் இவரைத் தெரியாத சைவ அன்பர்கள் இருக்க முடியாது. இவரது மறைவு சைவ உலகிற்கப் பேரிழப்பு.

இங்ஙனம் சைவசித்தாந்தக் கருத்துக்களின் பிழிவாக ஓர் வடிவத்தில் அமைந்தது நடராசர் திருவுருவம். அதனால் தானே மணிவாசகர் தாம்பாடிய திருவாசகத்திற்கு நடராசரே பொருள் எனக்காட்டி அவ்வடிவில் ஐக்கியமானார். எனவே நடராசர் உருவில் சிவாய நம என ஓதே என்பதே நாம் நன்கு நினைவில் பதிக்கத்தக்கது.

இதையொட்டி ஒரு செய்தியை அடியேன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஞான நடனத்திற்கான சிவாய நம என்ற ஐந்தெழுத்தை நடராசர் உருவில் அமைத்துக் காட்டிய பாடல் திருத்து நற்சியென்று

தொடங்கும் திருமந்திரப்பாடல். ஊனநடனத்திற்கான நமசிவய என்ற ஐந்தெழுத்தை நடராசர் உருவில் அமைத்துக் காட்டிய பாடல் திருக்கூத்துத் தரிசனத்தில் காணோம். ஆனால் இதற்குரிய பாடல் திருவம்பலச் சக்கரம் பகுதியில் நான்காந் தந்திரத்தில் வருகிறது.

ஆகின்ற பாதமும் அந்நவாய் நின்றிடும்

ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்

ஆகின்ற சீயிரு தோள் வவ்வாய்க் கண்டபின்

ஆகின்ற அச்சுடர் அவ்வியல் பாமே – பாடல் எண் 941

இந்தப் பாடல் திருக்கூத்துத் தரிசனப்பகுதியில் ஒன்பதாம் தந்திரத்தில் சேர்க்கப்பட வேண்டும். தவறாக நான்காம் தந்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதுவரை தில்லை நடராசரின் திருவுருவமே ஐந்தெழுத்துத் திருமேனி என்று கண்டோம். தில்லை மன்றில் உள்ள ஆணிக்கும் பொருள் உண்டு. பலகணி துளைக்கும் பொருள் உண்டு என்றால் நடராசரின் மேல் சுற்றி வைக்கப்பட்ட பிரபைக்கு–அதாவது திருவாசிக்குப் பொருள் இல்லாமலா இருக்கும்? திருவாசியில் பார்த்தீர்களானால் 51 சுடர்கள் எரியும் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். என்ன பாருள்? 51 சுடர்களும் 51 எழுத்துக்களைக் குறித்து அதன் வழி கலைஞானத்தை காட்டும். கலைகள் இறைவனை முழுமையாகக் காட்டா. எனவே அதை இறைவன் மேல் சுற்றி வைத்தார்கள். அந்தத் திருவாசியின் வளைவு ஒங்காரத்தின் வளைவாம். எனவே

ஓங்காரமே நல் திருவாசி உற்றதனின்

நீங்கா எழுத்தே நிறைசுடராம்

என்று பாடினார் மனவாசகம் கடந்தார்.

எனவே நடராசர் திருவுருவத்தின் பொருள் காண்பது அவ்வளவு எளிதல்ல. அங்கே ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இங்கே இந்த அற்புதமான திருவுருவத்தை பற்றித் திருக்கூத்து தரிசனம் என்கிற அளவிலே ஓரளவு சிந்தனையைச் செலுத்தினோம். முழுமையாக 82 பாடல்களையும் சிந்தனை செய்ய இயலாது என்பதால் கிடைத்த இந்த நேரத்திற்குள் எதைச் சொல்ல வேண்டுமா அதையெல்லாம் கோர்வைப் படுத்தி சாரமாகச் சிந்தனை செய்தோம். இன்னொரு வாய்ப்பு கிடைக்குமானால் ஒவ்வொரு பாடலையும் விரிவாகப் பார்க்கும் திருவருள் கிடைக்குமானால் அப்படி அப்போது பார்க்கலாம்.

முடிக்கு முன் ஒன்றைச் சொல்ல விழைகிறேன். திருமந்திரத்திலேயே மகுடாகமத்தின் பிழிவாகி மணிமகுடமாய் விளங்குவது ஒன்பதாந் தந்திரம். அதிலும் மணி மகுடமாக விளங்குவது திருக்கூத்து தரிசனம் இதற்கு ஈடு இணை இல்லை. இதை நமது அன்பர்கள் போற்றிக் கையாண்டால் பெரும் பலன் பெறலாம்.

இங்கு மலேசிய அன்பர்கள் வீட்டில் அநேகமாக எல்லலோருடைய வீட்டிலும் நடராசர் திருவுருவம் இருப்பதைப் பார்த்து அக மகிழ்ந்தேன். அதிலும் ஒரே வீட்டிலேயே நாலைந்து இடங்களில் நடராதசர் நடமாடிக் கொண்டிருக்கிறார். படத்தில், பிரதமையில், உலேகத்திருமேனியில் என்று பலப்பல விதமாகப்

பார்க்கிறேன். எனவே நடராசப் பெருமானை வணங்கும் போது திருக்கூத்து தரிசன திருமந்திரம் பாடல்கள் 82ஐயும் போற்றிகளுக்குப் பதிலாக பாடி மலரிடுங்கள். தினமும் பாடி அர்ச்சனை செய்யலாம். அது சிறப்பு. இல்லையேல் மார்கழித் திருவாதிரையில் அவசியம் இவ்வாறு பாடி அர்ச்சிக்க வழிபாட்டின் முழுப்பயனை எய்துவீர்கள் என்பது திண்ணம். 82 பாடல்களும் மந்திரங்கள். இவற்றைப் பாடினால் நடராசப் பெருமான் உங்கள் முன் உயிர்ப்பொடு எழுந்து காட்சியளித்து நடனமாடுவான் என்பது உறுதி.

பெரியோர்களே! இதுவரை நான் நீள நெடுகப் பேசியிருக்கிறேன். இந்த ஐந்து நாட்களில் அருள்நெறித் திருக்கூட்டத்தாராகிய உங்கள் முன்னாக பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதிலே சுருக்கம் கருதி அல்லது நேர நெருக்கடி கருதி முன் பின் ஏதாவது சொல்லியிருப்பேன். ஆனால் அதையெல்லாம் திருமூலர் தன் திருவருளாலே மன்னிப்பார் என்று திடமாக நம்புகிறேன். அவ்வாறு ஏற்பட்டிருக்கக் கூடிய குறைகள் எல்லாம் ஒன்றுக்கும் பற்றாத சிற்றறிவுடைய சிறியேனது குறையால் நிகழ்ந்தவை என்று கொள்க. ஒன்றிரண்டு சிறப்பாய் அமைந்ததென்றால் அது தீருமூலரின் திருவருட் சிறப்பு என்று கொள்ள வேண்டுகிறேன். இங்கே திருமூலருக்கும் உங்களுக்கும் இடையே கூரியர் சர்வீஸ் தபால் காரன் மாதிரி சேவை செய்தேன். அவ்வளவு தான்.

இதுவரை ஐந்து நாட்களாக திருமந்திரச் சிந்தனையை ஓர் எழில் ஞான வேள்வியாகச் செய்துள்ளோம். வேள்வி முடிவிலே திருமூலருக்குப் பாட்டிலேயே பூரணாகுதி செய்வோம். சிறிய குறட்பா தான். எல்லோருடங சொல்ல வேண்டுகிறேன்.

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்

கருமூலம் இல்லையே காண்

(இதை மூன்று முறை கூட்டத்தினர் சொல்லி வணங்குகிறார்கள்)

காட்டினாய் கழுக்குன்றிலே என்று மணிவாசகர் பாடியதைப் போல மலேசியாவிற்கு கடல் கடந்து வந்த மாத்திரத்தில் திரு. சண்முகம் அவர்களையும் தான்ஸ்ரீஐயாவையும் திரு கலிய பெருமாள் அவர்களையும், இறைவன் காட்ட இவர்கள் மூலம் ஐந்து நாட்களுக்குத் தெய்வத் திருவருளினாலே திருமந்திரத்தைப் பற்றிப் பேசும்படி அமைந்தது. இது என்ககுக் கிடைத்த மிகப் பெரிய பேறு என்று சொல்லி உரையை நிறைவு செய்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

<u>கேள்வி நேரம்</u> :

நிறைய கேள்விகள் வந்துள்ளன. முதல் கேள்வியைப் படிக்கிறேன்.

கேள்வி 1). வேதச் சிறப்பு என்று இந்தத் திருமந்திரத்தில் வருகிறது. வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உள தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே! இங்கே வேதம் என்பது வடமொழி வேதத்தைக் குறிப்பதா? தமிழ் வேதத்தைக் குறிப்பதா?

பதில் : ஏற்கெனவே இதுபற்றி பலமுறை சொன்னேன். திருமூலர் வாக்கிலிருந்து எது வருகிறதோ அதைத்தான் நாம் ஏற்க வேண்டும். வேதம் என்றதும் வடமொழி வேதத்தை இங்கே எடுத்துக் கொள்ளக் கூடாது. சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்பது அவர் வாக்கு. அவர் சொல்வது எல்லாம் தமிழ் வேதம். அதைத்தான் நாம் இங்கே கொள்ள வேண்டும். இதை எனது முதல் நாள் சொற்பொழிவிலேயே விளக்கியுள்ளேன். (தமிழாகமம் என்ற தலைப்பிலான சொற்பொழிவு) பரிமேழகர் உரை பற்றியெல்லாம் உதாரணம் காட்டினேன். மூல ஆசிரியரின் கருத்தப்படி உரை எழுத வேண்டும். எனக்கு தமிழில் ஆர்வம் அதிகம் என்பதால் இங்கே கூறப்பட்டது தமிழ் வேதம் என்று சொல்லிவிடக்கூடாது. அமரகோசம் என்று ஒரு வடமொழி நிகண்டு. நிகண்டு என்றால் அகராதி. அதையே அந்தக் காலத்தில் செய்யுளிலே சொல்லியிருப்பார்கள். அகடும் மோடும் உதாரமும் வயிறே என்பது பிங்கலந்தை நிகண்டு. அதாவது அகடும்–வயிறு, மோடும்–வயிறு, உதரமும்–வயிறு என்று பொருள். இதைப்போல வடமொழி நிகண்டு அமரகோசம். அதைச் செய்தவர் ஒரு சமண முனிவர். சுவாமி என்ற வடமொழிச் சொல்லிற்குப் பொருள் எழுத வந்தவர் சுவாமி என்றால் மகாவீரர் என்று எழுதியிருக்கலாம். அருகன், அருகதேவன், மகாவீரர் என்றெல்லாம் அந்தச் சமணர் எழுதவில்லை. சுவாமி என்ற சொல் ஸ்வம் என்ற அடிப்படைச் சொல்லிலிருந்து வருகிறது. ஸ்வம் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் தனக்கு உடைமையாக உடையவன் என்பது பொருள். இந்த உலகம் முழுவதும் இறைவனுடைய சொத்து. எல்லா உணிர்களையும் தன் அடிமையாகவும் எல்லாப் பொருள்களையும் தனது உடைமையாகவும் கொண்டவன் சுவாமி. இந்தச் சொல் யாருக்கு உரியது என்று எழுதுகிறார். ஏழுதுவது யார்? சமண முனிவர். அது தான் நேர்மைத் திறம். நமக்கு உகந்தது என்று மாற்றிச் சொல்லிவிடக் கூடாது.

நான் தமிழ் அர்ச்சனை செய்பவன். தமிழில் கும்பாபிடேகம் செய்பவன். இதற்காக நான் மாற்றிச் சொல்லிவிடக்கூடாது. நான் திருமந்திரத்தைச் சடங்குகளில் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருகிறேன். அவர் இரண்டு பாடல்களைக் கூறுகிறார்.

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந்தேன் நின்ற காலம்
இதாசினி யாதிருந்தேன் மன நீங்க
உதாசினி யாதுடனே உணர்ந்தோமால்

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழும் மனமும் எம்ஆதி அறிவும்ூ
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே.

இந்தப் பாடல்களில் சதாசிவ தத்துவத்தை தமிழ் வேதமாகவும், சிவ தத்துவங்கள் ஐந்தையும் தமிழ் மண்டலமாகவும் கூறுகிறார். ஆசிரியர் கருத்து இது தான். இதற்கு மாறாக உரை சொல்லக் கூடாது. சதாசிவத்தின் முகங்கள் ஐந்து. கீழ் நான்கு முகங்களால் வேதங்களும் ஐந்தாவது மேல் முகத்தால் ஆகமங்களும் வெளிப்படுத்தப்பட்டு அசை நமக்குக் கிடைத்தன என்று வரலாறு கூறுகிறது. எனவே தமிழ்

மண்டலத்திலிருந்து வெளிவந்தது தமிழ் வேதமாகத் தானே இருக்கும். ஆக, இங்கே தமிழ்வேதம் தான் வேதம் எனப்பட்டது. அறம் தான் வேதம் என்ற கூறப்பட்ட பாங்கையும் நீங்கள் குறிப்பிட்ட பாடல்மூலம் அறிகிறோம்.

அதிலே கூட ஒரு வரி வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றறார்களே என்று வருகிறது. அப்படின்னா வளமில்லாத வேதமும் ஒன்று உண்டு என்று அறிகிறோம் அல்லவா?

இரண்டு பேர் வருகிறார்கள். இவர் குப்பன் இவர் கோவிந்தன் என்று அறிமுகப்படுத்துகிறார் ஒருவர். பின்னர் குப்பன் பொய்யே சொல்ல மாட்டார் என்று சொன்னால் என்ன அர்த்தம்? கோவிந்தன் பொய்யை அப்பப்ப நம் மாதிரி கலந்துப்பார் என்று தானே அர்த்தம்.

அதுபோல வளமுற்ற வேதம் என்றால் என்ன பொருள்? அப்பா! வளமில்லாத வேதத்த நான் சொல்லவில்லை. வளமுள்ள தமிழ் வேதத்தைத் தான் நான் சொல்லுகிறேன் என்று முதல் பாடலிலேயே தெளிவாகச் சொல்லிவிட்டார்.

வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன் என்று இன்னொரு பாடலில் கூறுகிறார். சதாசிவம் உரைத்ததாக வருவது நம் தமிழ்வேதம். பிரம்மா உரைத்ததாக வருவது வடமொழி வேதம். நான்மறை கூறியவன் பிரம்மா என்று வடமொழியில் கூறுகிறார்கள்.

சதாசிவம் உரைத்த தமிழ் வேதமா? பிரம்மா உரைத்த வடமொழி வேதமா? இதில் எதைக் கொள்வது என்றால் மூல ஆசிரியர் சொன்னதைத் தான் முழுக்க முழுக்கக் கடைப்பிடிக்க வேண்டும. எனக்குப் பிடிக்கிறது, அவருக்குப் பிடிக்கிறது என்று அவரவர்க்குப் பிடித்ததைச் சொல்லக்கூடாது. தான்ஸ்ரீஐயாவிற்கு வடமொழி பிடிக்கும். எனவே அவர் விருப்பத்திற்கு ஏற்ப இங்கே சொன்னது வடமொழி வேதம் தான் என்று கூறலாமா? திருமூலர் சொன்னதைப் பின்பற்றித் தானே நாம் பொருள் சொல்ல வேண்டும்.

இவ்வளவு சொல்றீங்களே! ஓர் இடத்தில் இடிக்குதே என்று இந்தப் பாடலை மேற்கோள் காட்டக் கூடாது.

இருக்குமாம் எழில் வேதத்தின் உள்ளே

உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி

வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்

கருக்குரு வாய கண்ணனு மாமே.

இங்கே இருக்கு என்ற குறிப்பிடப்பட்டது. வடமொழி ரிக் வேதத்தை அல்ல. இருக்க என்றால் மந்திரம். நான் மலேசியாவில் பல இடங்களில் சொற்பொழிவு செய்தள்ளேன். எல்லா இடங்களிலும் இதை விளக்கி இருக்கிறேன். இருக்கு என்பது ரிக் வேதத்தைக் குறித்தது அல்ல அல்ல திருஞான சம்பந்தர் ஐந்து திரு இருக்குறள் பாடி இருக்கிறார். இதைச் சேக்கிழர் மூல இலக்கியம் என்றார். (மொழி பெயர்ப்பல்ல). எல்லாவற்றிற்கும் இதுவே மூலம். இந்த ஐந்திலும் ரிக் வேதத்தையா சம்பந்தர் தமிழில் பாடினார்? அப்படி வடமொழியாளர்களே ஒப்புக் கொள்ள மாட்டார்களே. எனவே இருக்கு என்பது மந்திரத்தைக் குறிக்குமல்லாது வேறொன்றில்லை.

இருக்கு நான்மறை ஈசனையே தொழும் என்று அப்பர் பாடினார். அப்படியானால் ரிக் வேதம் ஈசனையா தொழுகிறது? ரிக் வேதத்தில் ஈசனைப் பற்றிய பேச்சே இல்லை சிவனைப் பற்றிய செய்தியே

இல்லை. அவ்வளவு ஏன்? விஷ்ணு பற்றிய செய்தியும் இல்லை. இதைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே நர்ன விரிவாகப் பேசியுள்ளேன். எனவே இருக்கு நான் மறை ஈசனையே தொழும் என்றால் மந்திரங்களையுடைய நான்மறையெல்லாம் ஈசனையே தொழும் என்று தான் பொருள் வருமே தவிர வேறில்லை. சிவனே அதில் இல்லாத போது சிவனதைத் தொழுவது எப்படி?

இருக்குவான எழில் வேதம் என்றால் எழிலான தமிழ் வேதத்தைக் கொள் எழிலற்ற பிற வேதங்களை விட்டுவிடு என்றல்லவா அதற்கப் பொருள்?

இதே மாதிரி தான் சேக்கிழாரும் பாடினார். தூமறை பாடும் வாயான் என்று இறைவனைச் சேக்கிழர் பாடினார். தூமறை என்றால் தூயமறை என்று பொருள். தூமறை பாடும் வாயான் என்றதால் தூயதல்லாத மறையை விலக்கினார் என்றல்லவா பொருள்?

எனவே திருமந்திரத்தில் வேதச் சிறப்பு என்று கூறப்பட்டது தமிழ் வேதச் சிறப்பைத்தான்.

தமிழாகமமாகிய திருமந்திரத்தில் மறையோர், பாராப்பனர், வேதியர், அந்தணர் என்ற சொற்களுக்கெல்லாம் பொருள் கூறத் தனித்தினயே பாடல்கள் உண்டு. ஒவ்வொரு சொல்லிற்கும் ஒவ்வொரு பாட்டு வைத்தார். ஆசிரியர் சொல்கிறார். அந்தணன் எனப்படுபவன் பிறவியிலேயே அந்தணனாக வந்தவன் அல்ல.

அந்தணன் ஆவதும் காட்டி வந்தாண்டாய் என்று பாடினார் அந்தணராகிய மணிவாசகர். இவர் சொல்கிறார் அந்தணன் என்பது ஆவது என்று. இவர் அந்தணன் ஆகும்படி இறைவன் இவரை ஆட்கொண்டானாம். இந்தப் பாடல் திருப்பள்ளியெழுச்சியில் வருகிறது.

இப்படி ஒவ்வொரு சொல்லையும் திருமூலர் ஆராய்ந்து ஆராய்ந்து பாடியிருக்கிறார். அவற்றைத் தான் நாம் கொள்ள வேண்டும். பிறப்பால் அந்தணர்க் கென்று தனியாக ஒரு குரூப் இரத்தம் இருக்கிறதா என்ன? குரூப் பிராம்மணர் குரூப் க்ஷத்திரியர் குரூப் வைசியர் குரூப் மற்றவர்கள் என்று இரத்தத்தில் உண்டா? சதையை உடலில் இருந்து எடுத்துவிட்டால் இது பிராம்மணருடைய சதை, இது செட்டியாருடைய சதை, இது முதலியாருடைய சதை என்று சொல்ல முடியுமா? எலும்பில் இந்தப் பாகுபாடு உண்டா? இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். அந்தணர் என்போர் அறவோர் அவ்வளவு தான். செந்தண்மை குணம் யார் யாருக்க உண்டோ அவர்கள் எல்லாம் அந்தணர் ஆகின்றனர்.

மறையோர் என்றால் அர்த்தம் வேறு மறையவர் என்றால் அர்த்தம் வேறு. திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் பாடுகிறார்.

மறைமுடி உணர்ந்தவர் மறையவர் அடியார்

வரு பரிசாலகர் அரசர்கள் வணிகர்

மறை சொன்தை ஒப்பிப்பவன் மறையவன். மறை சொன்னதைக் கடைப் பிடிப்பவன் மறையோன். நமக்கு வேண்டியது மறையோர்களே! மறையவர்கள் அல்லா. இதை எல்லாம் பெரியவர்கள் எடுத்து விள்கக வேண்டும். நீண்ட நாட்களாக நாம் ஒரு குருட்டுப் பாததையில் போய்க் கொண்டிருக்கிறோம். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் புரிந்து கொண்டவர்க்க தமிழ்வேதச் சிறப்பும் தமிழகாமச் சிறப்பும் புரியும். எனவே வேதமும் ஆகமமும் தமிழிலே தான் இருந்தன என்பதும் திருமூலர் அதைத் தான் குறித்தார் என்பதும் நாம் அறிந்து கொண்டால் இந்தக் கேள்வியே எழாது.

கேள்வி 2 : வருணாசிரமம் – விளக்குக.

பதில் : இதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். இது ஒரு வகுப்பாரின் சுயநலத்திற்காகவும் வசதிக்காகவும் கற்பனை செய்து வைக்கப்பட்டது. ஆகமங்கள் என்கிறார்கள். இருக்கிற ஆகமத்தில் எங்கேயும் ஜாதி பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

சாதுர் வர்ணிகம் ஆகமம் ஆதிகாரிகம் என்பது ஆகம வசனம். இந்த ஆகமத்தை நான்கு வருணத்தாரும் பயன்படுத்தலாம் என்பது பொருள். வருணம் வேறு ஆசிரமம் வேறு. ஆரியர் ஆசிரமம் நான்க என்றனர். அவை 1) பிரம்மச்சரியம் 2) கிரகஸ்தம் 3) வானப்பிரஸ்தம் 4) சந்யாசம். இதற்கு மாறாக ஆகமத்தில் கூறப்படும் ஆசிரமங்கள் இரண்டே இரண்டு தான் அவை 1) தீட்சை பெற்றவருக்கு உரிய வழி 2) தீட்சை பெறாதவர்க்கு உரிய வழி. இதை சிவஞான முனிவர் சிவஞான பாடியத்திலும் எடுத்துக் காட்டி இருக்கிறார். ஆகமப்படி பிறப்பால் வேளாளர் பிறப்பால்அந்தணர்க்குக் கூட தீட்சை செய்யலாம். எனவே தமிழாகம நெறியில் ஜாதி பற்றிய பிரிவு கிடையாது.

கேள்வி 3 : 51 அட்சரங்களைப் பற்றிக் குறிப்பிடுக

பதில் : மாத்ருகா புஷ்ப மாலை கோல ப்ரவாள பாதத்தில் அணிவேனோ என்பது திருப்புகழ் வாக்கு. இதை வாரியார் சுந்தரநூபூதி விரிவுரை நூலில் விளக்கம் செய்துள்ளார். அதாவது 51 அட்சரத்தால் இறைவனுக்கு அர்ச்சித்தல். இந்த ஐம்பத்தொரு அட்சரங்களையும் கிரந்தத்தில் எழுதிக் காட்டுவர். இது தவறு என்று திருமூலா சொல்கிறார்.

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைத்து

ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்

திருமூலர் காலத்தில் தமிழில் உணிர் எழுத்துக்கள் பதினாறாக இருந்தன. காலப்போக்கில் குறைந்து தொல்காப்பியர் காலத்தில் அது பனிரெண்டாக ஆகி விட்டது. பதினாறு உயிரெழுத்துடன் எஞ்சிய 35 மெய்யெழுத்துக்களைக் கூட்ட எழுத்துக்கள் மொத்தம் ஐம்பத்தொன்றாகும்.

வடமொழியில் உயிரெழுத்து மெய்யெழுத்து என்ற பிரிவுகள் இல்லை. தமிழ் மொழியில் மட்டும் தான் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்ற பிரிவுகள் உண்டு. தமிழ்மொழியில் சொல்லுக்கு முதலாக மெய்யெழுத்து வராது. உயிரெழுத்தோ அல்லது உயிர்மெய்யெழுத்தோ தான் சொல்லுக்கு முதலில் வரும். மெய்யெழுத்து என்றால் உடம்பு. உடம்பு தனியாக இயங்குமா? இயங்காது. உடலில் உயிர் இல்லாவிட்டால் இயக்கம் இல்லை. எனவே உயிர் தனியாக இயங்கும் அல்லது உயிர்மெய்யெழுத்து இயங்கும். எனவே க் தமிழில் முதலில் வராது. க வரும், அ வரும். ஆனால் வடமொழியில் க் மொழி முதலில் வரும். உதாரணம் க்ருபா. அங்கே உயிரெழுத்து மெய்யெழுத்து என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. ஏன் ஆங்கிலத்தில் வட இந்தப் பாகுபாடுகள் கிடையா. கான்சடெனன்ட்ஸ், வவ்வல்ஸ், என்பானே ஒழிய இந்த உயிர், மெய் பாகுபாடுகள் எல்லாம் தமிழிற்கு மட்டுமே உரியது.

இங்கே பாடலில் ஐம்பத்தோர் அட்சரம் பற்றிய விவரம் கொடுக்கும் போது உயிரெழுத்து பதினாறு என்கிறார் திருமூலர். எனவே உயிர், மெய் பாகுபாடு எந்த மொழியில் இருக்கிறதோ அதைத் தானே கொள்ள வேண்டும். அதை விட்டு கிரந்தத்தில் எழுதினால் எப்படி? எனவே இங்கே குறிப்பிட்ட 51 அட்சரங்களும் தமிழில் இருந்தவை.

காலத்தால் எழுத்துக்கள் சில மறைந்து போயின. உதாரணத்திற்கு ங என்ற எழுத்தை எடுத்தக் கொள்வோம். இது இன்னும் எத்தனை காலத்திற்கு நிலைத்திருக்கும் என்று சொல்ல முடியாது. காரணம் அகராதியைப் பார்த்தால் தெரியும். இந்த எழுத்திற்கு ஒரே ஒரு சொல்தான் உண்டு. அதாவது ஙனம் தன்மை என்பது இதன் பொருள். இதுவும் மொழி முதலாக வருவது வழக்கில் இல்லை. அங்ஙனம், இங்ஙனம் என்ற சுட்டு மொழிகளோடு சேர்ந்து வருவதே வழக்கம்.

சிலபேர் சில சங்கங்களில் உறுப்பினர் ஆவான். அவன் பணம் கொடுத்து உறுப்பினனாக அவதோடு சரி. அதன் பின் அவனால் அந்த சங்கத்திற்கு எந்தப் பயனும் இருக்காது உபத்திரவம் தான். ஆனாலும் உறுப்பினன் என்பதால் அவனுக்கும் மாலை, மரியாதை எல்லாம் செய்ய வேண்டி வரும். அவனைச் சங்கத்தில் ங வருது என்பார்கள். ங என்பது கோடுவோர்ட். எழுத்துக்கள் பட்டியலில் ங இருக்குமே ஒழிய தனிப்பட்ட சொற்கள் அதற்கு கிடையாது. அதுபோல இவனும் சங்க உறுப்பினர் பட்டியலில் இருப்பவன் என்பது கோடு வோர்டின் பொருள். எத்தனை சங்கங்களில் எத்தனை ங க்கள் இருக்கிறார்களோ? ஆண்டவா!

பயன்பாடு அதிகம் இல்லாத ங என்னும் எழுத்து இன்னும் எவ்வளவு காலம் இரக்குமோ! யாருக்குத் தெரியும்? பல எழுத்துக்கள் பெரியார் சீர்திருத்த எழுத்து என்ற முறையில் மறைந்து போய் விட்டனவே. உயிலெழுத்தில் ஒன்றான ஐ என்ற எழுத்தற்கும் பெரியார் சீர்திருத்த எழுத்து முறையால் ஆபத்து வந்தது. அது போயிருந்தால் உயிரெழுத்துக்கள் மொத்தம் 12ல் இருந்து 11 ஆகி இருக்கும். ஆனால் வாரியார் சுவாமிகள் இதற்கு புண்ணியம் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் தான் நேரே புரட்சித்தலைவரிடம் சென்றார். முதலமைச்சராய் அவர் பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த நேரம். புரட்சித் தலைவர் வராண்டாவிற்கே சுவாமிகளைப் பார்க்க வந்துவிட்டார். சுவாமிகள் சொல்லி இருந்தால் நானே வந்திருப்பேனே என்று சொன்னார். ஐ என்பது தமிழில் ஓர் எழுத்து மட்டுமல்ல ஒரெழுத்து மொழி. அரசன், திருமகள், கோழை, கடவுள் என்று பலபொருள் ஒரு மொழி அது. வாரியார் சுவாமிகள் சொன்னார் அப்பா! ஒரு ஆர்டர் போட்டு தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தாயே. அதில் மறைந்த போன ஏனைய எழுத்துக்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஐ என்பது மிகப்பெரிய சிறப்பெழுத்து. ஒரு பாடல் சொல்கிறேன் கேள்

குறியைக் குறியாது குறித்தறியும்

நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்

இதில் தனிவேலை நிகழத்திடலும் என்பது தனிவேல் + ஐ நிகழ்த்தடலும் என்று பிரிந்து பொருள் தரும். தனிவேல் உடைய கடவுளாகிய முருகப் பெருமான் நிகழ்த்திடலும் என்று பொருள். இந்த ஐ என்பதை நீ எடுத்து விட்டாயே! இனி இதற்கு நான் என்ன பொருள் சொல்வது என்று கேட்டார். புரட்சித்தலைவர் உடனே ஐ எழுத்து மட்டும் அப்படியே இருக்க வேண்டும் என்று முறு ஆணை போட்டார். அதனால் ஐ என்ற எழுத்து தப்பியது. இதை மீட்டுக் கொண்டு வந்தவர் வாரியார் சுவாமிகள்.

இப்படி எழுத்துக்கள் பல காலப்போக்கிலும் மாறும் அல்லது மறையும்

எழுத்தெனப்படுவ

அகரமுதல்

னகர இறுவாய் முப்பஃதென்ப

என்பது தொல்காப்பியம். இவ்வாறு பல புலவர்கள் சொல்லுவார்கள் என்றால் அதற்கு முன்னால் எத்தனை இருந்தது? யாருக்குத் தெரியும்? தொல்காப்பியர் காலத்தில் உயிரெழுத்துக்கள் 12 ஆக இருந்தன. திருமூலர் காலத்தில் உயிரெழுத்துக்கள் மொத்தம் பதினாறாக இருந்தன. இப்படியே மெய்யெழுத்துக்களும் 35 ஆக இருந்தன போலும். ஆகவே மொத்தம் 51. இவை தமிழ் எழுத்துக்கள் தான்.

நாம் தமிழில் உள்ள வேதம் நான்கு என்றோம். உடனே அதற்கு இணையாக வடமொழியாளர்கள் மூன்றாக இருந்த அவர்களது வேதத்தை அதர்வணவேதம் என்று பிரித்து வைத்து நான்காக்கினார்கள். தமிழில் எழுத்துக்கள் 51 என்பதைப் பார்த்து வடமொழியிலம் அப்படியே என்று சொல்ல க–வில் 4 ச–வில் 4 எனப்போட்டுக் கூட்டி 51 ஆக்கினர். எனவே திருமூலர் குறிப்பிடுகிற ஐம்பத்தோரட்சரம் தமிழ் எழுத்துக்களே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி 4 : அவத்தைகள் எத்தனை?

பதில் : இது சித்தாந்தத்தில் முதுகலைப் பட்டப் படிப்பு போல. மேலாவத்தை, கீழாலவத்தை, மத்தியாலவத்தை என்று மூன்று உண்டு. அருள்கூத்து அதாவது அற்புதக் கூத்து நடக்கும் போது மத்தியாலவத்தை நடக்கும். மேலாலவத்தையில் மீதானம் காணலாம். மீதானங்கள் 7 வகைப்படும். இதெல்லாம் மிகவும் நுணுக்கமான விஷயங்கள்.

கேள்வி 5 : (கூட்டத்திலிருந்து ஒருவர் ஒரு புத்தகத்தைக் காட்டி) இது பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில் : சிவலிங்கத்தைப் பற்றித் தவறான கருத்தை ஆராய்சிசயாளர்கள் என்ற பெயரில் படைத்து மொழிகிறார்கள். குறிப்பாக ஆங்கில மொழி அறிஞர்கள் சிவலிங்கத்தை ஃபேலஸ் என்று சொல்லி தவறான கருத்தைக் கூறி குழப்பி வருகின்றனர். சிவஞான சித்தியாரில்வரும் பாடல் ஒன்றினை இதற்குத் தவறாக ஆதாமை காட்டுகிறார்கள். அதில் வரும் குறி என்ற சொல்லைத் தவறான பொருளில் கையாளுகிறார்கள்.

சிவலிங்கத்தை அடிப்பகுதியில் இருந்து மேலே எழுந்து நிற்கும் பாகம் வரை பார்த்தால் அது அருட்ஜோதி வடிவமானது. ஜோதி எப்போதும் மேல் நோக்கித்தான் எழும். தீக்கு எழுநா என்றே தமிழில் பெயர் உண்டு. ஒரு ஜோதியைக் கவிழ்த்தால் கூட அது என்னவோ மேல் நோக்கித்தான் போகும். தண்ணீருக்குக் கீழ்நோக்கும் தன்மை உண்டு நெருப்புக்கு என்றும் மேல்நோக்கும் தன்மை உண்டு. ஜோதி மேல் நோக்கி எழுவதைத் தான் அருவுருவமான சிவலிங்கமாக எடுத்துக் காட்டினார்கள். ஈமியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி அவன். இதையெல்லாம் அந்த ஆராய்ச்சியாளர்களுக்கு எடுத்துச் சொல்வாரில்லை. அதனால் தவறான குறிப்புகளை – தவறான தகவல்களைச் சொல்கிறார்கள். நீங்கள் என்னிடம் கேட்டீர்கள். நான் இப்போது பொருள் கூறினேன். இதுபோல அவர்களும் முறையாகத் தெரிந்தவர்களிடம் அணுகி இருந்தால் அவர்களுக்குதட சரியான பொரள் சொல்லியிருப்பார்கள். துறைவல்லுநரல்லாத ஆங்கிலம்

தெரிந்த யாரோ ஒருவரிடம்–சந்திக்க நேர்ந்த ஒருவரிடம்–கேட்டால் அவருக்குத் தெரிந்த எதோ ஒன்றைத்தான் அவர் சொல்வார். அதை ஆணைச் சான்றாகக் கொள்ள முடியுமா? தவறாக அவருக்கு சொல்லப்பட்டதை உரியவரிடம் விசாரித்து அறியாமல் எழுதி விடுகிறார்கள். அதைப் பலரும் பின்பற்றி தவறாக எழுதிவிடுகின்றனர். அவ்வளவு தான்.

கேள்வி 5 : எட்டும் இரண்டும் என்கிறார்களே அதன் பொருள் என்ன?

பதில் : இறை பரம்பொருளான எம்பெருமான் இவ்வுலகம் முழுதும் நிறைந்திருக்கிறான். எங்கும் நிறைந்திருந்தால் தான் அது பரம்பொருள். அது எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கிறது. எனவே உலகப் பொருள்கள் அனைத்தையும் அவன் அறிந்து அறிவிக்கிறான். எனக்க அறிவிக்க வேண்டும் என்றால் எனக்கு உள்ளேயும் இருக்க வேண்டும் எதிரேயும் நிறைந்து நிற்க வேண்டும். அப்போது தான் எனக்குள் இருந்த அவன் அறிவிக்க முடியும் அல்லது உணர்த்த முடியும். அதாவது பார்க்கிற பொருளிலும் இருக்க வேண்டும் பார்க்கப் படுகிற பொருளிலும் நிறைந்து நிற்க வேண்டும். நம்மால் பார்க்கப்படுவது பிரபஞ்சம். இந்தப் பிரபஞ்சத்தை எட்டு வகையில் அடக்கி விடலாம். அசை 1) பஞ்ச பூதங்கள் – ஐந்து 2) ஞாயிறு 3) திங்கள் 4) உயிர். ஆக மொத்தம் எட்டு. இந்த எட்டிலும் ஆண்டவன் நிறைந்திருக்கிறான். இதையே அட்ட மூர்த்தம் என்கிறோம். இப்படி எட்டிலும் புணர்ந்து நிற்கும் இறைவனை இரண்டு நிலைகளில் கலந்து நின்று அனுபவிக்கலாம். பிண்டத்தில் அனுபவிப்பது ஒன்று அண்டத்தில் அனுபவிப்பது மற்றொன்று. பிண்டத்தில் அனுபவிப்பதை வேதாந்தம் என்றார்கள். அண்டத்தில் அனுபவிப்பதைச் சித்தாந்தம் என்றார்கள். எனவே எட்டாக நிறைந்த இறைவனை அனுபவிக்கும் நிலை இரண்டு. இதையே எட்டும் இரண்டும் என்றனர். இது எல்லாம் அவன் ஆடும் நடனம். எட்டாக நின்று ஆடுவது ஊன நடனம் இரண்டாக நின்று ஆடுவது ஞான நடனம்.

கேள்வி 6 : நீங்கள் பல பாடல்களை வாரியார் சுவாமிகள் போல மனனமாக ஒப்பிக்கிறீர்கள். உங்களுக்கு எவ்வளவு பாடல்கள் மனனம்?

பதில் : (இதற்கு பதில் சொல்லக் கூச்சமாக இருந்தது. கேள்வி என்று வந்த பின் பதில் சொல்லித் தானே ஆக வேண்டும்.) வாரியார் சுவாமிகளுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதில் 16,000 பாடல்கள் மனனம். அவர்கள் கடல். எனக்க பதினோரு வயதில் வெண்பா பாடும் ஆற்றல் இறை திருவருளால் அமைந்தது. ஆசு கவியாகப் பாடுவேன். சிறு வயதிலேயே பிங்கலந்தை நிகண்டு முழுதும் மனனம். எனக்கு பதினாறு வயதில் சுமார் எட்டாயிரம் பாட்டு மனனம். இதனால் நினைத்தவாக்கில் குறிப்பில்லாமல் பேசலாம். இப்போது அதற்கு மேலும் பல பாடல்கள் மனனம். எத்தனை என்று எண்ணிக்கை வைத்தக் கொள்ளவில்லை. சுமார் 12,000 பாடல்கள் இருக்கலாம். நினைவாற்றல்தான் இறைவன் எனக்குக் கொடுத்த வரப்பிரசாதம். ஒன்பது இலக்க எண்ணைக் கூறினாலும் ஒரு வாரம் கழித்து குறிப்பைப் பார்க்காமல் உடனே சொல்ல முடியும். இதற்க மேலும் என்னைப் பற்றிக் கூறிக்கொள்ள என் மனம் கூசுகிறது. கலித்தொகையில் ஒரு வரி வரும். தம்புகழ் கேட்ட சான்றோர் தலையென. கலித்தொகை அகத்துறை பற்றியது. ஒரு தலைவியின் தலை, தலைவன் முன் குனிந்திருக்கிறதாம். எப்படி என்றால் தம் புகழைக் கேட்ட சான்றோர் தலைபோல என்று வருகிறது. இப்போது என் நிலை அப்படி.

முடிப்புரை : ஐந்து நாட்களுக்கு நம் சிந்தனை எவ்வளவு செல்ல முடியுமோ அவ்வளவு சென்று இங்கு திருமூலரைச் சேவித்திருக்கிறோம். திருமூலரைத் தரிசிப்பதற்கு மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம் ஏற்படுத்திய இந்தப் பாக்கியத்திற்கு அடியேன் கடமைப்பட்டிருக்கிறேன். தான் ஸ்ரீஜயா, திரு. கலியபெருமாள், திரு. சண்முகம், திரு. தர்மலிங்கம் இங்கே வந்த பிறக பழகிய பல அன்பர்கள், கேள்வியாலும் தம் அன்பாலும் என்னைத் தொளைத்த அன்பர்கள் திரு. மயில்வாகனன், திரு. சுப்பிரமணியம், திரு. இராமலிங்கம், இன்னும் என்னை ஆதரித்த அன்பர்கள் பெருமளவில் வந்துள்ள தாய்ககுலங்கள் ஆகிய அனைவருடைய திருவடிகட்கும் நன்றி கூறி வாய்ப்புக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

ஓம் சிவம் ஓம்.